[illegible]

நடைமுறைச் சேவை நடவடிக்கைகள்

[illegible] வெளியீடு

தொகுதி - 24 மணி - 1

[illegible] - 1992

வெளியீடு 1-2-1993

Issued 1-2-1993

10 செப்

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

983/93

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 9, 1992 - தொகுதி 24 எண். 1

Thursday, the 9th April 1992 - Volume 24 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3-00

உள்ளடக்கம்

**9-4-1992**


பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் iii—vi

Personnel of the Government of Tamil Nadu. vii—x

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் xi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) xiii—xxiii

1. இரங்கல் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து 1—2

2. வினாக்கள் விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள். 2—41

3. உரிமைப் பிரச்சினை—

பெண் உறுப்பினர்கள், பேரவைத் தலைவர் ஆகியோரின் அவை நடவடிக்கைகள் பற்றி அருவருக்கத்தக்க, தரக்குறைவான வகையிலும், பேரவை நிகழ்ச்சிகளைக் கொச்சைப்படுத்தும் வகையிலும், தி.மு.க. பேச்சாளர் வெற்றிகொண்டான் வெளியே பேசியுள்ளது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு. .. .. 41—46

4. கவன ஈர்ப்பு—

(அ) போரூர் மருத்துவமனையில் புற நோயாளிகள் பிரிவு, அகநோயாளிகள் பிரிவு வெவ்வேறு இடங்களில் செயல்படுவது குறித்து. .. .. 46—48

(ஆ) ஆண்டிமடத்தில் குறைவான மின் அழுத்தமுள்ளதால் துணை மின் நிலையம் அமைக்க வேண்டியது குறித்து. 48—51

5. அறிக்கைகள் அளித்தல்—

(அ) உரிமைக் குழு .. .. 52

(ஆ) பொதுக் கணக்குக் குழு .. .. 52—53

6. மானியக் கோரிக்கைகள், 1992-93— விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)—

கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம். 53—165

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா 53,54, 133—163

திரு. குமரி அனந்தன் 55—76

*திரு. சி. இராமசுவாமி .. .. 77—79

டாக்டர் தே. குமாரதாஸ் .. .. 80—88

*திரு. எஸ். ஆசைமணி .. .. 89—93

திருமதி அ. தி. சரஸ்வதி .. .. 94—97

திரு. ஆர். சிங்காரம் .. .. 97—105

திரு. வே. தம்புசாமி .. .. 105—118

திரு. ஆ. சுப்புரத்தினம் .. .. 121—123

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு 123—125

திரு. டி. சுதர்சனம் .. .. 125—133

7. முதலமைச்சரின் திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதிக்கு உறுப்பினர்கள் வழங்கும் நன்கொடை குறித்து. 163—164

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 165—166


164942



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மது விலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, சிறு பான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்ப வியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்டத்துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு.

| | |
|---|---|
| 4. வருவாய்த் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள். |
| 5. பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம் மற்றும் சீர் மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், முன்னாள் இராணுவத்தினர் நலம். |
| 6. கல்வி அமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல். |
| 7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : .. | மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல். |
| 8. போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா. |
| 9. கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : கைத்தறி மற்றும் நெசவாலைகள். |



| | |
|---|---|
| 10. பொதுப்பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப் பணிகள், பாசனம் (சிறுபாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு. |
| 11. உள்ளாட்சித் துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல். |
| 12. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளிவிவரங்கள். |
| 13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. செ. ரகுபதி : தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு. |
| 14. வேளாண்மைத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்பு வரி மற்றும் கரும்பு வளர்ச்சி. |
| 15. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |

16. சமூக நலத்துறை துறை அமைச்சர். — மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி :
சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

17. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். .. மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் :
ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம்.

18. மீனளத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்:
மீனளம்.

19. ஊரகத் தொழில் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் :
சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU
## GOVERNOR OF TAMIL NADU

THIRU BHISHMA NARAIN SINGH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Chief Minister . . **The Hon. Dr. J. JAYALALITHA :**
Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity FilmTechnolcgy Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture, Electronics and Newsprint Control.

2. Minister for Finance . **The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN :**
Finance, Planning, Elections and Legislature.

3. Minister for Law . **The Hon. Thiru K.A. KRISHNASAMY:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money-lending, Chits and Registration of Companies.

4. Minister for Revenue . **The Hon.Thiru S.D.SOMASUNDARAM:**
Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes.

| | |
|---|---|
| 5 Minister for Backward Classes. | **The Hon. Thiru ERAAMA VEERAPPAN:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities Indians Overseas, Refugee and Evacuees and Welfare of Ex-Servicemen. |
| 6 Minister for Education | **The Hon. Dr. C. ARANGANAYAGAM :** Education, Technical Education, Science and Technology, Sports and youth Welfare and Archaeology, |
| 7 Minister for Health | **The Hon. Thiru S. MUTHUSAMY :** Health, Medical Education, Family welfare and Environmental Pollution Control |
| 8 Minister for Transport | **The Hon. Thiru K. A. SENGOTTAYAN :** Transport, Nationalised Transport, motor Vehiicles Act, Ports, Forests and Cinchona |
| 9 Minister for Handlooms and Textiles | **The Hon. Thiru E. MADHUSUDHANAN :** Handlooms and Textiles |
| 10 Minister for Public Works | **The Hon. Thiru S. KANNAPPAN :** Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity, Non-Conventional Energy Development and Iron and Steel Control. |



| | |
|---|---|
| 11. Minister for Local Administration | **The Hon. Thiru ALAGU THIRUNAVUKKARASU :** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply. |
| 12. Minister for Food and Co-operation. | **The Hon. Thiru G. VISWANATHAN:** Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics. |
| 13. Minister for Labour | **The Hon. Thiru S. RAGUPATHY :** Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census. |
| 14. Minister for Agriculture | **The Hon. Thiru KU. PA. KRISHNAN:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development |
| 15. Minister for Housing and Urban Development | **The Hon. Thiru T. M. SELVAGANAPATHI :** Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning Urban Development and Madras Metropolitan Development Authority |
| 16. Minister for Social Welfare | **The Hon. Tmt. R. INDIRA KUMARI :** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon meals, Beggar Homes, Orphanages and Correctional Administration. |

17. Minister for Adi-Dravidar Welfare — **The Hon. Thiru . M. ANANDAN :**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour, Animal Husbandry, Milk and Dairy Development.

18. Minister for Fisheries — **The Hon. Thiru D. JAYAKUMAR :**

Fisheries

19. Minister for Rural Industries — **The Hon. Thiru S. NAGOORMEERAN:**

Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

### பேரவைத் துணைத் தலைவர்

பேராசிரியர் க. பொன்னுசாமி

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திரு. ஆர். சிங்காரம்
4. திரு. வே. தம்புசாமி
5. திரு. நா. சா. பழனிசாமி

### செயலாளர்

திரு. செ. சு. ஜானகிராமன்

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ. கு., பி.ஏ., பி.எல்., | இணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. டெ., பி.ஏ.பி,எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம்., | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சந்திரசேகர், திரு. ஆர்., பி.ஏ., .. | துணைச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு.டி., பி.எஸ்ஸி, பி.எல்., | துணைச் செயலாளர் |
| ஜேக்கப்ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., டி.பி., மற்றும் பி.ஏ., | துணைச் செயலாளர் |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. ச., பி.எஸ்ஸி., | குழு அலுவலர் |
| வெங்கட்டராமன், திரு. ப., சீ., பி.காம், | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ. பி.எல்., | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வெ., பி.எஸ்ஸி., பி. எல்., | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ., | சார்புச் செயலாளர் |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல்., | சார்புச் செயலாளர் |
| கணேசன், திரு. சா., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| சாயிநாதன், திரு. கி., பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |
| பவானி சுப்பையா, திருமதி, பி.ஏ., பி.ஜி. எல்., | சார்புச் செயலாளர் |
| பானுமதி அனந்தராஜன், திருமதி பி., பி.எஸ்ஸி., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |
| முடிகோபதி, திரு. நா., எம். ஏ., .. | சார்புச் செயலாளர் |
| முனிர் உன்னிசா, திருமதி. பி.எஸ்ஸி., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர் |
| ராஜன், திரு. கே., பி., டி.ஆர். எஸ். | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு., பி.சி. பி.ஏ., .. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை, எம். ஏ., | தலைமை நிருபர் |
| துரை பாண்டியன், திரு. செ., ஏ., பி.ஏ., | தலைமை நிருபர் |
| ஜெயதேவ், திரு., பி.சி. .. | தலைமை நிருபர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1. அண்ணாமலை, திரு. எஸ். | ஆலந்தூர் |
| 2. அபரஞ்சி, திரு. பெ. .. | அரூர் (செ.வ.) |
| 3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | மயிலாடுதுறை |
| 4. அமர்நாத், திரு. ஓ. எஸ். | மதுரை கிழக்கு |
| 5. அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி |
| 6. அரங்கநாதன், திரு. ஆர். டி... | விருத்தாசலம் |
| 7. அரங்கநாயகம், டாக்டர் செ... | தொண்டாமுத்தூர் |
| 8. அர்ச்சுனன், திரு. க. | வீரபாண்டி |
| 9. அழகிரி, திரு. ச. .. | சிதம்பரம் |
| 10. அழகு திருநாவுக்கரசு, திரு. .. | ஒரத்தநாடு |
| 11. அறிவழகன், திரு. ஆ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 12. அன்பழகன், திரு. எஸ். .. | நாமக்கல் (செ.வ.) |
| 13. ஆசைமணி, திரு. எஸ். .. | குத்தாலம் |
| 14. ஆண்டி அம்பலம், திரு. எம். .. | நத்தம் |
| 15. ஆண்டித் தேவர், திரு. எஸ். .. | திருப்பரங்குன்றம் |
| 16. ஆரோக்கியசாமி, டாக்டர் ச... | திருச்சிராப்பள்ளி-1. |
| 17. ஆறுமுகம், திரு. செ. .. | வானூர் (செ.வ.) |
| 18. ஆனந்தன், திரு. எம். .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 19. இந்திரகுமாரி, திருமதி இரா... | நாட்ராம்பள்ளி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 20. இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. | மேலூர் |
| 21. இராசாராமன், திரு. சோ. .. | பாபநாசம் |
| 22. இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 23. இராதாகிருஷ்ணன், திரு. த. க. .. | திருமங்கலம் |
| 24. இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 25. இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். | திருவாடனை |
| 26. இராமசுவாமி, திரு. சி. .. | சங்கராபுரம் |
| 27. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | கம்பம் |
| 28. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 29. இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி |
| 30. இராமச்சந்திரன், திரு. மா. சா. மா. | இளையாங்குடி |
| 31. இராமதாஸ், திரு. எஸ். எஸ். ஆர். | செஞ்சி |
| 32. இராமநாதன், திரு. இராம. .. | கும்பகோணம் |
| 33. இராஜமன்னார், திரு. சு. சே. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 34. இராஜன்பாபு என்கிற தணிகை பாபு, திரு. கி. | திருத்தணி |
| 35. இராஜேந்திரன், திரு. பி. வி. .. | வேதாரண்யம் |
| 36. இராம வீரப்பன், திரு. .. | காங்கேயம் |
| 37. இலதா பிரியகுமார், திருமதி .. | அரக்கோணம் (செ.வ). |
| 38. இளம்வழுதி, திரு. .. | எழும்பூர் |
| 39. ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. .. | தாராபுரம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 40. ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 41. ஏகாம்பர ரெட்டி, திரு. எ. .. | பள்ளிப்பட்டு |
| 42. கண்ணப்பன், திரு. எஸ். .. | திருப்பத்தூர் |
| 43. கண்ணன், திரு. வே. .. | திருவண்ணாமலை |
| 44. கந்தசாமி, திரு. கே. .. | தலைவாசல் (செ,வ,) |
| 45. கருப்புசாமி, டாக்டர் எம். .. | குன்னூர் (செ.வ.) |
| 46. கலியபெருமாள், திரு. ப. .. | திருவையாறு |
| 47. கலைச்செல்வி, திருமதி கே. எம். | காட்பாடி |
| 48. கவிநிலவு தர்மராஜ், திருமதி .. | மொடக்குறிச்சி |
| 49. கற்பகம் இளங்கோ, திருமதி .. | காரைக்குடி |
| 50. கனகவல்லி, திருமதி என். சி. .. | விளாத்திகுளம் |
| 51. காஞ்சி பன்னீர் செல்வம், திரு. | உத்திரமேரூர். |
| 52. காந்திராஜன், திரு. ச. . | வேடசந்தூர் |
| 53. காளன், திரு. கோ. . | வில்லிவாக்கம் |
| 54. காளிராஜன், டாக்டர் மு, . | சமயநல்லூர் (செ.வ.) |
| 55. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. . | ஆயிரம் விளக்கு |
| 56 கிருஷ்ணன், திரு. எஸ். எம். .. | தாம்பரம் |
| 57. கிருஷ்ணன், திரு. கு. ப. . | ஸ்ரீரங்கம் |
| 58. கிருஷ்ணன், திரு. சி. . | ஓமலூர் |
| 59. குப்பன், திரு. க. . | திருவொற்றியூர் |
| 60. குமரி அனந்தன், திரு. . | சாத்தான்குளம் |
| 61. குமாரதாஸ், டாக்டர் தே. . | கிள்ளியூர் |
| 62. குழந்தைவேலு, திரு. சி. . | குளத்தூர் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 63. கோடிமாரி, திரு. ஆர். .. | நாகப்பட்டினம் |
| 64. கோபாலகிருஷ்ணன், திரு. வே. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 65. கோபால், டாக்டர் க. . | நன்னிலம் (செ.வ.) |
| 66. கோவிந்தராசு, திரு. மா. .. | ரிஷிவந்தியம் |
| 67. சக்குபாய், திருமதி ரா. .. | கும்மிடிப்பூண்டி |
| 68. சக்குபாய் தேவராஜ், திருமதி டி. | திருவள்ளூர் |
| 69. சஞ்சய் ராமசாமி, திரு. .. | விருதுநகர் |
| 70. சண்முகநாதன், திரு. எஸ். .. | ஆலங்குடி |
| 71. சண்முகம், திரு. எஸ்.வி. .. | மதுரை மேற்கு |
| 72. சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி |
| 73. சந்திரசேகர், திரு. வி.பி. .. | பொள்ளாச்சி |
| 74. சம்பத், திரு. எ. .. | வாணியம்பாடி |
| 75. சரஸ்வதி, திருமதி அ.தி. .. | சத்தியமங்கலம் |
| 76. சரஸ்வதி, திருமதி ப. .. | கபிலர்மலை |
| 77. சரோஜா, டாக்டர் வெ. .. | சங்கரி (செ.வ.) |
| 78. சாத்தையா, திரு. தி. .. | இராஜபாளையம் (செ.வ.) |
| 79. சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | முகையூர் |
| 80. சிங்காரம், திரு. ஆர். .. | பேராவூரணி |
| 81. சிங்காரம், திரு. கே. .. | மொரப்பூர் |
| 82. சிங்கை கோவிந்தராசு, திரு. .. | சிங்காநல்லூர் |
| 83. சியாமளா, திருமதி ரெ. .. | கோவில்பட்டி |
| 84. சிவசுப்பிரமணியன், திரு. கு. | குறிஞ்சிப்பாடி |
| 85. சிவபதி, திரு. என்.ஆர். .. | தொட்டியம் |
| 86. சின்னசாமி, திரு. கா. .. | சேந்தமங்கலம் (ம.ப.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 87. சின்னசாமி, திரு. ம. .. | கரூர் |
| 88. சின்னசாமி, திரு. வி.கே. .. | பவானிசாகர் |
| 89. சின்னப்பன், திரு. கே.கே. .. | ஜெயங்கொண்டம் |
| 90. சீனியம்மாள், டாக்டர் மு. .. | அவினாசி (செ.வ.) |
| 91. சீனிவாசன், திரு. ஆ.கு. .. | பெரணமல்லூர் |
| 92. சீனிவாசன், திரு. கு. .. | மன்னார்குடி |
| 93. சுதர்சனம், திரு. டி. .. | பூந்தமல்லி |
| 94. சுந்தரசாமி, திரு. எம். .. | கலசப்பாக்கம். |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு |
| 96. சுந்தரம், திரு. எம்.கே. .. | தண்டராம்பட்டு |
| 97. சுந்தரராஜ், டாக்டர் எஸ். .. | பரமக்குடி (செ.வ.) |
| 98. சுந்தரவேல், திரு. ஏ.கே.சி. | திருப்பத்தூர் |
| 99. சுந்தராம்பாள், திருமதி செ. | மேட்டூர் |
| 100. சுப்பிரமணியம், திரு. வ.மு. .. | மானாமதுரை (செ.வ.) |
| 101. சுப்பிரமணியன், திரு. வி. என். | பெருந்துறை |
| 102. சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 103. சுப்புரத்தினம், திரு. ஆ. .. | பழனி (செ.வ.) |
| 104. சுலோசனா, செல்வி எல். .. | மேட்டுப்பாளையம் |
| 105. சுவாமிநாதன், திரு. சி. .. | புதுக்கோட்டை |
| 106. செங்கோட்டையன், திரு. கே.ஏ. | கோபிசெட்டிபாளையம் |
| 107. செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணா நகர் |
| 108. செல்லசாமி, திரு. ஏ.டி. .. | ஒட்டன்சத்திரம் |
| 109. செல்லதுரை, திரு. ஆ. .. | திருச்செந்தூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 110. செல்வகணபதி, திரு. டி.எம். | | திருச்செங்கோடு |
| 111. செல்வராசன், திரு. அ. | .. | துறைமுகம் |
| 112. செல்வராஜ், திரு. கே. | .. | கோயம்புத்தூர் மேற்கு |
| 113. செழியன், திரு. தா. | .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 114. சேகர், டாக்டர் எம்.பி. | .. | பெரம்பூர் (செ.வ.) |
| 115. சேகர், திரு. எம்.ஜி. | .. | பாலக்கோடு |
| 116. சொக்கலிங்கம், திரு. பி. | .. | மதுராந்தகம் |
| 117. சோமசுந்தரம், திரு. எஸ்.டி. | | தஞ்சாவூர் |
| 118. ஞானசேகரன், திரு. சி. | .. | வேலூர் |
| 119. டேனியல்ராஜ், திரு. எஸ். | .. | ஸ்ரீவைகுண்டம் |
| 120. தங்கமுத்து, திரு. கு. | .. | திருவோணம் |
| 121. தங்கராஜ், திரு. ஆர். | .. | ஆண்டிமடம் |
| 122. தங்கவேல், திரு. எம். | .. | முசிறி |
| 123. தண்டாயுதபாணி, திரு. வி. | .. | குடியாத்தம் |
| 124. தமிழரசன், திரு. செ.கு. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 125. தமிழரசு, திரு. வெ. | .. | ஆத்தூர் |
| 126. தம்புசாமி, திரு. வே. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 127. தர்மலிங்கம், திரு. கி. | .. | அணைக்கட்டு |
| 128. தர்மலிங்கம், திரு. பே. | .. | பாளையங்கோட்டை |
| 129. தவசி, திரு. கே. | .. | ஆண்டிப்பட்டி |
| 130. தனபால், திரு. ம. | .. | திருப்போரூர் (செ.வ.) |
| 131. தாமரைக்கனி, திரு. இரா. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 132. தாமோதரன், திரு. சி. | .. | நெல்லிக்குப்பம் |
| 133. திருநாவுக்கரசு, திரு. எஸ். | .. | அறந்தாங்கி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 134. துரை, திரு. எஸ்.எம். | .. | ஆத்தூர் |
| 135. துரைமுருகன், திரு. கு.சு. | .. | பல்லடம் |
| 136. துரை ராமசாமி, திரு. | .. | வெள்ளக்கோவில் |
| 137. தெய்வநாயகம், திரு. எ. | .. | மதுரை மத்தி |
| 138. தென்னவன், திரு. மு. | .. | இராமநாதபுரம் |
| 139. தேவராஜ், திரு. அ. | .. | செய்யாறு |
| 140. தேனி பன்னீர்செல்வம், திரு. | | போடிநாயக்கனூர் |
| 141. நடேசன், திரு. இரா. | | திருவட்டாறு |
| 142. நடேசன், திரு. மு. | .. | சேலம்-2 |
| 143. நடேசன் பால்ராஜ், திரு. வெ. | | நாங்குநேரி |
| 144. நாகூர்மீரான், திரு. எஸ். | .. | கடையநல்லூர் |
| 145. நிர்மலா, செல்வி, பி. | .. | திண்டுக்கல் |
| 146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | | தேனி |
| 147. பஞ்சவர்ணம், திருமதி கே. | | வலங்கைமான் (செ.வ.) |
| 148. பட்டாபிராமன், திரு. கா.ப. | .. | காஞ்சிபுரம் |
| 149. பரந்தாமன், டாக்டர் ஜெ. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 150. பரமசிவம், திரு. ஆர்.பி. | .. | சின்னசேலம் |
| 151. பரமசிவன், திரு. ஏ.எம். | .. | சோழவந்தான் |
| 152. பலராமன், திரு. உ. | .. | பூங்கா நகர் |
| 153. பழனிசாமி, திரு. இரா. | .. | தாரமங்கலம் |
| 154. பழனிசாமி, திரு. க. | .. | எடப்பாடி |
| 155. பழனிசாமி, திரு. நா.சா | .. | கிணத்துக்கடவு |
| 156 பழனிசாமி, திரு. வெ. | .. | திருப்பூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 157. பழனிசாமி, திரு. ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 158. பழனியம்மாள் திருமதி. க. .. | ராசிபுரம் |
| 159. பன்னீர்செல்வம், திரு. என். .. | திருவிடைமருதூர் |
| 160. பன்னீர்செல்வம், திரு. சா. | திண்டிவனம் |
| 161. பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர் |
| 162. பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி |
| 163. பாப்பா சுந்தரம், திரு. அ. .. | குளித்தலை |
| 164. பாலகங்காதரன். திரு. ஜெ. | சிவகாசி |
| 165. பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர் |
| 166. பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர் |
| 167. பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை |
| 168. பாலன், திரு. எம்.கே. .. | சைதாப்பேட்டை |
| 169. பாலையா, திரு. ஆ. .. | குளச்சல் |
| 170. பீட்ரிக், டி சோசா, டாக்டர் | நியமனம் |
| 171. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி |
| 172. புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி |
| 173. புரட்சிமணி, திரு. ச. .. | மங்களூர் (செ.வ.) |
| 174. புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம் |
| 175. பூராசாமி, திரு. எம். .. | பூம்புகார் |
| 176. பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.) |
| 177. பெரியவீரன், திரு. எம். .. | பெரியகுளம் |
| 178. பெருமாள், திரு. செ. .. | ஏற்காடு (ம.ப.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். [2) |
|---|---|
| 179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 180. பொன்னுசாமி, பேராசிரியர் க. . | மருங்காபுரி |
| 181. பொன்னுசாமி, திரு. பெ. .. | தருமபுரி |
| 182. பொன்னுவேலு, திரு. ஏ.தா. .. | வரகூர் (செ.வ.) |
| 183. போளூர் வரதன், திரு. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 184. மணிமேகலை, டாக்டர் சு. .. | அரியலூர் |
| 185. மணிமேகலை, திருமதி வி.ஜி. .. | அருப்புக்கோட்டை |
| 186. மணிவாசகம், திரு. கே.பி. .. | உடுமலைப்பேட்டை |
| 187. மதுசூதனன், திரு. இ. .. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர், |
| 188. மரியம்உல்ஆசியா, திருமதி கே... | அரவக்குறிச்சி |
| 189. மல்லிகா, செல்வி கோ. .. | புவனகிரி |
| 190. மனோகரன், திரு. கே.ஏ. .. | ஓசூர் |
| 191. மாணிக்கம், திரு. சி. .. | ஈரோடு |
| 192. மாலா, டாக்டர் ஜி. ஆர். .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 193. முத்துசாமி, திரு. சு. .. | பவானி |
| 194. முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 195. முருகானந்தம், திரு. கே.ஆர். .. | சிவகங்கை |
| 196. முருகையா பாண்டியன், திரு. .. ஆர். | அம்பாசமுத்திரம் |
| 197. முனிரத்தினம், திரு. ஏ.எம். .. | சோளிங்கர் |
| 198. முனிவெங்கடப்பன், திரு. கே... | கிருஷ்ணகிரி |
| 199. முனுசாமி, திரு. கா.பூ. .. | காவேரிப்பட்டிணம் |
| 200. முஹமது ஆசிப், திரு. .. | திருவல்லிக்கேணி |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 201. மூர்த்தி, திரு. து. | சீர்காழி (செ.வ.) |
| 202. மோசஸ், டாக்டர் எம். | நாகர்கோவில் |
| 203. ரகுபதி, திரு. செ. | திருமயம் |
| 204. ரங்கநாதன், திரு. ப. | புரசைவாக்கம் |
| 205. ரங்கராஜன், திரு. டி.எம். | மயிலாப்பூர் |
| 206. ரத்தினவேல், திரு. த. | திருவெறும்பூர் |
| 207. ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம் |
| 208. ரமேஷ், திரு. வி.பி.ஆர். | தூத்துக்குடி |
| 209. ரவிக்குமார், திரு. ஏ. | பொன்னேரி (செ.வ.) |
| 210. ரவிச்சந்திரன், திரு. வி. | உப்பிலியாபுரம் (ம.ப.) |
| 211. ராமசுப்பு, திரு. எஸ்.எஸ். | ஆலங்குளம் |
| 212. ராஜு, திரு. எச்.எம். | உதகமண்டலம் |
| 213. ராஜு, திரு. கே. ஆர். | கூடலூர் |
| 214. ராஜு, திரு. கே.பி. | பேரூர் |
| 215. ராஜேந்திரன், திரு. என்.ஆர். | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 216. லட்சுமணன், திரு. வி.கே. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 217. லாரன்ஸ், திரு. கு. | பத்மநாபபுரம் |
| 218. லோகாம்பாள், திருமதி ஜெ. | லால்குடி |
| 219. வரதராஜன், திரு. செ. நு. | செங்கல்பட்டு |
| 220. விசுவநாதன், திரு. ஜி. | ஆற்காடு |
| 221. வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.) |
| 222. வெங்கடராம ரெட்டி, திரு. மு. | தளி |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 223. வெங்கடேசன், திரு. பி.ஆர்.எஸ். | கடலூர் |
| 224. வேடியப்பன், திரு. தா. | போளூர் |
| 225. வேணுகோபால், திரு. என்.ஜி. | ராணிப்பேட்டை |
| 226. வேலையா, திரு. டி. | திருநெல்வேலி |
| 227. ஜனார்தனன், திரு. தே. | விழுப்புரம் |
| 228. ஞானகிராமன், திரு. கோ. | மேல்மலையனூர் |
| 229. ஜீனத் சர்புதீன், திருமதி | சேப்பாக்கம் |
| 230. ஜெயக்குமார், திரு. எஸ். | தியாகராய நகர் |
| 231. ஜெயகுமார், திரு. டி. | ராயபுரம் |
| 232. ஜெயராமன், திரு. எஸ்.ஆர். | சேலம்-1 |
| 233. ஜெயலலிதா, டாக்டர் ஜெ. | பர்கூர் |
| 234. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | ஆரணி |
| 235. ஸ்ரீதரன், டாக்டர் அ. | வால்பாறை (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்:**

சுப்பிரமணியன், திரு. கே. .. தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 27, பிரஜோற்பத்தி — திருவள்ளுவர் ஆண்டு 2023

1992 ஏப்ரல் 9, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.''

இறைவனுடைய திருவடிகளைத் தொழுது இருப்பவர்களே பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கடக்க முடியும். மற்றவர்களால் முடியாது.

### 1. இரங்கல் குறிப்புகள்.

#### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பேரவையின் முன்னாள் சட்டமன்றப்பேரவை உறுப்பினர்களாகப் பணி ஆற்றிய திரு. நா. கிருட்டிணன் அவர்கள் 1-1-1992 அன்றும், திரு. எஸ்.பி. தங்கவேலு அவர்கள் 5-4-1992 அன்றும், திரு. ர. தியாகராசன் அவர்கள் 6-4-1992 அன்றும் மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. கிருட்டிணன் அவர்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டுவரை அன்றைய வட ஆற்காடு மாவட்டம் பேரணாம்பட்டு தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றி உள்ளார்.

திரு. எஸ். பி. தங்கவேலு அவர்கள் 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறித் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றி உள்ளார்.

திரு. ர. தியாகராசன் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றி உள்ளார்.

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 9

அன்னார்களது மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 514, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

திரு. எம். ஆண்டி அம்பலம் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) இது அவருடைய தொகுதி பற்றிய பிரச்சினை.

வினா எண். 515, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. வ. சத்திய மூர்த்தி இருக்கையில் இல்லை.

வினா எண். 516, திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

516—

### புதியதாக ஆரம்பப் பள்ளிகள் துவங்குதல்.

*5478—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேரன்மகாதேவி தொகுதி கடையம் ஊராட்சி ஒன்றியம் வெங்காடம்பட்டி ஊராட்சி மணல் காட்டானூரில் புதியதாக ஆரம்பப் பள்ளி துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்படி வெங்காடம்பட்டி ஊராட்சி மணல் காட்டானூரில் புதிதாக ஆரம்பப் பள்ளி துவங்குவது குறித்தக் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.



1992 ஏப்ரல் 9]

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், வெங்காடம்பட்டி ஊராட்சியில் உள்ள மணல் காட்டானூரில் ஆரம்பப்பள்ளி ஒன்று அமைப்பதற்காக கடையம் சரகத்திலிருந்து ஏ.இ.ஓ. ஆபீஸ் மூலம், ஆரம்பப் பள்ளி இயக்குநர், சென்னை அதிகாரிக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மணல் காட்டானூரைச் சுற்றி 6 கிராமங்கள் உள்ளன. அதில் சுமார் 3,000 ஜனத்தொகை உள்ளது. இவர்கள் ஆரம்பக் கல்வி கற்பதற்காக பக்கத்தில் 8 கிலோ மீட்டர் தூரமுள்ள வள்ளியம்மாள்புரம் வரை சென்று தான் ஆரம்பக் கல்வி கற்க வேண்டிய நிலை இருக்கிறது. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை பரிசீலனை செய்து இந்த நடப்பு ஆண்டில் செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டில் பரிசீலனை செய்யத்தக்க வகையில் புதிய பரிந்துரைகளை உரிய நேரத்தில் அனுப்புமாறு 10—1—1992 நாளிட்ட அரசு கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 517, திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

517—

*5647 திரு. ச. புரட்சிமணி:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதியில் ஐ. ஏந்தல் கிராமத்தில் புதிதாக அரசு ஆரம்பப் பள்ளி அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ச. புரட்சிமணி : பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் இந்த கிராமம் மிகவும் கிளை கிராமம் ஆகும். இந்த கிராமத்தில் இந்திய நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இதுவரை அரசால் ஆரம்பப் பள்ளி அமைக்கப்படவில்லை. எனவே இந்த கிராமத்தில் அரசு ஆரம்பப் பள்ளி ஆரம்பிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

[1992 ஏப்ரல் 9

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊரிலேயும் புதிதாக பரிந்துரைகளை உரிய நேரத்தில் அனுப்புமாறு 10—1—1992 நாளிட்ட அரசு கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபோல, பல்வேறு இடங்களிலிருந்து கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் நாம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கின்ற நேரத்தில் நிதியாதாரங்களை பொறுத்து நாம் இந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அதே நேரத்தில் ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பள்ளிக்கூடங்களுடைய தரத்தை உயர்த்துவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஓராசிரியர் பள்ளிகளை எல்லாம் ஈராசிரியர் பள்ளிகளாகவும், ஈராசிரியர் பள்ளிகளையெல்லாம் 3 ஆசிரியர் பள்ளிகளாகவும் மாற்றுவதற்கான ஒரு முயற்சி ஏற்பட்டு வருகிறது. ஆகவே, இருக்கின்ற பள்ளிக்கூடங்களைச் சரியாக நாம் நடத்த வேண்டும் என்ற ஒரு திட்டத்தையும் சேர்த்து இப்போது அமல் நடத்த வேண்டியிருப்பதால், அந்த அடிப்படையிலே தான் இந்தப் புதிய பள்ளிகளைத் துவக்குகின்ற முயற்சியிலே நாம் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. ச. புரட்சிமணி : பேரவைத் தலைவர் அவர்களே' தற்போது இந்த கிராமத்திலே தனியார் பள்ளி ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. அது சரியாகச் செயல்படாத காரணத்தினாலும் அந்த கிராம மக்கள் நலம் கருதியும், அடுத்த ஆண்டிலாவது அந்த கிராமத்தில் அரசு ஆரம்பப் பள்ளி ஆரம்பிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற ஒரு பள்ளிக்கூடமே சரியாக நடைபெறவில்லை என்றால் அந்த பள்ளிக்கூடத்தை மூடிவிட்டு அங்கே பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளி ஆரம்பிக்கக் கூடிய சாத்தியக்கூறு இருந்தால் அதுகுறித்து ஆராயலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 518' திரு. து. மூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்,

518—

சீர்காழி அரசு மருத்துவமனையில் விபத்து பிரிவு ஏற்படுத்துதல்.

* 3577—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் விபத்து பிரிவு ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



1992 ஏப்ரல் 9]

(ஆ) படுக்கை வசதி கொண்ட புதிய கட்டிடம் அமைக்கப்படுமா ?

(இ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. து. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் சீர்காழி அரசுபொது மருத்துவ மனையில் விபத்து பிரிவு இல்லாததால் அங்கே அவசரத்திற்கு வருகின்ற நோயாளிகளைக் கவனிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அங்கிருந்து பக்கத்திலே மயிலாடுதுறை செல்ல வேண்டுமானால் 25 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். அதே போல இந்த பக்கத்திலே சிதம்பரத்திற்கு 20 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். எனவே அந்த நேரத்திலே அவசரத்திற்கு வருகின்ற நோயாளிகளை கவனிக்க முடியாததால் அவர்கள் இறக்க நேரிடுகிறது. எனவே, அங்கே விபத்துப் பிரிவு ஒன்றை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா மருத்துவ மனைகளில் 32 படுக்கைகள் இருந்தால் போதும் என்ற வகையிலே இப்போது கொள்கை முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கே குறைவாக இருக்கிறதோ அங்கே எல்லாம் அதிகப்படுத்த வேண்டும் என்ற முடிவையும் எடுத்திருக்கிறோம். இங்கே 56 படுக்கைகள் இருக்கின்றன. எனவே நான் விபத்துப் பிரிவு என்று தனியாக வைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இந்த 56 படுக்கைகளை வைத்துக் கொண்டு விபத்தின் காரணமாக வரக்கூடியவர்களுக்கும் அங்கே மருத்துவம் செய்வதற்கான வாய்ப்பும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தையும் மனதிலே வைத்து ஆய்வு செய்து நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி அரசு பொது மருத்துவ மனையில் படுக்கை வசதிகள் குறைவாக இருப்பதால் மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து வருகின்ற ஆண்டிலாவது அந்த ஏழை எளிய மக்களுடைய வாட்டத்தைப் போக்குகின்ற வகையில் அவர்களுடைய இந்த குறையை நீக்குவதற்கு புதிய கட்டிடம் படுக்கை வசதியோடு ஏற்பாடு செய்வதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் ஏற்கனவே தெரிவித்தேன். மற்ற இடங்களில் எல்லாம் 32 படுக்கைகளும் அதற்கு கீழே தான் இருக்கின்றன. ஆனால் இங்கே 56 படுக்கைகள் இருக்கின்றன. எனவேதான் கூடுதலாக தேவையில்லை என்று கருதினோம். மேலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்துக்கு இணங்க அதை ஆய்வு செய்து நிதிப் பிரச்சினை மற்ற எல்லாப் பிரச்சினைகளையும் மனதில் வைத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 519, திரு. எ. ஏகாம்பர ரெட்டி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

519—

பள்ளிப்பட்டில் வட்டாரத் தலைமை மருத்துவமனை அமைத்தல்.

* 4304—திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், பள்ளிப்பட்டில் வட்டாரத் தலைமை மருத்துவமனை ( Taluk Headquarters Hospital ) அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆணை (நிலை) எண். 1550. சுகாதாரம், நாள் 11—12—1991-ல் 15 வட்டங்களில் வட்டார மருத்துவமனைகளை தரம் உயர்த்த அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் பள்ளிப்பட்டுப் இணைந்துள்ளது.



திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு தாலுக்கா தலைமை மருத்துவமனைக்கு ஆணை வெளியிடப்பட்டும் இதுவரை அது செயல்படுத்தப்படவில்லை. அதை எப்போது செயல்படுத்த முடியும்? அதற்கு என்ன காரணம்? தேவையான அளவுக்கு நிலப் பரப்பு மொத்தமாகக் கொடுத்தும் இது நாள் வரை அதை ஸ்டார்ட் செய்யாமல் இருக்கிறது. அது எப்போது ஸ்டார்ட் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆணை வெளியிடப்பட்ட உடனேயே அதற்கான நடவடிக்கைகளை எடுத்துவிட முடியாது. அரசு ஆணை வெளியிடப்பட்ட பின்பு அதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளும் செய்வதற்கு ஒரு 3 மாதம், 4 மாத காலம் ஆகிவிடுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதில் வைத்து விரைவாக அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு தாலுக்காவில் 1978—80 ஆம் ஆண்டுக்குள்ளாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சித் காலத்திலே பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரியாக இருந்ததை கவர்ன்மெண்டு டிஸ்பென்சரியாக அப்கிரேடு செய்யப்பட்டது. கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த அரசு டிஸ்பென்சரியை உடனே அடிஷனல் பிரைமரி எல்த் சென்டராக டீ-கிரேடு செய்யப்பட்டது திரும்ப இந்த ஆட்சி—மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி—வந்த பிறகு அது என்னுடைய கோரிக்கையின் மீது அரசாங்க தாலுக்கா தலைமை மருத்துவ மனையாக அப்-கிரேடு செய்யப்பட்டது. அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். பள்ளிப்பட்டு தாலுக்கா 'மோஸ்ட் பேக்வர்டு தாலுக்கா' என்ற காரணத்தால் அதை உடனடியாகத் துவக்க முடியும். துவக்கப்படும் நேரத்திலே குறைந்தபட்சம் தாலுக்கா தலைமை மருத்துவமனையில் 32 படுக்கைகள் உள்ள 'மினிமைமஸ்டு ஸ்டிரென்த்' கொண்டதாக இருப்பதால் அதை 32 படுக்கைகளுக்குக் குறைவாக இல்லாத வகையில், அதை 32 படுக்கைகள் கொண்டதாக அரசு நிர்மாணிக்க உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா மருத்துவமனைகளில் 32 படுக்கைகள் இருக்க வேண்டும் என்று அரசு கொள்கை ரீதியாக

முடிவு எடுத்து இருக்கிறது. ஆனால் அதை எல்லாம் ஒரே ஆண்டில் செய்து விட முடியாது. படிப்படியாகத்தான் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இருந்தாலும் அதைப் பற்றி தனியாக ஆய்வு செய்து தேவையான படுக்கைகள் அங்கே கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 520. திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

520—

லாரிகளை மதுரை மாநகருக்கு வெளியே நிறுத்த நடவடிக்கை

* 3250—திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாநகரத்தில் பகல் நேரங்களில் லாரி போக்குவரத்து அதிகமாக உள்ளதால், பள்ளி செல்லும் மாணவர்கள், அரசு ஊழியர்கள், நிறுவனங்களில் பணிபுரிவோர், மருத்துவமனை செல்வோர் குறித்த நேரத்தில் தங்கள் பணியிடங்களுக்குச் செல்ல இயலாமல் போவதோடு, அதிக அளவில் விபத்துக்கள் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் தடுக்க லாரிகளை மதுரை மாநகருக்கு வெளியே நிறுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில், பகல் நேரங்களில் லாரிகள் போக்குவரத்து அதிகமாக இருக்கின்றன. மதுரை நகரம் மிகப் பழமையான நகரமாக இருக்கின்ற காரணத்தால் சாலைகள் மிகவும் குறுகியதாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே குறிப்பாகப் பள்ளி, செல்லும் மாணவர்கள், அரசு அலுவலகங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. அதைத் தடுக்கும் வண்ணம் சென்னையிலுள்ளது போல் தாம்பரத்தைத் தாண்டி நகருக்கு





உள்ளே லாரிகள் வராத வண்ணம் இருப்பது போல், மதுரையில் மதுரையைச் சுற்றியுள்ள 8 அல்லது 10 கிலோ மீட்டர் வெளியில் தான் பகல் நேரங்களில் லாரிகளை நிறுத்த வேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தைப் போல மாநகர்கள் இருக்கின்ற அந்த இடங்களிலே நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைப் போல மதுரை மாநகரத்திற்குக் குறைந்தது 600க்கு மேற்பட்ட லாரிகள் நாள்தோறும் வந்து அடைகின்றன. பொருள்களை ஏற்றி வருகின்றன. அவைகளை இறக்குவதற்கு அவர்களுக்குத் தேவையான இடவசதியைச் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு 4 இடங்களில் லாரிகள் அங்கு காலையில் வந்து நிறுத்துவதற்காக அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்வதற்காக இந்த அரசு துரித நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9.45

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 4 இடங்கள் என்று குறிப்பிட்டார்கள். எந்த இடங்கள் என்றும் விளக்கவில்லை. அதைப்போன்று, லாரிகள் வரக்கூடாத நேரத்தை, காலை 8 மணியிலிருந்து 11 மணி வரையில் என்று குறிப்பிட்ட நேரம் வைத்து, அந்த நேரத்திலே லாரிகள் நகருக்குள் வந்தால் அதைப் போக்குவரத்து போலீஸ் அதிகாரிகள் கண்காணித்து உடனடியாக ஸ்தலத்திலே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய விதிகள் இருந்தாலும்கூட, சில நேரங்களிலே தவிர்க்க முடியாமல் சில லாரிகள் உள்ளே வந்து விடுகின்றன. இதை இந்த அரசு கவனத்திலே கொண்டு, விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 4 இடங்களைத் தேர்வு செய்து, அந்த 4 இடங்களில் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது முதல் கட்டமாக, ஆரப்பாளையம் என்ற இடத்தில் அந்தப் பணிகள் முடிவடைந்து......

[1992 ஏப்ரல் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர், '' ஆரப்பாளையம் ''.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : ஆரப்பாளையம் என்ற இடத்தில் அந்தப் பணிகள் நடைபெற்று முடிவடைந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ.மு. சுப்பிரமணியம்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது தெற்கிலேயிருந்தும், மேற்கிலேயிருந்தும் வருகின்ற வாகனங்களுக்கு ஆரப்பாளையம் சரியாக இருக்கும்,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பிரமணியம், மாண்புமிகு அமைச்சர் 4 இடங்கள் என்று சொல்லியிருக்கிறார், நான்கு இடங்களில் ஒரு இடம் ஆரப்பாளையம். ஆகவே. அந்த ஒரு இடம் மட்டும் என்று அல்ல.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து, திருச்சியிலிருந்து வரக் கூடிய வாகனங்கள், லாரிகள் ஏரிப்பாளையம் வழியாக, போக்குவரத்து பிரச்சினை காரணமாக காலையிலே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. மாற்று வழியாக குருவிக்காரன்சாலை வழியாக ஒரு சிறிய குறுகிய பாலத்தின் வழியாக இந்த லாரிகள் எல்லாம் அனுமதிக்கப்படுவதால், காலையிலே குழந்தைகள் பள்ளிகளுக்குச் செல்கின்ற நேரத்திலே பல விபத்துக்களுக்கு பள்ளிக் குழந்தைகள் உள்ளாகிறார்கள் என்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சொன்ன யோசனையைப்போல காலையிலே 2, 3 மணி நேரம், அதாவது 8 மணியிலிருந்து 11 மணிவரையிலும் லாரி போக்குவரத்தை நிறுத்தி வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 1.00 மணி வரையிலும், மாலை 4 மணியிலிருந்து இரவு 9 மணி வரையிலும் லாரிகள் அந்த நகரங்களுக்குள்ளே வரக்கூடாது என்று விதிகள் இருக்கின்றன. விதிகளை மீறி சில லாரிகள் வருகின்ற நேரத்தில், அதற்குக் கடுமையான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. வேலையா.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகளைத் தவிர, வளர்ந்து வருகின்ற எல்லா நகரங்களிலுமே இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட திட்டம் எல்லா நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா நகராட்சிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துகின்ற நேரத்தில், அந்தந்த நகரங்களிலேயிருந்து பொருள்களை ஏற்றிச் செல்லவோ அல்லது இறக்கிச் செல்லவோ வணிகர்களுக்குப் பல்வேறு இடையூறுகள் ஏற்படும். ஆகவே, மாநகராட்சிகளாக இருக்கின்ற மூன்று இடங்களில் மட்டுந்தான் இந்த விதிகளை இந்த அரசு விதித்து இருக்கிறது. ஆகவே படிப்படியாக எந்தெந்த இடங்களிலே இது போன்று நெரிசல் ஏற்படுகிறதோ அந்த இடங்களில் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அரசு கவனத்திலே கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 521. திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

521—

விபத்துக்களைத் தடுக்க மோட்டார் வாகன விதிகளை கடுமையாக்குதல்

*4917—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ் நாட்டில் சாலை விதிகளை முறையாகக் கடைப்பிடிக்காததால் ஏராளமான சாலை விபத்துக்கள் நடப்பதைத் தடுக்க மோட்டார் வாகன விதிகளைக் கடுமையாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடைமுறையில் உள்ள போக்குவரத்து விதிகளை தீவிரமாக அமுல் செய்து, சாலை விபத்துக்களை குறைக்க, காவல் துறை முயற்சி செய்து வருகிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காமல் போக்குவரத்தெல்லாம் மிகவும் அதிகரித்து

உள்ள இந்தக் காலத்தில் அந்த விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காமல் வாகனங்களை ஓட்டுவதனால் சாலை விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. இன்றைக்கு, சென்னை நகரிலே பார்த்தாலும்கூட நெரிசல்களால், சாலை விதிமுறைகளைக் கடைப்பிடிக்காததால் ஆங்காங்கே வாகனங்கள், ஒரு வண்டியை இன்னொரு வண்டி முந்திக்கொண்டு போவதும், அதேபோல, விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காமலும், ஏதாவது பாலம் வருகிறது என்றால் அதைக்கூட சரியாகக் கவனிக்காமலும், இப்படியெல்லாம் செல்வதனால் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இன்றைக்கு, நெடுந்தூரம் பயணம் செல்லும்போது, அதாவது இங்கேயிருந்து திருநெல்வேலி செல்லும்போதெல்லாம் பார்த்தோம் என்றால், ஏதாவது ஒரு லாரியை ரோட்டின் குறுக்கே நிறுத்தி விடுவார்கள். அப்படி நிறுத்தும்போது, பின்னால் வருகின்ற அத்தனை பஸ்களும் மூன்று மணி நேரம், நாலு மணி நேரம் அங்கேயே தாமதமாகி விடுகிறது. சில நேரங்களில் இது விபத்தாக ஏற்பட்டு, பல்வேறு மக்களுக்கு உயிர் பலியும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆதலால் இந்தச் சாலை விதிகளைச் சரியாக, மிகக் கடுமையாக அவர்கள் கடைப்பிடிப்பதற்கு, அந்தச் சட்டத்தைக் கொஞ்சம் கடுமையாக்கி முன்பு ஒரு காலத்திலே, விதிமுறைகளை மீறுகின்றவர்களுக்குக் கடுமையான தண்டனையெல்லாம் கொடுக்கப்பட்டதைப் போல, அந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்காதவர்கள் மேல் கடுமையாக நடவடிக்கை எடுத்ததைப்போல, இப்போது அரசு நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மேலை நாடுகளைப்போல நாம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. இந்திய நாட்டினுடைய சட்டத்தின் அடிப்படையில், அவர்களுக்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன. அதிலே அவர்களுக்கு அபராதம் விதிக்க முடியுமே தவிர, இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9—50

<u>திரு. எஸ். எஸ். ராமசுப்பு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சாலை விபத்தைத் தடுப்பதற்காக இன்றைக்குச் சென்னையில்கூட நான்கு வழித்தடங்கள் போடப்பட்டு, அந்த ரோடுகளை விரிவுபடுத்தி நான்கு



போக்குவரத்துப் பாதைகள் செல்வதைப்போல சாலைத் தடங்கள் போடப்படுகின்றன. இது போன்று, மதுரை, திருச்சி, திருநெல்வேலி போன்ற பெருநகரங்களிலெல்லாம் இதுபோன்று சாலைகளை விரிவு படுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ? இந்த விபத்தைத் தடுப்பதற்கு இது வசதியாக இருக்கும் என்பதால் எல்லா நகரங்களிலும் இதுபோன்று சாலையை விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் சென்னை மாநகரத்திலே மூன்று லேன் என்று சொல்லப்படுகின்ற மூன்று லேன்கள் இருக்கின்றன. அதிலே ஒரு லைனிலே பேருந்துகளை இயக்குவதற்கும், மற்றொரு இடத்திலே நாலு சக்கர வாகனங்களை இயக்குவதற்கும், மற்றொரு இடத்திலே இரண்டு வீலர் என்று சொல்லப்படுகின்ற வண்டிகளை இயக்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குக் காவல் துறைக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். காவல்துறையும், போக்குவரத்துத் துறையும் அதிலே இணைந்து அந்தப் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் இதுவரையிலும் எந்த அரசும் செய்யாத இந்தப் புதிய திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவியுடைய அரசு செய்து கொண்டிருக்கிறது; செய்ய முற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இது படிப்படியாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல பல்வேறு நகரங்களில் உருவாக்குவதற்குச் சாலை வசதிகள் இருக்குமேயானால் அதில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. வி. பி. சந்திரசேகர்.

<u>திரு. வி.பி. சந்திரசேகர் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாட்டிலே நடக்கின்ற விபத்துக்களிலே அதிகமாக நடைபெறுவது இரண்டு சக்கர வாகனங்களால் ஏற்படுகின்ற விபத்துக்கள். இந்த இரண்டு சக்கர வாகனங்களால் விபத்துகள் நடக்கின்றபொழுது அதிலே அடிபடுகின்றவர்கள் தலை பாகத்திலே அடிபடுகின்ற காரணத்தினாலே விபத்துக்கள் ஏற்படுகின்றபொழுது உயிர்ச்சேதம் அதிகமாக ஏற்படுகிறது. அதைத் தடுப்பதற்காக முன்பிருந்தபடி ஹெல்மெட்டைப் போடுவதற்கான சட்டத்தை இந்த அரசு கொண்டு வருமா? அது அசௌகரியமாக இருந்தாலும் உயிர் காக்கின்ற

ஒரு உபகரணமாக இருக்கின்ற காரணத்தாலே அந்த ஹெல்மெட்டைக் கொண்டு வருகின்ற சட்டத்தை இந்த அரசு கொண்டு வருமா எனக் கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விபத்துக்கள் தலையிலே மட்டும் தான் ஏற்படுகின்றன என்பது சரியான கருத்து அல்ல; விபத்துக்கள் இடுப்பிலேயும் ஏற்படலாம், காலிலேயும் ஏற்படலாம்; எங்கு வேண்டுமானாலும் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதற்குப் பல்வேறு இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்பதால் அந்த ஹெல்மெட்டைப் போட வேண்டியது இல்லை என்ற முறையை அரசு கையாண்டுள்ளது. பல்வேறு கிராமப்புறங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள், அதைக் கையிலே எடுத்துக்கொண்டு திருமணத்திற்கோ. மற்ற நிகழ்ச்சிகளுக்கோ செல்வது கடினமாக இருக்கிறது, அதைப் பத்திரப்படுத்த முடியவில்லை என்று பல்வேறு இடங்களிலே குறைபாடுகள் வந்த காரணத்தாலே அது தவிர்க்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திருமதி சக்குபாய் தேவராஜ.

<u>திருமதி டி. சக்குபாய் தேவராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விபத்துக்கள் ஒரு முறை, இரு முறை நடந்தால் அந்த லைசென்ஸ் ரத்து செய்யப்படுமா? டிரைவிங் லைசென்ஸ் ரத்து செய்யப்படுமா? அதற்கு ஆவன செய்யப்படுமா?

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. இதுபோன்ற நிலைமைகள் மேலை நாடுகளிலே இருக்கின்றன. அரேபியா போன்ற நாடுகளிலே—பல்வேறு நாடுகளை நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது முதன்முறையாக ஓட்டுநரால் பல்வேறு தவறுகள் ஏற்படுமேயானால் உடனுக்குடன் 6 மாதங்களுக்கு லைசென்ஸை ரத்து செய்வது; அதற்குப் பிறகு இரண்டாவது முறையாக அவர்களால் விபத்துக்கள் ஏற்படுமேயானால் முழுமையாகவே அவர்களுடைய லைசென்ஸை ரத்து செய்வது போன்ற முறைகள் இருக்கின்றன. இந்திய நாட்டினுடைய சட்டத்தின் அடிப்படையில் அதுபோன்ற நிலை இல்லை, இதைப்பற்றி நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களோடு நாங்கள் பேசி நல்ல முடிவினை மேற்கொள்வதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ஞானசேகரன்.

<u>திரு. சி. ஞானசேகரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது பேருந்துகளை ஓட்டுகின்றவர்கள் எல்லாம் தங்களுக்கு வாகனத்தை ஓட்டுவதற்குத்தான் உரிமம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிட்டு, ரோட்டில் செல்பவர்களைக் கொல்லுவதற்கு உரிமைகள் கொடுக்கப்பட்டு இருப்பதாக எண்ணி, இன்றைக்குப் பல விபத்துக்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், குறிப்பாக, குடித்துவிட்டு வேகமாக வண்டியை ஓட்டுகின்றவர்கள் ஏராளமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை நிச்சயமாக இந்த அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்காக, இந்தக் குடிகாரர்கள் ஒரு முறை அவர்கள் குடி வழக்கிலே ஈடுபட்டிருந்தால் அவர்களுடைய லைசென்ஸை ரத்து செய்வதற்கும், ஒரு முறை அல்லது இரண்டு முறை விபத்துக்களை ஏற்படுத்தியவர்களுக்கு கோர்ட்டுகளிலே லைசென்ஸில் என்டார்ஸ்மென்ட் செய்து அவர்களுடைய லைசென்ஸ் ரத்து செய்யப்படும். அந்த முறையைப் புதுப்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது லைசென்ஸ் வாங்குகின்ற அத்தனை பேருமே கொல்வதற்காகவே லைசென்ஸ் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஞானசேகரன் போன்ற மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் வழக்குமன்றத்திலே வாதாடுவதைப்போல இங்கே சொல்கிறார்கள், வழக்கில்லை வாதாடி குற்றவாளிகளையே நிரபராதி என்ற சொல்லுகின்றவர்களெல்லாம் இன்றைக்குச் சட்டமன்றத்திலே லைசென்ஸ் பெற்றிருக்கின்றவர்களெல்லாம்—அவர்களெல்லாம் இன்றைக்குக் கொல்வதற்காக வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்வது என்பது உண்மையிலேயே நியாயமாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல சாலை விபத்துக்களிலே குடிபோதையிலே யாராவது ஓட்டுநர்கள் ஓட்டினார்களானால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9.55

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. வி. கே. சின்னசாமி.

<u>திரு. வி. கே. சின்னசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டி ஓட்டும்போது, டிரைவர்கள் நடுரோட்டிலே நிறுத்தி, பாஸஞ்சரை இறக்கி விடுகிறார்கள். அவர்களுக்கு டிரெயினிங் கொடுக்கும்போதே கற்றுத் தருகிறார்கள், ஓரமாக

நிறுத்தித்தான் பாஸஞ்சரை இறக்க வேண்டுமென்று. மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கூட பலமுறை நாங்கள் பார்த்திருக்கிறோம். ஆகவே, இந்த மன்றத்தின் வாயிலாக இப்போதே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை தந்து, எந்த ஒரு போக்குவரத்துக் கழக ஓட்டுநராக இருந்தாலும் அல்லது தனியார் துறையிலே இருக்கிற....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கூட பல முறை பார்த்திருக்கிறோம் என்று சொன்னால், அவர்தான் நடுரோட்டிலே வண்டியை நிறுத்துவது போல அது இருக்கிறது.

திரு. வி. கே. சின்னசாமி: இல்லை, இல்லை. நாங்களெல்லாம் — அமைச்சரெல்லாம் போகும்போது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரோடு போகும்போது என்று சொல்லுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி: அமைச்சரோடு நான் பயணம் செய்யும் போது பல பேருந்துக்கழக ஓட்டுநர்கள் அவ்வாறு நிறுத்துகிறார்கள். ஆகவே, இந்த மன்றத்தின் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஒரு அறிவிப்புக் கொடுத்து, அது தனியார் பேருந்தாக இருந்தாலும் சரி, கழகப் பேருந்தாக இருந்தாலும் சரி, லாரி ஓட்டுநராக இருந்தாலும் சரி, வண்டியை நிறுத்தும்போது ஒரு ஓரமாக நிறுத்தி, 'left-side' நிறுத்தி, தார் ரோட்டைவிட்டு கொஞ்சம் கீழே இறக்கி நிறுத்தி, பின்னாலே வருகிற வாகனங்களுக்கு வழி விடுகிற வகையில், அவர்கள் ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? அதனால் விபத்துக்களைத் தடுக்க முடியும் என்பதால், நடவடிக்கை எடுப்பார்களா? அதோடு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடியுங்கள்; ஒரு துணைக் கேள்வியோடு நிறுத்துங்கள். (குறுக்கீடு) அது எல்லாம் வராது; உட்காருங்கள் திரு. சின்னசாமி; அமைச்சர் ஓரத்தில் நிறுத்த வேண்டும் என்பதற்கு மட்டும் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் இருக்கிற ஓட்டுநர்களுக்கு நாங்கள் அறிவுரை வழங்கிக் கொண்டிருக்கிறோம். வாகனங்களை நிறுத்தி இறக்குகிற நேரத்திலோ அல்லது அங்கே இருக்கிற பயணிகள் வண்டியிலே ஏறுகிற நேரத்திலோ ஓரப் பகுதியிலே நிறுத்தித்தான் அவர்களை இறக்கவோ அல்லது ஏற்றவோ வேண்டுமென்ற அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. இது தனியாருக்கும் பொருந்தும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகன விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு 1990-91 ஆம் ஆண்டு எவ்வளவு விபத்துக்கள் நடந்திருக்கின்றன; எவ்வளவு உயிர் சேதமாகியிருக்கிறது?....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு தனிக் கேள்வி போடவும். திரு. ஆர். சிங்காரம் (குறுக்கீடு).

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபத்துக்களைப் பொறுத்தவரையில்........ (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி, அமைச்சர் விவரங்கள் வைத்திருக்கலாம். பேரவைத் தலைவருடைய பார்வையிலேயே, இது மூலக் கேள்வியிலிருந்து பிரிந்து செல்கிறது என்று தெரிகிற காரணத்தினால், தனிக் கேள்வி போடுமாறு நான் சொன்னேன். திரு. ஆர். சிங்காரம்

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவ. அவர்களே, விபத்துக்களைப் பொறுத்தவரையில், 90 சதவிகிதம் டிரைவர்கள் விபத்துக்கள் செய்வதில்லை; 'ஆக்ஸிடன்ட்' செய்வதில்லை. அவர்கள் லைசன்ஸ் பெற்று முறையாக ஓட்டுகிறார்கள் என்பதை நான் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். ஆனால், லாரி வண்டியிலே வருகிற டிரைவர்கள், கிளீனர்கள் லைசன்ஸ் பெறாமல் ஓட்டுகிற காரணத்தினால்தான் இந்த விபத்துக்கள் பெரும்பாலும் ஏற்படுகின்றன. சமீபத்தில் நடந்த சில விபத்துக்களை நான் பார்க்கிறபோது, கிளீனருக்கு லைசன்ஸ் கிடையாது; லைசன்ஸ் இல்லாமல் அவர்கள் ஓட்டுகிறார்கள். இதை டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மென்டிலே இருக்கிற 'பிரேக் இன்ஸ்பெக்டர்ஸ்'......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்வி கேட்கச் சொன்னேன்.

திரு. ஆர். சிங்காரம்: 'பிரேக் இன்ஸ்பெக்டர்ஸ்' போன்றவர்கள், இதர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எல்லாம் அடிக்கடி சோதனை செய்தால், இதைக் கண்டுபிடிக்கலாம். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, லாரி ஓட்டுநர்களால்தான் பல்வேறு விபத்துக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதைத் தவிர்க்கக் கூடிய

வகையில், நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் பொறு பேற்றதற்குப் பிறகு, நிரப்பப்படாத ஆய்வாளர்கள் கிரேட்-என்று சொல்லப்படுகிற மோட்டார் வெஹிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்ஸ் கிரேட்-2 என்கிற இடத்தை நிரப்ப வேண்டுமென்று 3½ ஆண்டு காலமாக நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இது குறித்து நீதிமன்றத்திலே வழக்குகள் நிலுவையிலே இருக்கிற காரணத்தினால், புதிதாக 42 போக்குவரத்து ஆய்வாளர்கள் கிரேட்-2 இடங்களை நிரப்ப முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த அரசு அதைக் கவனத்திலே கொண்டபிறகு, செங்கல் பட்டு, சென்னை போன்ற இடங்களிலே லாரி விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன என்பதை அறிந்து, அவற்றைத் தவிர்க்கக்கூடிய வகையில், 600-க்கும் மேற்பட்டவர்கள்மீது வழக்குகள் தொடுத்து, கடுமையான நடவடிக்கை மேற்கொண் டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சுவாமி நாதன்.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தில் அதிக அளவில் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சொன்னால், அதற்குக் காரணம், லாரி ஓட்டுகிற டிரைவர்கள் நீண்ட தூரம் லாரியை ஓட்டிச் செல்கிற போது, 8 நாட்கள் கூட தொடர்ந்து கண் விழித்துக் கொண்டு ஓட்டுகிறார்கள். அவ்வாறு கண்விழித்து ஓட்டுகிறபோது, அந்தக் கண் விழிப்பின் காரணமாகத்தான் எங்கே பார்த்தாலும் அவர் களால்தான் ஆக்ஸிடண்டுகள் ஏற்படுகின்றன. ஆகவே பிரைவேட்டாக லாரி வைத்திருக்கக்கூடிய ஓனர்கள், அந்த டிரைவர்களை 2 நாட்களுக்கு மேல் ஓட்டக்கூடாது என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க அரசு முறையான நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.00

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர்கள் இரவு பகலாக 8 நாட்கள் ஓட்டுகிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது போன்ற தகவல்கள் எதுவும் அரசினுடைய கவனத்திற்கு இதுவரையிலும் கொண்டுவரப் படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல அதிக நாட்கள் தொடர்ந்து ஓட்டுநர்களாக இருப்பவர்களைத் தனியார் லாரி உரிமையாளர்களிடம் நாம் குறிப்பிட்டு இரண்டு நாட்களுக்கு மேலே ஓட்டக்கூடாது என்று தடை களை விதிக்க அரசினிடத்தில் விதிமுறைகள் இல்லை. இருந்தாலும் கூட, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தனியார் லாரி உரிமையாளர்கள் ஓரளவுக்கு மேல்



அந்த ஓட்டுநர்களை இரவு பகலாக ஓட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த அரசின் சார்பாக நான் வைக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது டிரைவிங் சொல்லிக் கொடுக் கின்ற டிரைவிங் ஸ்கூல்கள் முறையாக நடத்தப்படுவது கிடையாது என்ற புகார்கள் நிறைய வருகின்றன. 4,5 நாட்கள் சொல்லிக் கொடுத்துவிட்டு அவர்களே ஏற்பாடு செய்து டிரைவிங் லைசென்ஸ் வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள் என்ற புகார்களும் நிறைய வருகின்றன. ஆகவே, இனிமேல் டிரைவிங் லைசென்ஸ் பெறுவதற்கு ஒரு டிப்ளமோ கோர்ஸ் படிக்க வேண்டும். அந்த டிப்ளமோ சொல்லிக் கொடுப்பதற்குக் குறைந்தது மூன்று மாதங்களாவது முறையாக டிரைவிங் ஸ்கூலிலே படிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்து அதுபோன்ற டிரைவிங் ஸ்கூல்களுக்கு அங்கீகாரம் தர அரசு முன் வருமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு டிரைவிங் ஸ்கூல் போல பயிற்சி பெறுகிற மையம் இப்பொழுது சென்னையிலே மட்டும் வந்திருக்கிறது. அதை விரிவு படுத்துகின்ற வகையில் 4 இடங்களிலே லைசென்ஸ் பெறுவதற்குப் பயிற்சி அளிப்ப தற்கு டிரைவிங் ஸ்கூல் வைப்பதில் அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. அதேபோல தனியார்களும் முன்வரு வார்களேயானால் அதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் குறிப் பிடுகிற நேரத்தில் 3, 4 நாட்களில் டிரைவிங் லைசென்ஸ் பெற்று அவர்கள் ஓட்டப் பழகிவிட்டதாகச் சொல்லி டிரைவிங் லைசென்ஸ் வாங்கி விடுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். சிலர் அவர்களது சொந்தக் கார்களிலேயே ஓட்டுவதற்குப் பழகிவிட்டு, 2,3 நாட்களில் ஓட்டப் பழகி விட்டதாகக் கூறி, லைசென்ஸ் வாங்குகின்ற வாய்ப்பு இருக்கிறது. சிலபேர் திறமை பெற்றவர்கள் ஒரே நாளில் வேண்டுமானாலும் வாங்கி யிருக்கலாம். ஆகவே, அதுபோன்ற நிலைமைகளை நாம் தவிர்ப்பதற்கு முடியாது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொளகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 522 திரு. டி. எம். ரங்கராஜன். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர். உறுப்பினர் இருக்கையில் இல்லை

[1992 ஏப்ரல் 9

வினா எண் 523, டாக்டர். மு. சீனியம்மாள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

523—

சாலையோரங்களில் மரங்களை நடுதல்.

* 4506—டாக்டர். மு. சீனியம்மாள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சாலையோரங்களில் மரங்களை நடுவதற்கு தனியார் நிறுவனம் மற்றும் வங்கிகளை ஈடுபடுத்த அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இவ்விதத் திட்டம் ஏதும் இலலை.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனரா வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, சிண்டிகேட் வங்கி, பப்ளிக் செக்டார் நிறுவனம், லையன்ஸ், ஜேஸ்ஸ், ரோட்டரி, இன்னர்வீல் மற்றும் சமூகசேவை நிறுவனங்கள் மூலம் ஒரு நிறுவனத்திற்கு இவ்வளவு மரங்கள் என்று குறிப்பிட்டு விவசாயத் துறையின் மூலமாக மலிவு விலையிலே நிழல் தரும், பயன்தரும் மரக் கன்றுகளை வாங்கி, ரோடு ஓரங்களில் நட்டால் மிகவும் பயன்தரும் என்ற அளவில் மரம் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையோரங்களிலே மரங்களை நடுவதற்கு அரசின் சார்பிலே ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன. தனியார் நிறுவனங்கள் மூலமோ, வங்கிகள் மூலமோ இதுவரை நடப்படவில்லை. தனியார்கள் மரம் நடுவதற்கான திட்டம் இதுவரையிலும் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொளகிறேன்.

டாக்டர். மு. சீனியம்மாள : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் முன் அனுமதியோடு—வெற்றிபெறத் தகுதியற்று, வெறிபிடித்து அலையும் பித்தர்களைப் பொறுமையுடன் காத்துக் கொண்டிருக்கிற எங்கள் புரட்சித் தலைவி என்ற சிங்கம் சிலிர்த்தெழுந்து அவர்களை அழிக்க



நினைக்காது பித்தத்தைத் தீர்க்கின்ற வகையிலே எலுமிச்சை மரங்கள், இலுப்பை மரங்களை அதிகமாக நடுவதற்கு இந்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை ஓரங்களில் எலுமிச்சை மரங்களை நட்டால் அதிலே திருட்டு போய்விடுகிற வாய்ப்பு இருக்கிறது. பாதுகாக்கப்படுகின்ற இடங்களிலே தான் எலுமிச்சை மரங்களை நட்டால் பயன் கிடைக்கும். இலுப்பை மரங்களைப் பொறுத்தமட்டில் கவலையில்லை. ஆகவே, உறுப்பினருடைய யோசனையை அரசு கவனமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி அ.தி. சரஸ்வதி

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளில் சரித்திரப் புகழ் வாய்ந்த மன்னர்கள் காலத்தில் நடப்பட்டு வளர்க்கப் பட்ட மரங்களுக்கெல்லாம் வயதாகி விட்டது. காலப் போக்கில் அவைகள் அழியும் நிலைமை உள்ளது. இம்மரங்களின் இடையிடையே புதிய புளிய மரங்களை நட்டு வளர்க்க அரசு உடனடியாக முன்வராவிட்டால் நிழல்தரும் மரங்களே இல்லாதுபோய்விடும். இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? எவ்வகையில் அவை செயல்படுத்தப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொகலாய மன்னர்கள் காலத்திலேயே மரங்கள் நடுவது என்பது ஒரு அரசினுடைய பணியாக இருந்து வந்திருக்கிறது. அசோகர் காலத்திலேயும் இருந்திருக்கிறது. ஆகவே, அதைக் கணக்கிலே வைத்து இன்றைக்கு வருகின்ற அரசுகள் எல்லாம் மரங்களை நட வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் கேங் மஸ்தூர் என்று சொல்லுகின்றவர்களை வைத்து சாலை ஓரங்களில் மரங்களை நட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த அரசு பொறுப் பேற்றுக்கொண்டதற்குப் பிறகு மரங்களை நடவேண்டும் என்பதற்காக அதாவது சாலையோர மரங்களை நடுவதற்காக 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

[1992 ஏப்ரல் 9

__திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஜில்லாக்களிலே ராணி மங்கம்மாள் ...ன்ற அந்த அரசி சாலையின் இரண்டு பக்கத்திலேயும் மரங் ...ளை வளர்த்து பிரமாண்டமான அளவில், வெய்யிலே தெரி ...ாத அளவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. ஆனால் ...டந்த 20 ஆண்டுகளுக்குள்ளாக அந்த மரங்கள் எல்லாம் ...ழுமையாக வெட்டப்பட்டு அடிமரம் மட்டும் நின்று ...காண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் மரங்களை ...வட்டியவர்களுக்கு நாம் என்ன தண்டனை கொடுக்க ...ருக்கிறோம்? அதுமாத்திரமல்லாமல் அமைச்சர் அவர்கள் ...திலில் தனியார்கள் வளர்ப்பதற்கு முன்வந்தால் அரசு ...வன செய்யும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தனியார் ...ந்த மரங்களை நடுவதற்கு முன்வந்தால் அவர்களுக்கு ...ந்தெந்த வகையில் உதவிகளைச் செய்ய இருக்கிறோம் ...ன்பதை அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :__ மாண்புமிகு ...பரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் நம்முடைய நடுஞ்சாலைகளிலே மரங்களை வளர்ப்பதற்கு இதுவரை ...னுமதி வழங்கப்படவில்லை. பரிசீலிக்கலாம் என்றுதான் ...ந்த அரசு சொல்லி இருக்கிறது. ஆகவே அரசைப் பொறுத்த ...ரையில், தனியார்கள் முன்வருவார்களேயானால், அதற்கான ...திமுறைகளை ஆராய்ந்து அதற்குப் பின்னர் எந்தெந்த ...ழிகளில் அவர்களை ஊக்குவிக்கலாம் என்பதைப்பற்றி ...டிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ...ந்த மரங்கள் வெட்டப்பட்டிருப்பதாக சொன்னார்கள். ...ன்றைக்கு 20 ஆண்டுகளுக்கு 30 ஆண்டுகளுக்கு முன்னாலே ...ருந்த மரங்களை இடையிடையே சில நேரங்களில் ரம்பங் ...ளை வைத்து அறுத்துவிடுகிறார்கள். அவர்கள் மீது திருட்டு ...ழக்கு பதிவு செய்யப்பட்டு நெடுஞ்சாலைத் துறை கடுமையான ...டவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றது, குறிப்பாக நம் ...டைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் ...லைவி அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு ...ல்லா நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளையும் அழைத்து ...ாலையோரங்களில் இருக்கிற மரங்களைப் பாதுகாக்க வேண்டு ...மன்று உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே ...ம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு அப்படிப்பட்ட புகார்கள் ...துவும் வரவில்லை, அப்படிப்பட்ட புகார்கள் ஏதாவது ...ாண்புமிகு உறுப்பினருடைய பகுதியில் இருக்குமேயானால் ...தை இந்த அரசுக்குத் தெரிவித்தால் கடுமையான நடவடிக்கை ...மற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ திரு. நா.சா. பழனி ...மி.



1992 ஏப்ரல் 9]

__திரு. நா. சா. பழனிசாமி :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

''சாலையிலே நட்ட மரம், சர்க்காரு வச்ச மரம்,
ஆளுமேலே விழுந்தால் ஆபத்து ''

என்று சொல்லி வெட்டிவிடுவதாக அந்தக் காலத்தில் ஒரு திரைப்படப் பாடல் வந்திருக்கிறது. அதைப்போல சாலையோர மரங்களை நடுகிறபோது பொறுப்பில்லாமல் ஆடுமாடுகளை விட்டு அழித்துவிடுகிறார்கள். எனவே அந்த சாலையோர மரங்களைப் பராமரிக்கின்ற பொறுப்பை, ஆளுக்குப் பாதி என்று அதன் பலனை அனுபவித்துக்கொள்வது என்ற வகையில் அதனை ஒட்டியுள்ள விவசாயிகளுக்கு விட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலையோர மரங்களில் எதுவும் ஆள் மேலே விழுகின்ற ஆபத்து இல்லை. உறுப்பினருடைய பகுதியிலே அப்படி இருந்தால் அதைச் சொல்லலாம். ஆனால் இன்றைக்கு அவர் கேட்டிருக்கின்ற முறை விவசாயிகளிடத்திலே அதை ஒப்படைக்கலாமா என்பது. இதுசம்பந்தமாக அரசு இதுவரையில் எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை. அரசின் சார்பில்தான் அந்தப் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய பரிசிலனைக்கு வைத்து அதற்குப் பின்னால்—சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள்கூட விதவைப் பெண்களுக்கு 2—சி பட்டாக்களை வழங்கி மரங்களை பாதுகாக்கிற முறைகளைக் கொண்டு வரலாம் என்று கூட கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். இதையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று அதற்குப் பிறகு—சில முடிவுகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ வினா எண். 524. திரு. கு. சிவசுப்பிரமணியன். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

524—

இரயில்வே பாதையின் குறுக்கே மேம்பாலம் அமைத்தல்.

* 4582—திரு. கு. சிவசுப்பிரமணியன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடலூர் திருப்பாதிரிப்புலியூர் இரயில்வே பாதையின் குறுக்கே மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு இது செயல்முறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1992–93ஆம் ஆண்டு இரயில்வே பணித் திட்டத்தில் தென்னக ரயில்வேக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இரயில்வே அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் இந்த வேலை செயல்முறைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியில் சொல்லாற்றல் மட்டுமல்ல, செயலாற்றலும் அமையப் பெற்று விளங்கும் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு நல்ல சுமுக உறவு இருக்கின்ற இந்த நேரத்தில், அவர்கள் அடிக்கடி மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, பேசி வருகிற காரணத்தால், இந்த நெருக்கடி நிறைந்த பகுதியில் மக்கள் தொகை பெருகி வருகிற நேரத்தில் இந்த மேம்பாலத்தை உடனடியாக அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு பகுதிகளில் மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று ஒவ்வொரு நாளும் கேள்வி கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இதில் ஒரு தெளிவான விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு



இரயில்வே மேம்பாலம் கட்டுகிற நேரத்தில் 50 சதவீதம் மாநில அரசும், 50 சதவீதம் நம்முடைய இரயில்வே துறையும் தான் முதலீடு செய்து கட்ட வேண்டி இருக்கிறது. நாம் ஒரு பட்டியலைத் தயாரித்து அவர்களிடத்திலே கொடுக்கிறோம். இரயில்வே துறைதான் அந்தப் பட்டியலுக்கு முன்னுரிமை கொடுத்து வேலைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆண்டுக்கு ஒன்று அல்லது இரண்டு வேலைகளைத்தான் எடுக்கிற அளவுக்கு நிதியினை ஒதுக்குகிறார்கள். அதன் காரணமாக பல்வேறு வேலைகள் இன்றைக்கு தாமதப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக நம்முடைய முதல்வர் அவர்களும், மத்திய அரசும், இரயில்வே துறையும் அதிகமான நிதி ஒதுக்கி மேம்பாலம் கட்ட வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். எனவே அரசு இதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரயில்வே துறை ஒதுக்குகிற நிதியாதாரத்தைப் பொறுத்து அந்தந்த ஆண்டுகளில் அந்தந்தப் பணிகள் எடுத்துச் செய்யப்படுகிறது என்பதையும், நம்முடைய உறுப்பினர் கேட்கிற பகுதிக்கு 1992–93-ல் நிதியில்லை என்று இரயில்வே துறை தெரிவித்து விட்டது, எனவே 1993–94 ஆம் ஆண்டு பட்டியலிலே அதைச் சேர்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே இரயில்வே துறையின் அங்கீகாரம் பெற்றவுடன் உடனடியாக அந்த வேலை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 525, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

525—

கல்பட்டு—அமிர்தி சாலை செப்பனிடல்.—

* 6212—திரு. தா. வேடியப்பன்:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் கல்பட்டு-அமிர்தி சாலை செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பராமரிப்பு நிதி நிலையைப் பொறுத்து, வரும் நிதியாண்டில் இந்த வேலை எடுத்துச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. தா. வேடியப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய போளூர் தொகுதி அதிகமான கிராமங்களை உள்ளடக்கிய தொகுதியாகும். இந்தக் கிராமப் பகுதிகளில் கல்பட்டு—அமிர்தி சாலை என்பது சுமார் 5 கிலோ மீட்டர் சாலை நீளம். இந்தப் பகுதி மக்கள் புரட்சித் தலைவி அவர்களையே நம்பியிருக்கிறார்கள். எனவே இந்த ஏழையெளிய மக்கள் பயன் அடையும் 5 கிலோ மீட்டர் சாலையைச் செப்பனிட்டால், மலை வாழ்ப் பகுதி மக்கள் பயன் அடைய ஏதுவாக இருக்கும். எனவே வரும் நிதி ஆண்டிலாவது இதனை சேர்த்து மலை வாழ் மக்களுக்கு பஸ் வசதி அமிர்தி—ஜமுனாமருதூர் பஸ் வசதி ஏற்படுத்த நம் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எனவே இந்த பஸ் வசதியை ஏற்பாடு செய்ய இந்த 5 கிலோமீட்டர் சாலையை அமைத்தால் மக்கள் பயன் அடைய முடியும். எனவே இதனை முக்கிய சாலையாகக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செப்பனிட உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை கிராம சாலையினுடைய திட்டத்தின் கீழே எடுத்து வேலை செய்யப்பட்டு அதன் பின்னாலே நெடுஞ்சாலையிடம், ஹாண்ட் ஓவர் செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட சாலையாகும். இந்த சாலையினுடைய பராமரிப்புக்கு இன்றைக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. வருகின்ற நிதியாண்டிலே போக்குவரத்து துறையின் வசதி பாதிக்காத சூழ்நிலை இருக்குமானால் உடனடியாக அந்த சாலையை எடுத்து, இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு நிதியினை அதிகமாக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். போக்குவரத்து வசதி பாதிக்காத அளவுக்கு உடனடியாக இந்த சாலையினுடைய பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. கி. தர்மலிங்கம்.

<u>திரு. கி. தர்மலிங்கம்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமிர்தி என்பது என்னுடைய வேலூர் மாநகரத்திற்கு எந்த சுற்றுலாத் துறையும் இல்லாத நேரத்தில் குறிப்பாக தாய்மார்களும், இளைஞர்களும் அந்த அமிர்தி பகுதிக்கு சென்று ஞாயிற்றுக் கிழமை விடுமுறையைக் கழிக்கிறார்கள். எனவே அவசியம் இந்தப் பாதையை செப்பனிடுவதோடு அங்கே ஒரு மலையாறு வருகிறது. அந்த மலையாறுக்கும் ஒரு தரைப் பாலமாவது அரசு கட்டித் தருமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கல்பட்டு அமிர்தி சாலையை பராமரிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



சொல்லியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறேன். பாலம் கட்ட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அதுபற்றி தனியாக என்னிடத்திலே எழுதித் தரவேண்டும். இந்தப் பாலத்தை அமைக்க வேண்டும் என்பதை, அதற்குரிய நிதி ஆதாரங்களை பொறுத்து அந்தப் பாலத்தை அமைக்கின்ற பணி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. தா. வேடியப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையில் நாகநதி என்ற இடத்தில் ஒரு மேம்பாலம் அமைக்கவேண்டும் என்று ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்திருக்கிறேன். அதனை கனிவோடு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்பாலம் அமைக்க வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகள், ஆயிரக்கணக்கான கோரிக்கைகள் இன்றைக்கு தமிழகம் முழுவதும் நம்முடைய நெடுஞ்சாலைத் துறைக்கு வந்திருக்கின்றன. ஆகவே அத்தனை மேம்பாலங்களையும் உடனடியாக எடுத்துச் செய்ய முடியாது. போக்குவரத்து அதிகமாக இருக்கின்ற பகுதிகள், இன்றைக்கு வாகன வசதி அதிகமாக செல்லுகின்ற பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, மேம்பாலங்களை, தரைப் பாலங்களை கட்டிக் கொண்டு இருக்கிறோம். ஆகவே இந்த சாலையினுடைய போக்குவரத்து வசதியைப் பொறுத்து, இந்த மேம்பாலத்தை அமைக்கின்ற பணியைத் தொடங்கலாம் என்று அரசு கருதுகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. போளூர் வரதன்.

<u>திரு. போளூர் வரதன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைப் பகுதியிலே அமிர்தி கல்பட்டு, நாங்குநேரி போன்ற பகுதிகள் இருக்கின்றன. ஜவ்வாது மலை முழுக்க முழுக்க டிரைபல் பீபிள் வாழ்கின்ற பகுதி. ஒவ்வொரு அரசும் வருகின்றபோது அந்த மக்களுக்கு திட்டங்கள் செய்வோம், செய்வோம் என்று வாக்குறுதியை தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஆனால், மலைப்பகுதியிலே வாழ்கின்ற மக்கள் வேலூர் வரவேண்டும் என்று சொன்னாலும், போளூருக்கு வரவேண்டும் என்று சொன்னாலும் சரியான சாலை வசதிகள் இல்லை. மருத்துவ வசதிகள் இல்லை என்ற பிரச்சினை இருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்த சாலைகள் சரியாக இல்லை என்ற காரணத்தினால் சந்தனக் கடத்தல் காரர்களுக்கு மறைந்து செல்வதற்கு வசதியாக இருக்கிறது. காட்டு இலாகா அதிகாரிகள் செல்ல வேண்டும் என்று சொன்னாலும் சாலைகள் இல்லை...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, முக்கியமான அந்தப் பிரச்சினை அந்த காட்டு இலாகா கனி வளங்களை காப்பாற்றப்படவேண்டும் என்று சொன்னால் நிச்சயம் அந்தப் பகுதியிலே சாலை வசதி போன்றவைகளும் பால வசதிகளும் தேவை. இதை அரசே விரைவாக செயல்படுத்திக் கொடுத்தால் சந்தனக் கடத்தலைத் தடுப்பதற்கு முலைப்பாக இருக்கும். ஆகவே, இந்தத் திட்டத்தை அரசு துரிதமாக செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் அடைந்தக் காலத்திலிருந்து சாலைகள் எப்படி இருந்தன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் நன்றாக அறிவார்கள். ஏதோ அரசுகள் எல்லாம் வந்து வாக்குறுதி கொடுத்துவிட்டு செய்யவில்லை என்பதுபோல சொல்வார்கள். அவர் கடந்த கால அரசைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார் என்று நான் நினைக்கின்றேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே இன்றைக்கு இரண்டு மடங்கு சாலைக்கு நிதி ஒதுக்கி தந்து (மேசையைத் தட்டும் ஒலி) மிகப் பெரிய புரட்சியினை நெடுஞ்சாலைத் துறையிலே உருவாக்கியிருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்றாக அறிவார் என்று நினைக்கிறேன். இன்றைக்கு மலைப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் சாலைகளை அமைக்கின்ற நேரத்தில் அதற்கான ''மலைப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம்'' என்ற திட்டத்தினை நெடுஞ்சாலைத் துறையிலே எடுத்து அதற்கான பணிகளை செய்து வருகிறது. இன்றைக்கு சிலப் பகுதிகளில், முக்கியத்துவம் இல்லாத பகுதிகளில், சில நேரத்தில் சாலைகள் பழுதுபட்டு போகின்ற நேரத்தில், வாகனப் போக்குவரத்து இல்லாத இடங்களில் வேண்டுமானால் சில பகுதிகள் பாதிக்கப்பட்டு. அவ்வாறு பாதிக்கப்பட்டது அரசின் கவனத்திற்கு வராமல் இருக்கின்ற ஒன்றிரண்டு இடங்களிலே வேண்டுமானால் அவர் கூறுகின்ற பிரச்சினை இருக்கலாம். ஆனால், இந்த சாலையைப் பொறுத்தமட்டிலே இந்த அரசு எடுத்துச் செய்ய வேண்டுமென்று ஏற்கெனவே உறுப்பினருக்குத் தெரிவித்திருக்கிறேன். ஆகவே. வன இலாகாவினுடைய அனுமதியைப் பெற்று சில இடங்களில் சாலை போட வேண்டியிருக்கிறது. ஆகவே. இந்த அரசைப் பொறுத்தவரையில் நெடுஞ்சாலைத்துறை மிகச் சிறிய துறையாக இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித்



தலைவியின் காலத்திலே விளங்கிக் கொண்டிருக்கிறது. எனவே இனிமேல் இந்தப் பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பு இல்லை. கடந்த காலங்களிலே போல இருக்காது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 526, திரு. வ. மு. சுப்பிரமணியம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

526—

மானாமதுரை தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*1384—திரு. வ. மு. சுப்பிரமணியம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மானாமதுரைத் தொகுதியில் ஆழ் குழாய் போடப்பட்டு உப்புத் தண்ணீர் வந்துள்ள இடங்களில் வைகையாற்றில் இருந்து தண்ணீர் எடுத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமல் படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல் வடிவம் பெறும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வ.மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே டிமாண்டில் உப்பு தண்ணீர் என்று சொல்லியிருக்கிறேன். உப்பு நீர் பருகுவதற்கு ஏற்றதல்ல. ஆதலால் எங்களுடைய தொகுதியில் வைகை ஆறு 50 கிலோ மீட்டர் தூரம் ஊரின் நடுவில் செல்கிற நிலையில், அந்த வைகை ஆற்றிலிருந்துதான் மதுரை மாநகருக்கும், சிவகெங்கை நகருக்கும், அருப்புக்கோட்டை நகருக்கும் இன்னும் சொல்லப் போனால் கடலாடிக்கும்கூட குடிநீர் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆகவே, அங்குள்ள மக்கள் நன்னீரைப் பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை ஒன்றியத்தில் வைகை ஆற்றின் நீரை ஆதாரமாகக் கொண்டு வலசை வாடம்பாக்கி. குருந்தங்குளம், செங்களத் தூர் மற்றும் 13 குடியிருப்புகளுக் கான் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. நீர் உறிஞ்சி கிணறு அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மிக விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. விரைவில் பயனுக்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோன்று பல நூற்றுக்கணக் கான கிராமங்களில். ஏறக்குறைய எல்லா கிராமங்களிலும் உப்பு தண்ணீராக இருப்பதால் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை பல திட்டங்களாக மாற்றி. பரவலாக ஆக்கி பல இடங்களுக்கு இத்திட்டம் பயன்படும் வகையில் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களுக்கு இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினால் குடிநீர் வடிகால் துறையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இதில் எந்தெந்த வகையில் நீர் ஆதாரத்தை மக்கள் பெற முடியும் என்பதை ஆய்வு செய்து அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 527, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் .

527—

## பாலாறு—ஆரணி குடிநீர்த் திட்டம்.

*4036—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஆரணி நகரின் குடிநீர் பிரச்சினைக்கு நிரதர தீர்வுந் தரும் பாலாறு-ஆரணி குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?



மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஆரணி நகராட்சிக்கு பாலாற்றை நீராதாரமாகக்கொண்டு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல் படுத்த, ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வுப் பணிகள் 6/92-ல் முடிக்கப்பட்டு, திட்ட மதிப்பீடு தயாரிக்கப் பட்டு அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டவுடன் திட்டம் செயலாக்கப்படும்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, தேர்தல் முடிந்து மக்களைச் சந்திக்கச் சென்ற போது மக்கள் பெரும் குறையாக சொன்னது குடிதண்ணீர் பிரச்சினையைத் தான். நானும் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்வார்கள் என்று சொன்னேன். ஆனால் ஓரிரு நாட் களிலே மழை கொட்டோ கொட்டென்று கொட்டி மக்கள் " புண்ணியவதி புவி ஆள ஆரம்பித்ததும் பூமாதேவியின் தாகம் தீர்ந்தது" (மேசையைத் தட்டும் ஒலி) என்று பேசுகின்ற அளவுக்கு மழை பெய்து ஏரி, குளங்கள், கிணறுகள் எல்லாம் நிரம்பியது. கோடை வந்த அந்த நேரத்திலே என் தலையும் தப்பியது. ஆனால் மீண்டும் கோடை வருகிறது. மீண்டும் அங்குள்ள பொதுமக்களிடையே தண்ணீர் பிரச்சினை வர இருக் கிறது. ஆகவே, ஆரணி நகரைப் பொறுத்தவரையிலும், ஆரணிப்பாளையம் பகுதியிலே முந்தைய ஆட்சியிலே 6 மாத காலத்திற்கு ஒரு முறை கூட தண்ணீர் வராத நிலை இருந்தது. ஆனால் நம்முடைய ஆட்சி வந்தவுடன் வண்டிகள் மூலமாக தண்ணீரை அளித்து அவர்களுடைய பிரச்சினையை அரசு கனி வோடு பரிசீலிக்கிறது. ஆனால் இந்தப் பிரச்சினையை தீர்ப்ப தற்கு, அந்தப் பகுதிகளில் குடிநீர் திட்டங்கள் நிறைவேற நீண்ட நாட்கள் ஆகும். எனவே, அந்தப் பகுதியிலே ஆழ் குழாய் கிணறுகள் அமைத்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுப் பணிகள் தற்போது நடக் கின்ற நிலையில், தேவையான அளவுக்கு நீர் ஆதாரங்கள் கிடைக்காத காரணத்தினால் மிக அதிகமான பகுதிகளில் ஆய்வுப் பணிகள் செய்ய வேண்டியிருப்பதால் ஆய்வுப் பணிகள் 1992—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களுக்குள் முடிக்கப்பட்டு அரசு நிர்வாக ஒப்புதலுக்குப் பிறகு இந்தப் பணிகள் தொடங்கப் படும். தற்போது நிலைமைகளை சமாளிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி பல்வேறு நிலைகளை ஆராய்ந்து ஆழ் குழாய் கிணறுகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 528, திரு. கே. பி. மணிவாசகம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்,

528—

## கூட்டுறவு சிறப்பு அங்காடி திறக்க நடவடிக்கை.

*4778—திரு. கே. பி. மணிவாசகம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்குவிடையளிப்பாரா:—

உடுமலைப்பேட்டை வட்டத்தில் மடத்துக்குளம், குமாரலிங்கம், தளி ஆகிய இடங்களில் கூட்டுறவு சிறப்பு அங்காடி திறக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உடுமலைப்பேட்டை வட்டத்தில் மடத்துக்குளம், குமாரலிங்கம், தளி ஆகியவை ஊரகப் (Rural) பகுதிகளாதலால், கூட்டுறவு சிறப்பங்காடிகள் திறக்கும் திட்டம் ஏதுமில்லை. உடுமலைப்பேட்டையில், உடுமலை நகர கூட்டுறவு பண்டகசாலை ஒரு பல்பொருள் அங்காடியை (Department Store) நடத்தி வருகிறது.

முற்பகல் 10-20

திரு. கே. பி. மணிவாசகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை தொகுதியில் அமராவதி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது மடத்துக்குளம். இங்கே சுமார் 5,000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அது மட்டுமல்ல. 20-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன. அதைப்போல கொடை வள்ளல் குமணன் வாழ்ந்த இடம் குமாரலிங்கம். இது கே. வில்லேஜ் என்றும் கூறப்படுகிறது. இங்கே முக்கிய தொழில் விவசாயம். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்கின்ற நம்முடைய இதய தெய்வம் புரட்சி தலைவி அவர்களுடைய புனித அரசு மக்களின் குறைகளைப் போக்க மடத்துக்குளம், குமாரலிங்கம், தளி ஆகிய நகரப் பஞ்சாயத்துக்களில் சிறப்பு அங்காடிகளைத் திறப்பது குறித்து மறுபரிசீலனை செய்யலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊருக்கும் ஒரு சூப்பர் மார்க்கெட் திறக்க முடியாது. இந்த மூன்று ஊர்களிலும் ஏற்கெனவே நியாயவிலைக் கடைகள் நடைபெற்று வருகின்றன. அந்த நியாய விலைக் கடைகளிலே கட்டுப்பாடற்ற பொருள்கள் —அன்கன்ட்ரோல்ட் கமாடிடீஸ்—விற்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 529, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.



529—

## பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்துக்களைக் தடுக்க தொழிலாளர்களுக்குப் பயிற்சி.

*3551—திரு. ஜெ. பாலகங்காதரன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிவகாசி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு விபத்துக்களைத் தடுக்க உரிய பயிற்சி அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது தொழிற்சாலை ஆய்வாளர்களால் சிவகாசியிலும் மற்ற இடங்களிலும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு விபத்துக்களை தடுக்கும் வகையில் உரிய பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் 6–4–1992 அன்று சிறு தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் மத்திய சுங்க வரியிலிருந்து விதி விலக்கு அளிக்க மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்வதாகக் கூறியதற்கும், தீப் பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சிறுவர்கள் படிக்க நான்-பார்மல் எஜுகேஷன் மூலம் உதவி செய்யப்பட்டும்; பி. எஃப். தொகை ரூபாய் 2-லிருந்து 10 ஆக உயர்த்தி தொழிலாளர்களுக்கு பல நன்மைகள் புரிந்திட்ட எங்கள் இதய தெய்வத்திற்கு நன்றி கூறி (மேசையை தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை பள்ளிகள் மூலமாக நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குரிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட இருக்கிறதென்பதை மானியக் கோரிக்கையின்போது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியோடு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சிவகாசியில் கிட்டத்தட்ட 40 வெரைடீஸ் பட்டாசுகள்தான் உற்பத்தியாகின்றன. இங்கே உற்பத்தியாகும் பட்டாசுகளைப் படிப்பறிவில்லாத மக்கள்தான் தயாரிக்கிறார்கள். அவர்கள்தான் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். மேலை நாடுகள் குறிப்பாக சீனா போன்ற நாடுகள் கிட்டத்திட்ட 160 வெரைடீஸ் உற்பத்தி செய்கிறார்கள். அப்படி சிவகாசியிலும் உற்பத்தி செய்வதற்கு கெமிகல் இன்ஜினியரிங் பயிற்சியைச் சிவகாசியில் ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 530, திரு. பி. வி. இராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

530—

வேளாண்மை அபிவிருத்தியில் புதிய திட்டங்கள்.

*5425—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேளாண்மை அபிவிருத்தியில் அரசு புதிய திட்டங்கள் ஏதேனும் புகுத்த உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். வேளாண்மை அபிவிருத்தியில் புதிய திட்டங்களை அரசு புகுத்த இருக்கிறது.

திரு. பி..வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய திட்டங்களைப் புகுத்த இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல தகவல் தந்திருக்கிறார்கள். தற்போது நம்முடைய விஞ்ஞானிகளுடைய கண்டுபிடிப்பாக இருக்கும் செயற்கைக்கோள்கள் வானிலே பறந்து, விவசாயிகளுக்கு வேண்டிய தகவல்களைத் தந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தகவல்கள் எல்லாம் அண்ணா யுனிவர்சிட்டிக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்றன. அது மீண்டும் கோவையிலே இருக்கும் அக்ரிகல்சரல் யுனிவர்சிட்டிக்குச் சென்று, அங்கிருந்து விவசாயிகளை வந்து அடைய வேண்டும். அதற்கான திட்டமும் இங்கே இருக்கிறதா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கை வருகின்ற 15-ந் தேதி வர இருக்கிறது. அதிலே என்னுடைய உரையில் இதற்கு விரிவான பதில் சொல்லப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ரொம்ப விரிவான கேள்வி. அமைச்சர் மானியக் கோரிக்கையில் சொல்வதாகத் தெரிவித்திருக்கிறார்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிச்சயமாக ஆறப் பொறுக்கக் காத்து இருக்கிறேன். இன்னொரு கேள்வியும் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். குறிப்பாக "to set up horticultural estates in the 8th plan, a provision of 25 Crores has been proposed." என்று தொழில் துறை மானியக் கோரிக்கை கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். வேளாண்மைத் துறை மூலமாக அந்தப் பணம் செலவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மையைச் சேர்ந்த குறிப்புப் புத்தகம் வைக்கப்படும். உறுப்பினர் அவர்கள் அதைப் பார்த்து கேள்வியை எழுப்ப வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 531, டாக்டர் பீட்ரிக்ஸ் டி' சோசாக், மாண்புமிகு சமூகநலத் துறை அமைசசர்.

531—

Working Women's Hostal in City.

* 3786—DR. THIRUMATHI BEATRIX D' SOUZA :

Will the Hon. the Minister for Social welfare be pleased to state:

(a) Whether the Department of Social Welfare Runs Working Women's Hostels in the city; and

(b) If so, the details thereof ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை, கடலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, ஓசூர், தூத்துக்குடி போன்ற நகரங்களில் பணிபுரியும் மகளிருக்கு விடுதிகள் சமூக நலத் துறையால் நடத்தப்படுகின்றன. இதில் 305 பெண்கள் பயன் பெறுகிறார்கள். பெண்கள் முன்னேற்றத்தில் அதிக அக்கறை எடுத்து கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் இந்த ஆண்டு சென்னையில் மற்றொரு விடுதி தொடங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. BEATRIX D'SOUZA : Honourable Speaker, Sir, the Government of India gives a grant-in-aid of 75 per cent of the total cost of constraction of women's hostel by voluntary agencies. I would like to know whether the State Government gives a similar grant.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டிடங்களுக்கு மொத்த மதிப்பீட்டில் 15 சதவீதம் அல்லது ரூ. 35,000 மாநில அரசு மானியமாக வழங்குகிறது. இதை 52 நிறுவனங்கள் தமிழகத்தில் பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து இந்தச் சலுகையைக் கொடுத்து, நம்முடைய நகரில் இப்படிப்பட்ட மையம் ஒன்று செயல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய நகரம் என்றால், சென்னை நகரத்திலா அல்லது உங்களுடைய சங்ககிரி நகரத்திலா?

டாக்டர் வெ. சரோஜா : சென்னையில்தான்.

மாண்புமிகு இரா. இந்திரகுமாரி : சென்னை நகரத்திலே ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது சமூகநலத் துறை சார்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 532, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.



532—

கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றுதல்.

*2144— திரு. ஜி. பழனிசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர்நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் செயல்பட்டுவரும் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த மருந்தகத்தை மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு இல்லை என்றார்கள். அது தாலுக்கா தலைமையிடத்தில் அமைந்துள்ள மருந்தகம். அந்தக் கால்நடை மருந்தகத்திற்கு தினந்தோறும் அதிகமான கால்நடைகள் சிகிச்சைக்காக வருகின்றன. மருத்துவமனையாக இல்லாததால் போதுமான மருந்துகளும் இல்லை, டாக்டர்களும் போதுமான அளவில் இல்லை. அங்கேயுள்ள கட்டிடங்களும் மற்ற வசதிகளும், அதை ஒரு தாலுக்கா அளவிலான கால்நடை மருத்துவமனையாக மாற்றுவதற்கான அடிப்படையைக் கொண்டது. ஆகவே மீண்டும் அதை அமைச்சர் மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியில் செயல்பட்டு வரும் கால்நடை மருந்தகம், தற்போது மருத்துவமனையாக மாற்றப்படுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்தேன். அந்தக் கால்நடை மருந்தகத்தில் வருகிற கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாகத்தான் உள்ளது. தினந்தோறும் வரும் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால், மற்ற கால்நடை மருந்தகங்களை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்காகப் பரிசீலிக்கப்

படும்போது. திருத்துறைப்பூண்டி கால்நடை மருந்தகத்தையும் கால்நடை மருத்துவமனையாக உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 533, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர்.

533—

மொடக்குறிச்சியில் மஞ்சள் அரவை ஆலை அமைத்தல்.

*3360—திருமதி கவிநிலவு தர்மராஜ் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மஞ்சள் உற்பத்தி அதிகமுள்ள மொடக்குறிச்சியில் ஒரு மஞ்சள் அரவை ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

முற்பகல் 10.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்து நடை செந்தமிழ் நாட்டில் சிங்க நடை போட்டு மங்களச் சின்னமாம் மஞ்சள் மகிமையால் தமிழகம் எங்கும் மொடக்குறிச்சி மாநகர் தமிழகத்திற்கு பெயர் சேர்த்துக்கொண்டிருக்கிற சூழ்நிலையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது இந்தத் திட்டம் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள்.





மொடக்குறிச்சியிலே விளையக்கூடிய மஞ்சளுக்கு மொரீசியஸ் நாட்டுக்காரர் விலை நிர்ணயிக்கக்கூடிய இழிநிலை இருக்கிறது, எதையும் சாதிக்கக்கூடிய ஆற்றல் பெற்ற. நடமாடும் தெய்வம், இதய தெய்வம், புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே .. மொடக்குறிச்சி மாநகர மக்கள் ஆலை என்பதை ஆல்பத்திலும். தொழிற்சாலை என்பதைத் தொலைக்காட்சியிலுமே கண்டு கொண்டிருக்கிறார்கள், எனவே ஓர் ஆங்கில ஏடு சொன்னது போல — "Dr. Puratchi Thalaivi, she is not a woman, above the woman, above the law, above the family, she is great என்று சொல்லியிருக்கிறார்கள். எதையும் சாதிக்கக்கூடிய. சரித்திர சகாப்தம் படைக்கக்கூடிய அந்தத் தானைத் தலைவருடைய பொன்னான ஆட்சியிலே, வருகின்ற ஆண்டிலாவது எங்கள் மொடக்குறிச்சி மாநகரிலே மஞ்சள் அரவை ஆலையை அமைக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மஞ்சளைப் பொறுத்த அளவில். உணவுப் பொருளாக இருந்தாலும் சரி. நறுமணப் பொருளாக இருந்தாலும் சரி. அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பது உண்மையே, தூள் தயாரிக்கும் இயந்திரங்களைக் கொண்டு அரைக்கும் ஆலைகள் எதுவாக இருந்தாலும் மஞ்சள் தூள் தயாரிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது, எனவே இது சிறு தொழில் பிரிவின் கீழ் வருவதால் ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள் முன் வந்தால் அரசு ஊக்குவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

514—

நத்தம் தாலுக்காவில் முன்சீப் கோர்ட் அமைத்தல்,

*5623—திரு, மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நத்தம் நகரம் தாலுக்காவில் தலைநகரமாகவும் உள்ளதால் அங்கு முன்சீப் கோர்ட் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

நத்தம் நகரத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

515—

## அரசு புறம்போக்கு நிலங்கள்,

*9376— திரு, வ, சத்தியமூர்த்தி :
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகளத்தூர் வட்டம், பெரியகுளம் வருவாய் கிராமம், ஒப்பிலான் கிராமத்திற்குள் அருகில் மலட்டாறு கடலில் கலக்கும் இடத்திற்கு அருகில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்கள் எந்த நோக்கத்திற்காகப் பட்டா கொடுக்கப்பட்டன ?

(ஆ) அந்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டனவா ?

(இ) தற்போது 100 ஏக்கருக்கு மேற்பட்ட பட்டா வழங்கிய புறம்போக்கு நிலங்களைத் தனி நபர் விலைக்கு வாங்கி வருவது அரசுக்கு தெரியுமா ?

(ஈ) ஆம் எனில், ஒப்படைப்பு வழங்கிய நிலங்களை விலைக்கு வாங்குவதைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஏழை எளிய மக்கள் விவசாயம் செய்து பிழைக்கும் பொருட்டு தீர்வை விதிக்கப்பட்ட புஞ்சை தரிசு நிலங்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டது, அவை புறம்போக்கு நிலங்கள் அல்ல.

(ஆ) ஆம்,

(இ) ஆம். ஒப்படை நிபந்தனையின்படி 10 ஆண்டுகளுக்குள் நிலம் விற்பனை செய்யக்கூடாது, சுமார் 101.01 ஏக்கர் நிலங்கள் 14 வருடங்களுக்குப் பிறகு விற்பனை செய்யப் பட்டுள்ளன, ஒப்படை நிபந்தனைகள் மீறப்படவில்லை,

(ஈ) இக்கேள்வி எழவில்லை,



522—

## கோ-ஆப்டெக்ஸ் மூலம் கைத்தறி ஆடைகள் ஏற்றுமதி,

* 100—திரு. டி. எம். ரங்கராஜன் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தனியார் துறையில் கைத்தறி ஆடைகளை ஏற்றுமதி செய்வதுபோல. கோ-ஆப்டெக்ஸ் மூலமாக கைத்தறி ஆடைகளை அயல்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அயல் நாட்டிற்கு நேரிடையாகக் கைத்தறி துணிகள் மற்றும் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் நேரம் முடிவுற்றது.]

[குறிப்பு,—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்,

## 3, உரிமைப் பிரச்சினை :—

பெண் உறுப்பினர்கள். பேரவைத் தலைவர் ஆகியோரின் அவை நடவடிக்கைகள் பற்றி அருவருக்கத்தக்க. தரக்குறைவான வகையிலும். பேரவை நிகழ்ச்சிகளைக் கொச்சைப் படுத்தும் வகையிலும். தி,மு,க, பேச்சாளர் வெற்றிகொண்டான் வெளியே பேசியுள்ளது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்சினை மீதான தீர்ப்புரை நேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி ஏ எஸ். பொன்னம்மாள் மற்றும் திரு. வி.பி. சந்திரசேகர் ஆகியோர் வெற்றிகொண்டான் என்ற திராவிட முன்னேற்றக் கழகப் பேச்சாளர் ஒருவர் மீது ஓர் உரிமைப் பிரச்சினை எழுப்பி இருந்தார்கள், திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள்,

இம்மாமன்றத்தின் பெண் உறுப்பினர்களைப் பற்றி அப்பேச்சாளர் பேசியதிலிருந்து சில குறிப்புகளைச் சுட்டிக் காட்டி குறிப்பாக எப்படி இழிவுபடுத்திப் பேசினார் எனக் குறிப்பிட்டார்கள், மேலும் அது குறித்து ஒரு ஒலிப்பதிவு நாடாவையும் எனக்கு அனுப்பி வைத்தார்கள்.

மேலும் பேரவை உறுப்பினர் திரு, வி.பி. சந்திரசேகர் அவர்களும் அதே பேச்சாளர் 30-3-1992 அன்று இரவு அடையாறு காமராஜர் அவென்யூவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேரவைத் தலைவர் அவர்களைப் பற்றி இழி சொற்கள் பேசப்பட்டதை தான் நேரில் கேட்டதாகக் குறிப்பிட்டு அப்பேச்சின் சில பகுதிகள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் பேரவை நடவடிக்கைகள் சிலவற்றை எவ்வாறு கொச்சைப் படுத்தியவை என்பதை விளக்கி இருந்தார். அப்போது நான் மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது அவையின் உரிமை மீறல் பிரச்சினை என்று முடிவெடுக்க வேண்டியுள்ளது என்றும் இருப்பினும் அதிகாரப்பூர்வமான தகவல்களைத் தெரிந்து அதன் மீது நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்கும் என்றும். காவல் துறையினர் மூலமும் ஆதாரங்கள் உள்ளனவா என்பதை அறிந்து என்னுடைய முடிவினை இன்று தெரிவிப்பதாகவும் அறிவித்திருந்தேன்.

இது குறித்து. காவல் துறையினருக்கு எழுதிக் கேட்டிருந்தேன். திருமதி பொன்னம்மாள் அவர்கள் அனுப்பிய ஒலிப்பதிவு நாடாவையும், சென்னை நகரக் காவல் துறை ஆணையாளர் தனது துறையின் மூலம் அனுப்பி இருந்த குறிப்பினையும் நான் ஆய்வு செய்ததில் மேற்படி பேச்சாளர் இம்மன்றப் பெண் உறுப்பினர்களைத் தரக்குறைவாக விமர்சித்து இருப்பது ஊர்ஜிதமாகத் தெரிய வருகிறது, அதே போன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் பழிச் சொற்களால்—அவருடைய பாராளுமன்ற செயல் முறைகளையும் தரக்குறைவாக விமர்சித்து இருப்பதும் தெரிய வருகிறது,

சென்னை நகரக் காவல் துறை ஆணையாளரிடமிருந்து. மேற்படி வெற்றிகொண்டான் என்னும் பேச்சாளர் 1992 மார்ச் மாதம் 4, 10, 26 மற்றும் 30 தேதிகளில் சென்னை நகரத்தில் நடைபெற்ற கூட்டங்களில் பேசிய காவல் துறைச் சுருக்கெழுத்து அறிக்கையாளர்களால் பதிவு செய்யப்பட்ட உரையின் பகர்ப்பு நகல்கள் பெறப்பட்டன. மேலும் 30-3-1992 அன்று மேற்படி நபர் பேசிய பேச்சின் ஒலிப்பதிவு நாடா ஒன்றினையும் அனுப்பி இருந்தார். இந்த ஆதாரங்களில் இருந்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் மற்றும் திரு. வி.பி. சந்திரசேகர் ஆகியோர் எழுப்பிய பிரச்சினைகள் அனைத்தும் உண்மையே என்பது தெளிவாகிறது,



காவல் துறை ஆணையாளர் அவர்கள் அனுப்பிய மேற்ப வெற்றிகொண்டான் என்னும் நபரின் பேச்சுத் தொகுப்புகளில் இருந்து—இது பேச்சுத் தொகுப்புகள் பற்றிய முழு விவரம்.. இப்பேரவையின் மாண்புமிகு பெண் உறுப்பினர்கள் அனைவரையும் எவ்வளவு கொச்சைப் படுத்திப் பேச முடியுமோ. எவ்வளவு மோசமான வார்த்தைகளால் விமர்சிக்க முடியுமோ அந்த அளவுக்கு விமர்சித்துள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது, அந்த வார்த்தைகளில் ஒன்று கூடப் புனிதமிக்க இப்பேரவையில் உச்சரிக்கக் கூடியது அன்று என்பதை மட்டும் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,

முற்பகல் 10-35

பேரவையின் விதிமுறைகளாலும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தாலும் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் அமர்த்தப்பட்டுள்ள உங்கள் பேரவைத் தலைவரான என்னைப் பற்றியும் அந்த நபர் விமர்சித்துள்ளது எந்த அளவிலானது என்பதையும், இந்த கண்ணியம் மிக்க அவையில் உச்சரிக்கக் கூடிய நிலையில் இல்லை,

இதே பேச்சாளர் மாநிலத்தின் ஏனைய பகுதிகளிலும் பேசியிருக்கக் கூடும் எனக் கருதி அவை பற்றியும் காவல் துறையினரிடமிருந்து அறிக்கை கேட்டிருந்தேன்.

காவல் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து எனக்குத் தரப்பட்ட குறிப்புகளில் இருந்து இந்நபர் 13-1-1992 அன்று மதுரை மாநகர், ஜீவா நகர்ப் பகுதியிலும் 24-1-1992 அன்று, திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் செய்யாறிலும், 3-2-1992 அன்று காமராஜர் மாவட்டம் சாத்தூரிலும், 14-2-1992 அன்று செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம் தாம்பரத்திலும் நடைபெற்ற தி.மு.க. கூட்டங்கள் அனைத்திலும் சட்டப் பேரவையில் அமர்ந்துள்ள பெண் உறுப்பினர்கள் பற்றியும், அவர்கள் சட்டமன்றத்தில் அமர்ந்துள்ளதைப் பற்றியும், சட்டமன்றப் பேரவைத் தலைவரின் பேரவை நடவடிக்கைகள் பற்றியும் சென்னை நகரில் பேசிய தி.மு.க. கூட்டங்களில் பயன் படுத்திய அதே வாசகங்களை அதே முறையிலும், பாணியிலும் பேசி இருப்பது தெரிய வருகிறது,

எனவே, இப்பேச்சாளர் திட்டமிட்டு தமிழகம் முழுவதும் புகழ் மிக்க இப்பேரவையின் மாண்புக்குக் குந்தகம் உண்டாக்கும் விதத்தில் பேசி வருவது உறுதிப் படுத்தப்படுகிறது.

தற்போது அமைந்துள்ள பத்தாவது சட்டமன்றப் பேரவை அமைந்த காலம் முதலாகவே, பொதுவாக தி.மு கழக மேடைகளில் இப்படிப்பட்ட தரங்கெட்ட விமர்சனங்கள் நிகழ்ந்து வருவதாகத் தகவல்கள் வந்து கொண்டுதான் இருந்தன, குறிப்பாக தி.மு.க.வின் தலைவர் கருணாநிதி அவர்களின் முரசொலி பத்திரிக்கை சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பல சந்தர்ப்பங்களில் கொச்சைப்படுத்தி எழுதி வந்தது. குறிப்பாக. பேரவைத் தலைவரின் நடவடிக்கைகளையும், பல தீர்ப்புரைகளையும் கிண்டல் செய்யும் வகையில் ''கரிகாலன் பதில்கள்'' என்ற பகுதியிலும், பல கார்ட்டூன்களிலும் விமரிசித்து வந்தனர், இந்த ''கரிகாலன் பதில்கள்'' என்பவை கருணாநிதியே எழுதுவது தான் என அக்கட்சியினர் கூறி வருகின்றனர், சமீபத்தில் இப்பேரவையில் இருந்து தி.மு.க. உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி வெளியேற்றப்பட்டபோது, முரசொலி பத்திரிகையில் ஒரு கார்டடூன் வெளியிட்டிருந்தனர், ஒரு அரங்கத்தில் ஓநாய் ஒன்று அமர்ந்து. அங்கு உள்ளேயிருந்த ஒரு சிறு முயலை ''ஏ' அற்ப முயலே, வெளியே போ'' என்று கூறுவதாக கார்ட்டூன் வெளியிட்டிருந்தது, பேரவைத் தலைவரை ''ஓநாய்'' என்று கூடச் சித்தரிக்கலாம் என்பது, அக்கட்சிப் பேச்சாளர்களின் இத்தகைய அவதூறான பேச்சுக்களுக்கு ஊக்கம் அளிப்பதாகவே அமைந்து வந்துள்ளது.

இத்தகைய தூபமிடும் கட்சித் தலைமையின் காரணமாகத்தான், தமிழகம் முழுவதும் இப்பேரவையினைக் களங்கப்படுத்தும் பேச்சினையும், பெண்மையை இழிவுபடுத்தும் பேச்சினையும் தொடர்ந்து மேற்படி வெற்றி கொண்டான் பேசி வருவது புலனாகிறது. எனவே தான் இத்தகைய பின்னணிகளை எல்லாம் சேர்த்துப் பார்க்கும் போது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களை என்றைக்கு இப்பேரவையில் இரக்கமற்ற அரக்கத்தனமாகக் கொலையும் செய்ய முயற்சித்தார்களோ, அன்றைக்கே தி.மு.க.வைத் தடை செய்யும் முடிவை மத்திய அரசு எடுத்திருக்க வேண்டும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்ற மாண்புமிகு உறுப்பினர் திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களின் கோரிக்கை நியாயமற்றது எனக் கூற முடியாது.

ஆனால், இன்றைய இந்த உரிமைப் பிரச்சினை, வெற்றி கொண்டான் என்னும் பேச்சாளரின் அருவருக்கத்தக்க பேச்சு இப்பேரவையின் கண்ணியத்திற்கும் களங்கம் கற்பிக்கும் வகையில் அமைந்துள்ளதைப் பற்றியதாக மட்டுமே உள்ளது.

மாண்புமிகு பேரவை உறுப்பினர்களையோ, பேரவையையோ அல்லது பேரவைத் தலைவரையோ அவர்களுக்குக் களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் விமர்சிப்பது, அவை உரிமை மீறிய செயலாகும் எனப் பல சட்டமன்றங்களில் முன் மாதிரியான நிகழ்வுகள் உள்ளன.



1965 ஆம் ஆண்டு கோவா மாநில சட்டமன்றப் பேரவையில் ''ஜனகர்சனா'' என்னும் மராட்டிய வாரப் பத்திரிகையில் ''All th. U.G.M.L.A S'' என்றும் ''Tr.y behave lik. school children and conv.rt the L.gislative Ass.mbly into a fish-mark.t,'' என்றும் வெளியிட்டதை அவை உரிமை மீறல் செயல் என்று முடிவு செய்து, உரிமைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது. உரிமைக் குழு அவ்வாசிரியரை அவைக்கு அழைத்து தண்டனை அளிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்து இருந்தது. அப்பரிந்துரையினை ஆய்வு செய்த பேரவை, அவருக்கு பேரவைக் கூட்டம் இறுதி செய்யப்படும் வரையிலோ.. (till Prorogation) அல்லது பேரவை கலைக்கப்படும் வரையிலோ (Dissolution) அந்த நேரத்தில் அந்தப் பேரவை கலைக்கப்பட்டுவிடுமோ என்கிற அச்சம் அந்த உறுப்பினர்களுக்கே இருந்தது ; ஆகவே, அதையும் போட்டு இருக்கிறார்கள். பேரவை கலைக்கப்படும்—வரையிலோ சிறைத் தண்டனை வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. அத்தீர்மானத்தின்படி ஆசிரியரைக்கைது செய்யும்படி. பேரவைத் தலைவர் காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு உத்தரவினைப் பிறப்பித்தார். இதற்கிடையில் பத்திரிகை ஆசிரியர் நீதிமன்றத்தை அணுகினார். நீதிமன்றம் அவரது பிணைய விண்ணப்பத்தினை ( Bail application ) தள்ளுபடி செய்தது. அப்பத்திரிகை ஆசிரியர் பேரவைக் கூட்டம் இறுதி செய்யப்படும்வரை ( till prorogation ) சிறையில் வைக்கப்பட்டார்.

முற்பகல் 10-40

அரியானா சட்டமன்றப் பேரவையில் ஓர் உறுப்பினர் தரக்குறைவாக சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களை விமர்சித்து ஒரு பத்திரிகையில் எழுதினார் என்பதற்காக அவர் மீது நடவடிக்கை எடுத்து அவ்வுறுப்பினர் அவையிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்ற உரிமைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அவ்வுறுப்பினர் அவை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம்செய்யப்பட்டார். அதே மாநிலத்தில் இன்னொருவர் பொதுக் கூட்டத்தில் விமர்சனம் செய்ததற்காக அவைமுன் வரவழைக்கப்பட்டு கண்டனம் தெரிவிக்கப்பட வேண்டுமென்று உரிமைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

மேலும், ''கவுல் அண்ட் ஷக்தர்''-ன் பாராளுமன்ற நடைமுறைகளும் மரபுகளும் என்ற புத்தகம் பக்கம் 223-ல் கீழ்க்கண்ட விவரம் கூறப்பட்டுள்ளது. ''SPEECHES OR WRITINGS REFLECTING ON THE HOUSE, ITS COMMITTEES OR MEMBERS'' என்ற தலைப்பின் கீழ் I quote : ''Its is a breach of privilege and contempt of the House to make speeches, or to print or publish aynrlo ibls eflecting en the character or proceedings of the House

oretis CommitteGs, or on any member of the House for or relating to his character or conduct as a member of parliamentst என்றும் "Speeches and writing reflecting on the House or it Committees or mebers are punished by the House as a contempes on the principle that such actstend to obstruct the Houses in the performance of their functions by diminishing the respect due them to The House may punish not only contempts arising out of facts of which the ordinary courts will take cognizance, but those of which they cannot. Thus a libel on a member of Parliament may amount to a breach of privilege with out being a libel under the civil or criminal law'' என்றும் உள்ளன.

எனவே, மேலே கூறப்பட்டுள்ள ஆதாரங்களை ஆராய்ந்ததில், தற்போது எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையில் திட்டவட்டமாக அவை உரிமை மீறல் உள்ளது என்பது மேலெழுந்த வாரியாகவே உறுதியாகத் தெரிவதால், இப்பிரச்சினை குறித்து ஆய்ந்து எத் தகைய தண்டனை அளிக்கலாம் என்பது உள்பட., பேரவைக்கு உரிய அறிக்கை அளிக்க பேரவையின் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். 10 நாட்களுக்குள் விசாரித்து, ஆய்ந்து அறிக்கை அளிக்குமாறு உரிமைக் குழுவினரைக் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) போளூர் மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு, அகநோயாளிகள் பிரிவு வெவ்வேறு இடங்களில் செயல் படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. தா. வேடியப்பன் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. தா. வேடியப்பன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் அரசு பொது மருத்துவமனையில் புற நோயாளிகள் பிரிவும், அகநோயாளிகள் பிரிவும் வெவ்வேறு இடங்களில் செயல்படுவது குறித்து'' மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.



அறிக்கை.

தற்பொழுது அரசு மருத்துவமனை, போளூரில் புறநோயாளி பிரிவு ஓரிடத்திலும், அகநோயாளி பிரிவு ஓரிடத்திலும் இயங்கி வருகின்றன. இரண்டையும் ஒரே இடத்தில் இயங்கச் செய் வதற்கு ஏதுவாக அடுக்குமாடிக் கட்டிடம் கட்டுவதற்கு செயற் குறிப்புகள் அனுப்புமாறு திருவண்ணாமலை – சம்புரவாயர் மாவட்ட மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் இணை இயக்குநரை இயக்குநர் கேட்டுள்ளார். இத்திட்டம் அடுத்த 1993-94–ம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ், இடவசதி. நிதி வசதி ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு ஆய்வு செய்யப் படும். மேலும். தற்காலிகமாக புற மற்றும் உள் நோயாளிப் பகுதிகள் ஒரே இடத்தில் இயங்கி வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். இந்த விவர அறிக்கையில் 1993-94-ம்ஆண்டு பகுதி-2 திட்டத்தில் இடவசதி, நிதிவசதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு ஆய்வு செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல தீய செயல்களை அனைத்து பகுதிகளிலும், இந்த தமிழ்நாடு முழுவதும் செய்திருக்கிறார்கள். நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், எம்.ஜி.ஆர். மருத்துவ ஆராய்ச்சி நிலையம் என்ற பெயரை அழித்ததை மீண்டும் நிலைநிறுத்தி இருக்கிறார்கள். அதைப்போல எங்க ளுடைய வேலூர்-வட ஆற்காடு – அம்பேத்கார் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்று இருந் ததை தளபதி என்று மாற்றியதை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் அதை மாற்றி பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்று மாற்றியமைத்து இருக்கிறார்கள். அப்படி பலவற்றை செய்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி யில் வேண்டுமென்றே தகாத பல நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். அதன் வாயிலாக எங்கள் போளூரில் அரசு மருத்துவமனை 25 ஆண்டுகளாக இயங்கி வந்தது. அந்தப் பகுதி யில். புறநோயாளிகள் இருந்த பிரிவில் அகநோயாளிகளை மட்டும் அங்கே அமர்த்திவிட்டு, புறநோயாளிகளுடைய பிரிவை நகரி னுடைய மையப் பகுதியில் கொண்டு வந்திருக்கிறார்கள். இருப் பினும் இந்தத் திட்டம், நகரப் பகுதி மக்கள் மட்டும் பயன் அடையக்கூடிய வகையிலே இருக்கிறது. எனவே, இந்த அக நோயாளிகள் பிரிவு உள்ள இடத்தில்—புறநோயாளிகளுக்கு 6 டாக்டர்கள் அங்கே மருத்துவர்களாக இருக்கிறார்கள்—இரண்டு மருத்துவர்களை இந்த அகநோயாளிகள் உள்ள பிரிவில் இயங்க வைக்க, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அடுக்கு மாடிக் கட்டிடத்தை நிரந்தரமாகக் கட்டுவதற்குத்தான் நிதிப் பிரச்சினை பற்றி ஆலோசிக்கவேண்டும் என்று நான் இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறேன். ஆனால், இப்போது இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்ட புறநோயாளிகள் கவனிப்பு, உள்நோயாளிகள் கவனிப்பு இரண்டையும் ஒன்றாக இணைப்பதற்கு உண்டான நடவடிக்கையை தற்காலிகமாக எடுக்கப்படுவதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது, ஆனால். அங்கே மக்களுடைய உணர்வு எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து, அதற்கு ஏற்ப இந்தத் துறை நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய உணர்வு இந்த போளூர் நகரில் உள்ள நகர மக்கள் பயன் அடையும் வகையில், இந்த ஓ.பி. புறநோயாளிகள் பிரிவு இருக்கவேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். இருப்பினும். ஒரு பெரிய மருத்துவமனையாக இருக்கக்கூடிய அகநோயாளிகள் பிரிவில் உள்ள 6 டாக்டர்களில் 2 டாக்டர்களை அந்தப் பகுதியில் போட்டு. அந்த மருத்துவமனை இயங்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு புறநோயாளிகள் உள்ள பிரிவில் மகப்பேறு நிலையம் இருக்கிறது, எனவே, அங்கே செயல்படுவதை நான் எதிர்க்கவில்லை, இருப்பினும், பொது மருத்துவமனை உள்ள இடத்தில், அகநோயாளிகள் பிரிவு உள்ள இடத்தில், புறநோயாளிகள் பிரிவு இயங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு இடத்திலேயும் ஓ.பி. வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள், அங்கே இருக்கிற மருத்துவர்களுடைய எண்ணிக்கையை பொறுத்து, தேவையிருக்குமானால், நடவடிக்கை எடுக்கலாம்,

## (ஆ) ஆண்டிமடத்தில் குறைவான மின் அழுத்தமுள்ளதால் துணை மின் நிலையம் அமைக்க வேண்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். தங்கராஜ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். தங்கராஜ்.



திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆண்டிமடத்தில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதால். அங்கு ஓர் துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அறிக்கை.

ஆண்டிமடம் பகுதிக்கு ஜெயங்கொண்டத்திலுள்ள துணை மின் நிலையத்திலிருந்து ஸ்ரீமுஷ்ணம் நோக்கிச் செல்லும் மின்னூட்டி வழியாக மின்சாரம் வழங்கப்படுகிறது, ஆண்டிமடம் பகுதியில் துணைமின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. இப்பகுதியின் மின் தேவையைச் சீர் செய்ய, தற்போதுள்ள மின்னூட்டியின் மேம்பாட்டுக்கான பணிகள் தேர்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட உள்ளன. மேலும், ஆண்டிமடம் பகுதி ஸ்ரீமுஷ்ணத்திலுள்ள துணை மின் நிலையத்திற்கு அருகில் இருப்பதால், ஸ்ரீமுஷ்ணத்திலிருந்து தனியாக ஒரு மின்னூட்டியை அமைத்து ஆண்டிமடம் பகுதியில் மின் நிலையைச் சீர் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படுகின்றன,

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் பார்த்தேன். ஆண்டிமடத்தின் அருகாமையில் இருக்கிற ஸ்ரீமுஷ்ணத்தில் ஒரு துணை மின் நிலையம் இருக்கிறது. அந்தத் துணை மின் நிலையத்திலிருந்து தனியாக ஒரு மின்னூட்டி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கைக் குறிப்பிலே கூறியிருக்கிறார்கள். ஆண்டிமடத்திற்கு, ஜெயங்கொண்டம் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வந்து கொண்டிருக்கிறது. ஆண்டிமடம் பிரிவு அலுவலகத்தில் தற்போது சுமார் 70 மின்மாற்றிகள் உள்ளன. மின் வாரிய விதிகளின்படி பிரிவு அலுவலகத்திற்கு 48 மின்மாற்றிகள்தான் இருக்க வேண்டும். ஆனால் தற்போது 22 மின் மாற்றிகள் கூடுதலாக இருப்பதால், பல வேலைகள் தாமதம் ஆகின்றன. இதனால், டியூப் லைட்டுகள் பெரும்பாலான இடங்களில் எரிவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆர். தங்கராஜ் : விவரத்தைச் சொல்லிவிட்டு, கேள்வியைக் கேட்கிறேன். டியூப் லைட்டுகள் எரிவதில்லை. அதே போல், பல்புகள் எரிகின்றபோது, அந்த பல்புகளைப் பார்க்கிற போது, ஆதிகாலத்திலே எரிகின்ற மண்ணெண்ணெய் விளக்கு போல எரிந்து கொண்டிருக்கிறது. டியூப் லைட்டுகள் எரிய வேண்டும் என்று சொன்னால், இரண்டு சோக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால், டியூப் லைட்டுகள் மற்றும் பல்புகள் அடிக்கடி சேதம் அடைகின்றன. அந்தப் பகுதி, மிகவும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள் டியூப் லைட் எரிவதைப்பற்றி எல்லாம் பேசுகிறீர்கள். (குறுக்கீடு). உங்களுக்கு விளக்கம் அமைச்சர் அளிப்பார். நீங்கள். விளக்கம் கொடுக்கக்கூடாது.

திரு. ஆர். தங்கராஜ் : அங்கே ஒரு டியூப் லைட்டுக்கு இரண்டு சோக்குகள் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிப் பயன்படுத்துகிறபோது டியூப் லைட்டுகள் அடிக்கடி சேதம் அடைகின்றன. அந்தப் பகுதி மிகவும் வறட்சியான பகுதி என்பதை இன்றைய தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இரண்டு தடவை வந்து இருப்பதால், அதை நன்றாக அறிவார்கள். எனவே, அங்கே இருக்கிற பொதுமக்கள் எல்லாம் குடிதண்ணீருக்காக ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற ஆழ்குழாய்க் கிணறுகளை நம்ப வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். மின்சாரத்துறையின் மீது விவாதம் நடக்கிறபோது, உங்களுக்கு வாய்ப்பு வழங்குகிறேன். அப்போது நிறையப் பேசுங்கள்.

திரு. ஆர். தங்கராஜ் : எனவே, அடிக்கடி அங்கே இருக்கிற ஆழ்குழாய்க் கிணறுகளிலே உள்ள மோட்டார்கள் எல்லாம் பழுதாகிவிடுகின்றன. எனவே அந்தப் பழுதுகளை நீக்குவதற்கும் அங்கேயிருக்கின்ற பல்புகள் சரியாக எரிவதற்கும் இந்த அரசு அவசியம் ஒரு துணை மின் நிலையத்தை அமைத்துத் தர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—50)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் பகுதிக்கு ஜெயங்கொண்டானிலுள்ள துணை மின் நிலையத்திலிருந்து ஸ்ரீமுஷ்ணம் நோக்கி, அதன் வழியாகச் செல்லும் மின் ஊட்டி வழியாக இன்றைக்கு மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மேலும் ஆண்டிமடம் பகுதிக்கு ஸ்ரீமுஷ்ணத்திலுள்ள ஒரு துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரத்தைப் பகிர்ந்து



கொடுப்பதற்கு ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பகுதியிலே மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தால் மின்சார மோட்டார்கள் இயங்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த இரண்டு பகுதிகளிலிருந்தும் நாம் மின்சாரத்தைக் கொடுக்கின்ற நேரத்திலே அந்தப் பகுதியிலுள்ள மின் அழுத்தத்தை சரி செய்யலாம் என்று ஒரு அறிக்கையை இன்றைக்கு மின் வாரியத்திலும் தந்திருக்கிறார்கள். ஆகவே ஜெயங்கொண்டம் துணை மின் நிலையத்திலிருந்து ஒரு பகுதியாகவும், ஸ்ரீமுஷ்ணத்திலிருந்து ஒரு பகுதியாகவும் பிரித்து அந்த ஆண்டிமடம் பகுதிக்கு மின்சார வினியோகத்தை முறைப்படுத்தலாம் என்று மின்சாரத் துறையிலிருந்து தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே புதிதாக இன்றைக்கு துணை மின் நிலையம் அமைக்கின்ற குறிப்புகள் ஏதும் ஆண்டிமடம் பகுதியில் இல்லாததால் இந்த இரண்டு துணை மின் நிலையங்களிலிருந்தும் மின்சார வினியோகத்தைச் செய்யலாம் என்று மின்சார வாரியம் கருதுகிறது. இன்றைக்கு தனியாக ஒரு மின்னூட்டி ஸ்ரீமுஷ்ணத்திலிருந்து அமைத்து, ஆண்டிமடம் பகுதிக்கு முறையாக மின்சாரம் கிடைப்பதற்கு சரியான முறையில் அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கராஜ். கேள்வி மட்டும் கேளுங்கள்.

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தற்போது அங்கே இருக்கின்ற மோட்டார்கள் ஓடவும் இல்லை. அதுபோன்று லைட்டுகளும் எரியவில்லை. ஆகையால் உடனடியாக அந்தப் பணிகளை முடித்துத் தர இந்த அரசு வெகு விரைவில் முடிவு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த 9 மாதகாலமாக, ஏன் கிட்டத்தட்ட 10 மாத காலமாக இது சம்பந்தமாக என்னிடத்தில் தனியாகச் சொல்லியிருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கலாம். இருந்தாலும் இன்றைக்கு கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட புகார்களை அவர்கள் என்னிடத்தில் இது வரைக்கும் சொல்லவில்லை, அந்தப் பகுதியில் இந்த மாதிரி பிரச்சினை இருக்கிறது என்று. ஆகவே இதையே ஒரு பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, உடனடியாக அந்தப் பகுதியிலே இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்குமானால், உடனடியாக சரி செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

5. அறிக்கைகள் அளித்தல் :

(அ) உரிமைக்குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் உரிமைக் குழுவின் தலைவர்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முரசொலி' நாளிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன் :

1. 1985-86 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய் வரவினங்கள்) உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறைத் தொடர்பான பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி இரண்டாவது அறிக்கையை அளிக்கிறேன்.

2. 1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (அறிக்கை எண் 3/1989) (வருவாய் வரவினங்கள்) உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை தொடர்பான பத்திகளின் சிறப்புக் கூறுகள். (Highlights) குறித்த பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கையை அளிக்கிறேன்.



3. 1984-85 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய் வரவினங்கள்) உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை தொடர்பான பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கையை அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள் 1992-93— விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி).

கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண். 12, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 8,95,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2024, திரு. கே. செல்வராஜ்.

முற்பகல் 10-55

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''இந்து சமய-அறக் கட்டளை நிர்வாகக் குழு மாநில மாவட்ட அளவில் நியமிக்க வேண்டிய அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானிய கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,95,37,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 2006, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவில் நிலங்களில் குத்தகை சாகுபடி செய்து வரும் விவசாயிகளுக்கு அந்த நிலங்களை பட்டா செய்து கொடுத்து உதவுவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 8,95,37,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1957, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 8,95,37,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத். தலைவர் அவர்களே, 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் கொள்கை விளக்க குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப் பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் தமிழில் இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை(@) நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அதை அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்க குறிப்பின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியில் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு என்னுடைய பதில் உரையும், அரசு எடுத்துள்ள சில முக்கிய முடிவுகள் பற்றியும் தெரிவிக்கிறேன் எனக் கூறி அமைகிறேன்.

---

@ 167 முதல் 198 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 12— தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் என்ற இந்த மானியக் கோரிக்கை மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மரியாதைக்குரிய முதல்வர் அவர்களின் துறையாக இருக்கிற காரணத்தாலே என்னுடைய கருத்துக்களை வைப்பதில் இன்னும் நான் பெருமைப்படுகிறேன். ஆண்டவன் வாழுகிற இடத்தையும் கோவில் என்றே சொல்வார்கள், மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் ஆளுகின்றவர்கள் வாழுகின்ற இடத்தையும் கோவில் என்றே தான் சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கோயிலில் இருக்கிற ஆண்டவனிடம் வீடு பேற்றிற்காக விண்ணப்பிப்பது உண்டு. இன்னொரு கோயிலிலே இருக்கிற ஆளுகின்றவர்களிடம் வீடுகள் கட்டித் தரவேண்டும் என்று கோரிக்கைகள் வைப்பது உண்டு. எனவே, வீடு என்று சொல்லுகிற வகையிலும் இரண்டிற்கும் பொதுவாகத்தான் இருக்கிறது. இருக்கிற இடம் என்று சொல்லுகிற வகையிலும் கோவில் என்பது பொதுவாகத்தான் இருக்கிறது.

தமிழ்நாட்டை கோயில்களுடைய பூமி என்று சொல்லுவார்கள். இந்த பூமியிலிருக்கிற அழியாத சொத்துக்கள் அல்லது பரம்பரை பரம்பரையாக நாம் காத்து வரவேண்டிய சொத்துக்கள் நமது முன்னோர்கள் நமக்கு தந்துவிட்டு போன சொத்துக்கள் இந்த கோயில்கள். இந்தக் கோயில்களைப் பொறுத்த அளவிலே மற்ற நாடுகளை விட இந்த நாட்டில் சிறப்பு வாய்ந்திருப்பதற்கு காரணம்—எகிப்து முதலிய இடங்களிலே கூட கற்களை உயரமாக அடுக்கி வைத்து கட்டியிருக்கிறார்கள். அதிலேயும் சில விஞ்ஞானம் இருக்கிறது. ஆனாலும் கல்லிலே, கலை வண்ணம் கண்டு, அந்தக் கற்களையே கோயில்களாகவும், கோபுரங்களாகவும் எழுப்பிய பெருமை தமிழகத்திற்கு உண்டு. இந்தியாவிற்கு உண்டு. சிற்பத்தை செதுக்கிக் கொண்டிருந்த சிற்பி ஒருவன் தன்னுடைய ஆழ்ந்த எண்ணத்தை அதிலேயே ஈடுபடுத்திக் கொண்டிருக்கிற நேரத்தில் தான் குதப்பிக் கொண்டு இருந்த வெற்றிலைச் சாற்றை துப்புவதற்கு எண்ணுகிற நேரத்தில் அந்த நேரம் கூட வீணாகிவிடக் கூடாது என்ற எண்ணத்தில் பின்னால் நின்று கொண்டிருந்த மன்னன் வெற்றிலை துப்புகிற படித்தட்டை எடுத்து வைத்து, இதிலே துப்பு என்று சொல்லுகிற அளவுக்கு மன்னர்களால் ஊக்கப்படுத்தப்பட்ட ஒரு கலை கோயில் சிற்பக் கலை.

தென்காசி கோயிலிலேயே எழுதி வைத்திருக்கிறார்கள், கல்வெட்டிலே, இதிலிருந்து பெயர்ந்துவிழுகின்ற ஒரு கல்லை எடுத்து மீண்டும் அதே இடத்தில் பொறுத்திவிடுகின்றவனுடைய அடி என் முடியிலே என்று எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படி கோயில்களுக்கு சிறப்பு இருக்கிற காரணத்தாலே முதல்வர் அவர்கள் இந்த பொறுப்பை எடுத்துக் கொண்டது மிகவும் சிறப்பான ஒரு காரியம் பொறுத்தமான ஒரு காரியம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1,400 1,300 ஆண்டுகளுக்கு முன்னாலேயே கட்டப்பட்ட கோபுரங்களும் குகை கோயில்களும் சிறந்து விளங்கின. நம்முடைய நாட்டிலே கட்டிடக் கலை எவ்வளவு தூரத்திற்கு சிறப்பாக இருந்தது என்பதை அண்மையிலே கூட நான் சென்று பார்த்தேன். 2, 3 தினங்களுக்கு முன்பு கும்பகோணத்திலே பார்த்தேன். திருக்குடந்தை கீழ் கோட்டை என்ற நமது இலக்கியங்களிலே பேசப்படுகிற நாகேஸ்வரருடைய கோயிலிலே கோபுர வாசலிலே இருந்து சந்நிதானம் இருக்கிற இடம் 300 அடி தூரம் இருக்கிறது. அந்தக் கோவிலிலே உள்ள வாயில் 20 அடி ரத்தில் இருக்கிறது. சந்நிதானம் அதனுடைய கர்ப்பகிரகம் என்று சொல்லக் கூடிய மூலவர்-நாகேஸ்வரர் 20 அடி கீழே இருக்கிறார்.

இடையிலே துவஜஸ்தம்பங்கள் என்று சொல்லுகின்ற கொடி மரங்கள் இருக்கின்றன. நந்திகேஸ்வரர் இருக்கிறார். ஆனாலும் கூட இத்தனை இடத்தையும் தாண்டி சித்திரை மாதம் 11, 12, 13 நாட்களிலே சூரியன் தட்சணாயத்திலேயிருந்து உத்திராயணத்திற்கு போகின்ற நேரத்தை காட்டுகின்ற வகையில் அந்த 3 நாட்களும் காலையிலே 6 மணியிலிருந்து 6¼ மணி வரை இதுவரை மனிதர்களால் குளிர் நீரால் அபிஷேகம் செய்யப்பட்ட அந்த ஆண்டவனுக்கு தன்னுடைய ஒளி வெள்ளத்தால் அபிஷேகம் ஆதவனே செய்கிறார். அந்த அளவிற்கு ஒரு சிற்பக் கலைச் சிறப்பு அங்கே இருந்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 11–00

இப்படிப்பட்ட சிற்பக் கலை அது வருகின்ற சித்திரை 11, 12, 13 தேதிகளிலே சரியாக 6 மணியிலிருந்து 6¼ மணி வரை அங்கே விழுகிறது என்கிறபோது — 1400 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கோயில் அது. தொலை நோக்காடி என்று சொல்லுகின்ற கருவி இல்லாத நேரம் அது. விண்வெளிக் கலங்கள் பறக்காத நேரம் அது. அந்த நேரத்திலே வெறும் கண்ணாலே மண் அளந்து விண் அளந்து இந்தக் கோயிலை ஒருவன் கட்டினான் என்று சொன்னால் அவன் எவ்வளவு சிறப்புக்குரியவன் என்பதனை நான் இங்கே சொல்ல வேண்டும். ஆனால் இது சுற்றியிருக்கின்ற மக்களுக்காவது



எல்லோருக்கும் தெரிகிறதா என்றால் — எல்லோருக்கும் தெரிகின்ற அளவிற்கு இந்தக் கால சந்ததியினருக்குத் தெரிகின்ற அளவிற்கு அவைகள் இன்னும் சரியாக விளம்பரப்படுத்தப்படவில்லை. ஏனென்றால் அங்கே ஆனந்த தாண்டவம் என்ற ஒரு அற்புதமான சபை இருக்கிறது. அந்தச் சபையிலே சிவன் ஆடிக்கொண்டிருக்கிறார். உமை தாளமிட்டுக்கொண்டிருக்கிறாள். மைத்துனனாகிய திருமால் புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருக்கிறார். அது தேர் வடிவிலே அமைக்கப்பட்டிருக்கிறது. தேர்ச் சக்கரமோ கல்லிலே இருக்கிறது. கல் சக்கரம் ஒரு கல் அச்சாணியிலேயே இருக்கிறது. அந்தக் கல்லை இப்போது சுற்றினாலும் அது சுற்றிக்கொண்டிருக்கிறது. அச்சு ஒடியாமல் நின்று கொண்டிருக்கிறது. இத்தனைக் காலமாக இப்படிப்பட்ட கலைகளை எல்லாம் நம்மவர்கள் வளர்த்து வைத்திருக்கிறார்கள்.

இதே சூரிய ஒளி காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கோயிலிலும் விழுகிறது. ஏகாம்பரநாதர் கோயிலிலே கூட ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் அமாவாசைக்கு ஏழாவது நாள் சரியாக அது விழுகிறது என்பது தகவல், அதைப்போலே வைத்தீஸ்வரன் கோயில். அது மேற்குப் பக்கம் இருக்கின்ற கோயில். மேற்கு திசையிலே இருக்கின்ற கோயில். அஸ்தமன சூரியன் வந்து விழுவது சில காலங்களிலே என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இதைவிடச் சிறப்பு என்னவென்றால் ஆவுடையார் கோயிலிலே இருக்கின்ற அந்த கர்ப்ப கிரகத்திலே ஒவ்வொரு நாளும் மாலை சூரியனுடைய கதிர்கள் அதிலே படுகின்றன. ஆதவனே ஆண்டவனை தன் கதிர்களால் தொட்டு வணங்கி விடைபெறுவது போன்ற அற்புதமான காட்சி அங்கே இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சிறப்புக்கள் எல்லாம் வேறு நாடுகளிலே இல்லாத சிறப்புக்கள், ஏன் இவைகளிலே இவ்வளவு ஈடுபடுகிறேன் என்றால் நீங்கள் மன்னிக்க வேண்டும் என்பதற்காகவே நான் சொல்ல விரும்புகிறேன்.

நான் அண்மையிலே ஜெர்மனிக்குப் போயிருந்தபோது அங்கிருந்து பக்கத்திலே இருக்கின்ற ஹைடர் பார்க் என்று சொல்லுகின்ற இடத்திற்கு அற்புதம் இருக்கிறது வாருங்கள் என்று கூட்டிப் போனார்கள். இருக்கின்ற அன்னியச் செலாணியிலே மிச்சம் இருப்பதை எடுத்துக் கொடுத்து நான் அங்கே போனால் ஒரு கட்டைச்சுவடு முன்னாலே என்னை நிறுத்திக் கொண்டு பல மணி நேரம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதனுடைய சிறப்பு என்னவென்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் பார்த்துவிட்டு இங்கே வருகின்றபோது தான் நம்மவர்களுடைய பெருமை இன்னும் அதிகமாகத் தெரிகின்ற காரணத்தினாலே சொல்லுகிறேன். அதைப் போல இந்த நாகேஸ்வரர் கோயிலுக்குப் பக்கத்திலே திருப்புரம்பயன் என்று சொல்லுகின்ற ஒரு கோயில். பிரளய

காத்த பிள்ளையார் என்று சொல்லுகின்ற கோயில். அந்தக் கோயிலிலே இருக்கின்ற சிறப்பு என்னவென்றால் பிள்ளையார் மிகச் சிறியதாக இருக்கிறார். அதிலே பிள்ளையார் சதுர்த்தி அன்று அதற்கு தேனாபிஷேகம் செய்யப்படுகிறது. எத்தனை கிலோ தேனை அதிலே அபிஷேகம் செய்தாலும் தேன் வெளியே வரமாட்டேன் என்கிறது. உள்ளே போய்க் கொண்டே இருக்கிறது. இவ்வளவு தேனாபிஷேகம் செய்த பிறகு கூட அங்கே ஈ வருவதில்லை, எறும்பு வருவதில்லை. அது எங்கே போகிறது என்று யாரும் கண்டுபிடிக்கவும் முடிய வில்லை. அந்த ஆதிநாதர் கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கிறது. ஆதிநாதர் கோயில் என்று சொல்வது என்ன வென்றால் அபராஜித பல்லவனைத் தோற்கடித்து ஆதித்த சோழன், சோழ சாம்ராஜ்ஜியத்தை நிலைநாட்டிய இடம். எனவே அதற்கு நன்றியறிதலோடு அந்த ஆதித்தனுக்கு ஒரு கோயிலை அங்கே கட்டி வைத்திருக்கிறார். அந்தக் கோயிலின் பக்கத்திலே இருக்கின்ற இந்தப் பிள்ளையாரிலே தான் இத்தனைச் சிறப்பு இருக்கிறது. அந்தப் பிள்ளை யாரைப் பற்றிக் கேட்டால் சொல்லுகிறார்கள். கிளிஞ்சல், சிப்பிகள் அதைப்போல நத்தை ஓடு கடல்நுரை என்று சொல்லு கின்ற ஒருவகை கல் இவைகளாலே அது செய்யப்பட்டது என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட அருமையான கோயில்கள் எல்லாம் அங்கே இருக்கின்றன. அந்த ஆதிகும்பேஸ்வரர் கோயிலை எடுத்துக் கொண்டீர்கள் என்று சொன்னால் உங்களுக்குத் தெரியும். கும்பாபிஷேகம் வருகின்ற அந்தச் சிறப்பு. ஆதிகும்பேஸ்வரர் கோயிலிலே இருக் கின்ற மிகப் பெரிய சிறப்பு என்னவென்றால் அவர் தான் அங்கே முதல்வர். ஆனால் அவருக்கும் முதல்வராக இருக்கின்றவர் அவருடைய மனைவியாக இருந்துகொண்டிருக்கின்ற அன்னை மங்களாம்பிகை. அந்த மங்களாம்பிகையினுடைய சிறப்பு என்னவென்று சொன்னால் தமிழகத்திலேயே மந்திரக்கோட்டில் நிறுவப்பட்டிருக்கின்ற ஒரு சிலை அம்பிகைச் சிலையென்றால் அது மட்டும்தான். அந்த அம்பிகைச் சிலை எப்படி இருக்கிறது என்றால் இரண்டு கால்களையும் வைத்துக் கொண்டிருக்கின்ற அந்தக் கோலத்தைப் பார்க்கின்றபோது அதிலே வலது கால் மட்டும் சற்று முன்னே நிற்கிறது. அதற்குக் காரணம் சொல்லுகிறார்கள். நாடி நிற்கின்ற பக்தனை தேடிப்போய் அருள்கொண்டு அவள் அணைக்கின்றவள். ஆதலினாலே முன் காலை எடுத்து வைத்து நின்று கொண் டிருக்கிறாள் என்று சொல்லுகின்ற அளவிற்கு அந்தக் கோயில் இருக்கிறது. தமிழகத்தில் வேறு இடத்தில் இல்லை என்று சொல்லுகிறார்கள். அது ஆராயப்பட வேண்டிய ஒன்று. அதனாலே தான் டாக்டர் உ. வே. சாவினுடைய ஆசிரியராக இருந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடுகின்றபோது



அதிலே சொல்லுகிறார்கள். ‘தானே தனக்குச் சரியாய தெய்வமே வருக’. தானே தனக்குச் சரியாய, வேறு யாரும் அதற்கு ஈடு சொல்லுகின்ற அளவிற்கு இல்லை என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடுகின்ற அளவிற்கு அந்தக் கோயில் இருந்து கொண்டிருக்கிறது.

பக்கத்திலே ராமசாமி கோவில் என்ற ஒரு கோவில் இருக் கிறது. அங்கே என்ன சிறப்பு என்றால் தூணிலே அனுமார் ஒரு ஏட்டைப் பார்த்துக் கொண்டு வீணை வாசித்துக் கொண் டிருக்கிறார். வீணை கான அனுமார். அனுமார் எப்போதும் கதாயுதத்தை தாங்கிக்கொண்டு திரிவதாகத்தான் தெரியுமே தவிர, அங்கே அப்படி இருக்கிறது. இவைகளை எல்லாம் நான் இங்கே சொல்லுவதற்கு உரிய காரணம் என்னவென்று சொன் னால் திருச்செந்தூர் கோயிலில் போய் பார்ப்போம் என்று சொன்னால் உள்ளே குகைக் கோயில் இருக்கிறது. இந்தக் குகைக் கோயிலில்......

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள், உறுப்பினர்களை ஒரு பெரிய ஆலய சுற்றுலாவிற்கே அழைத்துக்கொண்டு போய்க்கொண்டு இருக் கிறார்கள். திரும்ப மன்றத்திற்கு அழைத்து வரவும்; மானியக் கோரிக்கைக்கு வரவும்.

திரு. குமரி அனந்தன் : சரி. ஆலயம் என்று இங்கே சொன்ன காரணமே அதுதான் (சிரிப்பு). இதுவும் ஒரு ஆலயம்தான் என்று சொல்லிவிட்டுத்தான் நான் போனேன். ஆதலால் ஓரள வுக்கு மிக விரைவில் முடித்து விடுகிறேன் (சிரிப்பு).

ஏன் என்றால் இப்போது திருச்செந்தூர் கோவிலில் ஒரு சிறப்பை நீங்கள் பார்க்கின்றபோது உள்ளே குகைக் கோயில் இருக்கிறது. அந்த ராக்கெட் டெம்பிள், அந்த குகைக் கோயிலை பார்ப்போமானால் மேலே வெளிச்சம் வருவதற்கு துவாரம் இட்டு இருக்கிறார்கள். காற்று வருவதற்கு துவாரம் இட்டு இருக்கிறார்கள். ஆனால் எவ்வளவு மழை பெய்தாலும் ஒரு துளி சாரல் கூட உள்ளே வருவது இல்லை. நான் அந்த விஞ்ஞான புதுமையைச் சொல்கிறேன். அந்தக் கட்டிடக் கலையினுடைய அற்புதத்தைச் சொல்கிறேன்; அவைகளை எல்லாம் வெளி நாட்டவர்களுக்கு நாம் எடுத்துச் சொல்வோமேயானால் இப்படி இருக்கிறதா! Sky scrappersகளை Empire State building அவர்கள் கட்டியிருக்கலாம். ஆனால் அவர்கள் கட்டிய அந்த பெரிய பெரிய கட்டிடங்கள் எல்லாம் நமது கோவில்களுடைய படிக்கட்டுகளுக்கு தான் ஈடாகுமே தவிர கோபுரங்களுக்கு

கூடாது என்பதை மறந்து விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, இவைகள் எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கையில் இந்த பொறுப்பு இருக்கின்ற காரணத்தால் வெளிநாட்டில் நம்முடைய கோவில்களைப் பற்றிய பெருமைகள் அதிகமாக சொல்லப்பட வேண்டும் என்கின்ற காரணத்திற்காக இந்த விஷயங்களை இதிலே விட்டுவிட்டு சிற்பங்களைப் பற்றி இரண்டு.. (சிரிப்பு) திருவரங்கம் கோயிலிலும், தில்லை கோயிலிலும் இருக்கின்ற சிற்பத்தை விட பெரிய சிற்பங்களை எல்லாம் நாம் பார்க்க முடியாது. பலயிடங்களில் மதுரை, அப்படி ஒவ்வொரு கோயிலிலும் இருக்கிறது. கிருஷ்ணாபுரம் உட்பட ஒவ்வொரு கோயிலிலும் இருக்கிறது. அதற்கெல்லாம் நான் போகவில்லை. ஆனால் திருவாரூர் கோயிலில் இருக்கின்ற சிற்பங்களுடைய சிறப்பு என்னவென்று சொன்னால், அந்த 108 கர்ணங்கள் என்று சொல்லுகிறார்களே அத்தனையையும் காட்டுகின்ற வகையிலே எல்லாப் பக்கமும் பார்க்கலாம். சிதம்பரத்தைப் பார்ப்போமே யானால், ஒரு தூணிலே முகம் தெரியும்; முதுகு தெரியாது. ஆனால் திருவாரூரிலே அந்த 108-லும் முகமும் தெரியும், முதுகும் தெரியும். எல்லா வகையிலும், எல்லா கோணத்திலும் தெரி கின்ற அளவுக்கு இருந்து கொண்டிருக்கின்ற அற்புதமான கோயில் திருவாரூரில் இருக்கிறது. அந்த திருவாரூரில்தான் சூரியனுக்குப் பக்கத்திலே நாகராஜன் இருக்கிறான். திருவாரூரில் சூரியனுக்குப் பக்கத்திலே நாகராஜன் இருக்கின்ற இடமும் அங்கேதான் இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் நினைவு படுத்த விரும்புகிறேன் (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இல்லை (சிரிப்பு) (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, ஆமாம் ஏதோ ஒரு இடத்திலே; அடைக்கப்பட்ட இடத்திலே நான் நாகராஜனைச் சொல்கிறேன், சூரியனுக்குப் பக்கத்திலே இருக்கின்ற நாகராஜனை, சுற்றிலும் சுவர்கள் இருக்கின்றன. கோட்டைகள் இருக்கின்றன. வாசல்கள் இருக்கின்றன, அத னாலே சொல்கிறேன். அங்கே தான் இருக்கிறார், இங்கேதான் நரசிம்ம பல்லவனுடைய தளபதி பரஞ்சோதி இரண்டாம் சாளுக்கிய மன்னனை வாதாபிகேஷ் என்பவன் தோற்கடித்து வாதாபி கணபதியைக் கொண்டு வந்தான். இங்கேதான் முத்துசாமி தீட்சதர் அந்த இடத்திலே வாதாபி கணபதிம் பஜே என்ற—அவர்களுக்கு நன்றாகத் தெரியும்—அந்த பாடலைப் பாடிய இடமே முத்துசாமி தீட்சிதர் பாடிய இடமே அதுதான்.



சங்கீத வித்வான்கள் எல்லாம் திருவையாறுக்குப் போவது போல் அந்த இடத்திற்கும் போகவேண்டும். ஏன் என்றால் வாதாபி கணபதிம் பஜே என்று பாடாத இடமே கிடையாது. அப்படிப்பட்ட அந்த வாதாபி இந்த வாதாபியிலிருந்து வருகிற போது நமக்கு நினைவுக்கு என்ன வருகிறது என்றால் பிள்ளை யாரோ வாதாபியை வெற்றி கொண்டதற்குப் பிறகுதான் நமது நாட்டில் வந்தது. எனவே பல்லவர் காலம் என்று நினைக்கிறேன், இல்லை, அதற்கு முன்னால் காரைக்குடிக்குப் பக்கத்திலே இருக் கின்ற பத்துவை முத்துவையில் இருக்கின்ற, இருந்து கொண் டிருக்கின்ற அந்த பிள்ளையார்பட்டியைப் போய் பார்ப்போம் என்று சொன்னால், பிள்ளையார்பட்டிப் பிள்ளையார்தான் தமிழகத்திலே முதல் பிள்ளையார்.

இந்த பிள்ளையார்பட்டி பிள்ளையாருக்கு மிக சிறப்பு என்னவென்று சொன்னால் இது ஆய்வுக்குரியது. எதுவுமே ஆய்வதற்கு உரியதுதான். என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையிலே சொல்கிறேன். இது ஆய்வுக்கு உரியது. அந்தப் பிள்ளையார்தான் முதல் பிள்ளையார். அதிலே 2 செய்திகளைச் சொல்கிறார்கள். என்னவென்றால், பல்லவர்கள் வந்த பிறகு தான் குகைக் கோவில்கள் வந்தது என்று சொல்லுவது இருக் கிறதே அது இல்லை. அதற்கு முன்பு ராக்கெட் டெம்பிள் வந்து விட்டது என்பதற்கு அடையாளம்தான் அந்த பள்ளப்பட்டி பிள்ளையார் கோவில். அந்த பிள்ளையாருக்கு இருக்கின்ற சிறப்பு என்னவென்றால் எல்லா பிள்ளையாருக்கும் வலது கொம்பு உடைந்து இருக்கும். அந்த பிள்ளையாருக்கு உடையாமல் இருக்கிறது. இரண்டு கொம்புகளும் உடையாமல்தான் இருக் கிறது. வலம் சூழி பிள்ளையாராகவே முதலிலே கிடைத்து இருக்கிறது நமக்கு. அந்த துதிக்கொம்பு வலம்தான் சுழித்து இருக்கிறது. அதில் இருக்கின்ற இரண்டு கரங்களில் ஒரு கரத்தில் இருப்பது என்னவென்று கண்டுபிடிக்க முடியவில்லை. மேதகபா, லிங்கபா, அல்லது சிந்தாமணியா என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு ஆய்வுக்குரிய ஒரு பிள்ளையாராக இருந்து கொண்டிருக் கிறார். ஆனாலும் பழம் பிள்ளையார் என்று சொல்லுகின்ற காரணத்தால் பிள்ளையார் சிந்தனையே நமக்கு பல்லவர் காலத் தில் இருந்துதான் வந்தது என்று சொல்லுவதற்கு இல்லை என்பது ஆராயப்பட வேண்டும் என்பதற்காக இங்கே நான் சொல்ல விரும்பு கிறேன்.

முற்பகல் 11-10

அடுத்தாற்போலே, சுசீந்திரம் என்று சொல்கின்ற கோயில் எங்கள் பகுதியிலே இருக்கின்ற ஒரு கோயில். தாணு, மால், அயன் கோயில். இதற்கு நான் வருவதற்குக் காரணம் என்ன வென்று சொன்னால், சிவன் பெரியவனா; பிரம்மன் பெரிய வனா; விஷ்ணு பெரியவனா என்று சண்டை போட்டுக்கொண்டு

[திரு. குமரி அனந்தன்]

[1992 ஏப்ரல் 9

இருந்த நேரத்தில் இந்து மதத்தில் இருக்கின்ற பெரியவர்கள் எல்லோரும் ஒன்று தான். மும்மூர்த்திகளும் ஒன்றுதான் என்று காட்டுவதற்காக தாணு, மால், அயன் என்று சிவன், விஷ்ணு, பிரம்மா மூன்று பேருக்கும் கோயில் அமைத்து வைத்து இருக்கிறார்கள். இந்தக் கோயிலில் அபிஷேக தண்ணீர் வெளியே போவதில்லை. எங்கே போகிறது என்று தெரியவே இல்லை. சுசீந்திரத்திலே இருக்கின்ற அந்தக் கோயிலிலே அபிஷேகத் தண்ணீர் எங்கும் போவதில்லை. இப்படிப்பட்ட அற்புதமான கோயில். இதில் இன்னொரு சிறப்பு என்னவென்றால் நட்சத்திரங்கள், நவக் கிரகங்கள் எல்லாம் கீழே இருக்கும். நவக் கிரகங்கள் மேலே உள்ளதுதானே என்பதற்காக சுசீந்திரம் கோயிலிலே அந்த நவக் கிரகங்கள் எல்லாம் மேலே வைக்கப்பட்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட சிறப்பான கோயில். அது சுசீந்திரத்திலே இருந்து கொண்டிருக்கிறது என்பதனை உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

சில வியப்புக்கள் இருக்கின்றன. நான் நேரத்தின் அருமையை மனதிலே வைத்துக் கொண்டு தான் பேசுகிறேன். சில வியப்புக்கள். எல்லாவற்றினுடைய சிறப்புக்களையும் சொல்ல முடியாது என்ற காரணத்தினால், சில வியப்புக்கள் என்னவென்றால், 350 ஆண்டுகள் கும்பாபிஷேகம் நடைபெறாமல் இருந்த எங்கள் நாகராஜா கோயிலுக்கு நீங்கள் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறீர்கள். அதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், இந்த அமைச்சரவைக்கும் நான் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே சிறப்பு என்னவென்றால், கும்பாபிஷேகம் எவ்வளவு செய்தாலும், எவ்வளவு சிறப்பாகச் செய்தாலும் மூலவர் இருக்கின்ற இடத்திற்குமேலே போட்டு இருப்பது ஓலைக் கூரை தான். அதை மாற்ற மாட்டார்கள். அது அங்கே அப்படித்தான் இருக்கும்.

அதைப் போல, அங்கே பிரசாதமாகக் கொடுப்பது, வேறு எதுவும் கிடையாது. அங்கே திருநீறு கிடையாது. அந்த நடராஜர் கோயிலிலே இருக்கின்ற மண்ணைத் தான் எடுத்து கொடுப்பார்கள். இந்த மண்ணினுடைய சிறப்பு என்னவென்றால் ஒரு வருடத்திலே சம்பாப்பூ என்று சொல்லப்படுகின்ற சம்பா நெல் விதைக்கப்படுகிற ஒரு 6 மாத காலத்திலே விதைத்து அறுவடை செய்து அதற்குப் பிறகு தயாராவதற்குரிய அந்த ஆறு மாத காலத்திலே அந்த மண் கருப்பாக இருக்கிறது. மீதி ஆறு மாத காலத்திலே அந்த மண் வெள்ளையாக இருக்கிறது. இதை இன்றும் கண்கூடாகப் பார்த்து வருகின்ற ஒரு காட்சியாகும். முதல் பாதி கருப்பு; மறு பாதி வெள்ளையாக அந்த மண்ணே இருக்கிறது. இது ஆய்வதற்கு உரியது. இது மெஞ்ஞானம்.



[திரு. குமரி அனந்தன்]

1992 ஏப்ரல் 9]

இதை விஞ்ஞானம் எட்டிப் பிடிக்க முடிகிறதா; அதற்குக் காரணம் கண்டுபிடிக்க முடிகிறதா என்று ஆராயலாம். ஆய்வுக்கு ஓய்வே இல்லை என்று நான் சொல்வது உண்டு. அதைப் போலே, இந்த ஆய்வுக்குக் கூட ஓய்வே இல்லை. இங்கே ஒரு மரம் இருந்ததாம், மரம் "இருந்ததாம்" என்று சொல்வதற்குக் காரணம், இப்போது அந்த மரம் இல்லை. இந்த மரத்தை தொழு நோயாளிகள் போய் தொழுது, அந்த மருந்து இலைகளை எடுத்து பறித்துப் போட்டால், தொழு நோய் போனதாக வரலாறு இருக்கிறது. அந்த மரம் இப்போது பட்டுப்போய் விட்டது. அந்த மரம் பட்டுப்போய் விட்டது என்பதை கவலையோடு சொல்வதற்குரிய காரணம், பக்கத்திலே கேரளபுரத்திலே, இங்கே பக்கத்திலே அந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இருக்கிறார்கள். கேரளபுரத்திலே இருக்கிற பிள்ளையாரும் அப்படித்தான். அந்தப் பிள்ளையார், வருடத்தில் பாதி நாட்கள் வெள்ளை; பாதி நாட்கள் கருப்பு. இப்போது நான் மரத்திற்கு வந்ததற்குக் காரணம், இந்த மரங்களை எல்லாம் பேணி பாதுகாக்க வேண்டுமென்பதற்காகத்தான், ஸ்தல விருட்சத்தையே வைத்தார்கள். ஆனால் நமது நாட்டிலேதான் வெட்டி அழிக்கிறோம் அத்தனையையும். கோயிலிலே கும்பிடுவதற்குரியது மரங்கள். அப்பொழுதாவது கோடாரி எடுத்து வெட்டாமல் இருக்க மாட்டானா என்று நம்மவர்கள் நினைத்தார்கள். இவன் வெட்டமாட்டானா என்று வெட்டிக்கொண்டு இருக்கிறான். இந்தச் சூழ்நிலை வரக் கூடாது என்பதற்காகத்தான் ஸ்தல விருட்சங்கள் வந்தன. இந்த ஸ்தல விருட்சத்தைப் பற்றி நான் சொல்வதற்குரிய காரணம், தொழுநோயை போக்குவதற்குரிய அந்த மரம் இப்போது இல்லை. அதைப்போலே இன்னும் சில இடங்களிலே இருக்கின்ற வியப்பான மரங்கள் இல்லாமல் போய்விடக் கூடாது.

தில்லைக்காளி என்று சொல்கிறோம்; தில்லை நடராஜர் என்று சொல்கிறோம்; தில்லை என்று பெயர் வந்ததற்கே காரணம், தில்லை வனங்கள் இருந்த காரணத்தினாலே தான். அந்த தில்லை வனங்கள் இருந்தன என்று சொன்னால், தில்லை மரத்தினுடைய சிறப்பு என்னவென்றால் வெயில் காலத்திலே அதனுடைய கீழே போய் இருந்தால் குளிர்ச்சியாக இருக்கும். குளிர் காலத்திலே அதன் கீழே போய் இருந்தால் வெம்மையாக இருக்கும். இந்த மரம் எங்கேயாவது இருக்கலாம். ஆனால் நான் தேடிப் பார்த்த அளவிலே, பக்கத்திலே எல்லாம் இல்லாமல் எங்கே இருக்கிறது என்றால், நமது சகோதரியினுடைய இராதாபுரம் தொகுதியிலே விஜயாபதி என்று சொல்லுகின்ற ஊருக்கு பக்கத்திலே இரண்டே இரண்டு தில்லை மரங்கள் இப்போது நின்று கொண்டு இருக்கின்றன. இரண்டு தில்லை மரங்கள் நின்று கொண்டிருக்கின்றன.

[திரு. குமரி அனந்தன்]

[1992 ஏப்ரல் 9

நான் ஒரு காலத்திலே அந்த தொகுதியிலே இருந்த காரணத்தினாலே அவைகளைப் பார்த்தேன். அங்கே இரண்டு தில்லை மரங்கள் இருக்கின்றன இப்போது. அவைகள் அழிந்துவிடாத அளவுக்கு பாதுகாக்கப்பட வேண்டுமென்பது மட்டுமல்ல, அவைகளினுடைய வாரிசுகளும் வரவேண்டும்.

இந்த மரத்தைப் பற்றி சொல்கிறபோது, என்னுடைய தொகுதியிலே, இப்போது இருக்கிற என்னுடைய சாத்தான்குளம் தொகுதியிலே ஆழ்வார் திருநகரி இருக்கிறது. நம்மாழ்வார் தோன்றிய புண்ணிய ஸ்தலத்திலே ஒரு புளிய மரம் இருக்கிறது. அந்தப் புளிய மரத்தின் கீழேதான் அவர் அன்று ஞானம் பெற்றார் என்று சொல்வார்கள். அந்தப் புளிய மரத்தினுடைய வயது என்னவென்றே தெரியாது. அதனுடைய வயதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனுடைய வேர் எங்கே போகிறது என்று நமக்கு சரியாகத் தெரிய மாட்டேங்கிறது. ஆனால் அது படர்ந்து வருகிறது. எல்லா இடங்களிலும் பச்சைப் பசேல் என்று இருக்கிறது. பூக்கிறது; காய்க்கிறது; பழுப்பது இல்லை.

இதுவரை அதனுடைய பழத்தை யாரும் பார்த்ததில்லை. அதற்கு விதையே கிடையாது. காய்த்து சின்னதாக இருக்கின்ற பொழுதே அது கீழே விழுந்து விடுகின்றது. அது தூங்குவதும் இல்லை. அதனால் அதற்கு தூங்காப் புளி என்று பெயர். இரவெல்லாம் அதனுடைய இலைகள் மடங்காமல், ஒடுங்காமல் அப்படியே விரித்து போயிருக்கும். அதனால் அதற்கு தூங்காப் புளி என்று பெயர். அந்த மரத்தினுடைய வயதை கார்பன் டேட்டிங் வைத்து பார்ப்போமேயானால், இப்போது கலிபோர்னியாவிலே இருக்கின்ற ஒரு மரம்தான் உலகத்திலேயே பழைய மரம் என்பதுகூட முறியடிக்கப்பட்டு, நமது மண்ணில் இருக்கின்ற மரம்தான் பழையமரம் என்று சொல்லுகின்ற ஒரு உலக ரெகார்டைக் கூட நாம் ஏற்படுத்துவதற்குவாய்ப்பு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) விஞ்ஞான ரீதியிலே அதனை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதற்காக இந்தச் செய்தியினை உங்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

இதைப்போலே, அவினாசியிலே இருக்கின்ற ஒரு மரம். (மேசையைத் தட்டும் ஒலி) அவினாசியிலே இருக்கின்ற லிங்கேஸ்வரருடைய அந்தக் கோயிலிலே இருக்கின்ற அந்த மரத்தினுடைய சிறப்பு என்னவென்றால், கோயிலினுடைய ஸ்தல விருட்சம் பாதிரி; கோயிலினுடைய ஸ்தல விருட்சம். இந்தக் கோயிலிலே இருக்கின்ற ஸ்தல விருட்சத்தினுடைய பெயர் பாதிரி. இந்தப் பாதிரி மரத்திலே இருக்கிற சிறப்பு என்னவென்றால் இறைவனுக்கு வில்வம் வேண்டும் அல்லவா ? அந்தப் பாதிரி மரத்திற்குள்ளேயே ஒரு வில்வம் தோன்றி வளர்ந்து வருகிறது. இது



[திரு. குமரி அனந்தன்]

1992 ஏப்ரல் 9]

எங்கேயும் இல்லாத ஒரு அதிசயம். இந்தப் பாதிரி மரத்திலேயிருந்து தோன்றிய இந்த வில்வ மரத்திலேயிருந்து வருகின்ற அந்த வில்வ இலைகளை எடுத்து, வில்வப் பத்திரம் என்று சொல்வார்கள் அல்லவா ? ஆண்டவனுக்குப் படைக்கிறார்கள். அந்தப் பாதிரி மரம் பங்குனி மாதம் பூத்தது என்றால் அந்தப் பூக்கள் வாடுவதில்லை. இறைவனுக்குப் போட்டாலும் ரொம்ப நேரம் வாடாமல் இருக்கிறது. நாள் கணக்கிலேகூட வாடாமல் இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

முற்பகல் 11-15

இந்த வியப்புக்களையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், இப்படிப்பட்ட மரங்கள் இன்னும் பல இடங்களில் இருக்கக்கூடும்.

ஏன் ? திருச்சியிலே திருப்பைஞ்ஞீலி என்று சொல்லுகின்ற இடத்தில் ஒரு வாழை மரம் இருக்கிறது—கல் வாழை மரம். தலையாட்டுகிறார்கள். அந்தப் பகுதியிலே இருப்பவர்கள், ஆமோதிக்கின்ற வகையிலே. அது எமனே இருக்கின்ற இடம் என்று சொல்லுவார்கள். அப்பருக்குத் திருவமுது கொடுத்த இடம். எனவே, எமன் இருக்கின்ற அந்த இடத்திலே, வழிபாடு நடக்கின்ற அந்த இடத்தைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், கல் வாழை இருக்கிறது. அது பூக்கிறது. காய்க்கிறது. அந்தக் காய் கசக்கிறது. நச்சுத் தன்மை உடையது. ஜெர்மனியிலேயிருந்து வந்து பார்த்து, அது நச்சுத்தன்மையுடையதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். சுற்றிலும் வேறு வாழை மரங்கள் இருக்கின்றன. இதை எடுத்து அங்கு நட்டால் வருவது இல்லை : அந்த வாழையை எடுத்து இங்கு நட்டால் வருவது இல்லை.

இப்படிப்பட்ட சிறப்புக்களெல்லாம் இருக்கின்றன. இவைகளையெல்லாம் நாம் ஆராய வேண்டுமென்பதற்காக நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து இனிமேல் நான் விரைந்து வந்துவிட வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : கொஞ்சம் மானியக் கோரிக்கைக்கு வாருங்கள்.

<u>திரு. குமரி அனந்தன்</u>: வந்துவிட்டேன். இனி பூரா மானியக் கோரிக்கைதான். எப்படியென்றால் இவ்வளவும் நான் சொன்னேனே, இவைகள் மக்களுக்காகச் செய்யப்பட்டவையே.

[திரு. குமரி அனந்தன்]

[1992 ஏப்ரல் 9

திருவாரூரிலே ஒரு தடவை ஒரு சபை கூடி முடிவு எடுக்கிறது. இங்கே கலப்பினத்திலே பிறந்த மக்களை நீங்கள் யாரும் பழித்தும் இழித்தும் கூறக்கூடாது, அவர்களைச் சரிசமமாக நடத்த வேண்டுமென்று 13-வது நூற்றாண்டே கல்வெட்டு கூறுகிறது. ஆகவே இப்படிச் சமுதாயப் புரட்சியையே கோயில் செய்திருக்கிறது.

எப்படி இராமானுஜர் ஒரு புரட்சியைச் செய்கின்ற, அந்தத் திருக்கோஷ்டியூர் கோயில் எவ்வளவு பெருமை பெற்றதோ, புகழ் பெற்றதோ, எல்லோருக்கும் நான் மந்திரத்தைச் சொல்லி நான் நரகத்திற்குப் போனாலும் பரவாயில்லை என்று சொன்னாரோ, அதைப்போல கலப்பின மக்களாக இருந்தால், ஜாதி விட்டு ஜாதி திருமணம் செய்து அவர்களுக்குக் குழந்தை பிறந்தாலும்கூட அவர்களை இழித்தும் பழித்தும் நீங்கள் பேசக்கூடாது, சம உரிமை வழங்க வேண்டும் என்று கோயிலிலே முடிவெடுத்திருக்கிறார்கள். ஆக, இப்படிக் கோயிலிலே மக்கள் வாழ்க்கையோடு தொடர்பு இருக்கின்ற இந்தக் கோயில்களில் இப்பொழுதும் மக்களுக்குப் பயன்படுகின்ற சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். என்னுடைய பணிவான வேண்டுகோள். மானியக் கோரிக்கை என்று சொல்லுகின்ற வகையில் இந்த மானியக் கோரிக்கையிலே நான் வைக்க விரும்புகின்ற கருத்து, ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் ஆலயப் பயணம் அல்லது ஆலய தரிசனம் என்பதற்கு நீங்கள் ஆலயத்தின் மூலமாகவோ அல்லது அரசாங்கத்தினுடைய மூலமோ அல்லது சுற்றுலாவின் மூலமோ ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்திற்கும் பஸ்கள் போய்க் கொண்டிருக்க வேண்டும். ஆலய தரிசனத்திற்கென்றே என்பது என்னுடைய வேண்டுகோள். குளிர் பதன வசதி செய்யப்பட்ட வண்டிகள் இருக்கட்டும். நமது ஊர்க்காரர்களும்கூட போகட்டும். ஏழை எளியவர்கள், பார்க்காதவர்களும், போகாதவர்களும் அதிலே ஏறிப் போகட்டும் ; வெளி நாட்டுக்காரர்கள் அதிலே போகட்டும். அதற்குத் தகுந்தவாறு நீங்கள் ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுங்கள். எல்லா ஏற்பாடுகளையும்—என்னுடைய உள்ளத்திலே இருப்பவைகளையெல்லாம் சொல்வதற்கு இங்கே நேரம் இல்லை, அதற்குரிய ஆற்றல் படைத்தவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தாலே சொல்கிறேன்.

வீடியோ போட்டு, அழைத்துப் போகப் போகின்ற கோயில்களைப்பற்றி முதலிலே அறிவித்து விட்டு, இப்படி இருக்கிறது இப்படி இருக்கிறது என்று நல்ல கைய்டு மூலம், ஆங்கிலம் தெரிந்தவர்கள், வெளி மொழி தெரிந்தவர்களையெல்லாம் வைத்துக் கொண்டு ஆங்காங்கே சுற்றிச் சுற்றிக் காட்டிக் கொண்டு வருகின்றபொழுது மனமுவந்து மக்கள் பணம் கொடுப்பதுதான் நமக்குச் சிறப்பாக அமையும். மனமுவந்து மக்கள் பணம் கொடுக்கின்ற அளவுக்கு இந்தச் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



[திரு. குமரி அனந்தன்]

1992 ஏப்ரல் 9]

இந்தக் கோயில்களையெல்லாம் பார்க்கின்றபொழுது இசை எவ்வளவு பெருமை வாய்ந்தது என்று தெரியும். ஆனால், இசைக் கல்லூரிக்குச் சில நாட்களுக்கு முன்பு நான் போக வேண்டியிருந்தது. அங்கே இருக்கின்ற நிலைமை என்னவென்றால்—மானியக் கோரிக்கைக்கு வந்து விட்டேன். (சிரிப்பு) இசையில் தேவாரம் என்று சொல்வது உங்களுக்குத் தெரியும். அப்பரைப் பொறுத்தவரையிலே சொல்வார்கள். ''தமிழோடிசை பாடல் மறந்தறியேன்''—நான் தமிழையும் மறக்க மாட்டேன், இசையையும் மறக்க மாட்டேன், இசைத் தமிழாகவே நான் பாடிக்கொண்டிருப்பேன் என்று சொன்னார் அல்லவா ? அந்தத் தமிழோடிசை பாடல் மறந்தறியேன் என்று சொல்லுகின்ற அளவிற்கு இருக்கின்ற இந்தத் தமிழ்நாட்டில் இசைக் கல்லூரியிலே தேவாரத்தைப் பண்ணோடு சொல்லிக் கொடுப்பதற்கு நிரந்தர ஆசிரியர்கள், பேராசிரியர்கள் இல்லை. நிரந்தரப் பேராசிரியர்கள் இல்லாமல், என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், விசிட்டிங் புரொஃபசர்ஸ் என்று சிலரைச் சில மணி நேரம் வரச்சொல்லி, அவர்களை பாடச் சொல்லி, அதற்குப் பிறகு போகச் சொல்கிறார்கள். எனவே, தேவாரம் போன்ற இசைகள் நமது நாட்டிலே பரவ வேண்டுமென்ற காரணத்திற்காக—அதைப்போல பார்ட் டைம் அவர்கள் வைத்திருக்கிறார்கள். சென்னையிலே தி.நகரிலே பனகல் பார்க்கிற்குப் பக்கத்திலே இருக்கின்றது ; புரசைவாக்கத்தில் இருக்கிறது; திருவல்லிக்கேணியிலே இருக்கிறது; இசைக் கல்லூரியில் இருக்கிறது ''பார்ட்-டைம்'' கோர்ஸ். அங்கே கூட கர்நாட்டிக் மியூசிக்தான் சொல்லிக் கொடுக்கிறார்களே தவிர—கர்நாட்டிக் மியூசிக்கும் தமிழ் மியூசிக்தான், தமிழிசை தான். அதிலே ஒன்றுமில்லை. ஆனால் இன்னும் தமிழிசை என்று நம்மால் போற்றப்படுகின்ற தமிழ்ப் பண்கள் இருக்கின்றனவே—அதையும் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்—கர்நாடக இசையும் வேறு இசை அல்ல, நம்முடைய இசைதான். இருந்தாலும்கூட இவைகளை அதிகமாகச் செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அதற்கு நிரந்தரப் பேராசிரியர்கள் வேண்டும்.

கோயிலின் சிலைகளிலே அற்புதமான சிற்பங்கள் இருக்கின்றன என்று சொன்னேன். நல்ல வாத்தியக் கருவிகள்கூட இருக்கின்றன. இப்போது வேதாரண்யம் என்று சொல்கிற திருமறைக் காட்டிற்கு நீங்கள் சென்றீர்களென்று சொன்னால், அங்கே பார்த்தால், அங்கே இருக்கிற அம்மனுடைய பெயர் 'யாழைப் பழித்த மொழியாள்'. அவளுடைய பெயரே 'யாழைப் பழித்த மொழியாள்'. அவளுடைய மொழியே யாழைப் பழித்ததாக இருக்கிற காரணத்தினால், சரஸ்வதியே யாழை கீழே வைத்துக் கொண்டு சும்மா நிற்கிறாள். நாம்,

வாசித்தால் ஒன்றும் எடுபடாது அம்மா என்று. அங்கே இருக்கிற சரஸ்வதியைப் பார்த்தீர்களென்றால் தெரியும், வெள்ளத் தாமரைப் பூவில் இருந்து வீணை செய்யும் நாதத்தை வைத்துக் கொண்டிருக்கிற அந்த சரஸ்வதியே அங்கே யாழ் இல்லாமல் நிற்பாள். ஏனென்றால், அவள் யாழைப் பழித்த மொழியாள்; பேச்சே இசை, அப்படிப்பட்ட அந்த ஏராளமான இசைக் கருவிகளினுடைய வடிவங்கள் கற்சிற்பங்களாக இருக்கின்றன.

முற்பகல் 11-20

அதேபோல், குடமுழவு, பங்சமுக வாத்தியம், நொடிப் பறை, நாழிப் பறை இவைகள் எல்லாம் இருக்கின்றன. இவைகளை எல்லாம் ஆராய்வதற்கென்று — ஏற்கெனவே வாசிக்காமல் இருக்கிற பஞ்சமுகக் கருவிகள், குடமுழுவு போன்றவை எல்லாம் வாசிப்பதற்கு — சொல்லிக் கொடுப்பதற்கென்று இரண்டு பேர் இருந்தார்கள். அப்படி, பழக்கத்தில் இல்லாததை, வாசித்துக் கொடுப்பதற்கும், அப்போது பழக்கத்திலிருந்து இல்லாமலே போய் விட்டதை 'எக்ஸ்டிங்ட்' ஆகப் போய் விட்டதை எல்லாம் மீண்டும் அப்படி உண்டாக்குவதற்கு முயற்சி செய்கிற இரண்டு பேராசிரியர்கள் ஆயிரம் ஆயிரம் ரூபாய் சம்பளத்திலே இசைக் கல்லூரியிலே இருந்தார்கள். அந்தப் பதவி சில காலத்திற்கு முன்பு ரத்து செய்யப் முட்டு விட்டது. அதனை மீண்டும் — நான் சில காலத்திற்கு அன்பு என்று சொன்னதிலே அது அடங்கும். நீங்கள் அவைகளை மனதிலே கொண்டு காரியத்தைச் செய்ய வேண்டும்.

இப்போது, மீண்டும் நமது மானியக் கோரிக்கையிலே முக்கியமான அம்சத்திற்கு வருகிறேன். கன்னியாகுமரி என்று சொல்கிறபோது, கண்ணகிக் கோயில் எனக்கு நினைவுக்கு வருகிறது. கண்ணகிக் கோயிலில், சித்திரைப் பவுர்ணமி அன்று நமது தமிழ் மக்கள் ஏராளமான பேர் அங்கே போய் 3 நாட்கள் வழிபாடு செய்வார்கள். அது நமக்கு உரியது என்று சொல்வதற்குரிய அடையாளம் என்னவென்று சொன்னால், ஒரு பேராசிரியர், பூம்புகாரிலிருந்து சிலப்பதிகாரத்திலே சொல்லப்பட்ட வழிகளிலே நடந்து போனபோது, அந்த செங்குன்றம் என்ற அந்த மலைக்கே கொண்டுபோய் விட்டது. அப்படிப்பட்ட இடம். அந்தக் கண்ணகிக் கோயிலிலே இருக்கிற சிலையினுடைய தலை கீழே விழுந்து கிடக்கிறது. முக்கியமாக சிலையினுடையது தலைதான். அந்தத் தலையை எடுத்து ஆய்ந்து பார்த்ததற்குப் பிறகு, அந்தக் கல்லை எடுத்து ஆய்ந்து பாத்ததற்குப் பிறகு, அது இமய மலைக் கல் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இமயத்திலிருந்து கல் கொண்டு வந்து



அங்கே கோயில் கட்டினான் என்ற சொல் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சேரன் செங்குட்டுவனைப் பொருத்தி, ஆகவே. அந்த செங்குன்றத்திலே வேப்ப மரத்து நிழலிலே 14-வது நாள் போய் நின்று, விண்ணிலிருந்து வந்துதான், கண்ணுக்கின்ற கணவனோடு, அவள் விண்ணிலே பறந்து சென்றாள் என்ற காட்சியெல்லாம் காண வேண்டும் என்பதற்காகவும், அவளுடைய அருமை மகள் என்று போற்றக்கூடிய மாதவியினுடைய திருமகள் மணிமேகலை, அட்சயப் பாத்திரத்தை வைத்திருந்தாள் என்பதற்கு ஆதாரமாகவும், மறுநாள் வருகிறவர்களுக்கெல்லாம் சாதம் போடுவதுண்டு. ஆக, அப்படி 3 நாட்கள் அங்கே இருக்க வேண்டும், அதை ஒரு நாள் தருவதாகச் சொல்கிறார்கள். தயவுசெய்து, 3 நாட்கள் தர வேண்டுமென்று அவர்களுக்கு நாம் வேண்டுகோள் விடுப்போம் என்று இந்த அவையின் மூலம் வேண்டுகோள் விடுப்போம். எல்லாவற்றுக்கும் மேலாக நம்முடைய முதலமைச்சர் வேண்டுகோள் விட்டால், நிச்சயமாக அது நிறைவேறும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நான் உங்களுக்கு இங்கே சொல்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி,) கேரளத்தையொட்டி இருக்கிற அது தமிழ்நாட்டினுடைய தென் பகுதியாக இருக்கிற அந்த கன்னியாகுமரி கோயிலைப் பற்றி அதனுடைய பெருமையை எல்லாம் நான் சொல்லவில்லை, மானியக் கோரிக்கைக்கு வர வேண்டும். எனவே, நான் அதற்கு வருகிறேன்.

அந்தக் கன்னியாகுமரிக் கோயிலைப் பார்த்தீர்கள் என்று சொன்னால் அங்கு தலைமை பூசாரி பெறுகிற சம்பளம் 245 ரூபாய் தலைமை பூசாரி போற்றி. அங்கே அவருக்குப் பெயர் போற்றி. அவருடைய வேலை மற்றும் அதற்குச் சரியான சம்பளம் பற்றி எனக்கு விளக்க வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக என் பக்கத்திலே வந்து சொல்கிறார்: 'ஐயா, இப்போதாவது சொல்லுங்கள்' —இப்போது நிறைவேறி விடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் சொல்கிறார். மூத்தவர்; அதிலே இருக்கிற முதன்மை பூசாரிக்கே — அவருக்கு அங்கே ஷாந்தி என்று பெயர்; தலைமை ஷாந்திக்கு சம்பளம் என்னவென்றால் ரூ. 245. அத்தியானம் என்ற ஒருவர் இருக்கிறார். அந்தப் பூசாரிக்கு உதவியாக இருக்கிறவர். அவருடைய சம்பளம் என்னவென்றால் 8 ரூபாய் 10 காசு. அந்தப் பிரிவு எச். ஆர். மற்றும் சி. இ. யிலே இருக்கிற பிரிவு என்று எனக்குத் தெரிகிறது. அதனால் சொல்கிறேன், அந்த அத்தியானம் என்று சொல்கிற சிங்கார நாராயண ஐயர் பெற்றுக் கொண்டிருக்கிற சம்பளம் என்னவென்று சொன்னால், 8 ரூபாய் 10 காசு. ஆம், மாதச் சம்பளம், ஆனால், அதே நேரத்திலே, கேரளாவிலே இதே பணியிலே இருப்பவர் பெறுகிற சம்பளம் 950 ரூபாய். 8 ரூபாய் 10 காசு இங்கே வாங்குகிற அதே அத்தியானம் — நம் ஊரிலே அத்தியானம் என்ற அந்தப் பெயர்

இடையாது, அது அந்தப் பாணியிலே வந்தது, இங்கே 8 ரூபாய் 10 காசு வாங்கிக் கொண்டிருப்பவருக்கு கேரளாவிலே இருக்கிறவருக்கு 950 ரூபாய் கிடைக்கிறது என்றால், எத்தனை மடங்கு என்று பார்த்துக் கொள்ளுங்கள். ஆனால், தலைமை போற்றிக்கு அத்தனை மடங்கு கிடைக்கவில்லை என்றாலும் கேரளாவிலே கணிசமான அளவுக்குக் கிடைக்கும். நாமும் அவர்களைப் பார்க்க வேண்டும். அதிலே எனக்கு என்ன மகிழ்ச்சி என்றால், இவ்வளவு காலம் இருந்தவர்கள், மிகக் குறைந்த அளவு அந்தக் கேரளாவில் இருக்கிற கோயில்கள் எல்லாம். கன்னியாகுமரி கோயில்கள், செங்கோட்டை தாலுக்கா கோயில்கள் தமிழகத்திற்கு வருகிற நேரத்தில், இவ்வளவு நிதியுதவி என்று சொல்கிற ஒரு திட்டத்தை வைத்திருந்தார்கள். அந்த நிதியுதவியிலேயே கொடுத்துக் கொண்டு வந்தார்கள். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் இந்த ஆண்டிலிருந்து 10 லட்சம் ரூபாய் கூடுதலாகக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். நான் மகிழ்ச்சியோடு இதனைப் பார்த்தேன். அவர்களுக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதை வைத்துக் கொண்டே அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்க முடியுமானால் கொடுங்கள், இல்லையென்றால் மேலும் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு இதை நான் இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல நமது பெருமைக்குரிய காரியங்களைச் சொல்வதற்கு முன்னாலே, உங்களுக்கு இருக்கிற சிரமத்தையும் நான் சொல்ல வேண்டும். ஆலய நிர்வாகம். அதனை நீங்கள் எடுத்திருப்பதன் காரணம், அதை நீங்கள் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசையின் காரணத்தினால் அல்ல; நல்லமுறையிலே நடத்தி, பெர்சனல் அடென்ஷன் அதற்குக் கொடுக்கலாமே என்பதற்காகத்தான் நீங்கள் வைத்திருக்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய கணிப்பு. அந்தக் கணிப்பின் அடிப்படையில் பார்க்கின்றபோது 1960 ஆம் ஆண்டு திரு. சி. பி. இராமசுவாமி அய்யர் அவர்கள் தலைமையிலே ஒரு குழு போடப்பட்டது. அந்தக் குழு ஆராய்ந்து சொல்லியவைகளையெல்லாம் பெரிய பெரிய புத்தகங்களாக வெளியிட்டு இருக்கிறார்கள்.

முற்பகல் 11–25

நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள் சாதாரண நடவடிக்கைகள் அல்ல. சும்மா இருந்துவிட்டால் பிரச்சினையே வராது. செயல்பட ஆரம்பித்து விட்டால் பிரச்சினை வரும். பல மரங்களிலே ஒரு மரம் என்றால் பிரச்சினை இல்லை. அது பழ மரமாக



இருந்தால்தான் பிரச்சினை. ஏன் கவலைப்படுகிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நமக்குப் பிரச்சினை வரத்தான் செய்யும். அவைகளை எப்படிச் சந்திக்க வேண்டும் என்பதும் உங்களுக்குத் தெரியும். இருந்தாலும் என்ன சிக்கல் இருக்கிறது ; என்ன பிரச்சினை இருக்கிறது என்பதற்காகச் சொல்லுகிறேன். ஆங்காங்கே அவர்களின் மனம்போல நடந்து கொண்டிருந்த கோயில்களை எல்லாம் அரசாங்கத்தினுடைய பணியிலே கொண்டுவர வேண்டுமென்று முதன் முதலில் 1817 ஆம் ஆண்டு தொடங்கியிருக்கிறார்கள். வெள்ளையர் இங்கே ஆண்டு கொண்டிருந்த காலத்தில் கவர்னர் ஆணையின்படி நடந்து இருக்கிறது 1817-ல். பிறகு, அவர்களே என்ன செய்திருக்கிறார்கள், 1863 ஆம் ஆண்டு என்றால் அரசினுடைய தலையீடு கூடாது என்று எடுத்து விட்டார்கள். அரசு தலையீடு கூடாது என்று எடுத்து விட்டார்கள் அல்லவா ? அப்படியே விட்டு விட்டிருக்கலாம் அல்லவா மக்கள்? இல்லை, உங்களுடைய தலையீடு வேண்டும் என்று கேட்டார்கள் 1863-ல். ஆகட் 20/1863-ல் இந்த நாட்டில் இருக்கிற மக்கள் எல்லாம் எங்களுக்கு அது வேண்டும் என்று கேட்டார்கள். அதனாலே என்ன நடந்தது என்று பாருங்கள். நான் அவ்வளவையும் படித்தால் நேரம் இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதே அரை மணி நேரம் ஆகி விட்டது.

திரு. குமரி அனந்தன் : அதைக் குறையின்றி நான் முடித்து விடுகிறேன். ஏறத்தாழ 40 தடவைகள், அரை குறையாக விட்டு விடக்கூடாது அல்லவா, அதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அரை குறையாக முடிக்க வேண்டாம். 11½ மணிக்காவது முடித்து விடுங்கள்.

திரு. குமரி அனந்தன் : சீக்கிரம் முடித்து விடுகிறேன். சபாநாயகர் அவர்கள் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லவிரும்புகிறேன். இந்தச் சட்டம் மட்டுமே ஏறத்தாழ 40 தடவைகள் திருத்தப்பட்டிருக்கின்றன. புதிய சட்டம் கொண்டு வருவது, திரும்ப எடுப்பது, பிறகு திருத்துவது, இப்படி 40 தடவைகள் அப்படி என்று சொன்னால் ஒரு காரியத்தை உடனே முடிக்கிறது என்று சொன்னால் எளிதான காரியம். பல தடவை முயன்று முயன்று, திருத்தி, திருத்தி என்றால் கடினமான காரியம். அந்தக் காரியத்தை நீங்கள் செய்கிறீர்கள். எனவே, கருத்துக்கள் பல வரத்தான் செய்யும். வருகின்ற கருத்துக்களை மீறி நீங்கள் காரியம் செய்யப் போகிறீர்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே தான் இதைச் சொல்லுகிறேன். 40 தடவைகள் சட்டம், திருத்தப்படுகிறது, மாற்றப்படுகிறது, ஏன்? 1974 ஆம்

ஆண்டு மட்டும் 6 தடவைகள் இந்தச் சட்டம்மீது திருத்தம் வந்தி
ருக்கிறது. அதுமட்டுமல்ல 30 ஆண்டுகளுக்கு முன்பு அறநிலையத்
துறையின் கட்டுப்பாட்டின் கீழே இருந்தது 5 கோயில்கள்.
இன்று 35,000 கோயில்கள் இருக்கின்றன. ஆக, அரசியல் தலை
யீடு கூடாது என்பது வேறு, அரசு தலையீடு கூடாது என்பது வேறு
அரசு தலையீடு வேண்டும் என்று மக்களே கேட்டிருக்கிறார்கள்.
எனவே, அரசு தலையீடு வேண்டுமென்பதை திரு. சி. பி. இராம
சுவாமி அய்யர் அவர்கள் ரிப்போர்ட் உட்பட எத்தனையோ ரிப்
போர்ட்டுகளிலே பார்க்கின்றபோது அரசு இவைகளையெல்லாம்
கண்காணித்து வரவேண்டுமென்றே சொல்லுகின்ற நல்ல
காரியத்தை அவர்கள் எல்லாம் எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.
அவர் சொல்லுகிறார், ஒரு டிரிபியூனல் போட வேண்டும், கோயில்
வாரியம் போட வேண்டுமென்றே சொல்கிறார். ஒரு நீதிபதி
அந்தஸ்திலே இருக்கின்றவர், நிர்வாகத் திறமை உடையவர்,
சாஸ்திரங்களைத் தெரிந்திருக்கின்றவர் இவர்களைப் பயன்படுத்தி
நீங்கள் ஆலய நிர்வாகம் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்
கிறார். அரசுத் துறை தவிர, ஒரு நிர்வாகம் ஏற்படுத்த வேண்ட
மென்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்
பட்ட செய்திகள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன.

சபாநாயகர் அவர்களே, எனக்கு ஒரு வேண்டுகோள். அதைத்
தவறாக நீங்கள் நினைக்கக் கூடாது. நமது எம்.எல்.ஏ.க்களில்
சில பேர்களுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. நல்ல
முறையிலே, கோயில்களிலே அவர்கள் எல்லாம் சென்று பார்ப்
பதற்கு, செயல்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. 234 பேர்
களுக்கும் அந்த வாய்ப்பு இருக்கின்ற அளவுக்கு அந்தந்த பகுதியிலே
இருக்கிறவர்கள், நம்பிக்கை உடையவர்கள் எல்லாம், அந்தக்
கோயில் நிர்வாகக் குழு கூடுகிற நேரத்திலே போய் கலந்து கொள்
வதற்கு வாய்ப்பைக் கொடுப்பீர்களேயானால் யாருக்கும் குறை
இருக்க வாய்ப்பு இருக்காது. எல்லோருமே உள்ளே போய்க்
கலந்து கொள்ளப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கோயில் நிர்வாகத்
திற்காக என்று ஒரு apex body, மாநில அளவில் Temple Admin-
istration Board ஆலய நிர்வாக வாரியம் ஒன்றினை அமைத்திருக்கின்
றோம். அதன் கீழ் 17 மாவட்டக்குழுக்களை அமைத்திருக்கிறோம்.
இந்த 17 மாவட்டக் குழுக்களில் 12 உறுப்பினர் இருப்பர்.
Chairman plus eleven Members. இந்த மாவட்டக் குழுக்களில்
சில சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுத்தி
ருக்கிறோம். இந்த அவையில் உள்ள 234 உறுப்பினர்களுக்கும்



இதில் ஆலய நிர்வாகத்தில் ஏதாவது ஒரு பங்கு கொடுக்க
வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்
டிருக்கிறார். இங்கே வேறு மதங்களைச் சார்ந்த சட்டமன்ற
உறுப்பினர்களும் இருக்கிறார்கள். எனவே, இந்து மதத்தைச்
சார்ந்தவர்களுக்கு மட்டுமே அந்த வாய்ப்பு அளிக்க முடியும்
என்பது ஒன்று. அடுத்ததாக, ஆண்டு வருவாய் ஒரு இலட்சத்-
திற்கும் மேலான கோயில்களுக்கு அறங்காவலர்களை, திருப்பணிக்
குழுக்களை இந்த ஆலய நிர்வாக வாரியம் மாநில அளவிலான
அமைப்பை அமைக்கும். ஆனால் ஒரு இலட்சத்திற்குக் கீழ்
ஆண்டு வருவாய் உள்ள கோயில்களுக்கெல்லாம் இந்த மாவட்டக்
குழுக்கள்தான் அறங்காவலர் குழுக்களையும், திருப்பணிக்
குழுக்களையும் அமைக்க உள்ளன. எனவே இந்த மாவட்ட
குழுக்கள் விரும்பினால் அறங்காவலர் குழுக்களிலும்,
திருப்பணிக் குழுக்களிலும் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களையும்
அல்லது வேறு யாரை விரும்பினாலும் அவர்கள் நியமிக்க
முடியும். அதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை
மட்டும் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11-30

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அநேகமாக நான் சொல்வது நிறைவேறி விட்டது
என்று கருதுகிறேன். இவ்வளவு தூரம் முதல்வர் அவர்கள்
சொன்னதற்குப் பிறகும் யாரும் வேண்டாம் என்று சொல்ல
மாட்டார்கள. எனக்கு நிச்சயமாகத் தெரியும். அவர்கள்
சொல்வது மிக முக்கியமான ஒன்று. அதிலே நம்பிக்கை உடை
யவர்கள். அதைத்தான் சொன்னேன். அதிலே நம்பிக்கை
உடையவர்களை அரசு விரும்புவது, அங்கே இருக்கின்ற அறங்
காவலர் குழு விரும்புவது என்பதை.

அதைப்போல அவர்கள் சொன்னார்கள். மற்றவர்களையும்
நியமிக்க முடியும் என்று சொன்னார்கள். இது மிக முக்கிய
மான வரிகள். ஓய்வு பெற்ற நீதிபதிகள் இப்போது கிராமத்
திலே போய் இருப்பார்கள். அவர்களுக்கு ஓய்வாக இப்போது
நேரம் இருக்கும். சிலர், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருந்த
வர்கள் இன்றைக்கு அங்கே இருப்பார்கள். அவர்களுக்கு
நிர்வாகத் திறமை இருக்கும். அவர்களை எல்லாம்
கூட பயன்படுத்திக்கொள்வதற்கு இடம் இருக்கிறது என்கிற
போது மகிழ்ச்சியாக இருக்கிறது. அது நடைமுறைப்படுத்தப்
படும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. ஏனென்றால்
உங்களுடைய உள்ளத்திலே அந்த எண்ணம் எழுந்தது என்றால்
அதை....

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறங்காவலர் குழுவிலோ, திருப்பணிக் குழுவிலோ சிலரை நியமிக்கிறோம் என்று சொன்னால் அதற்கு சில அடிப்படைத் தகுதிகள் இருக்கிறதா என்பதைத்தான் பொதுவாகப் பார்க்கிறோம். எனவே ஒருவர் சட்டமன்ற உறுப்பினர் என்ற தகுதியின் அடிப்படையில் மட்டுமே மாவட்ட குழுக்களிலோ, அறங்காவலர் குழுவிலோ, திருப்பணிக் குழுவிலோ இடம் பெற வேண்டும் என்று நினைப்பது அவ்வளவு சரியாக இருக்காது என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் இந்தக் குழுக்களிலே இடம் பெற வேண்டுமென்றால் முதலிலே அவர்களுக்கு உண்மையான தெய்வ நம்பிக்கை இருக்க வேண்டும். தெய்வ பக்தி இருக்க வேண்டும். கோயில்களிலும், அவற்றின் பராமரிப்பிலும் உண்மையான ஈடுபாடும், ஆர்வமும் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆகமக் கல்லூரி நீங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னதை நான் வரவேற்று ஒரு கட்டுரை கூட எழுதியிருந்தேன். அது உங்களுடைய பார்வைக்கு வருவதற்கு வாய்ப்பில்லாமல் இருந்திருக்கும். ஆனாலும் பழங்கால ரிப்போர்ட்களை எடுத்துப் பார்க்கிறபோது ஆகமக் கல்லூரி அமைக்க வேண்டும் என்பதை எல்லோரும் ஆதரித்து இருக்கிறார்கள். 1982-ல் நீதிபதி மகாராஜன் அவர்கள் கொடுத்திருக்கிற அந்த அறிக்கையிலே ஆகமக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே ஆகமக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்வது எடுத்தேன், கவிழ்த்தேன் என்று எடுத்த முடிவல்ல. பலபேர் விரும்புகின்ற ஒரு முடிவைத்தான் இந்த அரசு எடுத்து இருக்கிறது என்ற சொல்கிற வகையில்தான் ஆகமக் கல்லூரி வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது ஆகமக் கல்லூரியில் ஆகமப் பாடங்கள் நடைபெறவில்லையா என்றால் நடைபெறுகின்றன. அங்கே 149 மாணவர்கள் இருக்கிறார்கள். இந்த 149 மாணவர்களை ஆகமத்திலே பயிற்றுவிப்பவர்கள் யார் என்றால் மடங்கள் பயிற்றுவிக்கின்றன; கோயில்கள் பயிற்றுவிக்கின்றன. இந்த 149 மாணவர்களை ஒரு தடவை எடுத்தால் 5 ஆண்டுகளுக்குப் பிறகுதான் வேறு மாணவர்களை எடுப்பார்கள். இந்த 149 பேரோடு இவர்கள் இந்தப் பயிற்சியை கொடுத்து முடிப்பார்கள். 5 ஆண்டுகளுக்குப் பிறகுதான் மீண்டும் ஒரு 149. ஆனால் இருக்கின்ற கோயில்கள் எத்தனை என்று சொன்னால் 35,000 கோயில்கள் இருக்கின்றன. அதை நினைத்துப் பார்க்கிறபோது ஆகமக் கல்லூரிகள் தேவை என்ற அடிப்படையை நாங்கள்



வரவேற்கிறோம் என்பதற்காகச் சொல்கிறோம். இதிலே ஒரு செய்தி என்ன என்றால் நீதிபதி மகாராஜன்குழு 1982ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27 ஆம் தேதி கொடுத்திருக்கிற அருமையான ரிப்போர்ட்டிலே என்ன சொல்கிறார்கள் என்றால், ஜாதி, இன, பாகுபாடு பார்க்காமல் ஆகமத்தில் பயிற்றுவிக்கப்படுபவர்கள் அத்தனை பேரும் ஆண்டவனுடைய அர்ச்சகர்களாக ஆகலாம். அது இதுவரையில் இல்லாத ஒன்றல்ல.

சிதம்பரத்தில் தீட்சிதர்தான் இருக்கிறார். நெல்லை ராசவல்லிபுரத்திலே முதலியார் பூஜை செய்கிறார். குரங்கணியிலே நாடார், உவரியிலே தேசிகர், பெங்களூரிலே ஹரிஜன், கள்ளன் குறிச்சியிலே வன்னியன். கள்ளக்குறிச்சி அல்ல. அது திருச்சிக்குப் பக்கத்திலே இருக்கிறது. இது கள்ளன்குறிச்சி. திருச்செந்தூரிலே நம்பூதிரியும், குடகிலே இருந்து வந்தவர்களும் பூஜை செய்கிறார்கள். பழனி இருக்கிறதே, அந்தப் பழனி ஆண்டவர் கோயிலிலே 1244-ஆம் ஆண்டுவரை பண்டாரம்தான் பூஜை செய்தார். இப்போது சிவாச்சாரியார். திருவேற்காடு என்ற அந்த பிரபலமான கோயிலிலே இப்போதுதான் சிவாச்சாரியார் பூஜை செய்கிறார்களே தவிர இதுவரை கிராமணியார்களும், ஹரிஜனங்களும்தான் பூஜை செய்து கொண்டிருந்தார்கள். குமரியிலே போற்றி—ஏற்கனவே நான் சொன்னேன். திருவாச்சூரிலே உடையார், பல காமாட்சியம்மன் கோயில்களிலே விஸ்வகர்மாக்கள், பெரியபாளையத்திலே உள்ள பவானியம்மன் கோயிலிலே நாயக்கர். மேல்மருவத்தூரிலே எல்லா பெண்களுமே : எந்த வேறுபாடும் இல்லாமல் எல்லா பெண்களுமே ஆதிபராசக்தி கோயிலிலே வழிபாடு செய்யலாம் என்று இருக்கிறது. இது ஏற்கனவே இருக்கிறது. இது நம்முடைய நாட்டிலே இருக்கிற பழக்கம்தான். அந்தப் பழக்கம் இருக்கிற காரணத்தாலே ஹரிஜன் என்றெல்லாம் வேறுபாடு பார்க்காமல் அத்தனை பேருக்கும் ஆகமப் பயிற்சியைக் கொடுத்து, ஆகமப் பயிற்சியை யார், யாருக்கெல்லாம் கொடுக்கிறோமோ அவர்களை எல்லாம், ஆகமப் பயிற்சி கொடுக்கப்பட்டவர்களை எல்லாம் கோயில்களிலே அர்ச்சகர் ஆக்கலாம் என்று அவர்கள் உங்களுக்கு சிபாரிசு செய்திருக்கிறார்கள்.

கிருஷ்ணசாமி ரெட்டியார் குழு ரிப்போர்ட் உங்களுக்கு வந்ததா என்பது எனக்குத் தெரியவில்லை. அதை நான் பார்க்கிற வாய்ப்பு கிடைக்கவில்லை. ஏனென்றால் லைப்ரரியிலே அது இல்லை. இங்கே வைக்கப்படவும் இல்லை. வைத்தால் அந்தப் பார்ப்பதற்கு வாய்ப்பு இருக்கும். ஆனால் மகாராஜன் குழு ரிப்போர்ட்டிலே இவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

இதற்குமேல் ஒன்றே ஒன்று. தமிழிலே வழிபாடு வேண்டுமென்று அவர் கேட்டிருக்கிறார். தமிழிலே வழிபாடு வேண்டும் என்று கேட்பதற்குரிய காரணம் வடமொழி மீது இருக்கின்ற வெறுப்பால் அல்ல. ஆகமங்கள் முதலிலே தமிழிலே வந்தன என்பதற்கு ஏராளமான சான்றுகளை அவர் சொல்கிறார். சங்ககாலத்திலேயிருந்து தமிழிலே மந்திரங்களே சொல்லப் பட்டன என்று சொல்கின்ற ஆதாரங்களை எல்லாம் சொல்லி, தமிழிலே சொல்வதன் மூலம், அந்த அர்ச்சனை என்று சொல்கின்ற வேண்டுதலைச் சொல்வதன் மூலம், அவன் உள்ளம் ஒன்றிப்போவான். பக்தி வளரும், அந்த கலாச் சாரம் ஓங்கும். கோயில்களைப் பாதுகாப்பதற்கு பாமர மக்களே துடித்தெழுந்திருப்பார்கள். அந்த சூழ்நிலை உருவாக வேண்டும் என்று சொல்கின்றார்கள். அந்த சூழ்நிலையைத் தமிழகத்திலே உருவாக்குவதற்கு முதல்வர் அவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே சபாநாயகர் அவர்களே, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

முற்பகல் 11.35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. சி. இராமசுவாமி. (குறுக்கீடு) டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைற தலைவர் அவர்களே, அவினாசியிலுள்ள பிரசித்திபெற் அவினாசி லிங்கேஸ்வரர் திருத்தேரை கொடுமையாளர்கள் கொளுத்தி விட்டது நாம் எல்லோரும் அறிந்ததே. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்த இந்த கொடுமைக்கு முடிவு கட்டுகின்ற அளவில், ' பாதையில் முல்லைக்கு திருத்தேர் ஈந்த பாரியைப் போல......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள், அவர் பேசியதில் விளக்கம் தான் கேட்கலாம். நீங்கள் இதை பேசும்போது கிளப்பலாம்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 2½ லட்சம் கொடுத்து அந்த கோடிக் கணக்கான பக்தர்களின் மனதிலே பால்வார்த்த இறையுள்ளம் கொண்ட எங்கள் தங்கத் தலைவி அவர்களுக்கு அவினாசி மக்கள் சார்பாக நன்றி தெரிவிக்கிறேன். ஆகம வளர்ச்சியை இன்றைக்கு அளித்து, அந்த பயிற்சிக்குரிய பத்திரங்களை கொடுக்கின்ற ஒரு நல்ல விழாவிலே நான் கலந்துகொண்டேன். அதிலே அனைத்து மதத்தினருக்கும் ஜாதி வேறுபாடு இன்றி கொடுக்கப் பட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.





ஆகமப்பயிற்சி அளித்ததாலும், திருத்தேருக்கு கொடை வள்ளலாக கொடுத்ததாலும் எங்கள் அவினாசித் தொகுதியை பின் தங்கிய பகுதியாக அறிவித்ததாலும் அம்மா அவர்கள் சொன்ன சொல்லை காப்பாற்றி விட்டதற்காக என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி. திரு. சி. இராமசுவாமி.

*திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிபராசக்தியின் அவதாரம், அஷ்டலட்சுமியின் திரு உருவம், தர்ம தேவதை, உன்னதத் தாய், சத்தியத் தாய், தெய்வத் தாய், அன்னை சந்தியா ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் விழுந்து வணங்கி இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் மானியக் கோரிக்கையின் மீது பேச விழைகிறேன்.

வள்ளுவனை உலகினுக்குத் தந்து வான்புகழ் கொண்டது தமிழ்நாடு. தமிழ்நாடு இன்னொரு பெருமையையும் பெற்றுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்களை, தமிழகத்தின் முதல்வராக தந்து, வான்புகழ் கொண்டுள்ளது தமிழ்நாடு.

அரிது, அரிது, மானிடராய் பிறத்தல் அரிது. மானிடப் பிறவி என்பது, மிக அரிதான பிறவி. அதிலும் கூன், குருடு, செவிடு எல்லாம் நீங்கிப் பிறத்தல் அரிது. அதிலே ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது. இதைவிட, தானமும் ஈகையுணர்வும் பெற்று இருப்பது அதைவிட அரிது அரிது. எனவே, அத்தனை குணங்களையும் ஒருங்கே பெற்றுள்ள அஷ்டலட்சுமியின் அவதாரம் ஆகிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைத் தமிழகத்திற்கு தந்த தமிழ்நாடு மாபெரும் புகழைப் பெற்று உள்ளது என்று கூறுகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் எத்தனையோ முதல்வர்கள் இருக்கின்றார்கள். எந்த ஒரு முதல்வரும் செய்யாததை, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தி புரட்சி செய்து வருகிறார்கள். அவர் வகித்து வரும் இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகத் துறையில் மிகப்பெரிய மாறுதலை செய்துள்ளார்கள்.

[திரு. சி. இராமசுவாமி] [1992 ஏப்ரல் 9

1959-ஆம் ஆண்டு இந்து - சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யப்பட்டு மாநில அளவில் ''ஆலய நிர்வாக வாரியம்'' மாவட்ட அளவில் மாவட்ட குழுக்கள் என்ற இரட்டை அடுக்கு அமைப்புமுறை எற்படுத்தி இருப்பதைப் பாராட்டுகிறேன். மேற்படி திருத்தங்கள் 13–12–1991 முதல் செயலுக்கு வந்ததை பாராட்டுகிறேன். இந்து-சமய அறக்கட்டளைகள் சட்டத்திற்கு 13–12–1991-ம் நாளிலிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்ட திருத்தங்களின் காரணமாக பல மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. ஆலயங்கள் மற்றும் ஏனைய சமய நிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாகம் முழுவதும் சீரமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் ஆலய நிர்வாக வாரியமும், மாவட்ட அளவில் 17 மாவட்டக் குழுவும் செயல்படுவதைப் பாராட்டுகிறேன். அனைத்துத் துறை அலுவலர்களைப் போல திருக்கோவில்களில் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு பணி மாறுதல் (Transfer) செய்ய சட்ட வரை கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல கோவில்களில் விமானம், கோபுரம் போன்றவைகளில் ஆலமரம், அரச மரம் ஆகியவை முளைத்து கோவில்கள் சேதப்பட்டு இருக்கின்றன. இதை அழிக்க ஆசிட் போன்ற திரவத்தைப் போட்டு அழித்து கோயில்களைப் பராமரிப்பு வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-40

பல அர்ச்சகர்களுக்கு சம்பளம் கொடுபடாமல் இருப்பதாக சிலர் கூறினார்கள். அதை வழங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை கேட்டுக் கொள்கிறேன். திருக்கோயில்களில் உள்ள தேர்கள் வருடா வருடம் ஓட ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக முதல்வர் அவர்கள் அறநிலையத் துறையைப் பொறுப்பேற்றது, அந்த அறநிலையத் துறைக்கு பேரும் புகழும் ஆகும். ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1 லட்சமும் அதற்கு மேற்பட்டும் வருமானமுடைய ஆலயங்களின் அறங்காவலர்கள் குழுக்களை ஆலய நிர்வாக வாரியம் அமைத்திருப்பதைப் பாராட்டுகிறேன். ஆண்டு வருமானம் ரூபாய் 1 லட்சத்திற்கும் குறைவாக உடைய ஆலயங்களின் அறங்காவலர்கள் குழுக்களை மாவட்ட குழுக்கள் அமைக்கும் என்பதை வரவேற்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறநிலையத் துறைக்கு



1992 ஏப்ரல் 9] [திரு. சி. இராமசுவாமி]

1990–91–ஆம் ஆண்டில் 19 ஆலயங்களின் திருப்பணிக்காக ரூ. 89.20 லட்சமும், 1991–92–ஆம் ஆண்டிற்கு 10 ஆலயங்களின் திருப்பணிக்காக ரூ. 44.05 லட்சமும் வழங்கியதைப் பாராட்டுகிறேன்.

நிதி வசதியில்லாத, நிதிவசதி தேவையுள்ள ஆலயங்களுக்கு திருப்பணி செய்ய நிதி உதவி செய்வதையும் பாராட்டுகிறேன். 5–8–1991 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி ஏற்படுத்தியிருப்பதைப் பாராட்டுகிறேன். இம் மாநிலத்தில் உள்ள கோயில்களின் நிர்வாகத்தில் சிறப்பு கவனம் செலுத்தும் இந்த அரசின் சீரிய முயற்சியை நான் பாராட்டுகிறேன்.

ஆலயங்களுக்கு தரிசனத்திற்கு வரும் பக்தர்களுக்கு தங்க வசதியாக குடில்கள், ஓய்வு விடுதிகள், தனி நபர் அறைகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன். மொத்தத்தில் 14 ஆலயங்களுக்கு 58 பயணியர் ஓய்வு விடுதிகளும், 231 குடில்கள் மற்றும் 951 தனி நபர் அறைகள் கட்டியிருப்பதை வரவேற்கிறேன். ஆலயங்களில் இறைவனுக்கு செய்யப்பட்ட பிரசாதத்தை இலவசமாக பக்தர்களுக்கு வழங்குவதை பாராட்டுகிறேன்.

என்னுடைய தொகுதியான சங்கராபுரம் தொகுதியில் ராவுத்தநல்லூரில் புகழ் பெற்ற ஆஞ்சநேயர் கோயில் இருக்கிறது. அது ராவுத்தநல்லூர் என்ற ஊரிலே இருக்கிறது. அந்தக் கோயிலை நல்லமுறையில் பராமரித்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியில் மோ. வன்னஞ்சூர் திரௌபதி அம்மன் கோயில் பாழ்பட்டு கிடக்கிறது. அந்தக் கோயிலை நல்ல முறையில் பழுது பார்த்து திருப்பணி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் சுப்பிரமணிய சுவாமி கோயில் சங்கராபுரத்தில் இருக்கிறது. அது சரியான முறையில் இல்லாமல் பாழடைந்து இருக்கிறது. மேற்படி கோயிலைப் புதுப்பித்து திருப்பணி செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ராவுத்தநல்லூர் ஆஞ்சநேயர் கோயில் புகழ்பெற்ற கோயில். அங்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வருகிறார்கள். எனவே, அந்தக் கோயிலை நன்றாக சீரமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 12 மீதான விவாதத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு அளித்ததற்காக என்னுடைய நன்றியை கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்றிருக்கின்ற துறையில் தந்திருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளின் அடிப்படையில் சில புள்ளிவிவரங்களையும் எனக்கு வந்திருக்கின்ற சில தகவல்களையும் இங்கே எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 35,299 கோயில்கள் இந்தத் துறையில் இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். 328 கோயில்கள்தான் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள கோயில்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 34,800-க்கும் அதிகமான கோயில்கள் வருமானத்தில் மிகவும் பின்தங்கிய சூழ்நிலையில் இருப்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதைப்போல இதிலே பணியாற்றுகின்ற பணியாளர்களுடைய எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது 49,713 பேர் கோயில்களில் பணியாற்றுகிறார்கள் என்றும் அதிலே 4,166 பேர்தான் அரசினுடைய பணியாளர்களாக மாதச் சம்பளம் வாங்குகிறார்கள் என்றும் பாக்கி உள்ளவர்களைப் பார்க்கின்றபோது மாதம் 10 ரூபாய், 20 ரூபாய், 300 ரூபாய் என்ற விகிதத்தில் சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையையும் உங்களுடைய கவனத்திற்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கோயில் நிர்வாகத்தின் கீழ் மாத்திரம் கிட்டத்தட்ட 4,91,417 ஏக்கர் நிலம் இருப்பதாகவும், 20,530 வீடுகள் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். கட்டிடங்கள் 22,629 இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வீட்டு மனைகள் 73,320 இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி வருமானம் வருகிற நேரத்தில் கூட, அவற்றிலே பணியாற்றும் அர்ச்சகர்களுக்கு மாதம் 300 ரூபாய்கூட கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறதென்று சொன்னால், நம்முடைய கோயில்களின் வருமானங்கள் எங்கே சென்று கொண்டிருக்கின்றன என்பதைக் கண்டறிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவில் நிலங்களைக் கையகப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறவர்களிடமிருந்து அந்த நிலங்களை மீண்டும் பெற வேண்டும். இதிலே கூட 10,077 வழக்குகள் இன்றைக்கு நீதி மன்றங்களிலே





இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை திரும்ப எடுப்பதற்கு, உடனடியாக அவற்றுக்கான நீதி மன்றங்களை அமைத்து, அந்த வழக்குகளை எல்லாம் பைசல் செய்ய வேண்டும். இன்றைக்கு நிதி நெருக்கடியில் இருக்கிற காரணத்தால் தான் நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், இதன்மூலம் வருகின்ற வருமானத்தைப் பெறுவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-45

அடுத்து, மாண்புமிகு முதலமைச்சருடைய தலைமையின் கீழே ஆலயத் திருப்பணிகளைச் செய்வதற்கு நன்கொடைகள் மூலமாக கிட்டத்தட்ட 3 கோடியே 72 இலட்சம் ரூபாய் பெற்றிருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக நான் உங்களிடம் கேட்டுக் கொள்வதெல்லாம், நீங்கள் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது, எந்தெந்த ஸ்தாபனங்களிலிருந்து எவ்வளவு நன்கொடைகள் கொடுக்கப்பட்டதென்ற விவரத்தை நீங்கள் வெளிப்படுத்துவீர்கள் என்று சொன்னால், இன்னும் பலர் நன்கொடை கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள், அவர்களும் நன்கொடை வழங்க முன்வரக்கூடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''முதலமைச்சரின் கோவில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்கு'' பெரிய ஸ்தாபனங்களிலிருந்தும், வேறு இடங்களிலிருந்தும் நன்கொடைகள் கொடுக்கப்படும்போது ஒவ்வொரு முறையும் அதனுடைய புகைப்படம் பத்திரிகைகளிலே வெளியிடப்பட்டிருக்கிறது. யார் கொடுத்தார்கள், எவ்வளவு கொடுத்தார்கள் என்ற முழு விவரங்கள் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வெளி வந்துகொண்டுதான் இருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. அதைவிட, ஒரு மாதத்திற்கு, இரண்டு மாதத்திற்கு ஒரு முறை பத்திரிகைகளிலே, எந்தெந்த நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட தொகை எவ்வளவு என்ற விவரத்தைத் தருவார்கள் என்று சொன்னால் அது மக்களுக்கு சிறப்பாகத் தெரியும். இவ்வளவு இலட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார்கள்,

இந்த தனவான்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்று தருவதற்கான சாத்தியக்கூறு உண்டு. எனவேதான் அதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். முடிந்தால் எவ்வளவு எவ்வளவு ரூபாய் தந்திருக்கிறார்கள் என்பதை வெளியிடுவதால் அதில் தவறு இருக்க முடியாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. முடிந்தால் நீங்கள் அதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ், முதலமைச்சரவர்கள் யார் யார், எவ்வளவு எவ்வளவு கொடுத்தார்கள் என்று கொடுத்த அன்றே புகைப்படத்தோடு செய்தி வந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : அதைத் தொகுத்துத் தருவதில் தவறில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரின் கோவில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்கு யார் யார் நன்கொடைகள் கொடுத்தாலும் வங்கிக் காசோலைகள் மூலமாகவோ அல்லது டிமான்ட் டிராப்ட் மூலமாகவோதான் கொடுக்கிறார்கள். சில பேர்கள் ரொக்கமாகக் கொடுத்தாலும் அது உடனடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது. எனவே இந்த நிதியைப் பொறுத்தவரையில் இதில் எந்த விதமான ஒளிவு மறைவும் இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெளிவாக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் விரும்புவார்களேயானால் அதற்கான ஒரு புத்தகத்தை வெளியிடுவதற்கும், பேம்ப்லெட்டை வெளியிடுவதற்கும் அரசுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. நிச்சயமாக அதை வெளியிடுவோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி.

அடுத்தபடியாக கோவில் நிர்வாகத்தைப் பொறுத்தவரைக்கும் சில புள்ளி விவரங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு கடந்த 34 ஆண்டுகளாக, அறநிலைத் துறைக்கு பணம் வழங்காத சூழ்நிலையில், புதிதாகப்



பொறுப்பேற்றுள்ள அரசு சுமார் 10 இலட்சம் ரூபாயை இந்த ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை மனமுவந்து பாராட்டுகிறேன். எங்களுடைய மாவட்டத்திற்கு இன்னும் அதிகமாக ஒதுக்கீடுகளை நீங்கள் செய்ய வேண்டும். மாண்புமிகு முதலமைச்சரவர்களின் நேரடிப் பார்வையில் கோவில் பராமரிப்புத் துறை இருக்கிற காரணத்தால், 34 ஆண்டுகளாக அந்தத் துறை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும் போது, கோவில் பராமரிப்புத் துறை மாத்திரமல்ல, எல்லா துறைகளிலும் அந்த மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. எனவே அதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சில கருத்துக்களை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். பெரியார் மாவட்டத்தில் கோபிச்செட்டிப்பாளையம் பகுதியில் சவந்தப்பூர் அருள்மிகு செல்லியாண்டி அம்மன் கோவில் என்று ஒரு கோவில் இருக்கிறது. அங்கே அந்தக் கோயிலுக்குச் சொந்தமான ஆண்டிக்கோட்டையில் சர்வே எண். 412/1-ல் 8 ஏக்கர் நிலம் இருப்பதாகவும், அதை 1988–லே ஒரு நபருக்கு 8 சென்ட் வீதம் 175 பேருக்கு அந்த இடத்தை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதிலே ஒரு நபருக்கு ரூ. 1.25 என்ற வீதத்தில் வாடகை பெற்றுக்கொண்டு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை வேறு. முன்பு யார் யாருக்கு அதை ஒதுக்கினார்களோ அவர்கள் எல்லாம் வேறு வேலைகளின் நிமித்தமாக பல இடங்களுக்கு வெளியூர்களுக்குச் சென்றுவிட்டார்கள். ஆகவே வெளியில் உள்ளவர்கள் பல பேர் இன்றைய தினம் அந்த இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-50

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குறைந்த வாடகையில் விடப்பட்டது என்று சொல்கிறார்களே அது எப்போது விடப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் சொல்லமுடியுமா?

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அந்தப் பகுதியில் மிகப் பெரிய நபராகவும் இருக்கக்கூடிய .................. (குறுக்கீடு)

[1992 ஏப்ரல் 9

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் குறைந்த குத்தகைக்கு எந்த அரசால் விடப்பட்டது? இந்த அரசால் விடப்பட்டதா? முந்தைய அரசால் விடப்பட்டதா? எப்போது விடப்பட்டது என்பதை அவர் விளக்கினால் பொருத்தமாக இருக்கும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் வேறு பிரச்சினைக்குப் போகக்கூடாது.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தமாக மனு என்னிட இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிட கொடுத்துவிடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர். அவர் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த காலத்திலேதான் 1973 ஆம் ஆண்டு அந்த ஆக்கிரமிப்பை அங்கே செய்தார்கள். அதிலே ஏறத்தாழ 15 ஆண்டுக் காலம் அங்கே குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தான் அந்த ரூ. 1.25 விதிக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்னதற்கு நன்றி. நான் இல்லையென்று சொல்லவில்லை. நானும் இந்த அரசைச் சொல்லவில்லையே (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இத்தகைய தவறுகள் நிகழ்ந்தவைகள் எந்த அரசில் நிகழ்ந்தவை என்று குறிப்பிடாததால் தேவையற்ற சந்தேகங்கள் எழுகின்றன. எனவே அதைத் தெளிவுபடுத்தி அவர் பேசினால் பொருத்தமாக இருக்கும். நன்றாக இருக்கும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975 என்று சொன்னால் அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா தி.மு.க. வும் ஒன்றாக................(குறுக்கீடு)



1992 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ், எதுவும் விவரம் தெரியாமல் இங்கே வந்து பேசிக் கொண்டிருக்கக்கூடாது. எந்த விவரமும் தெரியாமல் இப்படி நேரத்தை வீணடிக்கிறீர்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை இதைப் போலத் தான் திராவிடக் முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், ஜனதா கட்சியும், காங்கிரஸ் கட்சியும் எப்போது எப்போது உடன்பாடு வைத்திருந்தன என்றெல்லாம் தெரியாமல் பலமுறை இப்படி சொல்லியிருக்கிறார், அதை நாங்கள் மறுத்து இருக்கிறோம், மீண்டும் மீண்டும் ஏன் இப்படிச் சொல்கிறார் என்று தெரியவில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் சொன்னது சரிதான், (சிரிப்பு) 1972-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்தது, இடைப்பட்ட காலத்தில் தான் 1972-ல்—(குறுக்கீடு) எம்.ஜி. ஆர். பிரிந்து சென்ற போது (குறுக்கீடு) சும்மா இருங்கள் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் 1972-க்கும் 1975-க்கும் வித்தியாசம் தெரியாமல் பேசிக் கொண்டிருந்தால் நான் என்ன செய்வது ?

டாக்டர் தே. குமாரதாஸ் : தி.மு.க.விலிருந்து எம்.ஜி.ஆர். பிரிந்து சென்ற ஆண்டு அது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர்,

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது, 1973 ஆம் ஆண்டு அப்படி கொடுக்கப்பட்டதாகச் சொன்னார். இவர் அதை 1975 என்று மாற்றிக்கொண்டு. 1975-லே எல்லோரும் ஒன்றாகத்தான் இருந்தார்கள் என்று சொல்லி அதை மீண்டும் மாற்றிக் கொண்டு இப்போது 1972-லே என்று சொல்கிறார். இதில் எது சரி? நேரடியாகக் கேள்வி கேட்கும் போது நேரடியாகவே பதில் சொல்ல வேண்டும். பின்னால் வருகிறேன், பின்னால் சொல்கிறேன் என்று சொல்வது சரியல்ல. நடந்தவைகளை மிகத் தெளிவாகச் சொல்ல வேண்டும், 1972 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எம் ஜி.ஆர். அவர்கள் தி.மு.க. விலிருந்து வெளியேற்றப்பட்டார், 1973-லேதான் அந்த இடம் ஒதுக்கப்பட்டதாக போக்குவரத்து அமைச்சர் சொல்கிறார், எனவே மாற்றி மாற்றி பேசுவது முறையல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்,

மாண்புமிகு திரு. எஸ்.. டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972லே பிரிந்தாலும் நாங்கள் எப்போது பிரிந்தோம் என்றால், அண்ணா அவர்கள் மறைந்ததிலிருந்தே பிரிந்து விட்டோம் என்றுதான் அர்த்தம். முதலமைச்சர் ஆக கருணாநிதி அவர்கள் இருந்தவரையிலும் என்னென்ன செய்தார்கள் என்பதை எப்போதும் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறோம்.

முற்பகல் 11—55

அண்ணா இறந்ததிலிருந்து நாங்கள் பிரிகிற வரையிலும் கருணாநிதி அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை புத்தகமாகப் போட்டு, அது மட்டுமல்லாமல் குடியரசுத் தலைவர் இடத்திலேயும், இந்திரா காந்தியிடத்திலேயும் பல புத்தகங்களைக் கொடுத்திருக்கிறோம். அப்படி கொடுக்கப்பட்ட புகார், ஆயிரக்கணக்கான புகார் கொடுக்கிறபோது எல்லா புகார்களையும் சொல்ல முடியாவிட்டாலும் 35,36 புகார்களை சொல்லியிருக்கிறோம். இது சொல்லக் கூடாத புகாராக இருந்திருக்கலாம். இதற்கு முன்பாக இருந்திருந்தால், அதற்கு பின்பு என்றால் நாங்கள் வெளியே வந்திருப்போம், ஆனால் நாங்கள் உள்ளே இருக்கிறபோதே அவர் தவறு செய்தார் என்பதற்காகத்தானே வெளியே வந்திருக்கிறோம் ? உள்ளே இருக்கிறபோது அவர் தவறு செய்தார் என்பதற்காகத்தான் வெளியே வந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வளவு விளக்க வேண்டியதில்லை. அவர் எழுபத்திரண்டா, எழுபத்தி மூன்றா, ஏழுபத்தி ஐந்தா என்று எல்லாவற்றையும் சேர்த்துக் குழப்புகிறார். நீங்கள் அவருக்கு மேற்கொண்டு விளக்கம் சொல்ல வேண்டியதில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர். ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் நிலங்களும். சொத்துக்களும் குறைந்த குத்தகையில் கொடுத்ததை சரி செய்வதற்காகத்தான் இந்த அரசு பல புதிய கொள்கை முடிவுகளை எடுத்திருக்கிறது. எனவே இந்த அரசு அத்தகைய தவறுகளை செய்யவில்லை. முந்தைய அரசு செய்த தவறுகளை திருத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). என்ன கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை என்னுடைய பதிலுரையில் தெளிவாக்க



இருக்கிறேன். எனவே, யாருடைய ஆட்சிக் காலத்தில் கோவில் நிலங்களோ, சொத்துக்களோ குறைந்த குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தாலும் அவற்றையெல்லாம் சரி செய்ய இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே நிமிடத்திலே முடிக்க வேண்டும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : 1972ஆம் ஆண்டுதான் நடைபெற்றது இந்த முறைகேடு, இங்கே எல்லோருமாகச் சேர்ந்து சொன்ன குற்றச்சாட்டுகளுக்கு நான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர். குமாரதாஸ். இது சம்பந்தப்பட்ட ஊரைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1973 என்று சொல்லுகிறார். நீங்கள் ஒரு காகிதத்தை வைத்துக் கொண்டு 1972 என்று சொன்னால் எப்படி? மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. யார் வேண்டுமானாலும் டைப் அடித்து இது போன்று கொடுத்துவிடலாம். 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம், வெள்ளம் ஏற்பட்ட நேரத்தில் குடியேறினார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. 1973-தான்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவ்ர் அவர்களே, .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் முடிக்கட்டும் உட்காருங்கள்,

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே. எனக்கு ஒரு கிளாரிபிகேஷன், உங்களிடம் கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. எஸ். ஆசைமணி, (குறுக்கீடு) திரு. குமாரதாஸ் உட்காருங்கள். நேரம் இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. எஸ். ஆசைமணி.

டாக்டர் தே. குமாரதாஸ் : ஆதாரத்தோடு பேச வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். ஆதாரத்தோடு . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஆதாரம் தவறு என்று வருகிறபோது, (குறுக்கீடு) அந்த ஊரின் அமைச்சர் சொல்வதை விட என்ன ஆதாரம் வேண்டும்? (குறுக்கீடு)

டாக்டர் குமாரதாஸ் ஏதோ ஒரு பேப்பரை வைத்துக்கொண்டு பேசினால் இது ஆதாரமாகாது. ஆதாரம் என்றால் என்னிடம் காண்பித்திருக்க வேண்டும். நீங்கள் இப்படிப்பட்ட ஆதாரத்தை காண்பிப்பதாக இருந்தால், என்னிடம் அதைக் காண்பித்திருக்க வேண்டும். ஆதாரம் இல்லாத காரணத்தால்தான் நீங்களே என்னிடம் காண்பித்து அனுமதியை வாங்கவில்லை. எனவே உட்காரவும். திரு. எஸ். ஆசைமணி பேசுகிறார். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் உட்கார வேண்டும். திரு. எஸ். ஆசைமணி. டாக்டர். குமாரதாஸ், ஆசைமணி பேசுகிறார். (குறுக்கீடு) நீங்கள் இடையூறு செய்யக்கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் பேசுகின்றபோது, கோவில் நிலங்கள் குறைந்த குத்தகையில் விடப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். அதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் உறுதி செய்தார்கள். எனவே அத்தகைய தவறு நிகழ்ந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனை சரி செய்ய இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று நான் ஏற்கெனவே உறுதி கூறிவிட்டேன், (மேசையைத் தட்டும் ஒலி), அதன் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அதைப் பற்றியே ஏன் திரும்பத் திரும்ப பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்பது தான் புரியவில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே சில விவரங்களைச் சொல்லியாக வேண்டும். காரணம் என்னவென்று சொன்னால், இங்கே மரியாதைக்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எல்லாம் இங்கே குமாரதாஸ் விவரம் தெரியாமல் பேசுகிறார் என்ற விதத்தில் பேசுகிறார்கள். அப்படி அல்ல. 1972-லே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகின்றபோது மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலேதான் இருந்தார். அதற்குப் பிறகுதான் அவர்கள் பிரிந்து சென்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு வருவாய்த் துறை அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) உட்காருங்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே ஒரே ஒரு சின்ன விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1972-க்கு முன்னாலே தி.மு.க.விலேதான் இருந்தார். ஆனால் தி.மு.க.வினுடைய நடவடிக்கைகள் பிடிக்காத காரணத்தால்



தான் அந்த கட்சியை விட்டே அவர் நீக்கப்பட்டார். அதை எல்லாம் தட்டிக்கேட்ட காரணத்தால்தான் நீக்கப்பட்டார். இப்போது அவர் சொல்லுவதைப் பார்த்தால், ஏதோ கருணாநிதி தவறே செய்யவில்லை. எம்.ஜி.ஆர். அன்றைக்கு செய்யச் சொன்னதைப் போல பேசிக் கொண்டிருக்கிறார். உங்களோடு உடன்பாடு இருக்கின்ற காரணத்தால் இவ்வளவு தூரம் காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை. 1972-லே முதலமைச்சராக இருந்தபோது கருணாநிதி என்ன செய்திருந்தாலும், யார் சொல்லி செய்திருந்தாலும், கருணாநிதி செய்த தவறே ஒழிய வேறு யாரும் காரணமாக இருக்க முடியாது. புரட்சித் தலைவர் அங்கேயிருந்து நீக்கப்பட்டதற்கு காரணம், கருணாநிதி இப்படிப்பட்ட தவறுகளைச் செய்தார் என்று தட்டிக்கேட்ட காரணத்தாலேதான் அவர் நீக்கப்பட்டார் என்பதை நீங்கள் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆசைமணி (குறுக்கீடு). திரு. எஸ். ஆசைமணி பேசுகிறார். டாக்டர் குமாரதாஸ், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதற்கு முதலமைச்சர் பதில் சொல்லிவிட்டார்கள்.

*திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தமிழ்நாட்டின் தனிப் பெரும் தலைவி, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதம் தொட்டு வணங்கி, அவர்தம் பொறுப்பேற்று இருக்கும் இந்து சமய அறநிலையத் துறை மானியத்தின் மீது பேச விழைகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆசைமணி பேசுகிறார். (குறுக்கீடு), டாக்டர் குமாரதாஸ் இப்படி எழுந்து நின்று கொண்டிருப்பது நடவடிக்கைக்கு உரிய குற்றமாகும். உட்காருங்கள். (குறுக்கீடு)

(டாக்டர் தே. குமாரதாஸ் வெளிநடப்புச் செய்தார்)

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் புனிதப் பார்வையிலே இருக்கின்ற காரணத்தினால், அந்தத் துறை தமிழகத்திலே ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கி இருக்கிறது. மறுமலர்ச்சியை உருவாக்கி இருக்கின்ற அதேநேரத்தில், இந்த அரசு தமிழகத்திலே வாழும் எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் அவர்களுடைய தனிப்பட்ட

உரிமைகள் பாதிக்கப்படாத வகையில் அனைத்து சமயத்தைச் சேர்ந்தவர்களையும் சமமாக்கி, மதித்து, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அரசாக விளங்கிக்கொண்டு இருக்கிறது என்பதை இங்கே நான் பெருமையோடு சொல்லி கொள்ள விரும்புகின்றேன்.

"என்னப்பன் அல்லவா, என்தாயுமல்லவா,
பொன்னப்பன் அல்லவா, பொன்னம்பலத்தவா,
உன்திருநடக் கோலத்தைக் காணமுடியாமல்
நந்தி மறைத்து இருக்கிறது."

என்று நந்தன் கேட்ட நேரத்திலேகூட, சிவபெருமான் அவர்கள் நந்தியை நகர்த்தினாரே தவிர, நந்தனை உள்ளே அழைக்கவில்லை என்று புராணங்கள் கூறுகின்றன. ஆனால், இன்று நடமாடும் தெய்வமாக நமக்கெல்லாம் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நந்தன் அவர்தம் பிறந்த இனத்தவர்களையே அர்ச்சகர்களாக்கிட புரட்சித் திட்டம் கொண்டு வந்து இருக்கிறார்கள். ஆகமப் பள்ளிகளை ஆரம்பித்து அந்தப் பள்ளிகளிலே ஆதி திராவிடர்களும் பயிலலாம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து, அதன்மூலம் அந்த குலத்தவர்கள் அர்ச்சகர்கள் ஆகலாம் என்று புரட்சித் தலைவி அவர்கள் புதுமையான திட்டத்தைக் கொண்டு வந்து, தந்தை பெரியார் அவர்களுடைய கனவை இன்றைய தினம் நனவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அறநிலையத் துறை, இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய நிர்வாகத் திறமையோடு பல்வேறு சிறந்த ஆன்மீகத் தத்துவம் வாய்ந்த, சமயப் பற்றுள்ள, தொண்டு மனப்பான்மை கொண்ட, வள்ளல் தன்மை மிகுந்த பெருமக்கள், ஆற்றல் மிக்க, அனுபவம் கொண்ட அதிகாரிகள் ஆகியோரைக் கொண்டிருப்பதால், இன்றைக்கு அறநிலையத் துறையின் நிர்வாகம் கண்டு நல்லவர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். நடுநிலையாளர்கள் வரவேற்றுக் கொண்டு இருக்கிறார்கள். சமயப் பற்றுடையவர்கள் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், சிலருக்கு மட்டும் தான், குறிப்பாக இந்து மதத்தின் காவலர்களைப் போல் நடித்துக் கொண்டிருக்கிற, இந்து மதத்தை தங்கள் தலையிலே சுமந்து கொண்டு இருப்பதாக மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிற ஒரு குறிப்பிட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் புரட்சித் தலைவி அவர்களின் புகழ் கண்டு பொறாமை கொண்டு, எரிச்சலால் உளறிக்கொண்டு இருக்கிறார்கள்.



நடந்து முடிந்த மகாமகத் திருவிழாவிலே சுமார் 25 இலட்சம் மக்கள் கலந்து கொண்டதாக பத்திரிக்கையாளர்களே சொல்கிறார்கள். அந்த விழா புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே, அவர் முதலமைச்சர் பொறுப்பிலே உள்ளபோது நடைபெற்றதைக் கண்டு பொறுக்க முடியாதவர்கள் பதபதைத்து பல்வேறு பொய்யான அறிக்கைகளை விட்டார்கள். இலட்சக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்து விழாவை வெற்றிகரமாக இந்தியாவிலே இதுவரை நடைபெறாத அளவிற்கு, கலங்கரை விளக்காக, காலக் கண்ணாடியாக சிறப்பான முறையிலே விழா நடந்து முடிகின்ற வேளையில் சில விஷமிகள் செய்த வேலையால் நெரிசலில் அகப்பட்ட 48 பேர் இறந்தது துயரமான சம்பவம் என்று நாம் உணர்ந்தாலும், அதையே அரசியல் ஆதாயமாக பல்வேறு இயக்கங்கள் செய்ய முயன்றாலும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தாராள மனப்பான்மையோடு கழக நிதியிலிருந்தும் அரசு நிதியிலிருந்தும் அள்ளித் தந்து, மத்திய அரசின் நிதியையும் சேர்த்து இறந்தவர்கள் குடும்பத்திற்கு இலட்ச ரூபாயை கொடுத்தார்கள். ஆனால் தி.மு.கழகத்தினரும் பாட்டாளி மக்கள் கட்சியினரும், இந்து முன்னணியைச் சேர்ந்தவர்களும் நடந்த சம்பவத்திற்கு அனுதாபம் கூடத் தெரிவிக்காமல், கழக நிதி என்றும் பிறந்த நாள் நிதி என்றும் கொள்ளையடித்து வைத்து இருக்கிறார்களே அதிலிருந்து ஒரு பைசா கூட இறந்தவர்கள் குடும்பத்திற்குத் தராமல் (மேசையை தட்டும் ஒலி), பிணத்தை வைத்துக்கொண்டு அரசியல் ஆதாயம் தேடப் பார்க்கிறார்கள். சாதி சங்கம் அமைத்து வெற்றி காண முடியாதவர்கள், கட்சி என்று பெயர் வைத்து ஏமாற்றப் பார்த்து தோல்வி கண்டவர்கள், இதய தெய்வம் புரட்சி தலைவி அவர்கள் ஆட்சியிலே குறை காண முடியாதவர்கள், வன்னிய இனத்தையே காட்டிக் கொடுத்தவர்கள், பல்வேறு சமுதாய மக்களும் வன்னியர் என்றாலே எரிச்சல்படுகின்ற அளவிற்கு அந்த இனத்தையே படுபாதாளத்தில் தள்ளியவர்கள், வரலாற்றிலே இடம் பெற்றிருந்த வன்னிய மக்களுக்குத் தீராத துரோகத்தை செய்தவர்கள், இனத்தையே பிடுங்கித் தின்னும் பிணம்தின்னி கழுகுகள் வேறு வழியே இல்லாமல் மேடைக்கு மேடை மகாமகம் பற்றிபேசிக்கொண்டு இருந்தாலும் மக்கள்அவர்களை அடையாளம் கண்டுகொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

பல நூற்றுக் கணக்கான கோயில்களிலே திருப்பணி செய்ய வேண்டும், குடமுழுக்கு நடத்த வேண்டும், அதன்மூலம் பொது மக்களிடையே புது விழிப்புணர்ச்சியும் ஆர்வமும் ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தில் திருக்கோயில் நிர்வாக வாரியம்

அமைத்து, அதன் தலைமையேற்று, அதில் பல்வேறு சமயத் தலைவர்களையும், ஆன்மீகப் பெரியவர்களையும் இடம்பெறச் செய்து அதன்மூலம் தமிழ்நாடு முழுவதும் மாவட்டம் தோறும் மொத்தமாக 17 குழுக்களை அமைத்து அதிலே ஒரு குழுவிற்கு என்னையும் தலைவராக நியமித்துள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த நல்ல வேளையிலே எனது நெஞ்சார்ந்த நன்றியினை அவர்தம் பொற்பாதங்களிலே காணிக்கையாக்கி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உணர்வுகள் பொய்யாகாத வகையில் நாங்கள் அத்தனைபேரும் எங்களை தலைவர்களாக, உறுப்பினர்களாக நியமித்த ஆலய நிர்வாக வாரியத்தினுடைய கருத்துகளைச் செயலாக்குவோம் என்ற உறுதியினைத் தந்து, நமது மாநிலத்தில் இந்து அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு சமய நிறுவனங்களில் பணியாற்றுகிற சுமார் 50,000 ஊழியர்கள் சம்பளத்தையும், படியையும் நிர்ணயம் செய்து, அவர்கள் பணியாற்றும்போது இறந்தால் 10,000 ரூபாய் வழங்கப்படும் என்று இருந்ததை மாற்றி, 20,000 ரூபாயாக உயர்த்தி, தன் வாழ்நாள் பூராவும் 60 வயது வரையில் இறைவனின் புகழ் பாடிக்கொண்டிருக்கும் ஓதுவார்களுக்கு 300 ரூபாய் ஒய்வூதியம் என்று அறிவித்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12.05

தமிழகத்தின் கலாசாரத்தையும், பண்பாட்டையும், கலை உணர்வையும் உலகுக்கு பறைசாற்றிக் கொண்டிருக்கிற பல்வேறு திருக்கோவில்கள் கவனிப்பாரின்றி, இடிந்து, பாழடைந்து, அழியும் நிலையில் உள்ளதை பழுது பார்க்கவும், திருப்பணிகள் செய்திடவும், முதலமைச்சர் திருக்கோவில்கள் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியை உருவாக்கி, பொது மக்களால் பரவலாக பெருமையுடன் வரவேற்கப்பட்டு, பல்வேறு தரப்பினரும் இதுவரையில் ரூ. 3.72 கோடி நிதியை அள்ளி தந்துள்ளதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்து அறநிலையத் துறையில் நியமிக்கப்படுபவர்கள், அத்தனை பேரும் பிலாசபி-தத்துவம், கல்ச்சர்-பண்பாடு, ரெலிஜன்-சமயம், பைன் ஆர்ட்ஸ்-நுண்கலை, ஸ்கல்ப்ச்சர்-சிற்பக்கலை, படித்தவர்களை மட்டுமே நியமனம் செய்தால் மேலும் நம் பண்பாடு, கலாச்சாரம் வளர ஏதுவாக இருக்கும், கோவில் நிர்வாகம் சிறப்புறும் என்பதை மிகப்பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவில் நிலங்களை குறைந்த குத்தகைக்கு சாகுபடி செய்பவர்கள், 3 போகம் சாகுபடி செய்தாலும், ஒப்பந்தத்தை மீறி கரும்பு போன்ற பணப்பயிர்களை பயிரிட்டாலும், முறையான குத்தகையை கோவில்களுக்கு கொடுக்க மனமில்லாமல்





உள்ள நிலை மாறி, அவர்களிடம் முறையாக வசூல் செய்ய அரசு தக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று இங்கே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கோவில்களுக்கு சொந்தமான புஞ்சை நிலங்களில் ஆக்கிரமணம் என்ற பெயரில் நுழைந்து, அதிலே நிரந்தரமாகத் தங்கி, சொந்தமாக்கிக் கொள்ளும் செயலை அரசு தடுக்க வேண்டும். கோர்ட்டுக்குப் போனால் அதிகமாகச் செலவாகும் என்பதால் கோவில் நிர்வாகத்தினர் போவதில்லை. எனவே, அதுபோன்ற வழக்குகளுக்கு அதிகச் செலவு இல்லாமல் கோர்ட்டில் அவர்கள் வழக்குகள் போடுவதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவில்களுக்கு சொந்தமான கட்டிடங்கள், வீடுகள், கடைகள் ஆகியவற்றில் பன்னெடுங் காலமாக குறைந்த வாடகையில் இருப்பவர்களிடம் இப்போதைய மார்க்கெட் ரேட்டில் வாடகை வசூல் செய்யவும், அல்லது மார்க்கெட் ரேட்டுக்கு விலைக்கு விற்று, அந்தத் தொகையை நிரந்தரமாக முதலீடு செய்து, அதன் மூலமாக வரும் வருவாயைக் கொண்டு கோவில்களைப் பராமரிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். பத்து இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள இடத்திற்கெல்லாம் 100 ரூபாய் வாடகை தந்து ஏமாற்றிக் கொண்டிருக்கிற நிலைமை மாறுவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல முந்தைய ஆட்சிக்காலத்தில் கோவில் நிலங்கள் குறைந்த விலைக்கு விற்கப்பட்டிருக்கின்றன. அப்படி குறைந்த விலைக்கு வாங்கியவர்கள் அதை வெளியே அதிக விலைக்கு விற்று கொள்ளை இலாபம் அடித்திருக்கிறார்கள். எனவே, அதைப்போல விற்கப்பட்டிருக்கிற நிலங்களை, 10, 12 ஆண்டுகளுக்கு முன்னால் விற்றிருந்தாலும் கூட அவைகளைத் திரும்பப் பெற புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல பல்வேறு மடங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் மடத்தினுடைய இடங்களை தங்கள் இஷ்டம்போல, இஷ்டப்பட்ட விலைக்கு விற்று கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த மானியத்தை முழு மனதோடு வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி அ.தி. சரஸ்வதி.

திருமதி அ.தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'நீராரும் கடலுடுத்த பாரதத்தின் தேரோடும் தமிழகத்தை சீரோடும், சிறப்போடும் காத்திடவே பேரோடும் புகழோடும் திகழும் நம் தலைவியை பிரம்மன் அவர் படைத்தாரோ என பூவுலகின் மக்களெல்லாம் மகிழ்ந்திடவே, புவியாளும் புரட்சித் தலைவி அவர்கள் புகழ் பாடும் பக்தையான எனக்கு மாவட்ட கோவில் பராமரிப்புக் குழு உறுப்பினர் என்ற புனித பொறுப்புதனைத் தந்து அறநிலையத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் பேச வாய்ப்பளித்த, என்னை வாழ வைத்த தெய்வத்தின் திசை நோக்கி வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

தமிழகத்தில் உள்ள அத்தனை திருக்கோயில்களிலும் வீற்றிருக்கும் தெய்வத்திற்கு திருப்பணி செய்வதற்கு எண்ணுகிற பெருமை, தெய்வீகச் சிந்தனையோடு அமர்ந்து, அன்பு தெய்வமாக ஆட்சி புரிந்து கொண்டிருக்கும் நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசையே சேரும் என்பதை இப்பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திரம் அடைந்து நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் கோவில்கள் பக்கம் தம் கருணைப் பார்வையைச் செலுத்திய முதல் அரசு நம் இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசு தான் என்று கூறுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் நம்முடைய மன்னர்களும், ஆன்மீகத் தலைவர்களும் உருவாக்கி வைத்திருக்கின்ற திருக்கோயில்கள் நம் கலை கலாச்சாரம் ஆகியவைகளை விளக்குகின்ற வகையிலும், பாதுகாக்கின்ற வகையிலும், இன்றைக்கும் வானளாவி உயர்ந்து நிற்கின்றன. மற்ற நாடுகளிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள் நம் திருக்கோவில்களை வியந்து பார்க்கின்றனர், பாராட்டுகின்றனர். சிற்பக்கலைக்கு சிறந்தது ரோமாபுரி என்பார்கள். அந்நாட்டுக்கு ஈடு கொடுக்கின்ற வகையில் நம் சிற்பக்கலை முன்னோர்களால் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இத்தகைய பாதுகாக்கப்பட வேண்டிய பல திருக்கோவில்கள் கடந்த ஆட்சிக்காலம் வரையில் சரியாக பராமரிக்கப்படாமல் தீபாராதனைகள், விளக்குகள் கூட இல்லாமல், இருளடைந்த நிலையில், கோட்டான்களும், வௌவால்களும் குடியிருக்கும் கூடாரங்களாக காட்சியளிக்கின்ற அவலநிலையைப் பார்த்தோம். ஆடுகளும் மாடுகளும் ஏன் கழுதைகளும் கூட திருக்கோவில்களில் குடியிருந்தன. இதை மனதில் கொண்டு மக்கள் சேவை செய்யும் புரட்சித் தலைவி அவர்கள் மகேசன்



சேவை செய்வதிலேயும் இதுவரை எந்த முதல்வரும் செய்யாத பல்வேறு சிறப்புத் திட்டங்களை அறநிலையத் துறையில் மேற்கொண்டுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

தமிழக ஆலயங்களின் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய் வருமானமாகக் கிடைக்கிறது. மேலும் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், நகைகள், பலரால் ஆக்கிரமிக்கப்பட்டு முடக்கப்பட்டுள்ளன. அவைகளை மீட்டு, கோவில் நிதியின் மூலமாக நம்முடைய ஆன்மீகத்தை வளர்ப்பதோடு, நம் கலை, கலாச்சாரம், பண்பாடு இவைகளைப் பேணிக் காக்கவும், கல்வி, மருத்துவம் இவைகளையும் இணைத்து செயல்படுத்தி, மாபெரும் சமுதாயப் புரட்சியை படைக்க வேண்டுமென அன்னை அவர்கள் திசைநோக்கி வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக வரலாற்றிலேயே கோவில் பராமரிப்பு வைப்புநிதி ஏற்படுத்தியது நம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசுதான் என்பதைக் கண்டு, இந்த பரந்த பாரத நாட்டின் ஒவ்வொரு ஆன்மீகக் குடிமகனும் பெருமைப்படத் தக்க விஷயம். பெண் சுதந்திரம் என்று வாய் அளவில் பேசியவர்கள் மத்தியிலே, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய், ஆட்சியிலே அமர்ந்து, முதன் முறையாக அதிகமான பெண் உறுப்பினர்களை இப்பேரவையில் பங்கேற்க வைத்ததோடு மட்டுமல்லாமல், ஆலய பராமரிப்புக் குழுவிலே அங்கத்தினராகவும் பொறுப்பேற்க வைத்தவர் நம் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். தாய் மனம், 'கருணை மனம்' என்பார்கள். அத்தகைய தாய் மனம், தாய் போல கருணை செய்யும் இறைவன் இல்லங்கள் பக்கம் திரும்பியதில் ஆன்மீக மக்கள் ஆனந்தப் பரவசம் அடைகின்றனர்.

இந்த இடத்தில் நான் ஒரு முக்கியமான நிகழ்ச்சியை குறிப்பிட விரும்புகிறேன். 1989-90 ஆம் வருடத்தில், இப்பேரவையில் நடைபெற்ற அறநிலையத்துறை மானியக் கோரிக்கையிலே ஏப்ரல் 20 ஆம் தேதி பங்கேற்று, விவாதித்த, அ.தி.மு.க. உறுப்பினர்கள், அன்றைய ஆட்சியாளர்களிடம் அறங்காவலர்களாக பெண்களை நியமிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். அன்றைய தி.மு.க. அரசு தாய்க் குலத்தைக் கேவலப்படுத்தி, செய்யத் தவறியதை, கருணை மனமும், தெய்வீகச் சிந்தனை ஆற்றல், தாய் உள்ளமும் பெற்ற, நம் புரட்சித் தலைவி அவர்கள் செய்து முடித்து

பெண் குலத்திற்கு பெருமை சேர்த்து உள்ளார்கள். பெண் உள்ளங்கள் அவரை வாழ்த்தும், மண் உள்ளவரை மங்காப் புகழ் பெறும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் பேரும் புகழும் பெற்ற பண்ணாரி அம்மன் ஆலயம் உள்ளது. இத்திருக் கோயில் 300 வருடங்களுக்கு மேலான வரலாற்று சிறப்பு உடையது. பொதுவாக, ஆலயங்களில் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் செய்து, சக்தியை புதுப்பிக்க வேண்டும், என்பது ஐதீகம். இத்திருக்கோவிலில் கும்பாபிஷேக விழா நடத்தி நாற்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டதால், விரைவில், இக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என்று அன்னை அவர்களின் திசை நோக்கி வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இத்திருக்கோயிலின் வருமானத்தின் மூலம், எங்கள் பகுதியில், என்னை வாழ வைத்த இதய தெய்வத்தின் பெயரில் ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்திட வேண்டுமென பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அங்கு இரண்டு திருமண மண்டபங்களையும் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஆண்டுக்கு ஒரு முறை நடக்கும் குண்டம் திருவிழாவிற்கு பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடுகின்றனர். அங்கே மக்கள் தங்கும் விடுதிகள் போதுமானதாக இல்லை. மேலும் பல விடுதிகள் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அந்தப் பகுதி காடுகள் அடர்ந்த பகுதியானதால், கோடைக்காலத்தில் நீர் அருந்த யானைகள் போன்ற விலங்குகள் கோவில் தெப்பக்குளம் வரை வருகின்றன. இதனால், கோவிலுக்கு வரும் பக்தர்கள் பீதி அடைகிறார்கள். ஆகையினால், இதைத் தடுக்கின்ற வகையில், வனத்துறையின் மூலமாக, நீர் ஆதாரங்களை ஏற்படுத்தி இன்னும் தொட்டிகள் பல அமைத்து, வன விலங்குகள் குடிப்பதற்கு தண்ணீர் ஏற்படுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தேவையானால், வனப்பகுதிக்கு செயற்கை முறையில், தொட்டிகள் கட்டி, லாரிகள் மூலம் தண்ணீர் வழங்கி வன விலங்குகளின் மீதும் நம் புரட்சித்தலைவியின் கருணைப் பார்வை படவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.



மற்றும் இங்குள்ள பண்ணாரி அம்மன் கோயிலுக்கு அருகில் வனவிலங்குகள் அதிகமாக இருப்பதால், அங்கே சரணாலயம் ஒன்றை ஏற்படுத்தினால், பண்ணாரி கோயிலுக்கு வரும் பக்தர்கள் பார்க்க வசதியாக இருக்கும். நமக்கும் வருமானம் கிடைக்கும். தமிழக மக்களை வாழ வைக்கும் தெய்வமான அன்னை அவர்கள் கருணை மனம் காட்டி, என் வேண்டுகோளை நிறைவேற்றவேண்டுமாய் அன்னை அவர்களின் திசை நோக்கி வணங்கி, கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்த, பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-15

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. ஆர். சிங்காரம்.

<u>திரு. ஆர். சிங்காரம்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக நம்முடைய தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சி தேசியமும், தெய்வாம்சமும் கலந்த ஆட்சி என்பதைச் சொல்லி நான் இதயபூர்வமாக நன்றி கூறி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் 1967-க்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது, அப்போது கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் ஆட்சி செய்தார்கள். அந்தக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொண்டோம், அதன் பிறகு மீண்டும் தமிழகத்தின் முதல்வராக புரட்சித் தலைவி அவர்கள் வந்தபிறகுதான் இந்தத் தெய்வங்கள் எல்லாம், தூங்கிக்கொண்டிருந்த தெய்வங்கள் எல்லாம், கைகால் ஒடிந்த தெய்வங்கள் எல்லாம், காணாமல் போன தெய்வங்கள் எல்லாம். வெளிநாட்டிற்குக் கடத்தப்பட்ட தெய்வங்கள், எல்லாம், நாடு கடத்திய தெய்வங்கள் எல்லாம் மீண்டும் தமிழகத்திலே, அந்தந்த கோயில்களிலே அமர்ந்து நம்முடைய ஆட்சியினுடைய தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவிக்கு அதிகாரமும், அங்கீகாரமும், ஆதரவும், அளித்துக் கொண்டிருக்கிற காரணத்தாலேதான் கும்பகோணத்திலே 60 லட்சம் மக்கள் கூடினார்கள் என்பதை நான் சாதனையாக இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், அந்த அளவிற்கு தெய்வாம்சமும். தேசியமும் நிறைந்த ஆட்சியை நான் மனமார மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த என்னையும், எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் மணி சங்கர் அவர்களைத் தலைவராகவும், தண்டாயுதபாணி அவர்களை உறுப்பினராகவும் நியமித்து காங்கிரஸ் இயக்கத்திற்கு

மரியாதை கொடுத்த நம்முடைய முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முன்பே ஒரு முறை சொல்லி விட்டேன், இருந்தாலும் இந்த மானியக் கோரிக்கையில் இதை நான் சொல்லியாக வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

மேலும் முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் இந்நாள் முதல்வர் நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பற்றி சில தவறான செய்திகளைக் கொடுத்திருக்கிறார். சங்கராச்சாரியார் அவர்களை நம்முடைய முதல்வர் அவர்கள் இழிவுபடுத்துகிறார், பழிக்கிறார் என்றெல்லாம் ஒரு தவறான அறிக்கையைக் கொடுத்திருக்கிறார், ஏதோ திடீரென்று இவருக்கும் மரியாதைக்குரிய பெரியவர் சங்கராச்சாரியார் அவர்களுக்கும் இப்படி ஒரு நட்பு ஏற்படவில்லை—அவருக்கு ஏற்படவில்லை —இவருக்கு அவர் மீது ஏற்பட்டதற்குக் காரணம், நம்முடைய முதல்வர் அவர்களைப் பற்றி ஏதாவது எதிர்ப்பாகச் சொல்ல வேண்டுமென்பது தான் இவருடைய நோக்கம், அதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன், காஞ்சிப் பெரியவருக்கும். நடுப் பெரியவருக்கும் இடையே சிறு மனத்தாங்கல் ஏற்பட்டு, அதனால், நடுப் பெரியவர் இரவோடு இரவாக தமிழ்நாட்டை விட்டே ஓடினார், ஓடினார், ஓடினார், தமிழ்நாட்டை விட்டே ஓடினார், கர்நாடகத்தின் எல்லைக்கே ஓடினார் என்று தனது பராசக்தி வசனம் போல் இழித்தவர், பழித்தவர்தான் இந்த கருணாநிதி. ஆனால், தற்போது நமது முதல்வர் சங்கராச்சாரியாரை பழிப்பதாக குற்றம் சுமத்துகிறார். சங்கராச்சாரியார் மீது கருணாநிதிக்கு ஏன் இப்போது திடீர் பரிவு. இவருக்கு வேண்டுமென்றால் காஞ்சிப் பெரியவர் என்பார்? வேண்டாமென்றால் யார் இந்த சங்கராச்சாரி என்பார், இன்னும் சற்றுக் கோபம் வந்தால் அக்கிரகாரம் என்பார், பூணூல் என்பார், ஏன், இன்னும் சொல்லப்போனால். பார்ப்பான் என்றே சொல்வார். அந்த அளவிற்கு இவர் பார்ப்பான், பார்ப்பான் என்று சொல்லி மிகப் பெரிய ஒரு எதிர்ப்பை ஏற்படுத்தி, அந்த மக்களுக்கு நெருக்கடியைக் கொடுத்தார், இன்னும் சொல்லப்போனால், அவருடைய ஆட்சியிலே பல பெரிய பொறுப்பிலே எல்லாம் பார்ப்பன சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை எல்லாம் அவர் வைத்திருந்தார், அந்த குகன் யார் ? செட்டியாரா ? கோனாரா ? அம்பலக்காரரா ? ஆச்சாரியா ? பூசாரியா ? இல்லை, ஒரிஜினல் ஐயர். மிகச் சிறந்த மூளையுள்ள ஒரிஜினல் ஐயர், அவரை வைத்துத்தான். அவருடைய ஆலோசனையைப் பெற்றுத்தான் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார், இன்னும் எத்தனையோ பேரைச் சொல்லலாம், நேரமாகி விடும். நீங்களும் மணி அடித்துவிடுவீர்கள், தயவு செய்து



நான் கேட்டுக்கொள்வது மணி அடிக்காமலே முடித்து விடுகிறேன், மணி அடித்தால் எனக்கு ஹார்ட் நின்றுபோய்விடும், வார்த்தையே வராது, ஆகவே, அந்த 'மூடை' அப்படியே கொண்டுபோங்கள், ஆகவே மாநில அறங்காவலர் குழுவில் கட்சி சார்பற்றவர்களைப் போடவில்லை என்று சிலர் கூறி வருகிறார்கள், ஆனால் உண்மை அது அல்ல, மாநிலக் கமிட்டியிலே போடப்பட்டிருக்கும் அரசு சார்பற்ற உறுப்பினர்கள் யார் என்று இவர்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால் தெரிந்திருந்தும், தவறான குற்றச்சாட்டுகளை எல்லாம் சொல்கிறார்கள், அதிலே மாண்புமிகு முதல்வர் தலைவர், இரண்டு அமைச்சர்கள் இது தான் 'நான்-அபிஷியல் பாடி' ஆனால் மற்றவர்கள் அத்தனை பேரும் அதிகாரிகள்,

இன்னும் சொல்லப்போனால். எம். ஏ. எம். இராமசாமி அவர் யார் ? பொதுவானவர், சிவந்தி ஆதித்தன் யார்? பொதுவானவர். விசுவநாத சிவாச்சாரியார் யார் ? பொதுவானவர். பராசரன் யார் ? பொதுவானவர், ஸ்ரீமத் பரமஹம்ச வானமாமலை இராமானுஜ ஜீயர் யார் ? பொதுவானவர், அக்னிஹோத்திரம் இராமானுஜ தாத்தாச்சாரியார் யார்? பொதுவானவர்? திருமதி இராணி டி. இந்திரா தேவி யார்? பொதுவானவர். ஆகவே இப்படிப்பட்டவர்களைக் கொண்டு நியாயமான நீதியான, ஒழுக்கமான, நேர்மையான, உண்மையான கடவுள் பக்தி உள்ளவர்களைக் கொண்ட ஒரு மாநில கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. இதை யாரும் குறை சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால், அவர்கள் என்ன சொல்கிறார்கள் ? இதையும் சொல்லிவிட்டு-அதற்குப் பிறகு வாய்ப்பில்லை.

பிற்பகல் 12-20

உடனே மாவட்ட அளவிலே போட்டவர்களில் சட்டமன்ற உறுப்பினர்களைப் போடலாமா என்று கேட்டார்கள்' அதற்கும் நான் சொல்கிறேன், மாவட்ட கமிட்டிகளிலே தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும், சட்ட மன்ற உறுப்பினர்களை இக்குழுவில் போட்டதற்கு குறை கூறுகிறார்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் யார் ? நாங்கள் என்ன தேசதுரோகிகளா ? பொது மக்களுடைய பிரதிநிதிகள், எந்தக் கட்சியாக இருப்பினும் நாங்கள் மக்கள் பிரதிநிதிகள் தானே, பக்தர்களுடைய பிரதிநிதிகள்தானே - அல்லது பக்தர்களுக்கும் பிரதிநிதிகள்தானே, அதனால் சட்டமன்ற உறுப்பினர்களை குழுவில் போடுவது எவ்வாறு தவறாகும்? நாங்கள் பக்தர்கள், இன்னும் சொல்லப்போனால் கடவுள் பித்தர்கள். ஆனால் எத்தர்கள் அல்ல என்பதை மட்டும் நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். அதற்கு ஒரு உதாரணம். கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆண்டபோது அங்கே இந்தக் குழுவில் கம்யூனிஸ்ட்காரர்களையே அப்படியே நூற்றுக்கு நூறு போட்டார்கள், இங்காவது எல்லாக் கட்சிக்காரர்களையும் போட்டார்கள்.

[திரு. ஆர். சிங்காரம்] [1992 ஏப்ரல் 9

அதே நேரத்தில் பொதுவானவர்களையும் கடவுள் பக்தி மிக்கவர்களையும் போட்டிருக்கிறார்கள், ஆனால் கேரளாவில் முழுக்க முழுக்க கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களையே அவர்கள் போட்டார்கள், அதை எதிர்த்து கேரள ஹைகோர்ட்டிலே வழக்கு தொடர்ந்தார்கள். அன்று அந்த வழக்கை விசாரித்த நீதிபதி அவர்கள், அவர்களைப் போடலாம்—அவர்களும் மனிதர் கள் தான், அவர்களும் மக்களுடைய பிரதிநிதிகள் தான், அந்தப் பக்தர்களுடைய பிரதிநிதிகள்தான்—ஆகையினாலே அவர்களைப் போடலாம் என்று சொன்னார்கள், அதையும் மீறி சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு தொடர்ந்தார்கள், அந்த நீதிபதி அவர்களும் அதை விசாரித்து அசலையே உறுதியாகச் செய்து விட்டார், ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களைப் போடலாம் என்பது சுப்ரீம் கோர்ட்டினுடைய உத்திரவு, ஆகவே அந்த அளவிற்கு இதையெல்லாம் ஆராய்ந்து அறிந்து தெளிந்து புரிந்து தெரிந்துதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் போட்டிருக்கிறார்களே தவிர ஏனோ தானோ என்று அரை குறையாக எதையும் செய்யவில்லை, எதையும் புரிந்து செய்கின்ற ஆற்றல் படைத்தவர்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அரைகுறையாக செய்பவர் அல்ல என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன், ஸ்ரீரங்க நாதனையும் தில்லை நடராஜனையும் பீரங்கி வைத்து பிளப்பது எந்நாளோ என்று அன்று கடவுளைப் பழித்தவர்கள் இன்று காணாமல் போய்விட்டார்கள். ஆறுகால பூஜையை அற்புதமாய் நடத்துவதற்கும் கோயில் திருப்பணிகளை குறைவற்று நிறை வேற்றுவதற்கும் ஆணையிட்ட புரட்சித் தலைவி அவர்கள்தான் இன்று அரியாசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள்.

மதுவை ஒழித்ததன் மூலம் வீடுகளுக்கு விளக்கேற்றி வைத்த புரட்சித் தலைவியே, கோயில்களுக்கும் விளக்கேற்றியதால். நீங்கள் ஒரு ஒளி விளக்கு, இப்போது உங்கள் கொடி கோட்டை யிலே மட்டும் அல்ல. கோயில்களிலேயும் பறக்கின்றன, உங் களுடைய உருப்படியான திருப்பணிகளுக்கு கோடி வணக்கங்கள், இந்தியாவில் அதிகக் கோவில்கள் உள்ள மாநிலம் தமிழ்நாடு, தமிழ்நாட்டில் இந்து கோவில்கள் உள்ள மாவட்டம் தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் காயிதே மில்லத் மாவட்டம். எல்லா கோயில் களுக்கும் ஆதியில் அரசர்கள் ஆயிரக்கணக்கான நிலங்களை மானியமாக வழங்கியுள்ளார்கள். அந்த நிலங்களிலேயிருந்து வரும் வருமானம் கோயில்களின் வளர்ச்சிக்கும், அதிலே ஊழி யம் செய்யும் ஊழியர்களுக்கும் ஊதியம் வழங்குவதற்குமாக மானியம் வழங்கப்பட்டது, தஞ்சை ஜில்லாவில் எந்த கிராமத்தை எடுத்தாலும் கோவில் மானியம் என்ற பெயர் இன்னமும் இருந்து வருகிறது, ஆனால் இப்போது அந்த



1992 ஏப்ரல் 9] [திரு. ஆர். சிங்காரம்]

நிலங்களை எல்லாம் வசதி படைத்தவர்கள் வைத்திருக்கிறார் கள். குறிப்பாகச் சொல்லப் போனால் என்னுடைய பகுதியிலே குட்டி தம்பிரான் என்று ஒருவர் இருக்கிறார், ஓசி மணி என்று எல்லோராலும் அழைக்கப்படுகிற கோ.சி.மணியை வீழ்த்திய அருமை நண்பர் ஆசைமணி அவர்களுடைய தொகுதியிலே ஒரு குட்டித் தம்பிரான் இருக்கிறார். அந்தக் குட்டித் தம்பிரான் எங்கள் பக்கத்திலே இருக்கிற துர்க்கை அம்மன் கோயில் நிலங் களை நூற்றுக் கணக்கில் வைத்துக் கொண்டு அன்று தி.மு.க. ஆட்சியில் கொள்ளை அடித்தார்கள். அதேபோல எங்கள் பகுதியிலேயும் செய்து கொண்டிருக்கிறார்கள், அதைப்போல தஞ்சை மாவட்டத்திலே நிரம்பப் பேர்கள் நிலச்சுவான்தார்கள் என்ற பெயரிலே நிறைய நிலங்களை வைத்துக் கொண்டிருக் கிறார்கள். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர் களை அப்புறப்படுத்த வேண்டும். அந்த நிலங்களிலிருந்து முறையாக வருமானம் கோயில்களுக்கு கிடைப்பது இல்லை. ரெவின்யூ கோர்ட் செயல்படாததால் குத்தகை பாக்கியை கோவில்களால் பெற முடியவில்லை. அந்த ரெவின்யூ கோர்ட்டு களை உடனடியாக இயங்க வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரையில் குத்தகை பாக்கி வைத்திருப்பதற்கு காரணமே அரசியல்வாதிகளைப் பயன்படுத்தி குத்தகையைக் கொடுக்காமல் இருந்து விடலாம் என்ற தவறான நோக்கம்தான். அரசாங்கம் திடமாக மனது வைத்தால் நிச்சயமாக எல்லா குத்தகை பாக்கிகளையும் வசூலித்து விடலாம். முதலமைச்சர் திடமான பொலிடிகல் வில் உடையவர் என்பதை இந்த சபை மிக நன்றாக அறியும். அரசு உத்திரவு போட்டோ அல்லது சட்டமோ கொண்டு வந்து [illegible] வேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் அதை நிச்சயமாக [illegible]வார்கள் என்று நான் நம்புகிறேன்.

164942

அரசர்கள் கோவில்களுக்கு [illegible] அம்மன் சிலைகளுக்கு அலங்கரிப்பதற்காக இலட்சக்கணக்கான [illegible] நகைகளை அலங்காரத்திற்காக கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு கொடுத்த நகைகள் யாவும் சரியாக இருக்கின்றனவா என்பதை சரி பார்க்க வேண்டும். ஏனென்றால் கடந்த ஆட்சியில் பல நகைகள் அம்மனுக்குப் போட வேண்டிய நகைகளை எல்லாம் வீட்டிலுள்ள அம்மனுக்கு போட்டு விட்டார்கள். அது எல்லாம் அனைவருக்கும் தெரியும். அதற்கு பல கதைகள் இருக்கின்றன. ஆகவே அதையெல்லாம் சரியாக இருக்கிறதா இல்லையா என்று சரி பார்க்க வேண்டும். சரியான பாதுகாப்பைத் தர வேண்டும். சரியான கணக்கு வழக்குகள் அரசின் பொறுப்பிலே இருக்க வேண்டும். ஆண்டுதோறும் குறிப்பிட்ட நகைகள் குறிப்பிட்ட நிலையில் உள்ளனவா என்று சோதிக்க வேண்டும்.

D
V 21, 2/1992 N92:2401

[திரு. ஆர். சிங்காரம்] [1992 ஏப்ரல் 9

அடுத்து சிலைகள் திருட்டு. பத்மநாபபுரம் நடராஜர் சிலை புரட்சித் தலைவர் காலத்திலேதான் மீட்கப்பட்டது. புரட்சித் தலைவி காலத்தில் கோயில் சிலைகள் பறிபோய் விடக்கூடாது என்பதற்காக நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஏனென்றால் நடராசர் லண்டனுக்கே போய் விட்டார். லண்டன் கோர்ட்டிலே வழக்கு தொடர்ந்து அங்கே பல சோதனைகள் செய்து அந்தச் சிலை இருந்த மண்ணை சோதித்து, அந்தச் சிலையின் அருகில் இருந்த சிறு மண்ணையும் சோதித்து இரண்டையும் கம்பேர் செய்து ஒன்று தான் என்று கண்டுபிடித்து அந்த அளவிற்கு திறமையோடு வாதாடி போராடி நடராசர் சிலையை மீட்டுக் கொண்டு வந்திருக்கிறார். நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள். அவர் எங்கே போனாலும், நடராசர் மட்டும் அல்ல, யாராக இருந்தாலும் சரி, தவறு செய்து விட்டு எங்கே போனாலும் விடமாட்டார் புரட்சித்தலைவி என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 12–25.

திருநெல்வேலி மாவட்டத்தில் கோயில்களில் உள்ள சிலைகள் உடைக்கப்படுவதும் இது தொடர்பாக முதலமைச்சர் கவனத்திற்கு எனது அருமை நண்பர் எஸ். எஸ். ராமசுப்புவும், நாங்களும் இந்தப் பிரச்சினையை அவையிலே கொண்டு வந்தோம். முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு தற்போது கட்டுப்பட்டிருப்பதாக உறுப்பினர் ராமசுப்பு அவர்கள் என்னிடத்தில் சொன்னார். இந்தச் சிலை உடைப்பு சம்பவங்களைச் செய்பவர்கள் நிச்சயமாகத் திருடர்களாக இருக்க மாட்டார்கள். இவர்கள் தமிழ்நாடு விடுதலைப் புலிகளாக இருப்பார்கள். இலங்கை விடுதலைப் புலிகள் அல்ல. தமிழ்நாடு விடுதலைப் புலிகளாகத் தான் இருப்பார்கள். இருக்க முடியும். ஏனென்றால் திருடர்கள் சிலைகளைக் கடத்துவார்கள். ஆனால் நெல்லை மாவட்டத்துச் சிலைகள் உடைக்கப்படுகின்றன. புரட்சித் தலைவி ஆட்சிக்கு களங்கம் உண்டாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இது செய்யப்படுகிறது என்று நான் அறிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவாக திடீர் கோயில்கள் உற்பத்தியாவதைத் தடுக்க வேண்டும். புதிதாக எந்த இடத்தில் கோயிலைக் கட்டுவதாக இருந்தாலும் அரசினுடைய அனுமதியைப் பெற்று கோயில்களை ஏற்படுத்த வேண்டும் அல்லது மாவட்ட அறங்காவலர் குழுவின் அனுமதியோடு கோயில் ஏற்படுத்த வேண்டும். திடீரென்று கோயில்கள் ஏற்படுவதால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறது. இதில் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான் மலையில் ஒரே சர்வே நம்பர் 106/12-ல் ஏழாம் நூற்றாண்டு வரலாற்றுக்கோயில் சின்னங்களுடன் இணைந்த தொடர்மலையில் சக்தி வாய்ந்த வெடி குண்டுகளைப் பயன்படுத்தி தகர்ப்பதனால்



1992 ஏப்ரல் 9] [திரு. ஆர். சிங்காரம்]

சேதமடைகின்ற வரலாற்றுச் சின்னங்களை மேலும் சேதம் அடையாமல் பாதுகாக்கும் பொருட்டு வெடிகுண்டு வைத்து தகர்ப்பதை உடனே தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். தொல் பொருள் பாதுகாப்புத் துறையினர் வெடிகுண்டு வைத்து தகர்ப்பதை நிறுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சருடைய கவனத்திற்காக கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இன்னும் அவையிலே வரவில்லை. இதை தயவு செய்து முதலமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

கிராமங்களில் அரசுக்குச் சொந்தமில்லாத சிறு சிறு கோயில்கள் பராமரிப்பு அற்றுக் கிடக்கின்றன. அவைகளை சீரமைத்துத் தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை அருகில் பூண்டி மாரியம்மன் ராஜகோபுரம் வேலை தொடங்கி முடியாமல் பாதியிலே நிற்கிறது. உடனடியாக தொடர்ந்து வேலையைத் துவக்க வேண்டுகிறேன். எனது பேராவூரணி தொகுதியைச் சார்ந்த திரிஷ்டவனம் பெரியநாயகி அம்மன் கோயில், ஆவணம் சிவன் கோவில் இரண்டையும் திருப்பணி செய்ய ஆவன செய்ய அன்புடன் வேண்டுகிறேன். பேராவூரணி தொகுதி பாலத்துரை துர்க்கையம்மன் கோவில், பட்டுக்கோட்டை நாடியம்மன் கோயில் ஆகிய இரண்டிற்கும் வேலையைத் துரிதப்படுத்தி திருப்பணி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நானும் பட்டுக்கோட்டை உறுப்பினர் பாலசுப்பிரமணியன் அவர்களும் நாடியம்மன் கோயிலுக்குச் சென்றிருந்தோம். ஆண்டவரே, எங்களையெல்லாம் நன்றாக வைத்துக் கொள். இந்த ஆட்சியைச் சிறப்பாக நடத்து என்று வேண்டிக் கொண்டோம். ஒரு வாரம் கழித்து எங்களுக்கு பதவி வந்து விட்டது. அப்படிப்பட்ட சக்தியான அம்மன் அந்த நாடியம்மன் கோவில். ஆகவே அதை நீங்கள் திருப்பணி செய்ய முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல இன்னும் சில நண்பர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆட்சியிலே போடப்படுகின்ற சட்டங்கள், அதனுடைய திட்டங்கள் எல்லாம் கிராமங்களுக்குப் போய்ச் சேருகின்றனவா என்றால் சேரவில்லை என்றெல்லாம் சில நண்பர்கள் இங்கே பேசினார்கள். நான் கேட்டேன். ஆனால், இந்தத் திட்டங்கள் போய்ச் சேருகின்றனவா என்பதை எப்படி கண்காணிக்கின்றார் முதல்வர் என்று நான் பார்த்த போது அதனை ஒரு விஷயத்தில் தெரிந்து கொண்டேன். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொல்லியவர்களைப் போல நம்முடைய முதல்வர் அவர்கள் பிள்ளையோ பிள்ளை மு.க. முத்துவுக்கு 5 இலட்சம் கொடுத்தார். அவர்

எழுதினார். நான் வாழ்க்கையில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறேன் என்று எழுதினார். அதை முதல்வர் பார்த்தார், படித்தார், உடனடியாகக் கூப்பிட்டார். 5 இலட்சம் கொடுத்தார். அதோடு முடிந்துவிடவில்லை. இந்த 5 இலட்சம் ரூபாய் அவருடைய வாழ்க்கைக்குப் பயன்படுகிறதா, அவருடைய குழந்தைகளுக்குப் பயன்படுகிறதா, பிற்காலத்தில் வாழ்க்கையை ஒழுங்காக நடத்துவார்களா மாட்டார்களா என்பதையெல்லாம் சிந்தித்து— இவர் கையிலே கொடுத்தால் அது பையிலே போய்விடும் என்று தெரியும். ஆகவேதான் அதை பாங்கிலே கொடுத்து அதை ட்ராப்ட்டாக ஆக்கி அதிலிருந்து வருகின்ற 6,500 ரூபாயை, வட்டிப் பணத்தை மாதச் செலவிற்கு வைத்து குடும்பத்தை நடத்திக்கொள். பிற்காலம் உனக்கும் உன் சந்ததியினருக்கும் சிறப்பாக அமையட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்—அந்த எண்ணம் யாருக்கும் வராது, ஏதோ 5 இலட்சம் கொடுத்துவிட்டோம், ஃபோட்டோ எடுத்து விட்டோம். பேப்பரில் வந்துவிட்டது. அந்த கருணாநிதி மகனிடம் கொடுத்துவிட்டோம் என்று பேப்பரில் விளம்பரத்திற்கு கொடுத்த பணம் அல்ல. அது அவருக்குப் போய்ச் சேர வேண்டும். அந்தக் குடும்பம் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்ற உயர்வான எண்ணத்தின் அடிப்படையில்தான் அதைக் கொடுத்தார். அந்தப் பணம் எப்படிச் சேரவேண்டும், எப்படி அது வாழ்க்கை நடத்த உதவ வேண்டும் என்று நினைக்கின்றாரோ அது போல தமிழகத்தில் போடப்படுகின்ற திட்டங்கள் யாவும் கிராமங்களுக்குப் போய்ச் சேருகின்றனவா என்பதை முதல்வர் அவர்கள் மிகவும் கண்காணிக்கிறார்கள் என்பதை நான் மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். பல விஷயங்களைச் சொல்ல முடியும். உதாரணங்களைச் சொல்ல முடியும். ஆனால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மணி அடித்துக்கொண்டு இருப்பதால், தயவு செய்து 2 நிமிடத்தில் முடித்து விடுகிறேன்;

பிற்பகல் 12-30

மன்னார்குடி ராஜகோபாலசாமி கோவிலில் கொள்ளை நடந்தது தி.மு.க. ஆட்சியில். ஆனால், அங்கே கொலையும், கொள்ளையும் நடந்தது. பல இலட்சக்கணக்கான ரூபாய் அங்கே கொள்ளை போனது. ஆனால் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு கொலை நடக்கவில்லை, ஒரு சில கோவில்களில் கொள்ளை நடந்திருக்கிறது. ஆனால் அன்று ஆயிரக்கணக்கான கோவில்களிலும், எல்லா கோவில்களிலும், ஒரு கோவிலைக்கூட விடவில்லை, ஏன் என்றால் கடவுள் பக்தி இல்லாதவர்கள் அவர்கள். அந்த கோவில்களில் இருக்கிற சாமிகளை எல்லாம் கடத்திக் கொண்டுபோய் விற்பது, சம்பாதிப்பதுதான் வேலை. இப்போது பராமரிப்பதுதான் நமக்கு வேலை. ஆகவே, அப்படிப்பட்ட



கொள்ளை நடந்து இருக்கிறது. ஒரு சில கோவில்களில் நடந்து இருக்கிறது. இதை உடனடியாக கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கண்ணகி கோவில் இருக்கிறது. அதனுடைய பிரச்சினைகள் என்ன என்பது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆனால், அந்த கண்ணகி கோவிலுக்குத் திருவிழா நடக்க இருக்கிறது. அந்தக் கோவிலுக்குச் செல்வதற்கு மக்களுக்கு சரியான பாதுகாப்பு தர வேண்டும் என்று நான் பணிவோடு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய அருமைத் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்களும் அறிக்கை கொடுத்திருக்கிறார்; தந்தி அடித்து இருக்கிறார். அதையும் நீங்கள் ஏற்றுக்கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுத்து பாதுகாப்பு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். * * நான் கடைசியாக அடுப்புக் கரியை மிஞ்சும் கருப்பு நிறம் கொண்ட ஆணுக்குப் பெயர் வெள்ளைச்சாமி; எலுமிச்ச நிறம் கொண்ட எழிலோடு விளங்கும் பெண்ணுக்குப் பெயர் கருப்பாயி; ஈக்கள் மொய்க்கும் ஓட்டலுக்குப் பெயர் ஆரோக்கியபவன்; அதே போல் கருணையே இல்லாத ஒரு மனிதனுக்குப் பெயர் (மேசையைத் தட்டும் ஒலி) கருணாநிதி; ஆனால், அறிவும், அழகும், திறமையும், கடவுள் பக்தியும், தேச பக்தியும் கொண்டவருக்குப் பெயர் தான் ஜெ. ஜெ. (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி உரையை முடிக்கின்றேன். நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அனுமதியோடு ** என்ற சொல்லை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். (சிரிப்பு) திரு. வே. தம்புசாமி.

<u>திரு. வே. தம்புசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு அனுமதி தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் அறநிலையத் துறையினுடைய மானியக் கோரிக்கைகளை தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் மூன் மொழிந்து இருக்கிறார்கள். இதிலே வந்து இருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையில் பொதுவாக வாரியம் அமைப்பது என்று வருகிறபோது அந்த வாரியத்திற்கும் அறநிலையத் துறைக்கும் நிர்வாகத்திலே பல்வேறு சிக்கல்கள் ஏற்படும் என்று அன்றைய தினமே நான் கருத்து கூறினேன். இப்போதும் அதில் ஏற்பட்டு இருக்கக்கூடிய சிக்கல்கள் சம்பந்த

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாக பல்வேறு விஷயங்கள் பத்திரிகையில் வந்திருக்கின்றன என்பதை நாம் அறிவோம். எனவே, அப்படி இருந்தாலும்கூட இன்றையதினம் தமிழகத்திலே குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே .. .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலய நிர்வாகத்தில், வாரியம் ஏற்பட்ட பிறகு சிக்கல்கள் ஏற்பட்டு இருப்பதாகவும் அவற்றைப் பற்றிய செய்திகள் எல்லாம் பத்திரிகையில் வந்து இருப்பதாகவும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் இங்கே கூறினார்கள். ஆலய நிர்வாகத்தில் எத்தகைய சிக்கலும் ஏற்படவில்லை. மிகவும் சீராகவும், செம்மையாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, பத்திரிகையில் வருகின்ற செய்திகள் எல்லாம் உண்மை அல்ல. அந்த பத்திரிகைச் செய்திகளை அடிப்படையாக வைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கருத்துக்களைத் தெரிவித்தால் அது சரியாக இருக்காது என்பதை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆலயங்கள் அறநிலையத் துறையில் இருக்கின்ற காலத்தில் பொதுவாக தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ ஐந்து இலட்சம் குத்தகை விவசாயிகள் சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து குத்தகை பாக்கிகள் வைத்து இருப்பது என்பது உண்மைதான். அந்த குத்தகை பாக்கிகளை அவர்கள் கோவிலுக்கு வேண்டும் என்றே அளக்கக்கூடாது என்ற நிலையிலிருந்து அந்த குத்தகை பாக்கிகள் ஏற்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து தஞ்சை மாவட்டத்திலே, தமிழகத்திலே இயற்கை பாதிப்புகள் கடுமையாக தாக்கப்படுகின்றன.

பிற்பகல் 12-35

ஒரு புறத்திலே வறட்சி ; மறு புறத்திலே வெள்ளம் ; புயல்; அதனுடைய பராமரிப்பு ; அது சம்பந்தப்பட்டவர்கள் செய்யாததினுடைய விளைவுகள் ; இவைகளெல்லாம் சேர்ந்துதான் கடந்த காலத்திலே குத்தகை பாக்கி என்பது ஏற்பட்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அப்படிப்பட்ட இயற்கை பாதிப்பால், ஏற்பட்ட இடையூறுகளால் சிக்கித் தவிக்கும் விவசாயிகளைப் பாதுகாப்பதற்காகத்தான், அவ்வப்போது அரசு குத்தகை நிவாரணச் சட்டங்களைக் கொண்டு வருகிறது.



உதாரணத்திற்குச் சொன்னால், மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் விவசாயிகளினுடைய நிலை அறிந்து, கஷ்டங்களை அறிந்து, ஏற்பட்டிருக்கிற இடர்பாடுகளை அறிந்து, இயற்கை பாதிப்பால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த விவசாயிகளை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் ஒரு நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஐந்தில் ஒரு பங்கை மூன்று தவணைகளில் கொடுத்தால், இருக்கிற குத்தகை பாக்கி முழுவதும் தள்ளுபடி என்று கொண்டு வந்தார்கள். அதோடு மட்டுமல்ல ; அந்த நிலத்தில் நீண்டகாலமாக, பரம்பரையாக தானும் தன் குடும்பமும் உழைத்து அந்த நிலத்தை அபிவிருத்திசெய்து இன்றைக்கு ஒரு குறைந்தபட்சவிளை நிலமாக மாற்றிய நிலையில் அந்தக் குடும்பங்கள் வாழ வேண்டும் என்பதற்காக அந்த நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்கு சில நடவடிக்கைகள் எடுக்கிறபோது, சில நடவடிக்கைகளை மேற்கொள்கிறபோது, அப்படி அந்த விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் நில வெளியேற்ற தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இப்போது எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாரிசு என்ற அடிப்படையிலே இந்த ஆட்சி நடைபெறுகிறது என்று கூறுகிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, எம்.ஜி.ஆர். கொண்டு வந்திருக்கக்கூடிய அந்த இரண்டு சட்டங்களையும் உடைத்து எறிந்துவிட்டு, இன்றைய தினம் அந்த நிலத்திலிருந்து அந்தக் குத்தகை விவசாயிகளை, குத்தகை பாக்கி என்ற பெயராலே, வெளியேற்றுவதற்கு ஒரு சூழ்நிலை இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய விளைவுகள் என்ன ? ஏறத்தாழ தமிழகத்திலே பத்து இலட்சம் குத்தகை விவசாயிகள், குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே ஆறரைஇலட்சம் குத்தகை விவசாயிகளிடம் குத்தகை பாக்கி இருக்கிறது. அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுவார்களேயானால், அவர்களுடைய குடும்பங்களைச் சார்ந்திருக்கக்கூடிய இலட்சக்கணக்கான குடும்பங்கள வீதியிலே நிற்கக்கூடிய ஒரு அவலநிலைமைதான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இது வேண்டுமென்றே விவசாயிகளை வம்புக்கு இழுக்கக்கூடிய ஒரு சூழ்நிலைதான். இந்தச் சட்டங்கள் கொண்டு வருவதால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, குத்தகை விவசாயிகளை வெளியேற்றுவதற்கு தடைச் சட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே கொண்டு வந்ததாகச் சொன்னார்கள்.

அப்படிப்பட்ட சட்டம் எப்போதும் கொண்டு வரப்படவில்லை. அவர்கள் குத்தகை பாக்கியை தவணை முறையிலே செலுத்தலாம் என்றுதான் கொண்டுவந்தாரே தவிர, தடைச் சட்டம் ஏதும் கொண்டு வரவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அப்படி கொண்டுவந்திருக்கிற தேதியை........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குத்தகை பாக்கிகளை முன்பு தவணை முறையிலே கட்டலாம் என்று சட்டத் திருத்தங்கள் கொண்டுவந்தபோது, சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் அவைகள் கொண்டு வரப்பட்டன. ஆனால், சலுகைகள் என்பவை, ஒரு முறை காட்டலாம் ; இரண்டு முறை காட்டலாம் ; மூன்று முறை கூட காட்டலாம். ஆனால், வாழ்நாள் முழுவதும் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டுமென்று யாவரும் எதிர்பார்த்தால் அது சரியாக இருக்காது. தவிர, அங்கே கோவில் நிலங்களில் விவசாயம் செய்து கொண்டிருந்த விவசாயிகளையெல்லாம் நடு வீதியில் நிறுத்துவது இந்த அரசின் எண்ணம் அல்ல என்பதையும் இந்த நேரத்தில் தெளிவாக்க விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கை, கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு பற்றியதாகும். இந்தக் கோயில்கள் — தமிழகத்திலுள்ள கோயில்கள் எல்லாம், பெரும்பாலான கோயில்கள் பாழடைந்த நிலையில் இருக்கின்றன. பெரும்பாலான கோயில்களில் ஒருகால பூஜைகூட நடத்த முடியாத ஒரு அவலநிலைமை ஏன் ஏற்பட்டிருக்கிறது ? குத்தகை பாக்கிகள் கொடுக்கப்படாததாலும், கோயில்களுக்கு வரவேண்டிய வருமானம் வராததாலும்தான் இந்த அவலநிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலைமைகளை சரிசெய்ய வேண்டும். கோயில்களுக்கு உரிய வருமானம் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், இம் மாமன்றத்திலே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான், இந்த அரசு நடவடிக்கைகளும் எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் மானியக் கோரிக்கையின்மீது பேசுகிறபோது, கோயில்களுக்கு உரிய வருமானம் கிடைக்கக்கூடாது என்கிறாரா ? கோயில்களுக்கு எத்தனையோ ஆண்டு காலமாக வசூலிக்க முடியாமல் இருக்கிற நிலுவைத் தொகைகளையெல்லாம் வசூலிக்க



வேண்டாம் என்று சொல்கிறாரா ? அப்படியானால், கோயில்களை எப்படி பராமரிப்பது ? அதற்கான தக்க யோசனைகளை, ஆலோசனைகளை அவர் கூறுவாரா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கோயில் நிர்வகிக்கக் கூடாது என்ற கருத்தி
லிருந்து நான் பேசவில்லை. அல்லது, கோவிலுக்கு வரக்கூடிய
வருமானத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நிலையிலிருந்
தும் நான் பேசவில்லை. ஆனால், பொதுவாக, குத்தகை என்ப
திலே இரண்டு விதமாக நீங்கள் பிரிக்க வேண்டும். ஒன்று,
நிலமற்ற அத்துக்கூலியாக இருந்த அந்த விவசாயக் குடும்பங்
களை, அந்தக் கோயில் நிலத்திலே நீண்டகாலமாக பயிரிடுகிற ஒரு
பிரிவைச் சார்ந்தவர்களாக நீங்கள் பிரிக்க வேண்டும்.

பிற்பகல் 12-40

இரண்டாவது, இந்தக் கோயில் நிலங்களையோ அல்லது
கோயிலுக்குச் சொந்தமான பல கோடி ரூபாய்க்குப் பெறுமானம்
உடைய அந்த நபர் யார் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும்.
அப்படி வருமானம் வரக்கூடிய அம்மாதிரி ஏமாற்றிக் கொண்டி
ருக்கக்கூடிய அந்த நபர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில்
எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது; எங்களுக்கு கருத்து
வித்தியாசம் கிடையாது. அந்த வருமானத்தைத்
தடுக்க வேண்டுமென்ற நோக்கமும் எங்களுக்குக் கிடையாது.
ஆனால் ஒரு நிலமற்ற, அத்துக்கூலியாக நீண்ட காலமாகப்
பண்ணை அடிமைகளாக இருந்த நிலைமை மாதிரி, திராவிட
பாரம்பரியத்தில் வந்திருக்கக்கூடிய அரசு வந்த பிறகுதான் உச்ச
வரம்புச் சட்டங்கள், அதற்கான சட்டத் திருத்தங்கள் அந்தக்
கோயில் நிலம் மொத்தக் குத்தகையிலிருந்து உடைக்கப்பட்டு
அந்த நிலங்கள் சில்லறையாக அந்த ஊரிலே இருக்கிற நில
மற்றவர்களுக்கு வழங்கப்பட்டது என்பதுதான் நடைமுறை.
இப்பொழுது அதற்கு மாறாக, இயற்கைப் பாதிப்பால்
ஏற்பட்டிருக்கக்கூடிய பாக்கிகளைக் காட்டி, கையிலே
யிருந்து கட்ட முடியாத சூழ்நிலையிலே இருக்கிற அந்த
விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப் போகிறோம் என்பதில்தான்
கருத்து வித்தியாசப்படுகிறோம். எனவே, அப்படிப்பட்ட ஏழை
விவசாயிகள் வைத்திருக்கிற நிலங்களில் இருக்கக்கூடிய பாக்கி
களை நீங்கள் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் அந்தக் குடும்பங்கள் வாழ வேண்டுமென்பதால்தான் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் கோயில் நிலங்கள் முழுமையையும் நாங்கள் எடுத்து அந்த நிலங்களைக் குத்தகை சாகுபடி செய்யக் கூடியவர்களுக்கு நாங்கள் இனாமாக வழங்குகிறோம் என்று அவர்கள் காலத்திலே ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு, அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, கையெழுத்து பெறாமல் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது என்பது நம்முடைய வரலாறாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித்தலைவர் காலத்தில் அப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு வந்து இங்கே நிறைவேற்றப்படவில்லை; மத்திய அரசுக்கு அனுப்பப்படவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. வே. தம்புசாமி :</u> 91-வது ஆண்டு நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் இதே பிரச்சினையை எழுப்பினேன். வருவாய்த்துறை அமைச்சரவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் அதுசம்பந்தமாக முதலமைச்சரவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து நிலம் சம்பந்தமாகக் குறித்து ஒரு நிதி ஏற்படுத்தி, ஒரு சுழல் நிதி ஏற்படுத்தி, அந்த நிதியின் மூலம் இந்த நிலத்திலே பேங்குகளின் மூலம் அவர்களுக்கு அந்த நிலத்திற்கான கடன் கொடுத்து உதவி செய்வதா அல்லது சுழல் நிதி மூலம் அந்தக் கோயிலுக்கு ஈடுகட்டுவதா என்று அரசு எதிர்காலத்திலே பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் ஏழை எளிய விவசாயிகள், நிலமற்ற விவசாயிகள் இதுவரை சாகுபடி செய்து வருகிறார்கள், விவசாயம் நடத்தி வருகிறார்கள் என்றால் அவர்களுக்கு ஏதாவது ஒரு நிரந்தர ஏற்பாட்டினைச் செய்வதைப்பற்றி இந்த அரசு பரிசீலிக்கும் என்று ஏற்கெனவே இந்த அவையில் தெரிவித்தேன்.



ஆனால் எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்கள் என்ன கூறுகின்றன என்றால், உண்மையிலேயே நேரடியாகக் கோயில்களிடமிருந்து நிலமற்ற சிறிய, குறு விவசாயிகள் குத்தகை நிலங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்றால் அப்படி இல்லை. பெரும்பாலான இடங்களில் என்ன நடந்திருக்கிறது என்றால் மாண்புமிகு தம்புசாமி அவர்களும், மாண்புமிகு பழனிசாமி அவர்களும் சார்ந்திருக்கிற பொதுவுடைமைக் கட்சிகளைச் சார்ந்த சில நிலச்சுவான்தார்கள், சில பெரியவர்கள் ஒட்டுமொத்தமாகக் குத்கைக்கு எடுத்துக் கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் சிறு விவசாயிகளுக்கும், குறு விவசாயிகளுக்கும் அங்கே மீண்டும் சப் லெட் செய்திருக்கிறார்கள், மீண்டும் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள் என்பன போன்ற தகவல்கள்தான் அரசுக்குக் கிடைத்து இருக்கின்றன.

எனவே, அரசினுடைய நோக்கம், உண்மையிலேயே நிலமற்ற விவசாயிகளாக இருக்கின்ற ஏழை எளிய விவசாயிகள், பாதிக்கப்படக் கூடாது. அவர்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கை பாதிக்காத அளவிற்கு ஒரு நிரந்தர ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று இந்த அரசு எண்ணுகிறது. நிச்சயமாக அதை இந்த அரசு ஆலோசனை செய்த பிறகு, ஆய்ந்த பிறகு ஒரு நல்ல முடிவினை எடுக்கும்; அவர்களுக்கு ஒரு நிரந்தரமான ஒரு நல்ல ஏற்பாட்டினைச் செய்யும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆனால், இன்றைய நிலைமையில், குத்தகை பாக்கியை வைத்திருப்பவர்கள் யார் என்று சொன்னால் அந்தச் சிறிய குறு விவசாயிகள் அல்ல. ஒட்டுமொத்தமாக நூற்றுக் கணக்கான ஏக்கர்களைத் தங்களுடைய பினாமி ஏற்பாடுகளைச் செய்து—தங்களுடைய பொறுப்பில் வைத்துக் கொண்டிருக்கிற சில பெரிய நிலச்சுவான்தார்கள்தான் இந்தத் தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

எனவே, அத்தகைய பணக்காரர்களிடமிருந்து குத்தகை பாக்கிகளை வசூல் செய்வது எப்படித் தவறாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் விளக்குவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>திரு. வே. தம்புசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் முன்னாலேயே சொன்னேன். அப்படி வசதி படைத்தவர்கள், செல்வாக்கு உள்ளவர்கள் அம்மாதிரி தவறாக வைத்திருக்கிற அந்த நிலங்களிலே நீங்கள் நடவடிக்கை எடுப்பதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று முன்னாலேயே சொல்லி விட்டேன். ஆனால் இப்பொழுது முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள், பொதுவுடை

மைக் கட்சியைச் சார்ந்தவர்கள் பொது குத்தகைக்கு எடுத்து இருக்கிறார்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அது சரியான தகவல் அல்ல. அப்படி ஆதாரம் இருந்தால் நிரூபிக்கலாம். அதில் எங்களுக்கு கருத்து வித்தியாசமே கிடையாது. அதிலே ஒன்றும் பிரச்சினை கிடையாது. அப்படி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கிடைத்து இருக்கிற தகவல் சரியான தகவல் அல்ல, இன்றைக்கு இருக்கக்கூடியவர்கள், சட்டப்படி நேரடியாகக் குத்தகை எடுத்துள்ள ஏழைஎளிய விவசாயிகள்தான் இன்றையதினம் இருக்கிறார்களே தவிர, மொத்தக் குத்தகையாக எடுத்து இருக்கமாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. எனவேதான் அதைப் பொறுத்தவரையிலே, கோயில் நிலங்களை .... (குறுக்கீடு)

பிற்பகல் 12–45

திரு. ஆர், சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம். அவர் பேசி முடித்து விடட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதைப் போல, சில பெரிய நிலச்சுவான்தார்கள் ஆயிரக்கணக்கான, நூற்றுக்கணக்கான ஏக்கர்களை வைத்துக் கொண்டு, சிலபேர்களுக்கு பிரித்துக் கொடுத்து உழுகின்றார்கள்; இது ஒன்று. இரண்டாவது, அவர் சொன்னதுபோல, சாதாரண ஏழைஎளியவர்கள் அனுபவிக்கிற சில நிலங்களும் உண்டு. அந்த நிலங்களையெல்லாம் நிலச்சுவான்தார்கள் மொத்தமாக, ஒட்டுமொத்தமாக வாங்கி, அவர்கள் பெயரிலே இவர்கள் அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதையும்தான் சேர்த்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்கு என்ன பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லப்போகிறார் என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமியே பதில் சொல்வார். (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி.





திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுகிற போது, பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்து இருக்கக் கூடியவர்கள் பினாமியாக, கோயில் நிலங்களை அதிகமாக வைத்துக்கொண்டு, அவர்கள் சட்டத்தை ஏமாற்றுகிற அளவிற்கு இருப்பதாக, ஆதாரபூர்வமாக இந்தச் சட்டமன்றத்திலே கூறுகிறார்கள். இந்த நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக மிச்ச நிலங்களை எடுக்கவேண்டும். பினாமி நிலங்களை கையகப்படுத்தி, நிலமற்றவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று, சொல்லி, கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பேரியக்கம் தொடர்ந்து போராடிக்கொண்டு வந்திருக்கிறது. ஒவ்வொரு சட்டமன்றத்திலேயும், உச்சவரம்புச் சட்டங்களை வலியுறுத்தி பேசிக்கொண்டு வந்திருக்கிறது. இப்பொழுதும் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்கள் யார் பேரில் இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பகிரங்கமாக அறிவித்து அவர்கள்மீது உரிய நடவடிக்கை, இருக்கிற சட்டத்தைப் பயன்படுத்தி, நிலத்தை எடுக்கவேண்டுமென்பதைத்தான் நான் எங்கள் கட்சியின் சார்பாக சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில வெளியேற்றத்தைத் தடை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இப்போது இருக்கிற வருவாய் நீதி மன்றத்தைவிட, 6 வருவாய் நீதிமன்றங்களைத் திறப்பதாகக் கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. அதுபோன்ற நீதிமன்றங்களைத் திறந்து சாதாரண ஏழைஎளிய விவசாயிகளை கோர்ட்டிலே நிறுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் ரூ. 874.57 லட்சம் மதிப்பிற்கான வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த வழக்குகளை வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் 10,777 வழக்குகளை மீண்டும் போடுவதற்கு தீர்மானித்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையும் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கோயில் நில வழக்கு மட்டுமல்ல, இதில் அப்படி வருகின்றபோது பல்வேறுவிதமான சிக்கல்கள் இருக்கின்றன. இது எப்படி அந்த விவசாயிகளைப் பாதிக்குமோ? அதேபோன்று அரசுக்குச் சம்பந்தமில்லாத சில டிரஸ்ட்டுகள் இருக்கின்றன. அதிலே நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அதிலும் சாதாரண விவசாயிகள் சாகுபடி செய்து வருகிறார்கள். அதேபோல்

தனியார் நிலங்களிலும் குத்தகைக்குச் சாகுபடி செய்து வருகிறார்கள். இவ்வளவையும் சேர்த்துத்தான் குத்தகை பாக்கி என்பது வந்திருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுமேயானால் அனைத்து விவசாயிகளும் கோர்ட்டிலே நிற்கக்கூடிய ஒரு அபாய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, இதை அரசு கைவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரையில் ஏற்பட்டிருக்கக்கூடிய குத்தகை பாக்கிகளை தள்ளிவிட்டு, நடப்பு ஆண்டுக்கான குத்தகையை வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும். அப்படி வசூலித்துக் கொள்வதிலே ஆட்சேபணை கிடையாது. காரணம் என்னவென்றால் நீண்ட காலமாக வடிகால், வாய்க்கால் சீரமைக்கப்படாமல் அவைகள் சீரழிந்து கிடக்கிற காரணத்தால், விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியாமல் இவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறதே தவிர, உண்மையிலேயே விவசாயிகள் அளக்கக் கூடாது என்ற தவறான கருத்தில் குத்தகை பாக்கி ஏற்பட வில்லை. ஆகவே, அது முழுமையையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களால் அறிவிக்கப்பட்ட குத்தகைச் சட்டத்தை, அந்தச் சலுகைச் சட்டத்தை, அரசு அமுல் படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், அறநிலையத் துறையிலே இன்றையதினம் வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆணையரிடமிருந்த அதி காரங்கள் முழுமையும் அந்த வாரியத்திற்கு மாற்றப்பட்டிருக் கிறது. அப்படி என்று சொன்னால் அந்த ஆணையரின் வேலை என்ன ? அவர் என்ன பணியினைச் செய்யப் போகிறார் ? இவை பற்றி கொள்கை விளக்கக் குறிப்பிலே விளக்கமாகக் குறிப்பிடப்படவில்லை. அவர்களுடைய அதி காரங்கள் முழுமையும் வாரியத்திற்கும், மாவட்டக் குழுக் களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலை என்பது ஆணையரின் அதிகாரம் பறிக்கப்பட்டிருக்கிறது என்பதுபோல் இருக்கிறது. அப்படி என்றால் அந்தப் பதவி எதிர்காலத்திலே தேவைதானா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும். அதே நேரத்தில் ஆலயத்தில் ஏறத்தாழ....

பிற்பகல் 12-50

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு முத லமைச்சர் அவர்கள்.





<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆணையர் பதவி எதற்கு என்ற கேள்வியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பி இருக்கின்றார். முன்பு ஆணையரிடமும், அரசாங்கத் திடமும் மட்டுமே குவிந்திருந்த அதிகாரங்கள் இப்போது பிரிக்கப்பட்டு வாரியத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, பல்வேறு ஆன்மீகப் பெரியவர்கள் ஆலோசனைகள் வழங்கி அவர்களுடைய அறிவுரையின் பேரில் இப்போது வாரியம் செயல்பட்டுக் கொண்டுவருகிறது. வாரியம் என்னென்ன முடிவுகள் எடுக்கின்றதோ Excute அந்த முடிவுகளை நிறை வேற்றுபவர் பண்ணுபவர் கமிஷனர்தான். எனவே, நிர்வாகம் என்பது, இந்த Hindu Religicus and cheritable Endcvment Departments மூலம் முன்பு போல நடைபெறும் என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>திரு, வே. தம்புசாமி</u> : பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயத்திலே ஏறத்தாழ 49,713 ஊழியர்கள் பணியாற்றுகிறார் கள். இந்த ஊழியர்களிலே இரு வகையாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றன. ஒன்று அரசு ஊழியர்களாக அங்கீகரிக்கப்பட்டு அரசுமூலம் உயர் வருவாய் வரக் கூடியவர்கள். அப்படி 4,166 பணியாளர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட் டுள்ளது. மீதம் இருக்கக்கூடிய குறைந்த வருமானம் உடை யவர்கள் 45,547 பேர்கள். இவர்களுடைய வருமானம் ஒரு நிரந்தரமான வருமானம் இல்லை. இவர்களுடைய வருமானத் தில் ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. ஒரு 300 ரூபாய் சம்பளம் வாங்கக் கூடிய ஊழியர் ஒரே வேலையைச் செய்கிறார் என் றால், அதே ஊழியர் 100 ரூபாய் சம்பளம் வாங்குகிறார். ஒரு மூட்டை நெல் வாங்குகிறார். ஆகவே, வேலைக்கு பட்டை சாதம் வருமானம் என்பது போல் வருமானம் பெறுகிறார். ஆகவே, ஒரே வேலையைச் செய்யக்கூடிய ஊழியர்களுக்கு இப் படிப்பட்ட ஒரு சம்பள விகிதாச்சாரம் இருப்பது என்பது எந்த அளவுக்கு நியாயமானதாக இருக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண் ி புகுமுதலமைச் சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோயில்களுக்கு வரவேண்டிய குத்தகை பாக்கிகளையும் வசூ லிக்கக் கூடாது என்கிறார். தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொல்கிறார். கோயில் ஊழியர்களுக்கு இவ்வளவு குறைந்த சம்பளம் கொடுப்பது நியாயம்தானா என்கிறார். (மேசை யைத் தட்டும் ஒலி). எனவே, கோயில்களுக்கு வரவேண்டிய வருமான பாக்கியை வசூல் செய்யக்கூடாது. குத்தகை

பாக்கியை வசூல் செய்யக்கூடாது என்று சொல்லி விட்டு, அடுத்த மூச்சிலேயே சம்பளத்தைப் பெருக்கித் தரவேண்டும் என்று கூறுவது நியாயமாகுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் விளக்கிச் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. வே. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலேயே சொன்னேன். குத்தகையிலே இரண்டு விதமாகப் பார்க்க வேண்டும். ஒன்று எங்கு அதிக வருமானம் வரக்கூடிய பகுதி இருக்கிறதோ அதை ஆராய்ந்து அதைப் பெற வேண்டும். ஆகவே, சாதாரணக் குத்தகை விவசாயிகளையும், கோடிக்கணக்கான வருமானம் வரக்கூடியவர்களையும் ஒன்றாகப் பார்க்க வேண்டாம் என்று தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு இருக்கிறேன். அந்த வகையில் அந்த வருமானத்தைப் பெற்று, கோயிலில் இருக்கக்கூடிய ஏற்றத் தாழ்வு நிதிகள் முழுமையையும் ஒன்றாக்கி ஒரே சீரான, சம்பளம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். சில கோயில்களிலே இலட்சக்கணக்கான வருமானம் வருகிறது. சில கோயில்களிலே வருமானமே வராமல் உள்ளது. அதிலேயே வித்தியாசம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1959–ஆம் ஆண்டு சட்டத்தின் படியே ஒரு கோயில் வருமானத்தில் 40 சதவீதத்திற்கு மேல் சம்பளங்கள் மிகக் கூடாது என்று இருக்கிறது. எனவே, கோயில்களுக்கு வருமானமே இல்லாதபோது எப்படிச் சம்பளங்களை அதிகப்படுத்திக் கொடுக்க முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் சுழல் நிதி ஏற்படுத்தப்பட்டது. அதிலே ஏறத்தாழ 7 கோடி ரூபாய் இருக்கும் என்று கருதுகிறேன். அதே மாதிரி இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலும் அந்த நிதி வசூலிக்கப்படுகிறது. அதே நேரத்தில் வருமானம் வரக்கூடிய, பக்தர்கள் காணிக்கையாகச் செலுத்துகின்றவைகள் மூலம் வருகின்ற வருமானம் உள்ள கோயில்கள் இருக்கின்றன. இப்போது பழனி கோவில் இருக்கிறது. எட்டுக்குடி முருகன் கோவில் இருக்கிறது. ஆண்டுக்கு ஏறத்தாழ 15 இலட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த மாதிரி மொத்தமாக வருமானம் வரக்கூடிய கோவில்கள், வருமானம் வரப்பெறாத கோயில்கள் ஆகியவற்றின்



வருமானங்களை ஒன்றாக்கி, பொது நிதி ஆக்கி, அதன் மூலம் அந்த ஊழியர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோரிக்கை வைத்திருக் கிறீர்கள். நேரம் ஆகிவிட்டது. போதும்.

திரு. வே. தம்புசாமி : அதே நேரத்தில் அறநிலையத் துறையிலே பணியாளர்கள் அவ்வப்பொழுது நியமிக்கப்படுகிறார் கள். அப்படி பணியாளர்கள் நியமிக்கப்படுகிறபோது நீண்ட காலமாக அந்தக் கோயில்களில் பணியாற்றுகின்ற ஊழியர் களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கின்ற வகையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இவ்வளவு நெருக் கடியில் வாழ்ந்துகொண்டிருக்கிற அவர்களை அரசு ஊழியர் களாக அறிவிக்க வேண்டும். அதோடு, பணியிடம் காலியாகும் போது இந்த இடத்தை நிரப்புவதற்கு உடனடியாக தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

பிற்பகல் 12.55

அதைப்போன்று, அந்தப் பணியாளர்கள் பணியில் இருக்கும் போது இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கு 20,000 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அரசு ஊழியர்களுக்கு 60,000 ரூபாய் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. யாராக இருந்தாலும் உயிர் என்பது ஒன்று தான். ஆகவே, எல்லோருக்கும் ஒரே மாதிரியாக அறிவிக்கலாம் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). இன் னும் ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரமாகிவிட்டது; மீத மிருப்பதை அடுத்த மானியக் கோரிக்கையில் பேசலாம். (குறுக்கீடு). ஒரு நிமிடத்தில் முடித்துவிட வேண்டும்.

திரு. வே. தம்புசாமி : இளநிலை உதவியாளாகளைப் பொறுத்த வரையில் 13—12—1991–க்குப் பிறகு தகுதி இருக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலே அற நிலையத் துறையிலே பலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் களுக்கு இது பொருந்தாது என்று அரசு பரிசீலித்து, அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேதாரண்யத்தில் மிகப் பெரிய மடம் ஒன்று இருக்கிறது. அதனுடைய நிர்வாகம் முழுமையும் இலங்கையில் இருக்கக் கூடியவர்களுடைய கையில் இருக்கிறது. இது சரியா என் பதை அரசு பரிசீலித்து, அந்நியப் பகுதியிலே இருக்கக்கூடிய அந்த நிர்வாகக் குழு இங்கே வைத்திருக்கிற

நிலங்கள், மடங்கள் எல்லாவற்றையும் அரசு மேற்கொள்வதற்கு எதிர்காலத்திலே பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, இந்த மானியத்திலே ஒருசில கருத்துக்களைக் கூறுவதற்கு அனுமதி தந்த தங்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏராளமாகக் கூறியிருக்கிறீர்கள். மாண்புமிகு முதலைமச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் இங்கே தெரிவித்த பல கருத்துக்களுக்கு நான் என்னுடைய பதில் உரையிலே விரிவான விளக்கங்களைத் தர இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையிலே இருந்து என்னுடைய பதில் உரையைக் கேட்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. சுப்புரத்தினம். (குறுக்கீடு). நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

திருமதி ரமணி நல்லதம்பி: ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறார். ஒரு நிமிடம் கொடுங்கள்.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: தலைவரவர்களே, ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் முடித்து விட வேண்டும்.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான அம்பாசமுத்திரத்திலே ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கரும்பாலை ஒன்று அமைக்க ஏற்பாடு செய்திருந்தார்கள்; அதற்கான அறிவிப்பும் செய்திருந்தார்கள். அதற்காக என்னுடைய தொகுதி மக்கள் நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள். அந்தக் கரும்பாலை அமைப்பதற்கு 200 ஏக்கர் நிலம் தேவை. அந்த 200 ஏக்கர் நிலம் எடுப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தோம். அங்கே அறநிலையத் துறைக்குச் சொந்தமான 150 ஏக்கர் நிலத்தை, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி கட்சியைச் சேர்ந்த ஒருவர் தன் கையிலே வைத்திருந்தார். அவர் முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்; இப்போது தலைவராக இல்லை. அந்த நிலத்தை எங்களுக்குத் தருவதற்காக கிட்டத்தட்ட 9 இலட்சம் ரூபாய் தந்தால் அந்த இடத்தை



விட்டுத் தருகிறோம் என்று சொல்லி, புரோக்கர் மூலம் செய்தி அனுப்பியிருந்தார். அது அவருக்குச் சொந்தமான நிலமா என்று கேட்டால் இல்லை; கோயிலுக்குச் சொந்தமான நிலம். என்னுடைய அனுபவத்தில் 10 வருடங்களாக இருக்கிறது; அதை விட்டுத்தர வேண்டுமென்றால் 9 இலட்சம் ரூபாய் தர வேண்டுமென்று சொல்லி அனுப்பியிருந்தார் என்பதை இங்கே தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: தலைவரவர்களே, இப்படி பொத்தாம் பொதுவிலே சொல்லக் கூடாது. அவருடைய பெயரைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெயரைச் சொன்னால், பிறகு அவையில் இல்லாதவர் பெயரைச் சொல்லலாமா என்று கேட்கலாம். அதனால் பெயரைச் சொல்லாமல் விட்டுவிட்டார்.

திரு. வே. தம்புசாமி: பல பேர் தொழிற்சங்கத் தலைவர்களாக இருக்கிறார்கள். அவ்வப்போது மாநாடுகளிலே அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அது வேறு பிரச்சினை. ஆனால் அவர்கள் சொல்லுகிற மாதிரி எந்தத் தகவலும் இல்லை. அப்படி இருந்தால் நேரிலே சொல்லுங்கள், நடவடிக்கை எடுக்கலாம். அதிலே கருத்து வேறுபாடு இல்லை.

திரு. ஆர். ஈஸ்வரன்: தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவரம் இருந்தால் அதை மாண்புமிகு முதலமைச்சரிடம் கொடுங்கள்; நடவடிக்கை எடுப்பார்கள். (குறுக்கீடு) ஆதாரம் இருந்தால், அதை முதலமைச்சரிடம் கொடுங்கள். இல்லை என்றால் விவரத்தை எழுதிக் கொடுங்கள்.

திரு. ஆர். ஈஸ்வரன்: தலைவரவர்களே, என்னிடம் ஆதாரம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரம் இருந்தால் அதை மாண்புமிகு முதலமைச்சரிடம் கொடுங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளபடியே தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் வே. தம்புசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். தவறு இருந்தால் அவை முறைப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்று அவர்களே சொன்னதற்குப் பிறகு பிரச்சினை இல்லை; ஆதாரத்தைக் கொடுக்கட்டும்.

[1992 ஏப்ரல் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். ஈஸ்வரன்.

திரு. ஆர். ஈஸ்வரன்: தலைவரவர்களே, என்னுடைய வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் சிவகிரி கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. சுமார் 150 விவசாயிகள் கொண்ட அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் பெயரால், அதற்கு தலைமை ஏற்று இருக்கக் கூடிய நபர் கிட்டத்தட்ட 14,369 மூட்டை நெல் தானியம் அரசுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதுவரையில் வரவில்லை; நிலுவையில் இருக்கிறது. ஆனால் விவசாயிகளிடமிருந்து இவர்கள் வாங்கி, வட்டி கொள்முதல் செய்து பெரிய 'பிஸினஸ்' நடந்து கொண்டிருக்கிறது. அதற்கான ஆதாரம் இருக்கிறது' கொடுக்கிறேன்.

பிற்பகல் 1.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை முதலமைச்சரிடம் கொடுங்கள். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்கள் பல இடங்களில் இருக்கின்றன. அந்தக் கூட்டுறவு சொசைட்டி மூலமாகச் சாகுபடி செய்து நெல்லைப் பெற்று அதன் மூலமாக இரண்டொரு நபர்கள் பேரிலேதான் அந்தக் கோயில்களுக்கு அல்லது மடங்களுக்கு அல்லது தர்ம ஸ்தாபனங்களுக்கு அளப்பது என்பது வழக்கமாக இருக்கிறது. அதைத்தான் அவர் சொல்கிறார். நீங்கள் அனுமதி கொடுத்தால் இந்தச் சபையிலே ஆதார பூர்வமாக சர்வே நம்பரோடு தஞ்சை மாவட்டத்தில் யார், யாரிடத்தில் எவ்வளவு ஏக்கர், அதாவது ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது என்கிற விவரத்தைத் தர நான் தயாராக இருக்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அரசுக்கு உதவுகிற நோக்கோடு அந்த விவரங்களை எல்லாம் முதலமைச்சரிடம் கொடுத்தால் முதலமைச்சர் அவர்கள் உடனடியாக தயவு தாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுக்கிறேன் என்று அறிவித்திருக்கிறார்கள். திரு. ஈஸ்வரன் அவர்களும் கொடுத்து விடலாம். திரு. பழனிசாமி அவர்களிடத்திலும் அந்த மாதிரி ஏதாவது தகவல் இருந்தாலும் கொடுத்து விடலாம். திரு. ஆ. சுப்புரத்தினம்.



1992 ஏப்ரல் 9]

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் மீதான மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

கோடான கோடி மக்கள்
மனக்கோயில் கொலுவிருக்கும்
வாடாத பாரிஜாதம்
மாணிக்க மனித தீபம்
நடமாடும் மனித தெய்வம்
செய்தவத்தால் கிடைத்த செல்வம்
தேயாத அன்புத் தெய்வம்
பாடாத புலவரில்லை
பாரினில் எங்கள் புரட்சித் தலைவிக்கீடில்லை,

எனக்கூறி (குறுக்கீடுகள்),

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி அவர்கள் பதிலுரையின்போது வந்து விடுவார்கள்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: பேரவைத் தலைவர் அவர்களே, பாரினில் எங்கள் புரட்சித் தலைவிக்கீடில்லை எனக்கூறி என்னுடைய நன்றியை அவர்களுடைய பொற் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

தமிழகத்தின் முதன்மைத் திருத்தலமாம்; தமிழ்க்கடவுள் முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகம் சீராகவும், சிறப்பாகவும், செம்மையாகவும் நடைபெற நல்லபல நடவடிக்கைகளை எடுத்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதங்கள் பணிந்து என் நன்றியினைச் சமர்ப்பிக்கிறேன்.

தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவைத் தொகை நிவாரணச் சட்டம் கடந்த இருபது ஆண்டுகளாகச் செயலில் இருந்ததால், ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பயிரிடும் குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகை நிலுவைகளை வசூலிக்க இயலாத நிலை இதுவரை இருந்தது.

இயலாது என்ற வார்த்தைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அகராதியிலேயே இடம் இல்லை என்பதற்கிணங்க, ஏறத்தாழ 20 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர், இதுவரை ஒத்திவைக்கப்பட்ட கடன் தவணை ஒத்திவைப்புச் சலுகையை

31–7–1991-லிருந்து நீக்கும் துணிகர நடவடிக்கையை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு தைரியமாக எடுத்துள்ளது மிகவும் பாராட்டிற்குரியதாகும். குத்தகை நிலுவைத் தொகை தொடர்பான வழக்குகளை விசாரிக்க 5 வருவாய் நீதிமன்றங்களே இருந்த நிலையை மாற்றி, மேலும் 6 வருவாய் நீதிமன்றங்களை அமைக்க அரசு அனுமதித்துள்ளது. இது புரையோடிப் போன இந்த குத்தகை நிலுவைப் பிரச்சினையை முடிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு எந்த அளவு போர்க்கால நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதற்குச் சான்றாக அமைகிறது.

பணியின்போது இறக்கும் பணியாளர்களது குடும்பங்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த ரூபாய் 10,000-ஐ இருபதாயிரமாக தாயுள்ளத்தின் அரசி, தர்ம தேவதை, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உயர்த்தியது கண்டு ஆன்றோர்களும், சான்றோர்களும், ஆன்மீகப் பெரியோர்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்தி வணங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

பழநி திருக்கோயில் தமிழகத்தில் மிகப் பெரியதும், புகழ் வாய்ந்த திருக்கோயிலுமாக இருக்கின்ற காரணத்தால், இந்தத் திருக்கோயிலுக்கு வருகின்ற இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டியது அவசியமாகிறது. அவற்றில் முக்கியமான சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். மலைக்கோயில், அதன் தங்குமிடங்கள், கல்லூரிகள் ஆகியவற்றில் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகமாகவுள்ளது. இதை மாற்றி அமைத்து திருக்கோயில் மற்றும் அதன் சார்பு நிறுவனங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாதுள்ள நிலைமையை உருவாக்க வேண்டி, அதற்குத் தேவையான நிரந்தரத் திட்டங்களைத் தீட்டித் தருமாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற் பாதம் பணிந்து நான் கேட்டுக் கொள்கிறேன்.

பழனியில் என் தொகுதியைப் பொறுத்தவரையில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தந்தால், இந்தப் பிரச்சினைக்கு ஒட்டு மொத்தமாக நல்ல முடிவு ஏற்படும் என்பதை, இந்த நல்ல தருணத்தில் நான் தெரியப்படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்,

திருக்கோயிலின் மின் இணைப்புகள் மற்றும் அமைப்புகள் நிலையாக இருக்கும் வகையில் செய்யப்படவில்லை எனத் தெரிகிறது. இது குறித்து இந்தப் பிரச்சினை நீக்கி நிரந்தரமான அமைப்புக்களைத் தரக்கூடிய ஒரு அமைப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



பிற்பகல் 1–05

பழனி தேவஸ்தான நிர்வாகத்தின்கீழ் சற்றொப்ப 9 கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த 9 நிறுவனங்களை ஒருங்கிணைத்து மேலும் பழனி கோயிலினுடைய வருமானம் ஆண்டிற்கு 14 கோடி ரூபாயை மிஞ்சக்கூடிய அளவில் இருக்கக் கூடிய காரணத்தினால், இந்த 9 கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து, ஒரு பல்கலைக் கழகமாக உருவாக்கினால், அண்ணா மாவட்டத்திற்கு மிகப் பெரிய புகழ் கிடைத்தது புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் என்ற பெருமை அமையும் என்பதை சொல்லிக் கொண்டு, அண்ணா மாவட்டத்தில் அமைந்திருந்த அன்னை தெரசா பல்கலைக் கழகம் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக சென்னைக்கு கொண்டு வந்த நிலையைப் போக்கும் வகையில், பழனி தேவஸ்தானத்தின் கீழ் இயங்கக் கூடிய நிறுவனங்களை ஒருங்கிணைத்து, ஒரு பல்கலைக்கழகம் உருவாக்குமாறு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கறேன்.

மேலும் பழனி கோயில் நிர்வாகத்தையும், கல்லூரி நிர்வாகத்தையும் ஒரே ஜே.சி. அவர்களே நிர்வகித்து வருவதால், இரண்டு பணிகளையும் ஒருசேர கவனிப்பது வேலைப் பளுவை அதிகமாக்குகிறது. எனவே கல்லூரி நிறுவனங்களை தனியாக நிர்வகிக்க ஒரு டீ.சி. டெபுட்டி கமிஷனர் நியமித்தால் இந்த வேலைப்பளு நீங்கும். துரிதமாக வேலைகள் நடைபெறும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு.

<u>திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மரியாதைக்குரிய முதல்வர் அவர்களின் மானியக் கோரிக்கை எண் 12 இந்து சமய அறக்கட்டளை நிர்வாகத்தின் கீழ் பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டினுடைய நிரந்தர முதல்வர் புனிதத்தாய், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற் பாதங்களை வணங்கி எனது பணிவான வணக்கத்தைச் சமர்ப்பித்துக் கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன். ஆலய நிர்வாக வாரியம் நல்ல சிறப்பான முறையிலே தமிழகத்திலே செயல்பட்டுக் கொண்டிருப்பது இந்த நாடு அறியும். நாட்டு மக்கள் அறிவார்கள், 13–12–1991 அன்று ஆலய நிர்வாக வாரியம் கூடி, 132 பணிகள் விவாதிக்கப்பட்டு, நிர்வாக வாரியம் 3.19 கோடி

ரூபாய் செலவில் திருப்பணிகளுக்கும், கள்ளர் எச்சரிக்கை மணி மண்டபம், கட்டடங்கள், குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் கட்டுவதற்கு ஒதுக்கியிருப்பதனைக் கண்டு, ஆலய நிர்வாக வாரியம் சிறப்பான முறையிலே செயல்பட்டுக் கொண்டிருப்பது என்பது இதிலே ஒரு சான்றாக இருந்து கொண்டிருக்கிறது.

அண்மையில் மகாமகத்திற்கு தமிழக அரசின் சார்பில் 12.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து சிறப்பான முறையிலே மகாமகம் திருவிழாவினை நடத்தி, நல்லதொரு ஆன்மீக இறை உணர்வினை உருவாக்கி வருகிற மனித தெய்வம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

திருக்கோயில் திருப்பணிகளுக்காக 1991–92 ஆம் ஆண்டு 54 ஆலயத் திருப்பணிகள் மேற்கொள்வதற்கு, 72.50 இலட்சம் ரூபாயினை ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாக அமைந்து இருக்கிறது. திருக்கோயில்களுடைய நிர்வாகங்கள் இன்றையதினம் சீராகவும் செம்மையாகவும் தமிழகத்தில் புனிதத் தன்மையோடும். புனிதத் தாய் புரட்சித் தலைவி அவர்கள் நடத்தி வருகிறதை இந்த நாட்டு மக்களும் நல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

திருக்கோயிலினுடைய பணிகள் தற்போது மிகப்பெரிய திருக்கோயில்களான திருத்தணி, பழனி, திருவேற்காடு போன்ற கோயில்களில் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கின்றவர்கள் ஜாயின்ட் கமிஷனர் என்று அழைக்கப்படுகின்ற இணை ஆணையர்களை நியமித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஓய்வு பெறுகின்ற நேரத்திலே, இணை ஆணையர்களை நியமிப்பதால், நிர்வாகப் பொறுப்பினை ஏற்கின்ற போது நாம் ஓய்வு பெறுகிறோம் என்ற நினைவோடு இருந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே, அவர்கள் நிர்வாகத்திலே சரியான அக்கறை கொள்ள முடியாத நிலையிலே இருக்கின்ற நிலை இருக்கிறது. எனவே, இன்றைக்கு ஒரு மாற்று ஏற்பாட்டினை மனித தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது திருக்கோயிலினுடைய பணிகள் ஒரு சில ஊழியர்களை திராவிட முன்னேற்றக் கழக அரசு, குறிப்பாக நாத்திகர்களை நியமித்திருக்கிறது. தொடர்ந்து அவர்கள் இன்னும் பணியாற்றி வருவதால், நீக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மரியாதைக்குரிய மனித தெய்வம், தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், புனிதத் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே திருத்தணி திருநகரத்தில் மைய அரசினுடைய ஒத்துழைப்போடு ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு பேருந்து



நிலையத்தை அமைப்பதற்கான ஆவணங்களைச் செய்து வருகிறார்கள். திருக்கோவிலுடைய அருகாமையிலேயே, குறிப்பாக மலைக் கோயிலுக்கு செல்கின்ற பாதையினுடைய அருகாமையிலேயே அந்தப் பேருந்து நிலையம் அமைய இருக்கிறது. எனவே, உடனடியாக அந்த இடத்தை கையகப்படுத்தி, அந்தப் பேருந்து நிலையத்தைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு இதயத் தெய்வம் முயற்சி செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்

பிற்பகல் 1–10

இன்றைய தினம் என்னுடைய தொகுதியில் இருக்கிற மத்தேடு பகுதியில் சிவன் கோயில் ஒன்று உள்ளது. மரியாதைக்குரிய அந்த சிவன் கோயில் இப்பொழுது பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. கடந்த மானியத்திலும் நான் பேசினேன், அந்த சிவன் கோயிலைப் புதுப்பித்துத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல திருவேலங்காட்டிலே பாடல் பெற்ற ஸ்தலமான அந்த திரு. வேலங்காடு நடராஜர் பெருமாள் கோயிலில் இருக்கின்ற அந்த சித்திர தேரினை பழுதுபார்த்து, செப்பனிட வேண்டுமாய் கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு, வாய்ப்பினை உருவாக்கித் தந்த அன்பு பேரவைத் தலைவருக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனது தொகுதிக்கு, திருவேலங்காட்டுக்கு காவல் நிலையத்தை அமைத்துத் தர வேண்டும். அதுபோல எங்கள் திருத்தணி நகரத்தை முக்கிய திருத்தலமாக அறிவித்தும், குறிப்பாக எங்கள் திருத்தணி நகரத்திற்கு பல்வேறு நல காரியங்களைச் செய்து வருகின்ற இதயத் தெய்வம் புரட்சித் தலைவியின் பொற் பாதங்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, புரட்சித் தலைவியினுடைய கடைசித் தொண்டனாக இருந்து, புரட்சித் தலைவிக்கு எனது உயிர் என சொல்லி, எனது உடல் தமிழ் மண்ணுக்கு என தெரிவித்து முடிக்கிறேன், நன்றி வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. டி. சுதர்சனம். 10 நிமிடத்திற்குள் முடிக்க வேண்டும்.

<u>திரு. டி. சுதர்சனம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்னாலே நான் தஞ்சாவூருக்கு பக்கத்திலே இருக்கின்ற திருவிடைமருதூருக்கு அருகே இருக்கின்ற ஒரு இடத்திற்கு சென்றிருந்தேன். அப்படி சென்றபோது அங்கே மிகப் பெரிய தொன்மை வாய்ந்த கோயில் ஒன்று இருந்தது.

அந்தக் கோயில் மிகப் பாழ்பட்டு இருந்தது. அங்கே இருந்த ஒருவரை பார்த்து ஏன் இவ்வளவு பெரிய கோயில், இவ்வளவு பாழ்பட்டு இருக்கிறதே என்று கேட்டேன். அப்போது அங்கே இருந்த நண்பர் இந்த கம்யூனிஸ்ட் கட்சியை, இயக்கத்தைச் சார்ந்தவர்கள் மிகப் பெரிய அளவிலே எல்லாம் நிலங்களைப் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்த நிலங்களிலிருந்து எந்த வருமானத்தையும் கொடுப்பதில்லை. அந்த வருமானம் இல்லாத காரணத்தாலே அந்தக் கோயில் இவ்வளவு பாழ்பட்டு இருக்கின்றது என்று சொன்னார். நான் பார்க்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் எவ்வளவு கோயில் சொத்துக்களை எல்லாம் அங்கே கொடுக்காத காரணத்தாலே தான் கோயிலுக்கு வருமானத்தை குறைக்கின்ற, வகையிலே இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதை இன்றைக்கு உண்மை என்று நம்பிக்கொண்டிருக்கிறேன். மேலும் அது உண்மைதான் என்கின்ற வகையிலும் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் இங்கே பேசுவதைப் பார்க்கும்போது என்னாலே புரிந்துகொள்ள முடிகிறது. அதற்காக அவர்கள் கோயிலினுடைய வருமானத்தை எல்லாம் இத்துறைக்குத் தர வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கம்யூனிஸ்ட் நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உட்காருங்கள். (குறுக்கீடு) என்னைப் பார்த்துப் பேசுங்கள். இது கோயில் பற்றியது. அவரவர்கள் உச்சவரம்புக்கு மேலே வைத்திருப்பது பற்றி எல்லாம் இங்கே வந்து இணைத்துப் பேசக்கூடாது. அவர் சொல்வது கோயில் நிலங்களைப் பற்றி. அதையும் இதையும் இணைக்கக்கூடாது. அவர் பேசியது கோயில் நிலங்களைப் பற்றிய பிரச்சினை. (குறுக்கீடு). இல்லை, இல்லை. அது சரியாக வராது. நீங்கள் அதையும் இதையும் இணைக்கக் கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள். அதாவது அவர் சொல்வது கோயில் குத்தகை பாக்கியைப் பற்றி. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குற்றச்சாட்டுக்கு இன்னொரு குற்றச்சாட்டு பதில் ஆகாது. ஆனால், அவர் சொல்கிற குற்றச்சாட்டு குத்தகை நிலங்களை பொதுவுடமை கட்சிக்காரர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது. நீங்கள் அப்படி வைத்துக்கொண்டிருக்கிறோம் அல்லது வைக்கவில்லை என்று சொல்லுங்கள். அந்தக் குற்றச்சாட்டுக்கு வேறு குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. அப்படியென்றால் அவர்கள் குற்றம் செய்தார்கள், ஆகவே, நாங்களும் குற்றம் செய்வோம் என்று சொல்கிறீர்களா ? ஆகவே, ஒரு குற்றச்சாட்டுக்கு இன்னொரு குற்றச்சாட்டு பதிலாக அமையாது. ஆகையினால், குற்றம்



சொல்வதைவிட கோயில் நிலங்களை பொதுவுடமை கட்சிக்காரர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், நாங்கள் வைத்துக்கொண்டிருக்கிறோம் அல்லது வைத்துக்கொள்ளவில்லை என்று நேரடியாக பதில் சொல்லிவிடுங்கள். அதற்காக சுற்றி வளைத்து பதில் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

<u>திரு. டி. சுதர்சனம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டில் வளம் கொழிக்க வேண்டுமானால் நல்லாட்சி அமைய வேண்டும். நல்ல ஆட்சி அமைய வேண்டுமானால் நன்மக்கள் கொண்ட அமைச்சரவை இருக்க வேண்டும். அதற்குத் தலைமைதாங்க சீலமுள்ள முதல்வர் வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி மூன்றையும் ஒருங்கே கொண்டதுதான் நமது அமைச்சரவை. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பிலே உள்ள இத்துறை, அவர்களையே தலைவராகக் கொண்டு கோவில் நிர்வாக வாரியம் என்னும் அமைப்பும் இதனுடன் செயல்படுவது இத்துறைக்கு மேலும் சிறப்பூட்டுவதாக அமைகிறது.

“ சாத்திரங்கள் பல பல கற்பராம்

சவுரியங்கள் பல பல செய்பவராம்

மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்

மூடக் கட்டுகள் யாவும் தகர்ப்பராம்

காத்து மானிடர் செய்கையனைத்தையும்

கடவுளர்க்கு இனிதாக சமைப்பராம்

ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்பவராம்

இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டீரோ ”

(மேசையைத் தட்டும் ஒலி) என்னும் பாரதியின் இலட்சிய வாக்கினுக்கு ஏற்ப நமது முதல்வர் செயல்பட்டு வருகிறார். ஆகவே இத்துறையின் செயல்பாட்டுக்கு மேலும் சில ஆலோசனைகள் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே நம்முடைய ஆலயங்கள் இன்றைக்கு வழிபாட்டுக் கூடங்களாக மட்டுமில்லாமல், மக்களின் சமுதாய பொருளாதார, கலை, கலாச்சாரம் போன்ற தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் பண்டைக் காலம் முதல் இன்று

வரை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. ஆலய வழிபாடுகளோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் பொது சேவைகளை செய்ய வேண்டும் என்ற நோக்கோடு சிறப்பு வழிபாடுகளும், சமபந்தி விருந்துகளும், திருமணங்களும் நடத்தி வருகின்றன. இதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்தத் திருப்பணிகள் சிறந்த முறையிலே தொடர வேண்டும் என்ற எண்ணத்தில்தான் தாங்கள் அறநிலையத் துறையிலே புதிய மாற்றத்தை உருவாக்கி உள்ளீர்கள். இந்தத் திருக்கோயில் நிர்வாக வாரியம் அமைத்ததை நான் மனதார வரவேற்கிறேன். நிர்வாக வாரியத்தை, அதன் அதிகார வரம்பை யார் குறை கூறினாலும் அரசு அதனைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று அறநிலையத்துறையின்கீழ் நஞ்சை, புஞ்சை, மானாவாரி ஆகிய நிலங்கள் 4 லட்சத்து 91 ஆயிரம் ஏக்கர்கள் உள்ளன. இதன் வருட வருமானம் சுமார் 11 கோடி ரூபாய். கட்டிடங்கள், வீட்டு மனைகள் ஆகியவைகளிலிருந்து சுமார் 5 கோடி ரூபாய். இதுநாள் வரை வசூல் செய்யப்படாமல் உள்ள தொகை சுமார் 68 கோடியாக உள்ளது. இத்தனை சொத்துக்களையும் நம் முன்னோர்கள் பொது மக்களின் நன்மைக்காகவும், அறவழிக்காகவும் கோயில்களுக்கு விட்டுச் சென்றார்கள். இந்தச் சொத்துக்களை சிலர் பரம்பரை தர்மகர்த்தாக்கள் என்ற பெயரிலும், ஆதீனங்கள் என்ற பெயரிலும் வருடக் கணக்கில் அனுபவித்து வருகிறார்கள். தி.மு.க. ஆட்சியின் போது மீதி இருந்த சொத்துக்களை தி.மு.க. வினர் நீண்ட கால குத்தகை என்ற பெயரில் கையகப்படுத்தி இன்றுவரை அனுபவித்து வருகிறார்கள். கோவில்களை கொடியவர்களின் கூடாரமாக்கிய பெருமை தி.மு.க. வைச் சாரும். இப்படி கோவில் சொத்துக்கள தவறான முறையிலே பலரால் அனுபவிக்கப்பட்டு வருவது பொது மக்கள் மனதில் நீண்ட காலமாக வேதனையை வளர்த்து வருகிறது.

திருக்கோவில் நிர்வாக வாரியம் இந்த நிலையில் சில செயல்களைச் செய்ய வேண்டுமெனக் கோருகிறேன். எல்லாக் கோயில்களையும் அரசு தன் பொறுப்பிலே எடுத்துக் கொள்ள வேண்டும். சொத்து இருந்தாலும், இல்லாவிட்டாலும்கூட அந்தக் கோயில்கள் கிராமக் கோயில்களாக இருந்தாலும் தன் பொறுப்பிலே எடுத்துக்கொள்ள வேண்டும். கோயில் சொத்துக்களை நீண்ட கால குத்தகைக்கு குறைந்த வாடகைக்கு அனுபவித்து வருகிறார்கள். தாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர்தான் குத்தகைதாரர் நிவாரணச் சட்டத்தைத் தகர்த்து, குத்தகை வசூலிக்கும் நடவடிக்கையை எடுத்தீர்கள். இதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.



ஆனாலும் நீண்ட கால குத்தகைதாரர்களிடமிருந்து நிலங்களை கோயில்கள் இன்னும் திரும்பப் பெறவில்லை. இதற்குத் தேவையில்லாத சட்டச் சிக்கல்கள் உள்ளன. இதற்கும் தேவையான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்து, நீண்ட கால குத்தகைதாரர்களிடமிருந்து கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும். மேலும் வருவாய் நீதிமன்றங்களை 5லிருந்து 11ஆக, மேலும் 6 நீதிமன்றங்களை ஏற்படுத்தியுள்ளீர்கள். ஆனால் அறநிலையத் துறை 10 ஆயிரம் வழக்குகளை பல நீதிமன்றங்களில் தாக்கல் செய்துள்ளது. மேலும் வருவாய் நீதிமன்றங்களில் எல்லா தரப்பு குத்தகைதாரர்களிடமிருந்தும் வழக்குகள் பதிவு செய்வதால் இவைகளை விசாரிப்பதற்கு பல வருடங்கள் ஆகின்றன. இதனிடையில் வருவாய் நீதி மன்ற அதிகாரிகளை நியமிப்பதற்கும் காலதாமதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே கோவில் நிலங்களில் வழக்குகளுக்கு மட்டும் என்று குறிப்பாக சில வருவாய் நீதி மன்றங்களை ஏற்படுத்தினால்தான் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் தீர்ப்பு கிடைக்கும் எனவும் எண்ணுகிறேன். அரசு இதை சிந்திக்க வேண்டுமெனவும் கோருகிறேன்.

நகர்ப்புறங்களிலே உள்ள கோயில்கள் மிகவும் பழுதுபட்ட நிலையிலே உள்ளன. அந்தக் கோயில்களின் திருக்குளங்கள் பிள்ளைகள் விளையாடும் இடங்களாகவும், அசுத்தம் செய்யும் இடங்களாகவும் உள்ளன. கோயில்களின் வருமானமே அதன் கட்டிடங்களிலிருந்து கிடைக்கும் குறைந்தபட்ச வாடகையைத்தான் நம்பி இருக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் கோயில் கட்டிடத்தை குத்தகைக்கு எடுத்தவர்கள் அதைத் தங்களின் சொந்தக் கட்டிடத்தைப் போல பல பகுதிகளாக மாற்றி, அதிக வாடகைக்கு விட்டும், சில பகுதிகளை விற்றும் சுகமாக இருந்து வருகின்றனர். நகரங்களில் உள்ள இக்கோயில் கட்டிடங்கள் மிக்க பண மதிப்பு உள்ளவையாதலால் அரசு அந்த குத்தகைதாரர்களை வெளியேற்றி, அந்தக் கட்டிடங்களை நல்ல விலைக்கு விற்று, அந்தப் பணத்தை அந்தந்தக் கோயில் பெயரிலேயே வங்கியில் டெபாசிட் செய்து, அந்த வட்டித் தொகையை கோவில்களுக்கு செலவு செய்ய வேண்டும். மேலும் திருக்குளங்களில் தூர் வார வேண்டும். சென்னை நகரிலே உள்ள பல கோயில் திருக்குளங்கள் பன்னெடுங்காலமாக தூர் வாரப்படாமல் உள்ளன. மேலும் அக்குளங்களுக்கு மழைக் காலங்களில் தண்ணீர் வரும் கால்வாய்களும் அடைக்கப்பட்டுள்ளன. அக்கால்வாய்களில் உள்ள தடைகளைத் தகர்த்து மழைக் காலங்களில் தண்ணீரால் திருக்குளங்கள் நிரம்பும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. டி. சுதர்சனம்) [1992 ஏப்ரல் 9
பிற்பகல் 1–20

என்னுடைய தொகுதியான பூவிருந்தவல்லி அருள்மிகு திருக்கச்சிநம்பிப் பெருமாள் திருக்குளத்தில் தி.மு.க.வை சேர்ந்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார்கள், கடந்த முறை மானியக் கோரிக்கையின் போதே கூட நான் இதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் இது நாள் வரை இதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை, இதையும் நான் முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், என் தொகுதியில் திருநின்றவூர் ஸ்ரீ பக்தவத்சல பெருமாள் கோயிலுக்கு சுமார் 500 ஏக்கர் நிலம் உள்ளது. அதே போன்று பூவிருந்தவல்லி—பாரிவாக்கம் கிராமத்தில் உள்ள கோயிலுக்கு சுமார் 60 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலத்தைத் தனிப்பட்டவர்கள் சுமார் 25 ஏக்கர் அளவுக்கு பட்டா போட்டுக் கொண்டுள்ளனர், இதன் மீது அறநிலையத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. பூவிருந்தவல்லி ஸ்ரீ திருக்கச்சிநம்பி கோயிலுக்கு சுமார் 100 ஏக்கர் நிலம் உள்ளது. இங்கு ஒரு ஏக்கரின் மதிப்பு பல இலட்சம் ரூபாய் ஆகும். கோவில் நிலத்தை குத்தகைதாரர்களின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு 5 லட்சம் ரூபாய் வரை தருகிறார்கள், இதையும் முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன், எக்காரணத்தை முன்னிட்டும் உரிமை மாற்றக் கூடாது என்று ஆணை பிறப்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் ஆவடியில் கருமாரியம்மன் கோயில் ஒன்று உள்ளது. இது அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது, இங்கு போதிய வருமானம் இல்லை. அர்ச்சகர்களுக்கு சம்பளம் கூட தர முடியாத நிலை உள்ளது. இது அருள்மிகு கருமாரி அம்மனின் இரண்டாம் படை வீடு எனக் கருதப்படும் தலமாகும். ஆகவே இதை திருவேற்காடு அருள்மிகு கருமாரி அம்மன் ஆலயத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மன்னர் மானியத்தை ஒரே இரவில் ஒழித்த பெருமை அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கு உண்டு. அதைப் போன்று பரம்பரை தர்மகர்த்தா முறையை ஒழிக்கும் பெருமை உங்களுக்கு ஏற்பட வேண்டுமெனவும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஆதீனகர்த்தா அல்லது பரம்பரை அறங்காவலர்கள் இருக்கிற ஆலயங்களையும் அவற்றின் சொத்துக்களையும் அரசின் நிர்வாகத்துக்கு உட்படுத்த வேண்டுமென சில ஆண்டுகளுக்கு முன் மத்திய அரசு நியமித்த சர். சி.பி, இராமசாமி அய்யர் அவர்கள் தலைமையிலான கமிட்டி கூறியுள்ளதையும் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 9] (திரு. டி. சுதர்சனம்)

தங்களால் கொண்டு வரப்பட்டு பாராட்டப்படும் ஆலய நிர்வாக வாரியம் சிறப்பாக செயல் பட வேண்டுமென விரும்புகிறேன். இதனுடைய வரம்புகள் தற்போதுள்ளதை விட விரிவாக்கப்பட வேண்டும், அறநிலையத் துறை ஆணையர் மற்றும் உதவி ஆணையருக்கான அதிகார வரம்புகள் சிறிது அதிகமாக்கப்பட வேண்டும், மாநிலக் குழுவின் கூட்டம் மாதமொருமுறை கூட்டப்பட வேண்டும், மாவட்டக் குழு தலைவர்களையும் மாநிலக் குழுக் கூட்டத்திற்கு அழைக்க வேண்டும், அதைப் போன்று மாவட்டக் குழுக்கள் கண்டிப்பாக மாதமிரு முறை கூட்டப்பட்டு தேவையான உத்தரவுகள் ஆலய நிர்வாகிகளுக்கும் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன், மாவட்டக் குழுவின் தலைவர்களை அழைத்து அவர்களின் குறைகளையும் மாநிலக் குழு கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

அர்ச்சகர்களைப் பொறுத்த வரையில் சென்னை போன்ற நகரங்களில் வேண்டுமானால் அவர்களுக்கு வருமானம் வருவதாக எடுத்துக் கொள்ளலாம், சிறு நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள கோவில்களில் அர்ச்சகர்கள் பூசை செய்யவே சிரமப்படுகிறார்கள், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேதாகம கல்லூரி ஒன்றை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளார்கள், அதை நான் பூரிப்போடு வரவேற்கிறேன்,

அர்ச்சனை விதிகளில் 7 முதல் 11 வரையில் உள்ள சுலோகங்களில் சிவாலயங்களில் சிவாச்சாரியர்களும் வைணவக் கோயில்களில் உத்தமாதிகாரி எனப்படும் வைணவர்களும் பூஜைகள் செய்ய வேண்டும் எனவும், அப்படியில்லாமல் அதிகாரப் பற்றுடன் யாராவது பூஜை செய்தால் நாட்டுக்கு அழிவு என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் காலப் போக்கில் தேவைகளை அனுசரித்து சமூக நலனையும் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு இந்திய அரசு 'இந்து லா' — வில் சட்டத் திருத்தம் செய்துள்ளது. மேலும் ஜஸ்டிஸ் மகராஜன், ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆகியவர்களின் தலைமையில் அமைந்த கமிட்டிகளின் பரிந்துரையின்படி வேதாகமக் கல்லூரியில் சாதி, இன, பேதமின்றி எல்லா இனத்தவரும் சேர்க்கப்பட வேண்டும். மேலும் ஆகமங்களில் சொல்லப்பட்ட தகுதிக் குறைவானவர்கள் எந்தக் காரணத்தாலும் சேர்க்கப்படாமல் இருத்தல் வேண்டும். இந்தக் கல்லூரியில் சேர குறைந்த பட்ச தகுதியாக பத்தாவது வகுப்பு வரை படித்திருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட வேண்டும். இந்தக் கல்லூரியின் நிர்வாகத்திற்குப் பொறுப்பேற்க தகுதியுடைய பாஞ்சராத்திரம், வைகாசனம், சைவாகமம் ஆகிய மூன்றிற்கு ஏற்ற ஆகமப் பண்டிதர்களை நியமனம் செய்ய வேண்டும் எனவும் கோருகிறேன்.

(திரு. டி. சுதர்சனம்) [1992 ஏப்ரல் 9

சமீப காலங்களில் கோயில் சிலை உடைப்பு சம்பவங்களும், நாத்திகப் பிரச்சாரங்களும் அதிகமாகியுள்ளன. 1991 ஆம் ஆண்டில் நெல்லை - கட்டபொம்மன் மாவட்டத்தில் 30 கோயில்களில் சிலைகள் உடைக்கப்பட்டுள்ளன. இதில் விசித்திரம் என்னவென்றால் பெரும்பாலான கோயில்களில் திருட்டு போகாமல் சிலைகள் மட்டும் உடைக்கப்பட்டுள்ளன. இதையெல்லாம் கவனிக்கும் போது இந்த அரசின் மேல் மக்களுக்கு ஒருவித அச்சத்தை உருவாக்க வேண்டும் என்ற தீய நோக்கில் தான் இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன என்று கருதுகிறேன். காவல் துறை இந்த விஷயத்தில் மிகவும் மெத்தனமாக நடந்து கொள்வதாகவும் நான் எண்ணுகிறேன். மக்களிடம் உண்டாகியுள்ள அச்சத்தை காவல் துறை போக்க வேண்டும் எனவும் நான் முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் சென்ற முறை பேசியவாறு வேதாரண்யம் வாணி ஆதீனம் சுமார் 20,000 ஏக்கர் நிலங்களைக் கொண்டது. இலங்கையில் உள்ளவர்கள் அதில் ஆதீனகர்த்தர்களாக இன்றும் உள்ளனர், நீண்ட காலமாய் அந்தக் கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு எந்தவிதமான உரிமையும் இருப்பதாகத் தெரியவில்லை. இடையில் கிழக்கிந்திய கம்பெனி மூலம் இலங்கையைச் சேர்ந்தவர்கள் வந்து சேர்ந்து கொண்டார்கள், இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பின்பும் அன்னியர் ஆதிக்கம் தமிழகத்தின் கோயில்களில் இருக்கக் கூடாது, அதில் ஏதாகிலும் சிக்கல் இருந்தால் அதைக் களைந்து உடனடியாக வேதாரண்யம் வாணி ஆதீனத்தைத் தமிழக அரசு அறநிலையத் துறையில் சேர்க்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1.25

தமிழகத்தில் உள்ள அறுபடை வீடுகளில் ஒன்றாக, அதிக வருவாயை ஈட்டித் தருகிற கோயிலாக தமிழகத்தில் விளங்கிக் கொண்டிருக்கிற பழனி கோயிலுக்கு பக்தர்கள் செல்லுவதற்கே சற்று பயப்படுகிறார்கள், பழனி கோயில் மலையடிவாரத்தில் உள்ள புரோக்கர்களை நினைத்து அஞ்சுகிறார்கள். மலையடிவாரம் சென்றதும் புரோக்கர்கள் பக்தர்களை சூழ்ந்து கொண்டு அளிக்கும் தொல்லைக்கு எல்லையில்லை. தயவு செய்து இத்தொல்லைகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலூர் கோட்டையில் உள்ள ஜலகண்டேஸ்வரர் கோயில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதால் கோயில் கோபுரங்களை புதுப்பிக்க இடர்ப்பாடுகள் உள்ளன. அந்த இடர்ப்பாடுகளைக் களைந்து அக்கோயில்களை முழு அளவில் புதுப்பிக்க ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் விஷயங்களைப் பேசி முடியுங்கள், திரு, சிங்காரம். ஏற்கெனவே பேசி முடித்து விட்டார்,

திரு. டி. சுதர்சனம் : ''போற்றுவார் போற்றட்டும், புழுதி வாரி தூற்றுவோர் தூற்றட்டும்; ஏற்றதொரு கருத்தென்று எனது உள்ளம் சொன்னால் எவர் தடுத்திடினும் நில்லேன், அஞ்சேன்'' என துணிந்து செயல்படும் நமது முதல்வர் அவர்கள் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) பரம்பரை தர்மகர்த்தாக் களை ஒழித்து, நில ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி, மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் தடுத்து, குத்தகைதாரர் களிடமிருந்து சொத்துக்களை திரும்ப பெற்று, கோவில் டிரஸ்டி களை நேர்மையாக நியமித்து, சம்பிரதாயப்படி பூஜைகள் நடை பெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்கு தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அளவில் இன்றைக்கு இந்திய நாட்டிற்குப்பெருமை சேர்ப்பனவற்றுள் முதன்மையானது இந்தியாவின் ஆன்மீகச் சிறப்பு. சமய நெறிமுறைகள் பலவும் தழைத்தோங்கி, அவற்றைச் சார்ந்த அறம் கூறும் நல்லோர் பலர், இறையுணர்வுக் கருத்துக்களை மக்களிடையே பரப்பி வழி பாட்டுத் தலங்களைப் படைத்து, நமது பண்பாட்டினை செம்மை யாக்கிய பாங்கினை, நமது நாட்டின் பிற பகுதிகளைக் காட்டி லும் தமிழகத்தில் நாம் நன்கு காணலாம்.

தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் ஒவ்வொன்றும், பழமைக் கும், புதுமைக்கும் உள்ள இணைப்புப் பாலங்கள் என்று கூறி னால் அது மிகையாகாது. ஏனெனில் நமது திருக்கோயில்களின் வரலாற்றுப் பின்னணி, அவற்றின் ஆன்மீகச் செறிவு, அவை வெளிப்படுத்தும் கலையழகு ஆகியவை நமக்கு பழமையின் சாதனையை எடுத்துரைக்கும் கலாச்சார கருவூலங்கள். அதே நேரத்தில், அந்தத் திருக்கோயில்களில் புதைந்துள்ள அதிசய க்லைச் செல்வங்கள், இன்றைக்கும் நாம் கற்றுணர வேண்டிய பல்வேறு உண்மைகளையும் மாபெரும் தத்துவங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள கலைப் பொக்கிஷங்கள். சிற்பம், ஓவியம், இசை, மற்றும் தத்துவம் என்று பல்வேறு துறைகளிலும் காலத்தின் மாற்றத்தினால் எழுந்துள்ள புதிய சிந்தனைகளுக்கும் கூட விளக்கம் தருபவைகளாக அவை அமைந்துள்ளன. எனவே நமது திருக்கோயில்களை ''புதுமையின் உறைவிடம்'' என்று கூறுவது சாலப் பொருந்தும்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 ஏப்ரல் 9

எங்கள் அரசு கோவில் நிர்வாக வாரியம் (டெம்பிள் அட்மினிஸ்ட்ரேஷன் போர்டு) என்ற அமைப்பினை ஏற்படுத்தி அதன் மூலம் எத்தகைய சீரிய முறையில் தமிழகத் திருக்கோயில்களை பராமரிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது என்பதனை இத்துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் விளக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், அரசின் தலையீடு திருக்கோயில்களின் நிர்வாகத்தில் மிகக் குறைந்த அளவே இருக்க வேண்டும் என்ற ஒரு வாதம் இன்றைக்கு கூறப்பட்டு வருவதையும் நான் அறிவேன்.

அரசு என்பது நிர்வாகத்தை நடத்துகின்ற ஒரு வெற்று இயந்திரம் அல்ல. எங்களைப் பொறுத்த வரையில் ஆறு கோடி தமிழக மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளையும், எதிர்பார்ப்புகளையும் (மேசையைத் தட்டும் ஒலி) இலட்சியங்களையும் கண்டு அறிந்து, அவற்றிற்கு செயல் வடிவம் கொடுக்கின்ற ஒரு மக்கள் ஆட்சி அமைப்புதான் அரசாங்கம். எனவேதான் ஒரு குறிப்பிட்ட சாராரின் எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல், சவால்களைச் சந்தித்து, மக்களாட்சிக்கு மாட்சிமை சேர்க்க வேண்டும் என்ற உங்களின் நல்லுணர்வுகளின் வெளிப்பாடுதான் எங்கள் அரசின் செயல்பாடு. (மேசையைத் தட்டும் ஒலி). திருக்கோயில்களையும் அவற்றைச் சார்ந்த அறக்கட்டளை நிறுவனங்களையும் பராமரிப்பதில் சிலர் நினைப்பது போன்று தேவையற்ற தலையீடுகள் இருக்காது. ஆனால் அதே நேரத்தில் இந்த அரசு ஆக்கப்பூர்வமான விஷயங்களில் தலையிட்டு, தனது சீரிய பங்கினை செயலாற்ற என்றைக்கும் தயங்காது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கை மீதான எனது பதிலுரையைத் துவக்குகிறேன்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : தமிழகத்தின் தனிச் சிறப்பான ஆலயங்களின் புனிதம் காக்கப்படும், மரபுகள் கெடாத வகையில் கோயில் நிர்வாகங்கள் சீரமைக்கப்படும். பக்தர்கள் மனதைப் புண்படுத்தும் வகையிலான எக்காரியமும் தமிழகத்தில் அனுமதிக்கப்பட மாட்டாது என்று எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையிலே கூறியிருந்தோம். மேலும், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்கு உட்பட்ட கோயில்களைத் தவிர, தமிழக கிராமங்களில் உள்ள பல்லாயிரக் கணக்கான சிறு சிறு புராதனக் கோயில்கள், பராமரிப்பு இன்றி பாழ்பட்டுக் கிடக்கின்ற நிலையில் அவைகளை நன்கு பராமரித்து, அவற்றின் அன்றாட பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்போம் என்று அறிவித்து இருந்தோம். அந்த அறிவிப்புக்கு செயல்வடிவம்



1992 ஏப்ரல் 9] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

கொடுக்கின்ற வகையில், ''தமிழ்நாடு ஆலய நிர்வாக வாரியம்'' என்ற அமைப்பு ஒன்றை உருவாக்கி, அதனிடம் ஆலயங்களின் நிர்வாகத்தை ஒப்படைக்க, தேவையான சட்டத் திருத்தங்கள் கொண்டு வருவோம் என்று சென்ற மானியக் கோரிக்கையின் போது நான் தெரிவித்திருந்தேன்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலைய சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு, அவை இந்தியக் குடியரசுத் தலைவருடைய ஒப்புதலையும் பெற்று, 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் நாள் முதல் செயல்படுகின்ற வகையில், தமிழ்நாடு ஆலய நிர்வாக வாரியம் அமைக்கப்பட்டது. இந்த வாரியத்தில் சைவ, வைணவ திருமடங்களின் மடாதிபதிகள், சமயச் சான்றோர்கள், ஆன்மீகப் பெரியோர்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள், கோவில் நிர்வாகத்தில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட சான்றோர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வாறு உயர்ந்த பெருமக்கள் பங்கு கொண்டிருப்பதன் மூலம், தமிழகம் முழுவதுமுள்ள ஆலயங்கள், மற்றும் அறநிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்தைச் சீரமைக்கும் பணி, சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆலய நிர்வாகத்தில், மாநில அளவில், தமிழ்நாடு மாநில ஆலய நிர்வாக வாரியமும், மாவட்ட அளவில், மாவட்டக் குழுக்களும் உள்ள இரட்டை அடுக்கு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சமும், அதற்கு மேலும் உள்ள ஆலயங்களின் அறங்காவலர் குழுவை, மாநில அளவில் அமைக்கப்பட்டிருக்கின்ற ஆலய நிர்வாக வாரியம் அமைக்கும். அதே போன்று, மாவட்ட அளவிலே, ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் கீழே உள்ள ஆலயங்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கும் பொறுப்பு மாவட்டக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அண்மையில் மாநில அளவிலான ஆலய நிர்வாக வாரியத்தின் முதல் கூட்டம் கூட்டப்பட்டு, ஆலயத் திருப்பணிகள், உற்சவத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் ஆகியவற்றின் பாதுகாப்பு, திருமண மண்டபங்கள் மற்றும் அங்காடி வளாகங்கள் கட்டுதல் போன்ற பொருட்கள், அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, திருப்பணிகளுக்கு ரூ. 3.19 கோடி அளவிற்கான மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாநிலம் முழுவதும் 17 மாவட்டக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

நிர்வாக அமைப்பு.—இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் செயல்பாட்டிற்காக, நமது மாநிலம் 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையரின் கீழ் இயங்கி வந்தது. நிர்வாகச் சுமை மற்றும் பணிப்பளு ஆகியவற்றைக் கணிசமாகக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கூடுதலாக புதிய இரண்டு மண்டலங்கள்—ஒன்று வேலூரையும்

மற்றொன்று சிவகங்கையையும் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் நான் அறிவித்திருந்தேன். அறிவிப்பிற்குச் செயல்வடிவம் தருகிற வகையில், வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் மற்றும் சைதாப்பேட்டை, பொன்னேரி, திருவள்ளூர் வட்டங்களைத் தவிர்த்த செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம் அடங்கிய பகுதிகளை புதிய மண்டலமாகப் பிரித்து, துணை ஆணையர் அலுவலகம் ஒன்று வேலூரில் தொடங்கப்பட்டு விட்டது. அடுத்து, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் காமராஜர் மாவட்டம் ஆகியவை புதிய மண்டலமாகப் பிரிக்கப்பட்டு, துணை ஆணையர் அலுவலகம் ஒன்று, சிவகங்கையில் தொடங்கப்பட்டு விட்டது. தற்போது இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் 10 மண்டலங்கள், ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையரின் தலைமையில்,இயங்கி வருகின்றனஎன்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாநிலம் 17 கோட்டங்களாக, 17 டிவிஷன்களாகப் பிரிக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றும் ஒரு உதவி ஆணையரின் கீழ் இயங்கி வருகிறது, அறநிலையத் துறையின் நிர்வாகம் மேலும் சீராக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன், 1992-93-ஆம் ஆண்டு, பகுதி-2 திட்டத்தின் கீழ், 2 புதிய அறநிலையத் துறைக் கோட்டங்களையும் உருவாக்க இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தை ஒரு புதிய கோட்டமாகவும், தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்டு சிதம்பரனார் மாவட்டத்தை ஒரு புதிய கோட்டமாகவும் அமைக்க விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தற்போது 17 ஆக இருக்கும் அறநிலையத் துறைக் கோட்டங்கள் விரைவில் 19 ஆக செயல்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிர்வாக அமைப்பில் ஏற்பட்டுள்ள இத்தகைய கூடுதல் மண்டல மற்றும் கோட்ட அமைப்புகளினால் ஆலய நிர்வாகம் மேம்படும் என்று நம்புகிறேன்,

கோயில்கள் என்றாலே, வருமானம் சார்ந்த கணக்கு-வழக்குகளைப் பற்றிய பிரச்சனைகள் எப்போதும் எழுந்து வருவது தற்போது வாடிக்கையாகிவிட்டது. ஆகவே, கோயில்களின் கணக்குகளைச் சரியான முறையில் தணிக்கை செய்ய, தணிக்கைப் பிரிவை மேம்படுத்துதல் மிகுந்த அவசியமாகிறது. எனவே, தற்போதுள்ள தலைமைத் தணிக்கை அதிகாரியினுடைய பதவித் தரத்தை, இணை ஆணையர் தகுதிக்கு உயர்த்தவும், திருத்தணி, ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய பெரிய கோயில்களில் உள்ள, தணிக்கை ஆய்வாளர்



பணியிடத்தை தணிக்கை கண்காணிப்பாளர்' நிலைக்கு உயர்த்தவும், தலைமையிடத்தில் ஒரு 'கணக்காளர்' பதவி ஏற்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இத்துறையால் நடத்தப்பட்டு வரும் 'திருக்கோயில்' மாத இதழுக்கு ஒரு இளநிலை ஓவியர் பதவியை ஏற்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது, இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த அரசுக்கு ஆண்டொன்றுக்குரூ, 20.15 இலட்சம் கூடுதல் செலவு ஆகும், (மேசையைத் தட்டும் ஒலி),

பிற்பகல் 1,35

<u>திருப்பணி மற்றும் பராமரிப்புப் பணிகள்</u>,——கோவில் திருப்பணிகளைப் பற்றி, குறிப்பாக இத்தருணத்தில் ஒன்று கூற விரும்புகிறேன். இந்த அரசு பொறுப்பேற்ற பின், தற்போது ஆலயங்களின் முக்கியத்துவம் பற்றி ஒரு புதிய விழிப்புணர்ச்சி மக்களிடையே ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, மாநிலத்தில் உள்ள பல கோயில்களில், திருப்பணிகள் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் அரசுக்கு வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன, பொருளாதார அடிப்படையிலும் சரி, நிர்வாக அடிப்படையிலும் சரி, இவ்வனைத்துக் கோயில்களுக்கும், ஒரே சமயத்திலோ அல்லது உடனடியாகவோ, திருப்பணி செய்வது என்பது இயலாத காரியம். பொது மக்களோ அல்லது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களோ, தாங்கள் பரிந்துரை செய்யும் கோயில்களுக்கு திருப்பணி உடனடியாக செய்யவில்லையே என்று நினைக்க வேண்டாம். இப்பணியினை செய்ய வேண்டியதன் அவசியத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது. எனவேதான், ஆலயங்கள் புனரமைப்புக்கு என்று ஒரு தனி நிதியினை, 'முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி' என்ற தலைப்பில், நிதி திரட்டப்பட்டு வருகிறது. இந்த நிதியின் மூலம், தினந்தோறும் ஒரு கால பூஜையாவது செய்ய வேண்டும் என்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டு உள்ளோம். இந்த நேரத்தில் ஒரு நல்ல அறிவிப்பினைச் செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பில், இதுவரையில் முதலமைச்சர் ஆலய புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியில் ரூ. 3.72 கோடி சேர்ந்துள்ளதாகத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்று காலை வரை, 9-ஆம் தேதி வரை, இதுவரையில் இந்த நிதியில் ரூ. 3.96 கோடி சேர்ந்துள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகிறேன். 3.96 கோடி ரூபாய் என்றால் ஏறத்தாழ 4 கோடி ரூபாயை எட்டிவிட்டது. இன்னும் இரண்டு நாட்களில் 4 கோடி ரூபாயை எட்டிவிடும் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் பெரும்பான்மையானவை பழமையானவை. அவைகளுள் திருப்பணி செய்யப்பட வேண்டிய ஆலயங்களை, பொதுவாக மூன்று வகைகளாகப் பிரிக்காம்.

(1) பாடல் பெற்ற ஆலயங்கள், அதாவது, ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடப்பட்டு, போற்றப்பட்ட ஆலயங்கள், (2) வரலாற்றுச் சிறப்பு மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்கள், (3) ஆகம விதிகளின்படி, 12 ஆண்டுகட்கு ஒருமுறை திருப்பணி செய்து, கும்பாபிஷேகம் நடத்த வேண்டிய ஆலயங்கள்.

அரசு மானியம்,——மேற்குறிப்பிட்ட திருப்பணி மற்றும் பராமரிப்புப் பணிகள் செய்வதற்காக, ஒரு முன்னுரிமை—பிரையாரிட்டி—திட்டத்தை தயாரித்து, அதன்படி திருப்பணிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆலயங்களின் திருப்பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக, அரசு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 45 இலட்சம் மானியமாக, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு வழங்குகிறது. கடந்த ஆண்டும், இந்த மானியத்தோடு, அண்மையிலே கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகம் திருவிழாவையொட்டி, 8 ஆலயங்களுக்கு திருப்பணி செய்வதற்காக, ரூ. 12.50 இலட்சம் அரசு மானியமாகவும், காமராஜர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயில் இராஜகோபுர திருப்பணிக்காக, ரூ. 15 இலட்சம் தனியாகவும், மொத்தத்தில் கடந்த ஆண்டில் அரசு மானியமாக மட்டும் ரூ. 72.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 அல்லது 6 வருடங்களில், அரசு மானியமாக திருப்பணிக்கென ஒதுக்கப்பட்ட தொகைகளிலே, சென்ற ஆண்டு வழங்கப்பட்ட இந்த 72.50 இலட்சம் ரூபாய்தான் மிக அதிகம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொது நல நிதி,—இந்து சமய அறநிலையச் சட்டத்தின்படி, யாரேனும் தாமாக முன்வந்து வழங்குகின்ற நன்கொடைகள் மற்றும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் வருவாயிலிருந்து ஒரு சதவீதம் (1%) ஆலயப் பொதுநல நிதி என்ற தலைப்பின்கீழ் தனியே வைக்கப்படுகிறது. இந்நிதி தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில் முதலீடு செய்யப்பட்டு வருகிறது. இந்த நிதியிலிருந்து சமூக நலப் பணிகளுக்காகவும், நலிந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காகவும், நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 1991 ஆம் ஆண்டில் மட்டும் 54 திருக்கோயில்களின் திருப்பணிக்காக ரூ. 17.15 லட்சம் இந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1.40

நலிந்த மற்றும் நிதி உதவி தேவையுள்ள ஆலயங்களுக்காக திருப்பணி நிதி உதவித் திட்டம்—கிராமங்களில் நிதி வசதியற்ற கோயில்கள் பல உள்ளன. இக்கோயில்களின் திருப்பணிக்காக அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உபரி





நிதியிலிருந்து, ரூபாய் ஒரு கோடி பெறப்பட்டு, அதை வைப்பு நிதியாகக் கொண்டு, அதிலிருந்து பெறப்படுகின்ற வட்டித் தொகை மட்டும், மேற்படி நிதி வசதியற்ற சிறு கோயில்களின் திருப்பணிக்காக செலவிடப்படுகிறது. இந்த வைப்பு நிதி 1984 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. அதாவது இதய தெய்வம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. 1990 ஆம் ஆண்டு வரை திருப்பணிக்காக ஆலயம் ஒன்றுக்கு, ரூ. 10 ஆயிரம் வீதம் உதவித் தொகை அளிக்கப்பட்டு வந்தது. 1991 ஆம் ஆண்டிலிருந்து இத்தொகை ரூ. 25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1985-86-லிருந்து இதுவரை, மொத்தம் 619 ஆலயங்களுக்கு, ரூ. 70.93 இலட்சம் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

வணிக வளாகம் மற்றும் திருமண மண்டபங்கள்.——வணிக வளாகங்களும், திருமண மண்டபங்களும் கோயில்களின் வருமானத்திலிருந்தும், வங்கிக் கடன் பெற்றும் கட்டப்பட்டு வருகின்றன. இவைகள் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு அன்றி, கோயில்களுக்கு நிரந்தரமாக நல்ல வருவாயையும் ஈட்டித் தரும். அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் உபரி நிதியிலிருந்து, மதுரையில் 'ஏழு கடல் அங்காடி' என்ற ஒரு வணிக வளாகக் கட்டிடம், ரூ.93.92 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் திருத்தணி அருள்மிகு சுப்ரமணியசுவாமி கோயிலின் உபரி நிதியிலிருந்து, ஒரு வணிக வளாகக் கட்டிடம், திருத்தணி நகரத்தில், பேருந்துநிலையத்திற்கு அருகில், ரூ. 35 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை இராயப்பேட்டையில் அமைந்துள்ள அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள இடத்தில் ஒரு வணிக வளாகத்தை, ரூ. 100 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்காக திட்டமிடப்பட்டது. அதன் முதல் கட்டம், ரூ. 34 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது. இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகள், இன்னும் ஒரு சில மாதங்களில் தொடங்கப்பட உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் சார்பாக, இரண்டு திருமண மண்டபங்கள் ரூ. 48.50 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. வடபழனியில் இரண்டு திருமண மண்டபங்களும், திண்டுக்கல்லில் ஒன்றும், காரைக்குடியில் ஒன்றும், ஆக மொத்தம் நான்கு திருமண மண்டபங்கள், ரூ. 52.85 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் ஆறு திருமண மண்டபங்கள் ரூ. 56 இலட்சம் செலவில் கட்டப்படவுள்ளன.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 ஏப்ரல் 9

திருப்பணி மற்றும் இதர கட்டுமானப் பணிகள்.—மொத்தம் 611 ஆலய திருப்பணி வேலைகள், ரூ. 10.35 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இன்னும் 266 பணிகளுக்கு, ரூ. 10.41 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி). மேலும் 218 இதர கட்டுமானப் பணிகள், ரூ. 7.69 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி). இன்னும் ரூ. 3.82 கோடி மதிப்பீட்டில், 103 கட்டுமானப் பணிகளுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி). விரைவில் இப்பணிகளும் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்பகோணத்தில் நடைபெற்று முடிந்துள்ள மகாமக திருவிழாவினையொட்டி, அங்குள்ள 19 கோயில்களில், 11 கோயில்களுக்கு திருப்பணி செய்யப்பட்டு, குடமுழுக்கு விழாவும் நடைபெற்றுள்ளது. இதர கோயில்களில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளன. இதற்காக அரசு மானியமாக ரூ. 12.50 இலட்சமும், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 10 இலட்சமும், கோயில் உபரி நிதியிலிருந்து ரூ. 12 லட்சமும், முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. 5.77 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 40.27 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் இங்கே பேசுகின்றபோது கோவில் வைப்பு நிதிகளை எல்லாம் என்ன செய்கிறீர்கள், எப்படிச் செலவிடுகிறீர்கள் என்று எல்லாம் இங்கே கேட்டார்கள். அவருக்குத் தகுந்த விளக்கங்கள் இப்போது கிடைத்துக் கொண்டிருக்கின்றன என்று நம்புகிறேன்.

ஒருகால பூஜை——தமிழகத்தில் உள்ள தொன்மை வாய்ந்த திருக்கோயில்கள் அனைத்தும் ஆரம்ப காலத்தில் மாமன்னர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் நேரடிப் பராமரிப்பில் இருந்து வந்து, பின்னர், அவர்களால் வழங்கப்பட்ட மானியங்கள், சொத்துக்கள் ஆகியவற்றின் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தில் பராமரிக்கப்பட்டு வந்தன. காலப்போக்கில் ஏற்பட்ட சமூக மற்றும் பொருளாதார மாறுதல்களினாலும், நில சீர்திருத்தங்கள் மற்றும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டங்கள் ஆகியவற்றாலும், கோயிலுக்குக் கிடைத்து வந்த வருமானம் வெகுவாகக் குறைந்தது. இதனால் கோயில்களை உரிய முறையில் பராமரிக்க முடியாத நிலையேற்பட்டு, தினசரி விளக்கேற்றுதல், அன்றாட பூஜைகள் செய்தல், அர்ச்சகர் போன்ற சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுத்தல் போன்றவைகளுக்குக்கூட, போதிய நிதி வசதியில்லாத சூழ்நிலை ஏற்பட்டது. இச்சூழ்நிலையில், கோயில்களில் தினசரி ஒரு கால பூஜையாவது நடத்த வேண்டும் என்கின்ற



1992 ஏப்ரல் 9] [டாக்டர். ஜெ. ஜெயலலிதா]

நோக்கத்துடன், உபரி வருமானம் உள்ள கோயில்களின் வருமானத்திலிருந்து ரூ. 5 கோடியை எடுத்து, வைப்பு நிதியாக வைத்து, ஒரு புதிய திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, ஒவ்வொரு கோயிலுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 2,500 வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 4,462 கோயில்களுக்கு, ரூ. 145.71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1.45

நடைமுறையிலுள்ள இத்திட்டத்தினால், நலிவுற்ற கோயில்களுக்கு தற்காலிக நிவாரணம் மட்டுமே கிடைத்து வருகிறது. இதற்கு நிரந்தரமாக ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, நலிவுற்ற கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு, எதிர் வரும் ஆண்டுகளில், தவறாது ஒரு கால பூஜையாவது நடத்த வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

இதற்காக கோயில் ஒன்றுக்கு ரூ. 25,000 வைப்பு நிதியாக ஏற்படுத்தினால், அதில் கிடைக்கும் வருவாயிலிருந்து ஒரு கால பூஜையாவது செய்ய முடியும். ஒவ்வொரு கோயிலுக்கும் இந்த வைப்பு நிதியை, இந்து சமய அறநிலையத் துறையே வழங்க இயலாது. அந்தந்தப் பகுதிகளில் உள்ள பொது மக்களே இதற்கு உதவவேண்டும். அந்தந்தப் பகுதிகளில் உள்ள கோயில்களைப் பராமரிக்க முன்வர வேண்டும். பொது மக்களாக முன்வந்து, வைப்பு நிதி மூலதனமாக ரூ. 25,000 செலுத்த இயலாத சூழ்நிலையில், அவர்கள் ரூ. 12,500 செலுத்தினால், அரசின் சார்பில் மீதமுள்ள ரூ. 12,500 உதவியாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி.

இத்திட்டத்தின்கீழ் முதல் கட்டமாக, சுமார் 400 கோயில்களுக்கு மூலதன வைப்பு நிதி ஏற்படுத்தலாமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக மொத்தம் 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). ஒவ்வொரு கோயிலுக்கும் ரூ. 12,500 நிதி சதவி என்ற அடிப்படையில், 400 கோயில்களுக்கும் 50 இலட்சம் ரூபாயை அரசு வழங்கும். இந்தத் தொகை முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த ஆண்டு அரசின் உதவியால் பயன்பெறும் கோயில்கள் 400 ஆக இருந்தாலும், மக்களின் ஆர்வத்தாலும், ஆதரவாலும், இந்தத் திட்டத்தின் மூலம் பல ஆயிரக்கணக்கான கோயில்கள் பயன்பெறும் என்று நம்புகிறேன்.

பொது மக்கள் இத்திட்டத்தை வரவேற்று, அவரவர் பகுதியிலுள்ள கேயில்களில் மறுமலர்ச்சிக்காக, முழு மனதுடன் இத்திட்டத்தில் பங்கேற்று, அவர்கள் சார்பாக ரூ. 25,000 நிதியினைத் திரட்டி, வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொது மக்களால் ரூ. 25,0000 நிதி திரட்ட முடியாத இடங்களில் உள்ள கோயில்களுக்கு மட்டுமே, அரசின் பங்காக ரூ. 12,500 கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி— சென்ற ஆண்டு இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதானவிவாதத்திற்கு நான் பதில் அளித்தபோது வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஒன்று அமைக்கப்படும் என்று குறிப்பிட்டேன். இதற்கான கருத்துரு ஒன்று இந்து சமய அறநிலையத் துறையினரால் தயாரிக்கப்பட்டு தற்போது அது அரசின் பரிசீலனையில் உள்ளது. வேதங்களைப் பற்றிய முழுமையான அறிவைப் புகட்டக் கூடிய கல்வி நிலையமாக இது அமைய வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். இந்தக் கல்லூரியில் வேதங்கள் ஆகம சாஸ்திரங்கள், உபநிஷதுகள், பன்னிரு திருமுறைகள், மற்றும் நாலயிராத் திவ்விய பிரபந்தங்கள் ஆகியவற்றைக் கற்பிப்பதற்கான பாட திட்டங்களையும், பிரிவுகளையும் பற்றி 2—3—1992 அன்று நடைபெற்ற கோவில் நிர்வாக வாரியக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இது குறித்து கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு வாரிய உறுப்பினர்களும் சமயச் சான்றோர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

இந்தக் கல்லூரியை அமைப்பதற்கான தேவையான நிலம் மற்றும் நிதி உதவி அளிக்க சில பெரியவர்களும் முன் வந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). இந்தக் கல்லூரி அமைதி சூழ்ந்த இடத்தில் ஆன்மீக உணர்வுக்கு தகுந்த இயற்கை சூழலில் அமைக்கப்பட வேண்டும் என்றும், அப்படி தேர்ந்தெடுக்கப்படும் இடம் ஆழ்ந்த தியானத்திற்கும், வழிகாட்டிற்கும் உகந்ததாக இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் இதற்குத் தேவைப்படும் 40 ஏக்கர் நிலத்தை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.



பிற்பகல் 1-50

தமிழகத்தில் கல்வி நிறுவனங்களில் தற்போது பின்பற்றப்படும் இட ஒதுக்கீட்டு முறை இந்தக் கல்லூரியிலும் பின்பற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). அதாவது ஆதிதிராவிடர்களுக்கு 18 விழுக்காடு இடங்களும் (மேசையைத் தட்டும் ஒலி) பழங்குடியினருக்கு 1 விழுக்காடு இடங்களும் (மேசையைத் தட்டும் ஒலி) பிற்படுத்தப்பட்டோருக்கு 30 விழுக்காடு இடங்களும் (மேசையைத் தட்டும் ஒலி) மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு இடங்களும் ஒதுக்கப்படும் என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த வேத ஆகம சாஸ்திரக் கல்லூரியை எதிர் வரும் கல்வி ஆண்டில் தொடங்குவதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மேலும் இந்தக் கல்லூரியில் பல ஆராய்ச்சிப் பிரிவுகளைத் தொடங்கி இதனை ஒரு பல்கலைக் கழகமாக உயர்த்தும் எண்ணமும் எங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேவஸ்வம் என்று அழைக்கப்படும் கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம், 490 கோயில்களைப்பராமரித்து வருகிறது. இதற்காக அரசு ஒவ்வொரு ஆண்டும் மானியமாக ரூ. 17.70 இலட்சம் வழங்கி வருகிறது.

ஆலயங்களின் பராமரிப்புச் செலவு மிக அதிகமாக உயர்ந்துள்ளதாலும், இவ்வாரியத்திற்குக் கடந்த 34 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வரும் இந்த மானியத் தொகை உயர்த்தப்படாததாலும் அவ்வாரியத்தின் கோயில்கள் பெரிதும் சீரழிந்து, சாதாரண பராமரிப்புப் பணிகள் கூடச்செய்ய முடியாத நிலையில் இருந்தன. இதனைப் போக்குவதற்காக 1992–93 ஆம் ஆண்டு முதல், இதற்குக் கூடுதலாக ரூ. 10 இலட்சம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதியாக, தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதி நிறுவனத்தில் செலுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து, இந்தக் கூடுதல் ஒதுக்கீடான ரூ. 10 இலட்சம் கொடுக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[டாக்டர் ஜெ, ஜெயலலிதா] [1992 ஏப்ரல் 9

மேலும் முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து, முதற்கட்டமாக 19 பாடல் பெற்ற கோயில்கள், மற்றும் 16 மங்களாசாசனம் செய்யப்பட்ட கோயில்களின் திருப்பணிக்காக, ரூ. 50 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திருவாரூரில் உள்ள உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ள உலோகத் திருமேனிகளை முறையாகப் பராமரிக்க அந்த மையத்தில் குளிர் சாதன வசதி ஏற்படுத்த 9 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள, 8,443 கோயில்களில் 66,534 உலோகத் திருமேனிகள் உள்ளன. இந்த உலோகத் திருமேனிகள் திருடப்பட்டால், அவற்றை எளிதில் கண்டுபிடிக்க உதவியாக, சிலைகள் புகைப்படம் பிடிக்கப்பட்டு தொகுத்து வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு புகைப்படம் எடுக்கப்பட்ட சிலைகள், தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு பழம்பொருள் கலைச் செல்வங்கள் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்படுகின்றன. இதுவரை 2,563 கோயில்களில் 23,910 சிலைகள் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ளவற்றில், 3,883 கோயில்களைச் சேர்ந்த 21,505 சிலைகளுக்கு புகைப்படத் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த புகைப்படத் தொகுப்புகளை விரைவில் பதிவு செய்யவும், எஞ்சியுள்ள 1,997 கோயில்களைச் சேர்ந்த 21,129 உலோகத் திருமேனிகளை புகைப்படம் எடுத்து, அவற்றை பதிவு செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தற்போது இந்த உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டிருக்கும் சுவாமி சிலைகளுக்கு, வெள்ளிக்கிழமைகளில் மட்டும் பூஜை செய்யப்பட்டு வருகின்றது. இனிமேல் அங்குள்ள சுவாமி சிலைகளுக்கு, வாரத்தில் மூன்று நாட்கள், அதாவது, திங்கள், செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில், பூஜை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1.55.

கோயில்களில் உள்ள நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் குறித்து, சரியான மதிப்பீடு செய்யவும், பாதுகாப்பாக அவற்றை வைத்திருப்பது குறித்தும், ஆய்ந்து வழிமுறைகளை எடுத்துரைப்பதற்காக, ஓய்வு பெற்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களைத், தலைவராகக் கொண்ட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஆய்வு செய்து சில யோசனைகளைத்தெரிவித்தது. அதன் அடிப்படையில், பாதுகாப்பு



1992 ஏப்ரல் 9] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

ஏற்பாடுகள் பற்றிய அறிவுரைகள், அனைத்துக் கோயில் செயல் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டன. இது தவிர, கோயில்களுக்கு இரும்புக் கதவுகள் பொருத்தவும், திருடர்கள் எச்சரிக்கை மணி (Burglar Alarm) பொருத்தவும், ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

கோயில் பாதுகாப்புப் படை.— நமது பண்பாட்டு பாரம்பரியத்தினைப் பிரதிபலிக்கின்ற திருக்கோயில்கள், நமது கலைப் பொக்கிஷங்களாகும். அவற்றையும், அவற்றிற்குச் சொந்தமான உடைமைகளையும் பாதுகாப்பது என்பது, தனது தார்மீகக் கடமையாக இவ்வரசு கருதுகிறது. கடந்த சில மாதங்களாக கோயில்களில் திருட்டு மற்றும் சிலைகள் உடைக்கப்படுவதாக, செய்திகள் வந்தவண்ணமுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் கூட இது குறித்து இந்த மாமன்றத்தில் எடுத்துரைத்து இருக்கிறார்கள். இவைகளை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த, ஒரு சிறப்பு ஏற்பாட்டை, இந்து சமய அறநிலைய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குரிய எனது பதிலுரையில் அறிவிக்கின்றேன் என்று தெரிவித்திருந்தேன்.

கோயில்களில் உள்ள விலையுயர்ந்த உலோகத் திருமேனிகளையும், சிலைகளையும், ஆபரணங்களையும் மற்றும் ஆராதனைக்குரிய பொருள்களையும், முழுமையாகப் பாதுகாப்பதற்காக, காவல் துறையில், ''கோயில் பாதுகாப்புப் படை'' ஒன்று தனியே ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிறப்புப் பிரிவு விரைவில் அமைக்கப்படும். ஏற்கனவே, I dol theft wing என்று ஒரு பிரிவு காவல் துறையில் உள்ளது. சிலைகள் திருட்டுப் போனால், அவற்றைக் கண்டு பிடிக்க இப்பிரிவு செயல் படுகிறது. அதில் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில், ஒரு துணை காவல் துறை கண்காணிப்பாளர், 5 ஆய்வாளர்கள், 3 துணை ஆய்வாளர்கள், 4 தலைமைக் காவலர்கள், 3 முதல் நிலைக் காவலர்கள், 13 இரண்டாம்நிலை காவலர்கள், ஆக மொத்தம் 30 பேர் மட்டுமே உள்ளனர். அது வேறு- இது வேறு. இந்தப் பிரிவு, திருட்டுக் குற்றங்களை நடவாமல் தடுப்பதற்கு ஏற்படுத்தப்படும் பிரிவு.

கோயில் பாதுகாப்புப் படை பிரிவில் ஆயிரம் இரண்டாம் நிலைக் காவலர்கள் நியமிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இவர்களைத் தவிர, மாதம் ரூ. 750 தொகுப்பு ஊதியத்தில், 3,000 முன்னாள் ராணுவத்தினரும் இந்தப் பிரிவில் நியமிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மொத்தம், இந்தப் புதிய பிரிவில் 4,000 பேர் பணி அமர்த்தப்

படுவார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) பணியில் அமர்த்தப்படும் 1,000 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும், 3,000 முன்னாள் ராணுவத்தினருக்கும், அவர்கள் பாதுகாப்புப் பணியில் உள்ள நேரங்களில், துப்பாக்கி கொடுக்கப்படும், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் காவல் பணி புரியும் கோயில், எந்தக் காவல் நிலையத்தின் எல்லைக்குள் இருக்கின்றதோ, அந்தக் காவல் நிலையத்தில் காவலர்களாக பணியில் அமர்த்தப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அங்கிருந்து சென்று, அந்த அந்தக் கோயில்களில் காவல் பணி புரிவார்கள். இந்த அமைப்பை ஏற்படுத்த, அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5.28 கோடி செலவாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பெரும் செலவினை, நிதி வசதி இல்லாத காரணங்களினால், கோவில்கள் முழுமையாக ஏற்க முடியாது என்பதால் மொத்தச் செலவினத்தில் 10 சதவிகிதத் தொகையை மட்டும் கோயில்கள் ஏற்கும், மீதமுள்ள 90 சதவிகிதத் தொகையை, அரசே ஏற்கும். (மேசையைத் தட்டும் ஒலி).

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர், மற்றும் அறநிலையத் துறை துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் ஆகியோர், இந்தக் கோவில் பாதுகாப்புப் படை காவலர்கள் செய்யும் பணிகளை மாதம் ஒரு முறை ஆய்வு செய்வார்கள்.

பிற்பகல் 2.00.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை அரசுச் செயலாளர், மாநிலக் காவல் துறைத் தலைவர் மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் ஆகியோரைக் கொண்ட உயர் மட்டக் குழு இப்பாதுகாப்புப் படைப் பிரிவின் பணிகளை ஆய்வு செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில் பணியாளர்கள் நலன். தமிழ் நாட்டில் உள்ள திருக்கோயில்களில், மொத்தம் 49,713 பணியாளர்கள் பணி புரிந்து வருகிறார்கள். அவர்களில் 4,166 பணியாளர்கள், உதவி ஆணையர் அல்லது செயல் அலுவலர்கள் மற்றும் அதற்கு மேல் நிலையில் உள்ள அதிகாரிகளின் கீழ் உள்ள பெரிய கோயில்களில் பணியாற்றி வருகிறார்கள், இவர்களைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட அரசு ஊழியர்களுக்கு நிகராக இவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதர சிறிய கோயில்களின் பணியாளர்களைப் பொறுத்த மட்டில், அவர்கள் பணியாற்றும் கோயிலின் வருமானத்தைப் பொறுத்து, ஊதியம் வழங்கப்படுகிறது. மொத்தத்தில், 1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு



ஆலயத்தின் ஆண்டு வருவாயில் 40 சதவீதத்திற்கு மிகாத அளவு, அவ்வாலயத்தினுடைய பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது,

நலிந்த திருக்கோயில்களில் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு நிதியின்மை காரணமாக, ஊதியத் தொகை கொடுப்பதில் ஏற்பட்ட சிரமங்களினால், அவை வழங்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது, அப்படிப்பட்ட நிலுவைத் தொகையை வழங்குவதற்காக, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில் உபரி நிதியிலிருந்து, ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதியாகக் கொண்டு, ஆலய ஊழியர் நலத் திட்டம் உருவாக்கப்பட்டது. அந்த நிதியின் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, ஆண்டு வருமானம் ரூபாய் 25,000-க்குக் குறைவாக உள்ள ஆலயங்களில் பணி புரிந்து வரும், மாத ஊதியம் ரூபாய் 300-க்கும் குறைவாகப் பெறுவோருக்கு, ஆண்டுதோறும் ஊதியத் தொகை நிலுவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் பல கோயில் பணியாளர்கள் பயனடையும் வகையில், இந்தத் திட்டத்தில் ஆலய வருவாய் வரம்பினை உயர்த்தி, அதாவது ஆண்டு வருவாய் ரூபாய் 40,000 வரை உள்ள கோயில்களில் பணியாற்றும் ரூபாய் 400-க்கும் கீழ் மாதச் சம்பளம் பெறும் நிரந்தர மற்றும் முழு நேரப் பணியாளர்களின் சம்பள பாக்கியும், இந்த ஆண்டு முதல், ஆலய ஊழியர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இதனால் சுமார் 500 ஆலய ஊழியர்கள் பயன் பெறுவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இது தொடர்பாக ......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்புக்கு திரு. தம்புசாமி அவர்கள் கரவொலி எழுப்பலாம். அவர் அமைதி காக்கிறார். (சிரிப்பு).

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> இப்போது நான் அறிவித்த புதிய திட்டத்தினால் சுமார் 500 ஆலய ஊழியர்கள் பயன்பெறுவார்கள். இது தொடர்பாக 1–7–1990 முதல் 30–6–1991 வரை உள்ள காலத்திற்கான சம்பள பாக்கிகள், உடனடியாக வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதற்காக 20 இலட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப் உள்ளது.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 ஏப்ரல் 9

சென்ற ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின் போது, 20 ஆண்டுகள் பணி செய்து, 60 வயதைக் கடந்து ஓய்வு பெற்ற, வேதபாராயணம், நாலாயிர திவ்யப் பிரபந்தம் மற்றும் அரையர் சேவை செய்த 100 பேர்களுக்கு, ஓய்வு ஊதியமாக மாதம் ரூ. 300 வழங்கப்படும் என்று நான் அறிவித்தேன். அத்திட்டம் இப்பொழுது செயல்படுத்தப்படுகிறது என்பதையும், அதே போன்று, அர்ச்சகர்களாக 20 ஆண்டுக்காலம் பணி செய்து 60 வயதைக் கடந்து, ஓய்வு பெற்ற 500 அர்ச்சகர்களுக்கு மாதம் ரூ. 300 ஓய்வூதியமாக வழங்கும் புதிய திட்டமும் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இத்திட்டத் திற்காக ஆண்டு ஒன்றுக்கு 18 இலட்சம் ரூபாய் செலவாகும். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடு).

ஓதுவார்களுக்கு ஏற்கனவே கொடுத்துக் கொண்டு இருக்கி றோம். அதை ஏற்கனவே அறிவித்து விட்டோம். அதனால் தான் நான் இப்போது குறிப்பிடவில்லை. அதைத்தான் சொன் னேன். இந்த வேதபாராயணம் வாசிப்பவர்களுக்கு, ஓதுவார் களுக்கு, அரையர் சேவை செய்பவர்களுக்கு ஏற்கனவே கொடுத்துக் கொண்டு இருந்தோம். 250 ரூபாய் என்று கொடுக்கப்பட்டு வந்ததை கடந்த மானியக் கோரிக்கையின்போது, நான் பேசு கின்ற போது 300 ரூபாயாக உயர்த்தப்படுகிறது என்று அறிவித் தேன். அதை இப்போது நடைமுறைப்படுத்தி, செயல்படுத்தி வருகிறோம். ஆனால் அர்ச்சகர்களுக்கு இதுவரை இத்தகைய சலுகை கொடுக்கப்படவில்லை, எனவே தான் இப்போது அறிவித் தேன். இந்த ஆண்டு முதல் 500 அர்ச்சகர்களுக்கு இந்த மாத உதவித் தொகை கிடைக்கும்.

கோயில்களில் தற்போது பணிபுரியும் பூசாரிகளுக்கும், அர்ச்சகர்களுக்கும், முறையாக அன்றாட பூஜைகளையும், வழி பாடுகளையும் செய்வதற்கு உதவும் வகையில், அவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சித் திட்டம், அதாவது ஒரு ரெப்பிரஷர் கோர்ஸ் ஒன்று அறிமுகப்படுத்தப்படும். இதற்காக 8 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். இத்திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் 500 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2-05.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக் கள், மற்றும் பலதரப்பட்ட உரிமைகளை குத்தகைக்கு விடும் போது, சட்ட விதிகளின்படி பொது ஏலம் மூலம் தான் விடப்பட வேண்டும். மேலும் தனிப்பட்ட முறையில் (Lease otherwise than by Public auction) குத்தகைக்கு விடுவதற்கு, தற்போதுள்ள



1992 ஏப்ரல் 9] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

விதிகளில் இடம் உள்ளது. இந்த விதியைக் கொண்டு, பெரும் பாலான குத்தகைகள் பொது ஏலத்தில் அல்லாமல், தனிப்பட்ட முறையில் குத்தகைக்கு விடுவதற்கு முன்மொழிவுகள் பரிந்துரைக் கப்படுகின்றன. இதனால் கோயில்களுக்குக் கிடைக்க வேண்டிய வருவாய் பெரும் அளவு குறைகிறது. எனவே, இதனைத் தடுக்கும் பொருட்டு, விதிகளில் திருத்தம் செய்து, அனைத்து அசையாச் சொத்துக்கள் மற்றும் பலதரப்பட்ட உரிமை குத்தகை களில், தவிர்க்க முடியாத இனங்களைத் தவிர, மற்ற வழக்கமான இனங்களை, பொது ஏலத்தில் தான் விடவேண்டும் என்ற சட்டத் திருத்தம் விரைவில் கொண்டு வரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயம் புராதன ஆலயங்களில் ஒன்றாகும். அந்தக் கோயிலின் பிரசித்தி பெற்ற திருவிழாக்களில் ஒன்று, ''தெப்பத் திருவிழா'' ஆகும். அது கடந்த 1988 ஆம் ஆண்டிலிருந்து, குளத்தில் போதிய நீரின்மை காரணமாக, ஒவ்வொரு ஆண்டும் நடத்த இயலாமல் போய்விடுகிறது. இதனால் பக்தர்களின் உள்ளத்தில் ஒரு பெரும் குறை இருந்து வருகிறது. இக்குளத்தில் மீண்டும் தொடர்ந்து, அத்தகைய தெப்பத் திருவிழாவை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்காக குளத்தில் போதுமான தண்ணீர் தேங்கி நிற்கும் வகையில் திட்டமிடப்பட்டு, அதற்காக முதல் கட்டமாக, ரூ. 35 இலட்சத் திற்கான மதிப்பீடும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இந்தப் பணிக்கு ஏறக்குறைய 1 கோடி ரூபாய் செலவாகும். முதற் கட்டமாக 35 இலட்சத்திற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது. இத் திருப்பணியை, நான் வருகின்ற 13 ஆம் தேதியன்று தொடங்கி வைக்க உள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பணி விரைவாக முடிக்கப்பட்டு, அடுத்த ஆண்டு ஜனவரித் திங்களில், தெப்பத் திருவிழா சிறப்பாக நடைபெறும். (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் போலவே, தமிழ்நாட்டிலுள்ள முக்கிய திருக்கோயில்களின் குளங்களுக்கும், திருப்பணி மேற்கொள்ளப் படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எம். ஆண்டி அம்பலம், திரு. ப. ரங்கநாதன், திரு. எ. தெய்வநாயகம், திரு. தே. குமாரதாஸ் மற்றும் திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் ஆகியோர் கொள்கை பற்றி விவாதிக்க வெட்டுத் தீர்மானங் களைக் கொடுத்துள்ளார்கள். தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு, தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப் பில், கொள்கை மற்றும் அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்

ஆகியவை பற்றிய முழு விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன, அதையே கொள்கை விளக்கமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆலய நிர்வாக வாரியம் குறித்து திரு. எஸ். ராஜாராமன், திரு. எம். சுந்தரதாஸ், திரு. கே. செல்வராஜ் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். இந்த ஆலய நிர்வாக வாரியத்தில், பெண்களையும், உடல் ஊனமுற்றோர்களையும் சேர்க்க வேண்டும் என்றும், காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், ஆலய நிர்வாக வாரியத்திலோ அல்லது மாவட்டக் குழுவிலோ இடம்பெறச் செய்ய வேண்டும் என்றும், ஆலய நிர்வாக வாரிய உறுப்பினர்களுக்கும் மாவட்டக் குழு உறுப்பினர்களுக்கும் வாகன வசதி மற்றும் பயணப்படி வழங்குவது குறித்தும், இவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மாநில ஆலய நிர்வாக வாரியத்திலும் மாவட்டக் குழுக்களிலும், தகுதியுடைய பெண்களையோ, உடல் ஊனமுற்றவர்களையோ உறுப்பினர்களாக நியமிக்க தடையேதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆலய மேம்பாட்டில் அக்கறை கொண்ட, தர்ம சிந்தனை உள்ள பெருமக்கள், அனுபவம் பெற்ற அதிகாரிகள், மற்றும் ஆன்மீக மதத் தலைவர்கள், தகுதியின் அடிப்படையில் இக்குழுக்களில் இடம் பெற்றுள்ளனர். எனவே இதில் இட ஒதுக்கீடு முறை இருக்க வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்ட போது, தவத்திரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இந்த வாரியத்தில் பங்கேற்க வேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் அதனை விரும்பாத சூழ்நிலையில் அவருடைய சார்பாக ஒருவரை முன்மொழியுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. சுவாமிகளிடமிருந்து எந்த பதிலும் வராத காரணத்தினால், வாரியம் அமைப்பதிலும் தாமதம் ஏற்பட்டது. பின்னர் நான் அனுப்பிய கடிதத்திற்கு விருப்பமில்லை என்று பதில் வந்தது. எனவே குறை அரசிடம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இருப்பினும், அரசுக்கு ஒத்துழைக்க இணங்கிய சமயப் பெரியோர்களின் ஆசியுடன் வாரியம் நல்ல முறையில் அமைக்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி),

பிற்பகல் 2-10

இதுவரை அரசிடமும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையரிடமும் குவிந்து இருந்த பல அதிகாரங்கள் தற்போது இந்த நிர்வாக வாரியத்திடம் தரப்பட்டு இருக்கிறது என்பதையும், மிகுந்த அனுபவமும் அறிவாற்றலும் பெற்ற சமயச்



சான்றோர்கள் மற்றும் பெரியோர்களுடைய வழிகாட்டுதலும் இந்த வாரியத்திற்குக் கிடைத்து இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கடந்த 2–3–1992 அன்று நடைபெற்ற இந்த வாரியத்தின் முதல் கூட்டத்தில், 132 பொருட்கள் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டு, சீரிய கருத்துப் பரிமாற்றத்திற்குப் பின் முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த முதல் கூட்டத்திலேயே 3.19 கோடி ரூபாய் அளவிலான திருப்பணித் திட்டங்களைச் செயல்படுத்த அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. வாரியக் கூட்ட நடவடிக்கைகளில் பங்கு பெற்றவர்களுக்குத் தெரியும். அவர்களுடைய கருத்துக்களுக்கு எங்ஙனம் மதிப்பு கொடுக்கப்பட்டது என்பதும், அவை எவ்வாறு சீர்தூக்கிப் பார்க்கப்பட்டது என்பதும், ஒருசிலர் குறை கூறுவது போல, இந்தக் கோயில் நிர்வாக வாரியம் ஒரு ஆலோசனை வழங்கும் குழு அல்ல. இது அதிகாரம் பெற்ற, சட்டபூர்வமாக நிறுவப்பட்ட, ஒரு முழுமைபெற்ற வாரியம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி).

தனிப்பட்ட முறையில் முதலமைச்சர் அவர்களின் கோவில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்கு, சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் வாழும் மக்கள். ஏன் பிற மதத்தினரும் கூட, முன்வந்து நன்கொடையாக அளித்த தொகை, மனமுவந்து அளித்த தொகை இந்தக் குறுகிய காலத்தில், 3.96 கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது என்றால், அது பொதுமக்கள் இந்த அரசு எடுக்கும் முயற்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் அங்கீகாரம் கொடுத்துள்ளனர் என்பதைத்தான் தெளிவுபடுத்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

இத்தனை முயற்சிகளையும் பாராட்ட மனம் இல்லாமல் ஒருசிலர் இந்த நிர்வாக வாரியத்தைக் குறை கூறியும், தமிழகத்தில் உள்ள கோயில்களுக்கும் அவற்றில் உள்ள விலை உயர்ந்த பொருட்களுக்கும் ஏதோ பாதுகாப்பு இல்லை என்பது போன்ற தவறான கருத்தைப் பரப்பி அதற்கென தனியாக மக்கள் பாதுகாப்புப் படை ஒன்று நிறுவ வேண்டும் என்ற முயற்சியிலே இறங்கி உள்ளனர். முந்தைய அரசுகள் எல்லாம் கோவில் நிர்வாகம் குறித்து எவ்வித ஆர்வமும் காட்டாதிருந்த காலத்தில் எல்லாம் வாளாவிருந்தவர்கள் இப்பொழுது குறை கூறத் தொடங்கி உள்ளார்கள் என்பதுதான் விந்தையிலும் விந்தையாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகத்திலுள்ள கோயில்களின் மிக முக்கிய சொத்தான விவசாய நிலங்களில் இருந்து வர வேண்டிய குத்தகை பாக்கித் தொகையை வசூலிக்க இந்த அரசு எதுவுமே செய்யவில்லை என்ற

தவறான குற்றச்சாட்டையும் கூறி வருகிறார்கள், தமிழ்நாடு குத்தகை விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் பொது அறநிலையக் கட்டளைகள் சட்டம் ஆகியவற்றின்பால் இருந்த தடை ஆணைகள் இப்போதுதான் நீக்கப்பட்டு குத்தகைப் பாக்கியை வசூலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, மேலும் ஏற்கெனவே இருந்த 5 வருவாய் நீதிமன்றங்களோடு இந்த அரசு புதிதாக ஆறு வருவாய் நீதிமன்றங்களை அமைத்து இப்பணியை விரைவுபடுத்தி உள்ளது,

நகர்ப்புறங்களில் உள்ள விலை உயர்ந்த நிலங்களைக் குறைந்த காலக் குத்தகைக்கு விடுவது என்ற அரசின் முடிவைப் பற்றியும் சிலர் குறை கூறி உள்ளார்கள். நீண்டகாலக் குத்தகைக்குக் கோயில் நிலங்களை விடாமல், அதுவும் குறிப்பாகக் குறைந்த குத்தகைக்கு விடப்படுவதைத் தவிர்த்து, கோயில்களுக்குக் கிடைக்கக்கூடிய அதிகப்படியான வருவாய் வரவேண்டுமென்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக்கூட சிலர் குறை கூறி வருகின்றனர். ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகையை உயர்த்தலாம் என்பதைக் கூட உணராமல் ஏதோ பேசுகிறார்கள், இந்த நடவடிக்கைகள் நகர்ப்புறத்தில் உள்ள கோயில்களுடைய வருமானத்தைப் பெருக்குமே ஒழிய குந்தகம் விளைவிக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கோயில்களுடைய வருமானத்தை ஒருபோதும் அரசு எடுத்துக் கொள்வது இல்லை. மாறாக எப்போதும் அரசுதான் நிதி உதவி வழங்கி வருகிறது, இந்தத் துறையினுடைய மொத்த வருமானமும் கோயில்களுடைய திருப்பணிகளுக்காகவும், நிர்வாகத்திற்காகவும், அன்றாடம் நடத்தப்பட வேண்டிய பூசைகளுக்காகவும்தான் செலவிடப்படுகிறது. சில நேரங்களில் கோயில் சிப்பந்திகளுக்குக் கூட மாதச் சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படும்பொழுது அரசு அவர்களுக்கு வேண்டிய உதவித் தொகைகளை வழங்கி வருகிறது,

பிற்பகல் 2-15

கன்னியாகுமரி தேவஸ்வம் என்ற அமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் பணிபுரியும் சிப்பந்திகளுக்கு சம்பளம்கூட கொடுப்பதற்கு பணம் இல்லாமல் பத்து இலட்சம் ரூபாய் மானியத் தொகையாக அரசு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையின் மீது ஆணைக்காக சமீபத்தில் என்னிடம் ஒரு கோப்பு வந்தது. அதில் அரசுச் செயலர் மூன்று இலட்சம் ரூபாய் மட்டும் வழங்கலாம் என்று பரிந்துரை செய்திருந்தார், கன்னியாகுமரி தேவஸ்வத்தின் தேவைகளை உணர்ந்து, அவர்களுக்கு ஒரு நிரந்தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதற்காக முதலமைச்சரின் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயை



போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் முதலீடு செய்து (மேசையைத் தட்டும் ஒலி) அதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் பத்து இலட்சம் ரூபாய் கிடைக்க வழிவகை செய்து இருப்பதை ஏற்கெனவே நான் தெரிவித்தேன். இதுபோன்று கடந்த 34 ஆண்டுகளாக அவர்களுக்குக் கிடைக்காத உதவியைச் செய்தது தவறாகுமா ? அல்லது அதில் ஏதேனும் உள்நோக்கம் இருக்கிறதா ?

இப்படித் தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ 40 ஆயிரம் திருக்கோயில்களையும் நன்கு பராமரிக்க வேண்டும் ; அவற்றை இயற்கைச் சீற்றங்களிலிருந்தும் பிற அழிவுகளிலிருந்தும் காக்க வேண்டும் ; அவை சீரமைக்கப்பட வேண்டும் ; அவற்றின் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எங்களது அரசின் உயர்ந்த கொள்கைகளைச் சாடும் வகையில் கருத்துக்களை ஒரு சிலர் கூறுவது நியாயமா ? இவர்கள் எதற்காக இவ்வாறு பேசி வருகின்றார்கள் என்பது தமிழக மக்களுக்கு நன்கு புரியும். எனவே, இவர்களது வாதங்களைப் பற்றி நான் எப்பொழுதும் கவலைப்பட்டது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி).

கோயில்களில் திருட்டு மற்றும் சிலை உடைப்பு போன்ற சம்பவங்கள் அவ்வப்போது நடைபெற்று வருவதை நிரந்தரமாகத் தடுக்கவும் இந்த அரசு தனியாக ஒரு கோயில் பாதுகாப்புப் படையை ஏற்படுத்தி உள்ளதை ஏற்கெனவே தெரிவித்தேன். இந்தச் சூழ்நிலையில் திருக்கோயில்களைப் பாதுகாக்கவும், காப்பாற்றவும் தனிப்பட்ட நபர்களால் ஆங்காங்கே மக்கள் பாதுகாப்புப் படை உருவாக்கப்பட வேண்டும் என்று சிலர் கூறுவது அறிவார்ந்த செயலாகத் தெரியவில்லை. சமய அமைதி பூத்துக் குலுங்கும் தமிழகத்தில், சமயத்தின் அடிப்படையில் வன்முறையாளர்கள் தோன்றுவதற்குத்தான் இந்த மக்கள் பாதுகாப்புப் படை வழிவகுக்கும் என்பதால் இதனை முறியடித்து, முளையிலேயே கிள்ளி எறியத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு சிறிதும் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கோயில் நிர்வாக வாரிய உறுப்பினர்களுக்கு வாகன வசதி செய்து கொடுப்பது என்பது இயலாத காரியம். ஏனெனில், கோயில் நிர்வாக வாரியத்திற்கு மொத்தம் 18 உறுப்பினர்களும், ஒவ்வொரு மாவட்டக் குழுவிற்கும் 12 உறுப்பினர்கள் வீதம் 17 மாவட்டக் குழுக்களும் உள்ளன. அத்தனை பேருக்கும் தனித்தனியே வாகன வசதி அளிப்பது என்பது, பொருளாதார ரீதியில் சாத்தியமாகாது. இருப்பினும் அலுவல்சாரா உறுப்பினர்களுக்கு, பயணப்படி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். ராமசுப்பு அவர்கள், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கங்கைகொண்டானில் உள்ள அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் திருப்பணி செய்வதன் அவசியம் குறித்து விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார். இந்த திருக்கோயிலின் திருப்பணிகளின் உத்தேச மதிப்பீடு, 12 லட்சம் ரூபாய் ஆகும். இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டில், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து, இதற்காக ஐந்து லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், திருப்பணி சம்பந்தப்பட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஓராண்டு கடந்து விட்டதால், புதிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, தொழில் நுட்ப அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது; விரைவில் திருப்பணி துவங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். இராஜாராமன் அவர்கள் சுவாமி மலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில் சார்பில் கட்டப்பட்ட திருமணக்கூடம் இன்னும் திறக்கப்படாமல் உள்ள நிலை குறித்தும், அங்கே உள்ள பழைய தங்கும் விடுதி பழுதடைந்து, உபயோகத்திற்கு ஏற்றதாக இல்லாமல் இருக்கும் நிலை குறித்தும், சுவாமி மலைப் பகுதியில் உள்ள இன்னம்பூர் அருள்மிகு எழுத்தறிவித்த நாதர் திருக்கோயில் திருப்பணி செய்து, குடமுழுக்கு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும், வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில் திருமண மண்டபத்தைப் பொறுத்தவரை, பெரும்பாலான பணிகள் நிறைவு பெற்றுவிட்டன. மதிப்பீட்டில் சேர்க்கப்படாத சாப்பாட்டுக் கூடம், சமையலறை முதலியவற்றிற்கான திருத்திய மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் முடிக்கப் பெற்றவுடன், திருமண மண்டபம் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்கும் விடுதியைப் பொறுத்தவரை, எல்லா பணிகளும் நிறைவு பெற்றுவிட்டன என்பதையும், அருள்மிகு எழுத்தறிவித்த நாதர் திருக்கோயில் குடமுழுக்கு செய்வதற்கான திருப்பணிக் குழு கலைக்கப்பட்டு விட்டது; விரைவில் குழு அமைக்கப்பட்டவுடன் குடமுழுக்கு நிகழ்த்தப் பெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 2.20

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள், தஞ்சைக்கு அருகில் உள்ள புன்னைநல்லூர் மாரியம்மன் கோயிலில் இராஜகோபுரம் வேலை தொடங்கி, முடியாமல் பாதியிலேயே நிற்பதைச் சுட்டிக்காட்டி, விரைவில் இராஜகோபுரத்தைக் கட்டி முடிப்பதைப் பற்றி விவாதிக்க, வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த



திருக்கோயில், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தைச் சேர்ந்ததாகும். இந்தத் திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலர், திரு. எஸ். பாபாஜிராஜா பான்ஸ்லே ஆவார். இராஜகோபுரம் கட்டும் பணி, 1985 ஆம் ஆண்டிலேயே துவக்கப்பட்டது. திருப்பணியை புன்னைநல்லூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சிங்கவன மற்றும் மருங்கைநாட்டார்கள், உபயத்தில் செய்து தருவதென ஒப்புக்கொண்டார்கள். பல்வேறு காரணங்களால், இப்பணி தடைபட்டது. அதற்குப் பிறகு, திரு. கோவிந்தசாமி பிள்ளை என்பவர் தலைமையில் அமைந்த தனிக் குழு, இரண்டாம் நிலை வரை இராஜகோபுரத் திருப்பணியை நிறைவு செய்தது. மேலும் பணி தொடர முடியாமல் தொய்வு ஏற்பட்டது. இந்தத் திருக்கோயிலுக்கான புதிய திருப்பணிக் குழு அமைக்கப்பட்டவுடன் இராஜகோபுரத் திருப்பணி வேலை நிறைவு பெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் வேதாரண்யத்தில் உள்ள வேதாரண்யேஸ்வரர் ஆலயத்திற்கு திருமண மண்டபம் கட்டுவதன் அவசியம் குறித்து ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். திருமண மண்டபம் கட்டுவதற்கு 1,50,000 ரூபாய்க்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, நிதியின்மை காரணமாக பணி தொடங்க இயலாமல் உள்ளது. இதற்கிடையே இதற்கான இடத்தேர்வும் முடிவுறவில்லை. ஆரம்பப் பணிகள் முடிவுற்றதும், நிதி உதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சிங்காரம், திரு. சி. சுவாமிநாதன், திரு. எஸ். இராஜாராமன், திரு. என் பன்னீர் செல்வம், திரு. கே. ஏ. மனோகரன், திரு. ஆர். தங்கராசு, திரு. ஆர். நடேசன், திரு. பி. ரங்கநாதன், திரு. பி. வி. ராஜேந்திரன் ஆகியோர், தத்தம் தொகுதிகளில் உள்ள திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருப்பணிகள் குறித்தும், அந்தத் திருக்கோயில்களில் நடத்தப்பெற வேண்டிய குடமுழுக்கு. அஷ்டபந்தனம், திருவிழாக்கள் மற்றும் பூஜைகள் ஆகியவற்றைப் பற்றியும், திருக்கோயில்களைச் சார்ந்த திருமண மண்டபம் கட்டக்கோரியும், கிராமப்புறங்களில் உள்ள சில கோயில்களை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் கொண்டுவரக் கேட்டுக் கொண்டும், வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். இவர்கள் குறிப்பிட்டுள்ள திருக்கோயில்கள் பலவற்றில், திருப்பணிகள் பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிலவற்றில் இதற்காக அமைக்கப்பட வேண்டிய திருப்பணிக் குழுக்களை விரைவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். சில திருக்கோயில்களில் அறங்காவலர்கள் நியமிக்கப்படவில்லை. மாவட்டக் குழுக்கள் இப்பணியினை விரைவில் செய்யும் என்பதையும் தெரிவித்துக்

கொள்கிறேன். ஆதனூர் அருள்மிகு திரௌபதி அம்மன் திருக்கோயில் மற்றும் ஆண்டிமடம் நக்கம்பாடி அருள்மிகு சிவன் கோயில் ஆகியவற்றிற்கு முதலமைச்சர் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து உதவி கேட்டிருக்கிறார்கள். அவசியத்தின் அடிப்படையில் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒட்டு மொத்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிற திருக்கோயில்கள் மற்றும் குறிப்பிடாத கோயில்கள் எல்லாவற்றிற்கும், திருப்பணிகளை மேற்கொண்டு, உற்சவங்களை காலத்தே, முறையாக நிகழ்த்த வேண்டும் என்பதுதான், இந்த அரசின் எண்ணம் என்பதையும் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான தக்க நடவடிக்கைகள் தொடரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். எஸ்.ராமசுப்பு, திரு. ஆர். நடேசன், திரு. எம். சுந்தரதாஸ், திருமதி ரமணி நல்லதம்பி ஆகியோர், சமீப காலங்களில் கோவில்களில் நடைபெறும் சிலை உடைப்பு மற்றும் களவு நிகழ்வுகளைக் குறிப்பிட்டு, அவற்றைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், குற்றம் இழைத்தவர்களைத் தண்டிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், திருக்கோயில் சிலைகள் மற்றும் இதர பொருட்களைப் பாதுகாப்பது குறித்தும், வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ் எஸ். ராமசுப்பு மற்றும் திரு. எச்.எம். ராஜு ஆகியோர், திருக்கோயில்களில் உள்ள புராதன சிற்பங்களைப் பாதுகாக்க, சிலைகளைப் புதுப்பிக்க மற்றும் அவற்றை மெருகூட்ட வேண்டியதன் அவசியம் குறித்து வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர்.

திருக்கோயில்களில் உள்ள கலையழகு வாய்ந்த சிற்பங்கள், வரலாற்றுச் சின்னங்கள், கல்வெட்டுகள் மற்றும் வண்ண ஓவியங்கள் மீது சுண்ணாம்பு அடித்தல், வர்ணம் பூசுதல் ஆகியவற்றைத் தவிர்க்குமாறும், சிற்பங்கள் வடிக்கப்பட்ட கற்கள் சிதிலமடைந்த சிற்பங்கள் ஆகியவற்றைக் கட்டுமானப் பணிக்குப் பயன்படுத்தக் கூடாது என்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இசையூட்டும் கல்தூண்கள் மற்றும் இதர பொருட்களை, பார்வையாளர்கள் தொடாத வண்ணம், தடுப்புகள் அமைத்து பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளன. சில திருக்கோயில்களில் சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள், காற்றழுத்த பம்புகள் (Hydraultic Pressure Pumps) மூலம் விசையுடன் கூடிய நீர் செலுத்தப்பட்டு, தூசி முதலானவை அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்படுகின்றன.



பிற்பகல் 2.25

திருமேனிகளைப் பாதுகாக்க திருவாரூரில் பாதுகாப்பு மையம் (ஐகன் சென்ட்டர்) ஒன்று உள்ளது. மேலும் கூடுதலாக மூன்று உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்களைத் திருச்சி, திருநெல்வேலி, மதுரை ஆகிய இடங்களில் நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருமேனிகளை நிழற்படம் எடுத்து, குறிப்புப் பதிவேடுகள் தயார் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு பழம்பொருள் கலைச் செல்வங்கள் சட்டத்தின்படி, தமிழக திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகள், தொல்பொருள் ஆய்வுத் துறையால் பதிவு செய்யப்பட்டு உள்ளன. கிராமங்களில் விழிப்புக் குழு ஏற்படுத்துவது, திருக்கோயில்களில் "திருடர்கள் அறிவிப்பு மணி" (பர்க்லர் அலார்ம்) மற்றும் காவல் பணியில் ஈடுபட்டிருக்கும் திருக்கோயில் பணியாளர்கள், தம் பணியை திறம்படச் செய்கிறார்களா எனக் கண்காணிக்க, 'விழிப்புப் பதிவு கடிகாரம்' (டெல்—டேல் கிளாக்) ஆகியவற்றை நிறுவுதல் ஆகிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. களவு பற்றித் துப்புக் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கவும், இத்தகைய குற்றங்களில் ஈடுபடுவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கவும் இந்தியத் தண்டனைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளவும், அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையில் ஒரு அங்கமாக ஏற்கெனவே சிலை திருட்டு தடுப்புத் தனிப்பிரிவு இயங்கி வருகிறது. மேலும் "கோயில் பாதுகாப்புப் படை பிரிவு" விரைவில் அமைப்பது குறித்துத் தெரிவித்தேன். இந்த அமைப்பு கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகளையும், சிலைகளையும், ஆபரணங்களையும் நிரந்தரமாகப் பாதுகாக்க வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. ஆர். சிங்காரம், திரு. எச். எம். ராஜு, திரு. ஆர். நடேசன், திரு. ஏ. சுவாமிநாதன், திரு. பி. ரங்கநாதன், திரு. ஜி. பழனிசாமி, திரு. டி. சுதர்சனம், ஆகியோர் தமிழகத் திருக்கோயில்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களை ஒட்டிய பிரச்சினைகளைப் பற்றியும், நகர்ப்புறங்களில் உள்ள மதிப்புமிக்க வீட்டு மனைகள் உள்ள பகுதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றியும், பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து, அவற்றைப் பற்றி விவாதிக்க வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 ஏப்ரல் 9

குத்தகை நிலங்களை உழுபவர்களுக்கே சொந்தமாக்க வேண்டும் எனவும், வசதி படைத்தவர்களின் ஆக்கிரமிப்பு களிலிருந்து கோயில் நிலங்களை மீட்டு, ஏழை விவசாயிகளுக்குப் பங்கிட்டுத் தரவேண்டும் எனவும், இங்கே கோரிக்கைகள் வைக் கப்பட்டன. இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும் —தமிழகத்திலுள்ள பெரும்பான்மையான திருக்கோயில்கள், ஒரு கால பூஜை கூட நடத்த இயலாத நிலையில் உள்ளன என்பது. மிக அதிகமான விளை நிலங்களையும், சொத்துக்களையும் வைத்திருக்கின்ற கோயில்கள் கூட, அரசின் உதவியை எதிர் பார்த்து உள்ளன. இதற்கு முக்கிய காரணம் விவசாய நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றிலிருந்து எவ்வித வருமானமும் இல்லாமல் இருப்பது. எனவேதான் இந்த அரசு பொறுப்பேற்ற வுடன், குத்தகை பாக்கியாக உள்ள சுமார் 69 கோடி ரூபாயை வசூல் செய்ய, எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. நகர்ப்புறங்களில் உள்ள குடிமனைகளில் உள்ளவர்களிடமும், உரிய வாடகையை வசூலிக்கவும், அவ்வப்போது பொதுப்பணித் துறை விதிமுறைகளின்படி வாடகையை உயர்த்தவும், தக்க நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களில், திருக்கோயில்கள் நிலங்கள், அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நிலமாற்றம் செய்யப்பட, முயற்சிகள் சில இடங்களில் நடப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளார்கள். இது போன்ற பிரச்சினைகள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. அவற்றின்மீது நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தவறிழைக்கும் அலுவலர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். சுந்தரதாஸ், திரு. ஆர். சிங்காரம், திரு. சி. சுவாமிநாதன், திரு. எச். எம். ராஜு ஆகியோர், திருக்கோயில்களுக்கு நியமிக்கப்படும் செயல் அலு வலர்கள் மற்றும் அறங்காவலர்கள், தெய்வ நம்பிக்கை உள்ள வர்களாகவும், ஒழுக்கசீலர்களாகவும், தொண்டு மனப்பான்மை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டுமென கருத்துத் தெரி வித்து, வெட்டுத் தீர்மானங்கள் கொண்டு வந்துள்ளனர். எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சுவாமிநாதன் குறிப்பிட்டுள்ளார். திருக்கோயில் செயல் அலுவலர் இந்து மதத்தைக் கடைப்பிடிப்பவராக இருக்கவேண்டும் எனவும், இந்து சமய அறிவில் தேர்ச்சி பெற்றவராக இருக்கவேண்டும் எனவும் விதிகள் இருக்கின்றன. அறங்காவலர்கள் தகுதிக் குறைபாடு பற்றியும் விதிகள் கூறுகின்றன. எனவே திருக்கோயில்களை நிர்வாகம் செய்யும் அக்கறைபேரும், இந்து சமயத்தைச் சார்ந் தவர்கள் என்பதை இந்த அரசு உறுதிசெய்யும்.



1992 ஏப்ரல் 9] [டாக்டர். ஜெ. ஜெயலலிதா]

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராஜாராமன் அவர் கள், ஆறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலை, அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலுக்கு, சொந்தமாக யானை ஒன்று வாங்கவேண்டும் என்று வெட்டுத் தீர்மானம் கொடுத் துள்ளார். முன்பு இருந்த யானைக்குப் பதிலாக புதிய யானை வாங்கும் முயற்சியில் திறிநளவே நன்கொடை சேர்ந்துள்ளது. இருப்பினும் திருக்கோயிலுக்கு யானை வாங்க, தலைமை வன உயிரின காப்பாளர் (சீஃப் வைல்ட் லைஃப் வார்டன்) அவர் களுடன் தொடர்பு கொள்ளப்பட்டு, விரைவில் யானை வாங்கப் படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2.30

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடேசன் அவர்கள் திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் கோயிலைச் சுற்றி, அனுமதியின்றி செங்கல் சூளைகள் அமைத்துள்ளதால்; கோயில் மதிற்சுவர்களுக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தைத் தடுக்க, நடவடிக்கை கோரி வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். இப் பிரச்சினை தற்போது, பத்மநாபபுரம் முன்சீப் கோர்ட்டில் வழக்காக நிலுவையில் உள்ளது. விரைவில் தடையாணை அகற்றப்பட்டு, மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள், உவரி அருள்மிகு சுயம்புலிங்கசுவாமி திருக்கோயிலை அரசே ஏற்று நடத்தவேண்டும் என்றும் ஆலய குருக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டு, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார். அரசு அலுவலர்கள் முன்னிலையில் ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில்; பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்பட்டுள்ளது. மேலும் இது குறித்து ஒரு வழக்கு நிலுவையில் உள்ளதால், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க இயலாமல் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராஜாராமன் அவர் கள், உபநிஷத்துகளை தமிழில் மொழிபெயர்த்து, மலிவுப் பதிப்பாக வெளியிடும் அவசியம் குறித்து, வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். வட மொழியில் உள்ள ஆகமங்கள் மற்றும் மந்திரங்களை, தமிழில் மொழிபெயர்ப்பு செய்து, தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மூலம் வெளியிடுவதற்கு, அரசு 5.25 லட்சம் ரூபாய் செலவு செய்ய அனுமதித்துள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. குமரி அனந்தன் தனது விவாத உரையில், தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களின் சிறப்பையும் புகழையும், பெருமையினையும் பற்றி ஒரு திறனாய்வே செய்து இம்மாமன்றத்தின் உறுப்பினர்களை பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள். அதற்காக அவருக்கு அவைவரின் சார்பாக எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கன்னியாகுமரி அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோயில் பணியாளர்களுக்கு மிகக் குறைந்த மாதச் சம்பளம் கொடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார். அத்தியானப்பட்டருக்கு ரூ. 8.10 காசு மாதச்சம்பளம் கொடுப்பதாக குறிப்பிட்டார். தற்போது அத்தியானப்பட்டருக்கு ரூ 43.90 காசு கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் மிகக் குறைந்த அளவுதான். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். எனவே இவர்களது ஊதியத்தையும் மேலும். உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கண்ணகி கோயிலில் வருகின்ற 17-4-1992 அன்று நடைபெறவுள்ள சித்திரை முழு நிலா விழாவினை மூன்று நாட்களுக்கு நடத்த ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மங்களாதேவி கண்ணகி கோயில் கேரளத்தில் அமைந்துள்ளது. அவர்கள் ஒரு நாள் விழாவிற்கு மட்டுமே தற்போது அனுமதி அளித்து வருகிறார்கள். இந்த ஆண்டு இந்த விழாவினை மூன்று நாட்களுக்கு நடத்துவதற்கான அனுமதியைப் பெற கேரள மாநில அரசுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேத ஆகம சாஸ்திர கல்லூரியில் தேவாரம் பாடமாக பயிற்றுவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கென தனியே தேவார பாடசாலைகளும் தற்போது உள்ளன. இவற்றை விரிவுபடுத்தும் திட்டமும் அரசிடம் உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவாரம் சொல்லிக் கொடுக்க அரசு இசைக் கல்லூரியில் நிரந்தர பேராசிரியர் பதவி இல்லை என்று குறிப்பிட்டார். தற்போது பகுதி நேர அடிப்படையிலே தேவாரம் இசைக் கல்லூரியில் பயிற்றுவிக்கப்படுகிறது. நிரந்தரப் பேராசிரியர் பதவியை தோற்றுவிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பழைய இசைக் கருவிகளை மீண்டும் வாசித்துக்காட்டி பயிற்சி அளிக்க ஏற்கனவே இசைக் கல்லூரியில் இருந்த இரண்டு ஆசிரியர் பதவிகளை புதுப்பிக்க வேண்டும் என்று கோரியுள்ளார். ஆனால் இசைக் கல்லூரியில் இதுபோன்ற இரண்டு ஆசிரியர் பதவிகள் எப்போதுமே இருந்தது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு பரிவோடு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கோயில்களை சுற்றுலா பயணிகள் எளிதில் சென்று பார்த்து வரும் வகையில் பேருந்துகள் விட வேண்டும் என்றும், நமது திருக்கோயில்களின் பெருமையையும், புகழையும் அதிக அளவு விளம்பரப்படுத்த வேண்டும் என்றும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் தெரிவித்தார். தமிழக திருக்கோயில்களின் கலையம்சங்களையும் சிறப்புகளையும் எடுத்துரைக்கும் வண்ணம் கண்கவரும் வகையிலான கையேடுகளை அரசு அச்சிட்டு வெளியிடும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்புத் திருக்கோயில் சுற்றுலாப் பயணங்களை மேலும் கூடுதலாக்க தமிழ் நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் பேசுகையில் வெளிநாட்டில் இருந்து வரும் பயணிகள் நம்முடைய கோயில்களை அதிக அளவில் பார்ப்பதற்கான ஏற்பாடுகளை செய்து தரவேண்டும் என்றும், விளம்பரப்படுத்த வேண்டும் என்றும் கூறினார். நான் சுற்றுலா துறையின் அமைச்சராகவும் இருப்பதால் இதிலே உள்ள ஒரு சிக்கலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வெளி நாட்டில் இருந்து வரும் பயணிகள் ஒரு கோயிலைப் பார்த்து விட்டாலே, மீண்டும் அடுத்த கோயிலைப் பற்றி சொன்னால், எல்லா கோயில்களும் ஒரே மாதிரியாகத்தானே இருக்கின்றன போதும், வேறு எங்காவது அழைத்துச் செல்லுங்கள்' என்று கூறிவிடுகிறார்கள். எனவே, வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகள் நம்முடைய சிறப்பு வாய்ந்த கோயில்களை அதிக அளவில் பார்ப்பதற்கான திட்டங்களை வகுக்க முயற்சிகள்

மேற்கொள்ளப்படும் என்று கூறுவதோடு இத்தகைய சிறப்பு ஆலய சுற்றுப்பயண திட்டங்கள் வகுப்பதனால் டொமஸ்டிக் டூரிசம் மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. நம்முடைய மக்களே நம்முடைய கோயில்களைப் பற்றி தெரிந்து கொள் வதற்கும் இங்குள்ள சிறப்பான கோயில்களைப் பார்த்து பழைய சரித்திரத்தை எல்லாம் தெரிந்து கொள்வதற்கும் வாய்ப்பு இருக்கும் என்பதால் இத்தகைய ஏற்பாடுகள், சுற்றுப்பயண திட்டங்கள், வகுக்கப்படும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 2—35

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஸ்தல விருட்சங்களைப் பாதுகாப்பது பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். பழமை யான மற்றும் அபூர்வமான ஸ்தல விருட்சங்களை முழுமை யாகப் பாதுகாக்கவும், வளர்க்கவும் இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத் திலே மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக திருக்கோயில்களில் உள்ள பழமையான ஸ்தல விருட்சங்களை யாரேனும் வெட்டினால் அது குற்ற மாக கருதப்பட்டு கடுமையான தண்டனை வழங்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்தல விருட்சங்களைப் பற்றி விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகள் மேற்கொண்டு அவற்றின் பயன்பாடுகள் கண் டறியப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை பற்றி நான் இதுவரை அளித்த பல்வேறு விளக்கங்களையும், பதில்களையும் ஈடுபாட்டுடனும் ஆர்வத்துடனும். கேட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அனை வருக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு எடுத்துவரும் பல்வேறு முயற்சிகளின் விளைவாக கோயில்களின் புனரமைப்பு பராமரிப்பு ஆகியவை தமிழகத்தில் மென்மேலும் சிறப்படை யும் என்ற நம்பிக்கையினையும், பெரு விருப்பத்தினையும் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தத் தருணத்தில் இத்துறையின் செயல்பாட்டினை மேம் படுத்தவும் குறைகளைக் களையவும் ஆக்கப் பூர்வமான சீரிய கருத்துக்களைக் கூறிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனை வருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவும் நான் கடமைப்பட்டுள்ளேன்.



மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய கருத்துக்களுக்கும்,
கொடுத்த வெட்டுத் தீர்மானங்களுக்கும் பெரும்பாலும்
என்னுடைய உரையில் பதில் கிடைத்திருக்கும் என்று நம்பு
கிறேன், சில கருத்துக்களுக்கு பதில் கிடைக்கவில்லை
யென்றாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியது அனைத்தும்
அவைக் குறிப்பேட்டில் உள்ளன, அவைகள் மீது உரிய
நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து, வெட்டுத்
தீர்மானங்களைக் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள்
அவைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை
நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி).

7. முதலமைச்சரின் திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதிக்கு உறுப்பினர்கள் வழங்கும் நன்கொடை குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களுடைய பதில் உரையைக் கேட்டுக் கொண்
டிருந்த மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், குறிப்பாக
ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. அண்ணா
மலை, தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் காலம் முழு
வதற்கும் உரிய ஊதியத்தை, மாண்புமிகு முதலமைச்சர்
ஆலயப் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்கு வழங்கு
வதாக (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு அறிவிப்பைக் கொடுத்
திருக்கிறார் இதைப்போல இன்னும் பல சட்டமன்ற
உறுப்பினர்கள், என்னிடத்திலேயே தகவல் தெரிவித்திருக்கி
றார்கள், சட்டமன்றத் துறையிலேயிருந்து நேரடியாக
அளிக்குமாறு பலர் தெரிவித்திருக்கிறார்கள், அதிலே ஒரு சிரமம்
இருக்கிறது. இந்தச் சம்பளத்தை மட்டும், அந்த உறுப்பினர்
பெயருக்கு அன்றி வேறு யாருக்கும் கொடுக்க முடியாது
என்கிற தெளிவான விதி இருக்கிற காரணத்தால்..

மாண்புமிகு டாக்டர். ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர்
அண்ணாமலை அவர்களுக்கும், நன்கொடை கொடுக்க முன்
வந்துள்ள மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய
உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில்,
அவர்களோ மாதா மாதம் இந்தச் சம்பளத்தை சட்டமன்றத்
துறையிலிருந்து பெற்றுக் கொண்டு அதனை என்னிடத்தில்
ஒப்படைக்கலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி),

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய வேண்டு
கோள், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும். இப்படி
ஒவ்வொரு மாதமும் ரூபாய் 2,750 நீங்கள் அனுப்பிக் கொண்

டிருக்கிறபோது உங்களுடைய ஐந்தாண்டு முடியப் போகிற நேரத்திலேதான் மொத்தத்தொகையும் சேரும். இப்படிச சட்டமன்ற பேரவைத் துறையிலிருந்து கொடுக்க முடியாது இருக்கிற ஒரு சூழ்நிலையும் வரும், எனவே, ஒட்டுமொத்த மாக உங்களுடைய காலம் முழுமைக்கும் உரிய சம்பளத்தைக் கணக்கிட்டு மொத்தமாகக் கொடுக்க முன்வந்தால், சட்ட மன்ற உறுப்பினர்கள் சார்பிலே நானும் ஒரு பெரிய நிதியை மாண்புமிகு முதலமைச்சருடைய ஆலயப் பராமரிப்பு நிதிக்குக் கொடுப்பதாக அமையும், (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, திரு. அண்ணாமலையும் ஏனைய உறுப்பினர்களும் அதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 2.40

## 6, மானியக் கோரிக்கைகள், 1992-93—விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி),

கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்—(தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண், 12—தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்துசமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படு கின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. கே. செல்வராஜ்,

திரு. கே. செல்வராஜ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெறப்படுகிறது,

திரு. ஜி பழனிசாமி. தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்,

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி. அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர் மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.



டாக்டர். தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படு கிறது.

" தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை கள் சட்ட நிர்வாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூபாய் 8,95,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் " என்னும் மாண்புமிகு முதலமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடி வுற்றன. பேரவை மீண்டும் நாளை (10-4-1992) காலை 9-30 மணிக்கும் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

59. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் 1989-90-ஆம் ஆண்டிற்கான இருபத்திநான்காவது ஆண் டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

105. சென்னை பெருநகர் வளர்ச்சிக் கழகத்தில் 1987-88 ஆம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

106. கோரிக்கை எண் 12— தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992–93. (தமிழ், ஆங்கிலம்)

107. உரிமைக் குழுவின் அறிக்கை.

108. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி இரண்டாவது அறிக்கை, 1991–92.

109. பொதுச் கணக்குக் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை, 1991–92.

110. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கை, 1991–92.



54 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

**தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.**

முன்னுரை :

திருக்கோயில்களின் நிர்வாகத்தை முறையாகப் பராமரிப்பது, மேற்பார்வையிடுவது, திருக்கோயில்களின் அறக்கட்டளைகளை திறமையாக நிர்வகிப்பது ஆகியவை அரசின் தலையாய பொறுப்புகளில் ஒன்றாகக் கருதப் படுகிறது. இந்து சமய அறக் கட்டளைகள் நிர்வாகம் திறம்பட நடைபெறவும், அதன் பணிகளை மேற் பார்வையிடவும் 1925 ஆம் ஆண்டுக்கு முன்னரே பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது நாள் வரை, இந்து சமய, சமண சமய அறக்கட்டளை கள், அறநிலையங்கள் ஆகியவற்றின் நிர்வாகமும், அதனை மேற்பார்வையிடும் பணியும் தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) விதித் துறைகளுக்கிணங்க 1—1—1960 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த அரசு, ஆட்சிக்கு வந்ததும், திருக்கோயில் கள், அறநிலையங்கள் ஆகியவற்றைச் சீரிய முறையில் நிர்வகிக்க வேண்டும் எனபதில் தனிக் கவனம் செலுத் தியது. இந்து சமயக் கோயில்கள் பிற சமயக் கோயில் கள். மற்றும் அறக் கட்டளை நிறுவனங்கள் ஆகியவற்றை முறையாகப் பேணுவது, பராமரிப்பது தொடர்பாக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பல்வேறு பொறுப்புகளை, மன நிறைவளிக்கும் வகையில் அதிகாரிகள் நிறைவேற்ற இயலும் வண்ணம், நிறுவன ரீதியிலான அமைப்பு முறை மாற்றியமைக்கப்பட்டு, அதற்குப் புத்துயிரளிக்கப்பட வேண்டும் என்று கருதப் பட்டது. இந்நோக்கத்தை எய்தவும், திருக்கோயில் நிர்வாகத் தேவைக்கும், சூழ்நிலைகளுக்கும் பொருந்தச் செய்யவும் மேற்படி சட்டத்தின் பல விதித் துறைகளை திருத்த வேண்டியிருந்தது. ஆன்மீக சமயத் தலைவர் களை இதில் ஈடுபடுத்த வேண்டும் என்றும்

அறநிலையங்களின் நிர்வாகம் தொடர்பாக அவர்களுடைய ஆலோசனைகளையும், வழிகாட்டுதலையும் கோரிப் பெற வேண்டும் எனறும் கருதப்பட்டது. 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன. இதன் மூலம் மாநில அளவில் ஆலய நிர்வாக வாரியம், மாவட்ட அளவில் மாவட்ட குழுக்கள் என்ற இரட்டை அடுக்கு அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த திருத்தங்கள் 13—12—1991-ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தன. ஆலய நிர்வாக வாரியத்திடம், அரசு மற்றும் ஆணையாளரின் பல அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டன. ஆலய நிர்வாக வாரியம், அரசு அதிகாரிகள், அரசு அதிகாரிகள் அல்லாதோர் ஆகியோரைக் கொண்ட கூட்டு அமைப்பாகும். இந்த வாரியத்தில் தலைசிறந்த, புகழ் வாய்ந்த சமய, ஆன்மீகத் தலைவர்கள் அரசு அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தலைசிறந்த இப் பெருமக்களின் அறிவுரையையும், ஆலோசனையையும் பெற்று செயல்படும் வாய்ப்பை வாரியம் பெற்றுள்ளது.

**1. நிறுவனங்களின் எண்ணிக்கை :**

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் தமிழ்நாட்டில் 35,299 இந்து சமய, சமண சமய நிறுவனங்கள், இந்து சமய அறக் கட்டளைகள் உள்ளன. அவை பற்றிய விவரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| திருக்கோயில்கள் | .. | 33,258 |
| மடங்கள் | .. | 56 |
| மடத்தைச் சேர்ந்த கோயில்கள் | | 58 |
| குறிப்பிட்ட அறக்கட்டளைகள் | | 1,721 |
| அறக் கட்டளைகள் | .. | 189 |
| சமண சமயக் கோயில்கள் | .. | 17 |
| மொத்தம் | .. | 35,299 |



ஆண்டு வருமானம் ரூ. 2,000க்கும் அதிகமாக உள்ள சமய நிறுவனங்கள் அவற்றிற்கு மதிப்பிடத் தக்க வருமானத்தின் அடிப்படையில் இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| தொடர் எண் மற்றும் வகைப்பாடு. (1) | எண்ணிக்கை (2) |
|---|---|
| 1. ஆண்டு வருமானம் ரூ. 2,001க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 1,00,000க்கு குறைவாக உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை. | 8,259 |
| 2. ஆண்டு வருமானம் ரூ. 1,00,000-ம் அதற்கு மேலும் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை. | 328 |
| | 8,587 |

**2. ஆலய நிர்வாக வாரியம் :**

இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்திற்கு 13—12—1991 ஆம் நாளிலிருந்து செயலுக்கு கொண்டு வரப்பட்ட திருத்தங்களின் காரணமாக ஆலயங்கள் மற்றும் ஏனைய சமய நிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாகம் முழுவதும் சீரமைக்கப்பட்டுள்ளது. அதன்படி மாநில அளவில் ஆலய நிர்வாக வாரியமும், மாவட்ட அளவில் 17 மாவட்டக் குழுவும் செயல்படுகின்றன.

ஆலய நிர்வாக வாரியமானது பல்வேறு தரப்பினரையும் உறுப்பினராகக் கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்பாகும். பிரச்சினைகளின் நன்மை தீமைகளை அலசி ஆராயும் இந்த வாரியத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், சிறந்த ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த சமயப் பற்றுள்ள, தொண்டு மனப்பான்மையும் வள்ளல் தன்மையும் கொண்ட பெரு மக்களும், அனுபவம் மிக்க அதிகாரி

களும் அங்கம் வகிப்பர். இவ்வாரியம் ஆலயங்கள் சமய நிறுவனங்கள் ஆகியவற்றின் கொள்கைகளை வகுத்தல், திருப்பணித் திட்டங்களைக் கண்காணித்தல், பொதுவான மேற்பார்வை அதிகாரங்களைச் செலுத்துதல் ஆகிய பணிகளை ஆற்றுவதற்காக சிறந்த அமைப்பாகத் திகழ்கிறது.

ஓர் இலட்சமும் அதற்கு மேற்பட்டும் ஆண்டு வருமானம் உள்ள ஆலயங்களின் அறங்காவலர்களை நியமிப்பது உட்பட, ஆலயங்களைக் கண்காணித்தல், நிர்வகித்தல் ஆகியவை ஆலய நிர்வாக வாரியத்தின் பணிகளாகும். ஆண்டொன்றுக்கு ஓர் இலட்சத்திற்கும் குறைவான ஆண்டு வருமானம் உள்ள ஆலயங்களின் அறங்காவலர்களை நியமிக்கும் அதிகாரம் ஆலய நிர்வாகவாரியத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள மாவட்டக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஓரளவு நீதித்துறை தன்மை வாய்ந்த, சில குறிப்பிட்ட அதிகாரங்கள் தவிர, இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத் துறையைச் சேர்ந்த ஆணையாளர், துணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள் ஆகியோர் இதுகாறும் செலுத்தி வந்த ஏனைய அதிகாரங்கள் தற்போது ஆலய நிர்வாக வாரியத்திடமும், மாவட்டக் குழுக்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதுவரை அரசு செலுத்தி வந்த பல அதிகாரங்கள், தற்போது இந்த ஆலய நிர்வாக வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆலய நிர்வாக வாரியமானது பின்வரும் அரசு அதிகாரிகளையும் அரசு அதிகாரிகள் அல்லாதோரையும் உறுப்பினர்களாகக் கொண்டு 13—12—1991 ஆம் நாளன்று அமைக்கப்பட்டுள்ளது :

1. மாண்புமிகு முதல்வர்— தலைவர் (பதவி நிலை).

2. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்— உறுப்பினர்.

3. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்— உறுப்பினர்.

4. இந்து சமய அறநிலையத் துறைக்கு பொறுப்பு வகிக்கும் அரசுச் செயலாளர்—உறுப்பினர்.

5. ஆணையர், இந்து சமய அற நிலைய ஆட்சித் துறை—உறுப்பினர் செயலர் (பதவி நிலை).

உறுப்பினர்களாக உள்ள அரசு அதிகாரிகள் :

6. அரசு தலைமைச் செயலாளர்

7. அரசுச் செயலாளர், வருவாய்த்துறை

8. தலைமை பொறியாளர் (கட்டிடங்கள்) சென்னை.

9. தொல்பொருள் ஆராய்ச்சித்துறை இயக்குநர், சென்னை.

உறுப்பினர்களாக உள்ள அரசு அதிகாரிகள் அல்லாதோர் :

10. தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், காஞ்சி தொண்டைமண்டல ஆதீனம்.

11. திரு. டி. எஸ். சந்தானம், தலைவர், சுந்தரம் ஃபைனான்ஸ் லிமிடெட்.

12. திரு. பி. சிவந்தி ஆதித்தன்.

13. திரு. எம். ஏ. எம். இராமசாமி.

14. அல்லூர் திரு. விசுவநாத சிவாசாரியார்

15. திரு. கே. பராசரன், இந்திய அரசு முன்னாள் தலைமை வழக்குரைஞர்

16. ஸ்ரீமத் பரமஹம்ச வானமாமலை இராமானுஜ ஜீயர் சுவாமிகள், நாங்குனேரி, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

17. திரு. அக்னிஹோத்திரம் இராமானுஜ
தாத்தாச்சாரியார்

18. திருமதி இராணி டி. இந்திராதேவி. இராம
நாதபுரம்.

ஆலய நிர்வாக மேம்பாடு ஆலயங்களில் திருப்பணி
மேற்கொள்ளுதல் ஆகியவை தொடர்பான 132 பணி
கள் குறித்து ஆலய நிர்வாக வாரியம் அதன் முதல்
கூட்டத்திலேயே விவாதித்தது. 3.19 கோடி ரூபாய்
செலவில், ஆலயங்களில் திருப்பணிகளை மேற்கொள்
ளுதல், கள்வர் எச்சரிக்கை மணி அமைத்தல்,
திருமண மண்டபம் கட்டுதல், கடைகள் கட்டுதல் உட்
பட பல செயற் குறிப்புகளுக்கு வாரியம் ஒப்புதல்
வழங்கியது.

மாநிலம் முழுவதும் அமைந்துள்ள சமய, அறநிலைய
நிறுவனங்களில் நிர்வாகத்தைக் கவனிக்க, பதினேழு
(17) மாவட்டக் குழுக்களையும் வாரியம் அமைத்தது.
ஒவ்வொரு மாவட்டக் குழுவும் ஒரு தலைவரையும்,
அரசு அதிகாரிகள், அரசு அதிகாரிகள் அல்லாதோர்
ஆகிய 11 உறுப்பினர்களையும் அதாவது மொத்தம் 12
உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

### 3. நிர்வாக அமைப்பு

இந்து சமய அறக் கட்டளைகள் நிர்வாகத்துறை
ஆணையர் (இவர் இந்திய ஆட்சிப் பணியை சேர்ந்தவ
ராவார்) துறைத் தலைவர் ஆவார். இவரே ஆலய
நிர்வாக வாரியத்தின் உறுப்பினர்—செயலராகவும்
பதவி வகிக்கிறார். தலைமையிடத்தில் இவருக்கு
உதவியாக இணைஆணையர் இருவரும், துணைஆணையர்
பதவித் தரத்தில் நேர்முக உதவியாளர் ஒருவரும்,
உதவி ஆணையர் பதவித் தரத்தில் ஒரு கூடுதல் நேர்
முக உதவியாளரும் உள்ளனர். இவர்களுடன தலைமை
யிடத்தில் சட்டப் பிரிவிற்கு பொறுப்பு வகிக்கும் ஓர்
உதவி ஆணையரும் உள்ளார். மாவட்டங்களில் 10
துணை ஆணையர்களும், 17 உதவி ஆணையர்களும்
உள்ளனர். ஆலங்களுக்குச் சொந்தமான திரு
ஆபரணங்கள், மதிப்பு மிக்க பொருட்கள் ஆகியவற்றை
மதிப்பீடு செய்து சரி பார்க்கும் பணியை...



உதவி ஆணையர் பணித்தரத்தில் 8 சரிபார்ப்பு அதிகாரி
களும் உள்ளனர். இவர்களுடன, திருவாரூரிலுள்ள
தெய்வச் சிலைகள் பாதுகாப்பு மையத்திற்குப்
பொறுப்பு வகிக்கும் உதவி ஆணையர் ஒருவரும் உள்
ளார்.

ஆலயங்களில் திருப்பணி தொடர்பான மதிப்பீடு
களைத் தயாரித்தல், மேற்பார்வையிடுதல் மற்றும்
சமய நிறுவனங்களின் கட்டுமானப் பணிகளை மேற்
பார்வையிடுதல் போன்ற பணிகளில் ஆணையருக்கு
உதவியாக மேற்பார்வைப் பொறியாளர் ஒருவரும்,
கோட்டப் பொறியாளர் ஒருவரும் மற்றும் சார்நிலை
தொழில் நுட்ப அலுவலர்களும் பணியாளர்களும்
அடங்கிய பொறியியல் பிரிவு ஒன்றும் செயல்பட்டு
வருகிறது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர்
அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பதவித்
தரத்தில் தனி அதிகாரி ஒருவரைக் கொண்ட சிறப்பு
வருவாய்ப் பிரிவு உள்ளது. இது ஆலயங்களின் நிலங்
களைப் பார்வையிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்
கள் மற்றும் வருவாய்த்துறையின் பிற அதிகாரி
களுடன் தொடர்பு கொண்டு ஆலயங்களைச் சேர்ந்த
நிலங்கள் தொடர்பான அடிப்படை பதிவேடுகளைத்
தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. சிதம்
பரம், அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலுக்குச்
சொந்தமான நிலங்களைக் கண்டறியும் பணியை ஒரு
தனி வட்டாட்சியர் மற்றும் அவருடைய துணைப்
பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

கருவூலங்கள் கணக்குத் துறையைச் சேர்ந்த முது
நிலை கணக்கு அலுவலர் ஒருவர், கணக்குகள் பிரி
விற்குப் பொறுப்பு வகிக்கிறார். அவருக்கு உதவிக்
கணக்கு அலுவலர் ஒருவர் உதவி புரிகிறார்.

சமய நிறுவனங்களின் கணக்குத் தணிக்கையை,
சென்னை மாநிலக் கணக்குத் துறைத் தலைவர், அலு
வலகத்திலிருந்து முகமையில் வந்துள்ள தலைமைத்
தணிக்கை அலுவலரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்
இயங்கும் தனி தணிக்கைப் பிரிவு மேற்கொள்கிறது.

இம்மாநிலம் பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையரின் நிருவாகத்தின் கீழ் உள்ளது, மேலும் பதினேழு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு உதவி ஆணையரின் நிருவாகத்தின் கீழ் இயங்கிவருகிறது. அவை பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. துணை ஆணையர், சென்னை. | 1. உதவி ஆணையர், சென்னை. | சென்னை மாவட்டம், செங்கை—எம். ஜி. ஆர். மாவட்டத்தில் உள்ள சைதாப்பேட்டை, பொன்னேரி, திருவள்ளூர் வட்டங்கள். |
| 2. துணை ஆணையர், வேலூர். | 2. உதவி ஆணையர், காஞ்சிபுரம் | சைதாப்பேட்டை, பொன்னேரி, திருவள்ளூர் வட்டங்கள் நீங்கலாக செங்கை—எம். ஜி. ஆர். மாவட்டம். |
| | 3. உதவி ஆணையர், வேலூர் | வட ஆர்க்காடு— அம்பேத்கர் மாவட்டமும், திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டமும். |
| 3. துணை ஆணையர் சேலம். | 4. உதவி ஆணையர், தருமபுரி | தருமபுரி மாவட்டம். |
| | 5. உதவி ஆணையர், சேலம், | சேலம் மாவட்டம். |



| | | |
|---|---|---|
| 4. துணை ஆணையர் கோயம்புத்தூர் | 6. உதவி ஆணையர், கோயம்புத் தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |
| | 7. உதவி ஆணையர், ஈரோடு | பெரியார் மாவட்டம். |
| 5. துணை ஆணையர், தஞ்சாவூர். | 8. உதவி ஆணையர், தஞ்சாவூர். | தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தஞ்சாவூர், பேராவூரணி, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, திருவையாறு, பாபநாசம் ஆகிய வட்டங்களும், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடி வட்டமும் |
| | 9. உதவி ஆணையர், நாகப்பட்டினம். | நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள நன்னிலம், குடவாசல், திருவாரூர், நாகப்பட்டினம் திருத்துறைப் பூண்டி, வேதாரண்யம் ஆகிய வட்டங்கள். |

| | | |
|---|---|---|
| 6. துணை ஆணையர், மயிலாடுதுறை. | 10. உதவி ஆணையர், கும்பகோணம் | தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய வட்டங்கள் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை, சீர்காழி ஆகிய வட்டங்கள். |
| | 11. உதவி ஆணையர், கடலூர் | தென் ஆர்க்காடு மாவட்டம் |
| 7. துணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | 12. உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி. | குளித்தலை, மணப்பாறை வட்டங்கள் நீங்கலாக திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| | 13. உதவி ஆணையர், புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம், மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை, மணப்பாறை வட்டங்கள். |



| | | |
|---|---|---|
| 8. துணை ஆணையர், மதுரை. | 14. உதவி ஆணையர், மதுரை. | மதுரை, திண்டுக்கல்—அண்ணா மாவட்டங்கள் |
| 9. துணை ஆணையர், சிவகங்கை | 15. உதவி ஆணையர், இராமநாதபுரம் (இருப்பு) மதுரை. | இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டம், காமராசர் மாவட்டம். |
| 10. துணை ஆணையர், திருநெல்வேலி | 16. உதவி ஆணையர், திருநெல்வேலி. | நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்கள். |
| | 17. உதவி ஆணையர், நாகர்கோயில். | கன்னியாகுமரி மாவட்டம். |

[1992 ஏப்ரல் 9

**4. சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளின் நிருவாகம்:**

ஆலயங்கள் அவற்றின் முக்கியத்துவம், வருமானம், அவற்றிற்குச் சொந்தமாகவுள்ள சொத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆலயங்களுக்கு இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், செயல் அலுவலர்கள் நிலை—1 முதல் 4 வரை பதவித்தரங்களில் செயல் அலுவலர்கள் கீழே விரிவாக குறிப்பிட்டுள்ளவாறு நியமிக்கப்பட்டுள்ளனர் :—

| | | |
|---|---|---|
| இணை ஆணையர் | .. | 5 |
| துணை ஆணையர் | .. | 7 |
| உதவி ஆணையர் | .. | 9 |
| செயல் அலுவலர் நிலை 1 | .. | 66 |
| செயல் அலுவலர் நிலை 2 | .. | 117 |
| செயல் அலுவலர் நிலை 3 | .. | 172 |
| செயல் அலுவலர் நிலை 4 | .. | 117 |

மடங்கள் 58 ஆலயங்களையும், 70 கட்டளைகள் ல்லது குறிப்பிட்டஅறக்கட்டளைகள் ஆகியவற்றை ம் நிருவகித்துவருகின்றன. இதுவரை 9 மடங் ளைச் சேர்ந்த திருக்கோயில்களுக்குச் செயல் லுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆணையரின் நேர்முக உதவியாளரும், மண்டல ணிக்கை அதிகாரியும் இந்த மடங்கள் குறித்த ுவாகத்தை ஆய்வு செய்கிறார்கள்.

**அறங்காவலர்கள் குழுக்களை அமைத்தல் :**

திருத்தப்பட்ட சட்டத்திற்கிணங்க, ஆண்டொன்றுக்கு ரூபாய் ஓர் இலட்சமும், அதற்கு மேற்பட்டும்



1992 ஏப்ரல் 9]

வருமானம் உடைய ஆலயங்களின் அறங்காவலர்கள் குழுக்களை ஆலயநிருவாக வாரியம் அமைக்கும். ஆண்டு வருமானம் ரூபாய் ஓர் இலட்சத்திற்கும் குறைவாக உடைய ஆலயங்களின் அறங்காவலர்கள் குழுக்களை மாவட்டக்குழுக்கள் அமைக்கும்.

**6. கோயில் நிலங்களும் கட்டிடங்களும் :**

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக 4.91 இலட்சம் ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் உள்ளன. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | ஏக்கர். |
|---|---|---|
| 1. நன்செய் நிலங்கள் | . | 2,08,224.56 |
| 2. புன்செய் நிலங்கள் | .. | 2,64,430.88 |
| 3. வானவாரி | .. | 18,761.90 |
| மொத்தம் | .. | 4,91,417.34 |

இந்நிலங்களில் 1,06,807 குத்தகைதாரர்கள் பயிர் செய்து வருகிறார்கள்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான 20,530 வீடுகள், கட்டிடங்கள், 22,629 பேர்களுக்கும், வீட்டு மனைகள் 73,320 பேர்களுக்கும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

1–7–1991 ஆம் நாள் படி, 1400 ஆம் விளைச்சல் ஆண்டில் அனைத்து வகைகளின் கீழ் கோரிய மொத்த கேட்புத் தொகை ரூ. 8,300 இலட்சத்தில், நிலுவைத் தொகை, நடப்பு கேட்புத் தொகை ஆகிய வகையில் ரூ. 1,311 இலட்சம் வசூலிக்கப்பட்டது. ரூ. 6,989 இலட்சம் நிலுவையில் இருந்தது. 1401ஆம் விளைச்சல் ஆண்டுக்கான நடப்பு கேட்புத்

தொகையான ரூ. 1,632 இலட்சம் பற்றிய விவரம் வருமாறு :

| | | (ரூபாய் இலட்சம்) |
|---|---|---|
| 1. நன்செய் நிலங்கள் | .. | 795 |
| 2. புன்செய், வானவாரி நிலங்கள் | | 358 |
| 3. கட்டிடங்கள் | .. .. | 360 |
| 4. வீட்டுமனைகள் | .. .. | 119 |
| மொத்தம் | .. | 1,632 |

1401 ஆம் விளைச்சல் ஆண்டில் நிலுவைத் தொகை நடப்புக் கேட்புத் தொகை ஆகிய இனங்களின் கோரப் பட்ட மொத்த கேட்புத் தொகை ரூ. 8,621 இலட்ச மாகும். 1401 ஆம் விளைச்சல் ஆண்டுக்கான நடப்பு கேட்புத்தொகையை 1400 ஆம் விளைச்சல் ஆண்டுக்கான கேட்புத்தொகையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ரூபாய் 240 இலட்சம் அதிகரித் துள்ளது. 1398-ஆம் விளைச்சல் ஆண்டில் ரூ. 971 இலட்சமும், 1399 ஆம் விளைச்சல் ஆண்டில் ரூ. 1,168 இலட்சமுமாக மொத்த வசூல் தொகை இருக்க 1400 ஆம் விளைச்சல் ஆண்டில் வசூலிக்கப் பட்ட தொகை மொத்தம் ரூ.1,311 இலட்சம் ஆகும். 1401 ஆம் விளைச்சல் ஆண்டில் 1-7-1991 முதல் 31-1-1992 வரையிலான காலத்தில், ரூ. 967 இலட்சம் வசூலிக்கப்பட்டது. அதுபற்றிய விவரம் வருமாறு :—

| | | (ரூபாய் இலட்சம்) |
|---|---|---|
| 1. நன்செய் நிலங்கள் | .. | 401 |
| 2. புன்செய் நிலங்கள் | .. | 234 |
| 3. கட்டிடங்கள் | .. .. | 242 |
| 4. வீட்டுமனைகள் | .. .. | 90 |
| மொத்தம் | .. | 967 |



மேலே குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய் 967 இலட் சத்தில், 1400 ஆம் விளைச்சல் ஆண்டு வரையில் நிலு வையாயிருந்த கேட்புத் தொகை வகையில் ரூபாய் 513 இலட்சமும், நடப்பு விளைச்சல் ஆண்டுக்கான ரூபாய் 454 இலட்சமும் வசூலிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை நிலுவைத் தொகை நிவாரணச் சட்டம் கடந்த இரு பது ஆண்டுகளாகச் செயலில் இருந்ததால் ஆலயங் களுக்குச் சொந்தமான நிலங்களைப் பயிரிடும் குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகை நிலுவைகளை வசூலிக்க இயலவில்லை. ஏறத்தாழ 20 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர், இதுவரை அனுமதிக்கப் பட்ட கடன் தவணை ஒத்திவைப்புச் சலுகையை 31-7-1991-லிருந்து நீக்கும் துணிகர நடவடிக்கையை இவ்வரசுதான் தைரியமாகஎடுத்துள்ளது. இதன் பயனாக ஆலயங்களுக்குச் சேரவேண்டிய குத்தகைத் தொகை யை வசூலிப்பதற்கும், குத்தகைத்தொகை செலுத் தத்தவறும் குத்தகைதாரர்களை அந்நிலங்களிலிருந்து வெளியேற்றுவதற்கும் தற்போது சட்டத் தடை ஏதும் இல்லாததால், சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்களிட மிருந்து குத்தகைத் தொகையை வசூலிக்க இந்து சமய அறக் கட்டளைகள் நிருவாகத் துறை நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 874.57 இலட்சம் ரூபாய் அளவிற் கான குத்தகை நிலுவைத் தொகையை வசூலிக்க சமய நிறுவனங்கள் 10,077 வழக்குகளை பல வருவாய் நீதிமன்றங்களில் தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளன. மேலே குறிப்பிட்ட ரூ. 874.57 இலட்சம் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சம்மந்தப் பட்ட தொகை மட்டுமே. மொத்த குத்தகை நிலுவைத் தொகை ரூ. 6889 இலட்சமாகும் குத்தகை நிலுவைத் தொகை தொடர்பான வழக்குகளை விசாரிக்க 5 வருவாய் நீதிமன்றங்களே இருந்ததால், மன்னார்குடி, திருவாரூர், கும்பகோணம், திருநெல்வேலி, திருச்சி-ராப்பள்ளி, லால்குடி ஆகிய இடங்களில் மேலும் 6 வருவாய் நீதி மன்றங்களை அமைக்க, அரசு, அண்மையில் அனுமதித்துள்ளது. வருவாய் நீதி மன்றங்களைக் கூடுதலாக அனுமதித்ததால், இயன்ற விரைவில் வழக்குகளை முடிவு செய்ய இயலும்.

வேளாண் நிலங்கள் தவிர நகர்ப்புற நிலங்களை நியாயமற்ற குறைந்த குத்தகை தொகைக்கு நீண்ட காலத்திற்கு விடப்பட்ட அனைத்து குத்தகைகளையும் ரத்து செய்வது குறித்தும், தற்போதையபொதுச் சந்தை மதிப்பில் குத்தகைத் தொகையைச் செலுத்த அனுபோகதாரர்கள் விரும்பினால் குத்தகையைப் புதுப்பிப்பது பற்றியும் அரசு பரிசீலித்து வருகிறது.

**7. ஆலய திருப்பணியும் அவற்றைப் பழுது பார்த்தலும் :**

தமிழ்நாட்டில் ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடிப்பரவப் பெற்ற புகழ் மிகு புனிதத் திருத்தலங்கள் உள்ளன. எனவே இவற்றையும், வரலாற்று முக்கியத்துவம் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்களையும் நன்முறையில் பேணிப் பாதுகாத்து வர அவற்றிற்குத் திருப்பணி செய்வது இன்றியமையாததாகும். மேலும், வேறு சில முக்கியமான ஆலயங்களுக்கும் திருப்பணி மேற் கொள்ள வேண்டும். ஆலயங்களுக்குத் திருப்பணி செய்தல், அவற்றிற்கு பழுது பார்த்தல் ஆகியவை குறித்த செலவுகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பின்வரும் நிதி ஆதாரங்களிலிருந்து மேற் கொள்ளப்படுகின்றன :

1. பொது மக்கள் அளிக்கும் நன்கொடை.
2. அந்தந்த ஆலயங்களின் நிதி
3. செல்வச் செழிப்புள்ள வளமான ஆலயங்களின் உபரி நிதியிலிருந்து வருமானமில்லாத ஆலயங்களுக்கு வழங்கப்படும் நிதி.
4. அரசு மானியம்.
5. பொது நல நிதி
6. ஆலயங்கள் மேம்பாட்டு திட்ட நிதி
7. வருமானமில்லாத, உதவி தேவைப்படுகிற ஆலயங்களுக்கான திருப்பணி நிதி
8. முதலமைச்சரின் திருக்கோயில்கள் திருப்பணி-பராமரிப்பு நிதி

ஆகம விதிப்படி, ஒவ்வொரு ஆலயத்திற்கும், 12 ஆண்டுகளுக்குள் கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும். பொதுவாக, திருப்பணியை மேற்கொள்வதற்காக ஆலயங்கள் மூவகையாக வகைபடுத்தப் படுகின்றன, அவையாவன :



(1) புகழ்மிக்கவையும் சைவ நாயன்மார்களாலும், வைணவ ஆழ்வார்களாலும் பாடல் பெற்றவையுமான ஆலயங்கள்.

(2) வரலாற்றுப் புகழ் மிக்கவையும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்தவையுமான ஆலயங்கள்.

(3) உடனடியாகத் திருப்பணி மேற்கொள்ள வேண்டியுள்ளவையும், ஆகமவிதிப்படி 12 ஆண்டுகளுக்குள் கும்பாபிஷேகம் நடத்தவேண்டியுள்ளவையுமான ஆலயங்கள்.

**(i) அரசு மானியம் :**

ஆலயங்களில் திருப்பணிகளை மேற்கொள்வதற்காக, அரசு மானியமாக, 1991–92 ஆம் ஆண்டில் 45 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. தவிரவும் அண்மையில் கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத் திருவிழா தொடர்பாக, 8 ஆலயங்களில் திருப்பணிகளை மேற்கொள்வதற்காக 12.50 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இவற்றுடன், காமராசர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள அருள்மிகு நாச்சியார் கோயிலில் திருப்பணிகளை மேற்கொள்வதற்காக 15 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. 1991–92 ஆம் ஆண்டில், 54 ஆலயங்களில் திருப்பணிகளை மேற் கொள்ள மொத்தம் 72.50 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

**(ii) பொது நல நிதி :**

தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 97 ஆம் பிரிவின் கீழ் பெறப்படும் நன்கொடைகள், இந்திய ரிசர்வ் வங்கியில் வைப்பீடு செய்யப்படுகின்றன. அந்த நன்கொடைகள், திருக்கோயில்களில் திருப்பணிகளையும், பழுதுபார்ப்புப் பணிகளையும் மேற்கொள்வதற்காக, நிதியுதவி தேவைப்படும் ஆலயங்களுக்கு வழங்கப்படுகின்றன. நிதியுதவி தேவைப்படும் 54 ஆலயங்களுக்கு 1990–91 ஆம் ஆண்டில் 17.15 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

(iii) ஆலய மேம்பாட்டுத் திட்டம் ;

வசதியுள்ள ஆலயங்களில் உபரி நிதியிலிருந்து ஏற்படுத்தப்பட்ட ஐந்து கோடி ரூபாய் மூலநிதி, ஒரு கால பூசை செய்வதற்குக் கூட நிதி வசதி இல்லாத ஆலயங்களில், ''ஒரு கால பூசையேனும்'', செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதியி லிருந்து கிடைக்கும் வட்டியில் 50 சதவீதத் தொகை ஒரு கால பூசை செய்வதற்காகப் பயன் படுத்தப்படுகிறது. எஞ்சிய 50 சதவீதத் தொகை நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற ஆலயங்களுக்கும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்களுக்கும், பொது முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்களுக்கும் திருப்பணி செய்வதற்கும், பழுது பார்ப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. 1990–91 ஆம் ஆண்டில் 19 ஆலயங்களில் திருப்பணிக்காக ரூபாய் 89.20 இலட்சமும், 1991–92 ஆம் ஆண்டில் 10 ஆலயங்களில் திருப்பணிக்காக ரூபாய் 44.05 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

(iv) நிதி வசதி இல்லாத், நிதி வசதி தேவையுள்ள ஆலயங்களுக்குத் திருப்பணி நிதியுதவி :

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அளித்த நன்கொடைத் தொகையி லிருந்து 1 கோடி ரூபாய் மூலநிதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மிகக் குறைந்த வருமானமுள்ள ஆலயங் களின் திருப்பணிக்காகப் பயன்படுத்தப்பட்டு வரு கிறது. அரசு அமைத்துள்ள குழு, ஒவ்வொரு ஆண்டும், மானியம் வழங்குவதற்காக நிதிவசதி தேவைப்படும் ஆலயங்களைத் தெரிந்தெடுக்கின்றது. 1989–90 ஆம் ஆண்டில் 95 ஆலயங்களுக்கு ரூ. 9.50 இலட்சமும்; 1991–92 ஆம் ஆண்டில் 66 ஆலயங்களுக்கு ரூ. 16.50 இலட்சமும் வழங்கப்பட்டது.

(v) முதலமைச்சரின் திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி. :

திருக்கோயில்களின் தொன்மை வாய்ந்த பழம்பெரும் கலை பண்பாட்டுச் சிறப்பு மிக்கத்



தன்மையை பேணிக்காப்பதற்காக, முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி 5—8—1991 அன்று ஏற்படுத்தப்பட்டது. வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணி, பழுதுபார்ப்புப் பணி ஆகியவற்றை இந்த நிதியைக் கொண்டே மேற்கொள்ளலாம் என்று கருதப்படுகிறது. அனைத்து நிலையிலுள்ள மக்கள் தாராளமாக மனமுவந்து இந்நிதிக்குத் தொகை வழங்கியுள்ளனர். 6—4—1992 ஆம் நாள் நிலவரப்படி இந்நிதிக் கணக்கில் ரூ. 3.72 கோடி சேர்ந்து உள்ளது. இம்மாநிலத்திலுள்ள கோயில்களின் நிருவாகத்தில் சிறப்புக் கவனம் செலுத்தும் இந்த அரசின் மீது மக்களுக்குள்ள நன்மதிப்பையும், நம்பிக்கையையும் இது காட்டுகிறது

அண்மையில் நடைபெறற மகாமகம் திருவிழா தொடர்பாக கும்பகோணத்தில் உள்ள மூன்று ஆலயங்களின் திருப்பணிக்காக ரூபாய் 5.77 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

8. உலோகத் திருமேனிகளையும், ஏனைய மதிப்பு மிக்க பொருட்களையும் பாதுகாத்தல்.

ஆலயங்களில் திருட்டு நடைபெறுவதை அரசுஅறிந்து அவை ஏற்படாமல் தடுக்க இயன்ற அனைத்து நட வடிக்கைகளையும் எடுத்துள்ளது. ''கள்வர் எச்சரிக்கை மணிப் பொறிகளையும்'', (Burglar Alarms) இரும் புக் கதவுகளையும் ஆலயங்களில் பொருத்துதல் போன்ற திருட்டுக்கு இடமளிக்காத உறுதியான பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. உள்ளூர் காவல் துறையினரும், உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கும் காவல் துறைப் பிரிவினரும், ஆலயங் களில் நடைபெறும் திருட்டுக்களைகண்டு பிடித்து, குற்ற வாளிகள் மீது வழக்குப் பதிவு செய்வதற்காக அவர் களைக் கைது செய்வதற்கு உடனடியாக, உரிய முறை யான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்,

சிறிய கிராமங்களில் உள்ள ஆலயங்களில் நாள்தோ றும் வழிப்பாட்டிற்குப் பயனபடுத்தப்படாமல் உள்ள செப்புத் திருமேனிகளைப் பாதுகாப்பதற்கென்று, இத்

துறை திருவாரூரில் உலோகத் திருமேனி பாதுகாப்பு
மையம் ஒன்றை அமைத்துள்ளது. அங்கு, இத்தெய்வங்
களுக்கு வெள்ளிக்கிழமை தோறும் வழிபாடுகளும்,
நைவேத்தியமும் செய்யப்படுகின்றன. கிராம ஆலய
அலுவலர்கள், அவரவர் சம்பந்தப்பட்ட ஆலயங்
களின் திருவிழாக்காலங்களில் இத்திருமேனிகளை எடுத்
துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். இந்த உலோ
கத் திருமேனி பாதுகாப்பு மையத்தில் தற்போது பல்
வேறு ஆலயங்களின் 1917 உலோகத் திருமேனிகள்
பாதுகாக்கப்பட்டு வருகின்றன. உலோகத் திருமேனி
களை உலோக அரிப்பிலிருந்து காப்பாற்றுவதற்காக
உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தில், சீரான
தட்ப வெப்பம் மற்றும் ஈரத்தன்மையைப்
பராமரிப்பதற்காக 9.00 இலட்சம் ரூபாய் செலவில்
குளிர்சாதன வசதிகள் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்
பட்டு வருகின்றன. நடைபெற்று வரும் இந்தப் பணி
விரைவில் நிறைவு பெறும்.

குறிப்பிட்ட ஆலயம் ஒன்றில் திருட்டு நடைபெறு
மானால், சம்பந்தப்பட்ட உலோகத் திருமேனிகளின்
அடையாளங்களை எளிய முறையில் கண்டறிய,
எல்லா உலோகத் திருமேனிகளும் நிழற்படம் எடுக்கப்
பட்டு அந்த நிழற்பட நகல்கள் ஆணையர்/துணை
ஆணையர் உதவி ஆணையர் அலுவலகத்திலும், சம்பந்
தப்பட்ட ஆலயங்களிலும் வைக்கப்பட்டுள்ளன.

9. பக்தர்களுக்கான வசதிகள்.

ஆலயங்களுக்குத் தரிசனத்திற்காக வரும் பக்தர்
களுக்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்ற
கருத்தினை மனதில் கொண்டு, ஆலயங்களுக்கு வரும்
பக்தர்கள் ஆலயங்களுக்கு அருகிலேயே தங்க வசதி
யாக குடில்கள், ஓய்வு விடுதிகள், தனி நபர் அறை
கள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன
இவ்வாறாக மொத்தத்தில் 14 ஆலயங்களுக்கென 58
பயணிகள் ஓய்வு விடுதிகள், 231 குடில்கள் மற்றும்
951 தனி நபர் அறைகள் கட்டப்பட்டுள்ளன. ஆல
யங்களில் இறைவனுக்கு செய்யப்பட்ட பிரசாதம்
இலவசமாக பக்தர்களுக்கு அன்றாடம் வழங்கப்



படுகிறது. பக்தர்களின் வசதிக்காக ஆலயங்கள்,
பிரசாத கடைகளை நடத்துகின்றன. முக்கியத்துவம்
வாய்ந்த ஆலயங்களில், ஆலயத்தின் முக்கியத்துவம்
மற்றும் வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறும் வழி
காட்டிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

10. ஆலயங்களால் நடத்தப்படும் பள்ளிகள், கல்லூரிகள் அன்பு இல்லங்கள் மற்றும் மருந்தகங்கள் :

தெய்வ நெறிகளை கடைப்பிடிக்கத் தேவையான
கட்டுப்பாட்டினையும், கலாச்சாரம் மற்றும் சமயக்
கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும்
நோக்கோடு ஆலயங்கள், சமயம் மற்றும் பொதுக்கல்வி
தொடர்பான பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நிறுவனங்
களை நடத்தி வருகின்றன. அவற்றின் விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | கல்லூரிகள் .. ... | 5 |
| 2. | தொழில் நுட்ப பயிலகங்கள் .: | 2 |
| 3. | மேல் நிலைப் பள்ளிகள் .. | 10 |
| 4. | உயர்நிலைப் பள்ளிகள் .. | 10 |
| 5. | நடுநிலைப் பள்ளிகள் .. | 2 |
| 6. | ஆரம்ப பள்ளிகள் .. | 7 |
| 7. | மெட்ரிகுலேஷன் பள்ளி .. | 1 |
| 8. | நாதஸ்வரம் மற்றும் தவில் பள்ளி. | 1 |
| 9. | சித்த வைத்தியசாலைகள் .. | 14 |
| 10. | அன்பு இல்லங்கள் .. | 25 |
| 11. | வேத ஆகம பாடசாலைகள் | 4 |
| 12. | முதியோர் இல்லங்கள் .. | 3 |
| 13. | தேவாரப் பாடசாலைகள் | 2 |
| 14. | காதுகேளாதோர்-பேசயியலாதோர் பள்ளி. | 1 |

ஆலயங்கள், சமயப் பணிகளுடன், சமூக நல நடவடிக்கைகளிலும் பங்கு கொண்டு சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களுக்குத் தொண்டாற்றுவதிலும் ஈடுபட்டு வருகின்றன. மேலும் 'அன்பு இல்லங்களை நடத்தி வருவதோடு, இந்து மதத்தைச் சேர்ந்த ஏழைகளுக்கு இலவசமாக திருமணமும் நடத்தி வருகின்றன.

தமிழ்நாட்டில் இந்து மதத்தைச் சேர்ந்த பக்தர்கள் சாதி வேறுபாடின்றி ஆலயங்களுக்கு சென்று வழிபாடு நடத்துகின்றனர். இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் இந்த சமுதாயத்தின் சமய வாழ்க்கையில் ஆதி திராவிடர்களின் ஈடுபாட்டை ஊக்கப்படுத்தவும், சிறப்பு வழிபாடுகளும், பொது விருந்துகளும் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திரதின நாளன்றும் மற்றும் பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாள் அனறும் (அதாவது பிப்ரவரி மாதம் 3-ஆம்நாள்) நடத்தப்படுகின்றன. ஆலயங்கள் நடத்தும் இத்தகைய பொது விருந்துகளில் பேரறிஞர் அண்ணா நினைவு நாளான 3–2–1992 ஆம் நாளன்று 6.65 இலட்சம் ரூபாய் செலவில் இம்மாநிலத்தில் உள்ள 344 ஆலயங்களில் பொதுவிருந்துகள் நடைபெற்றன; ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த 1.12 இலட்சம் மக்கள் உட்பட ஏறத்தாழ 2.24 இலட்சம் பேர்கள் கலந்து கொண்டனர்.

### 11. கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் :

இணைக்கப்பட்ட மற்றும இணைக்கப்படாத தேவஸ்வம் என்றழைக்கப்படுகின்ற கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 490 ஆலயங்களைப் பராமரித்து வருகிறது. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் அரசு மானியமாக 13.70 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. எனினும் 1991–92 ஆம் ஆண்டில் மூன்று இலட்சம் ரூபாய் கூடுதல் மானியம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசு மானியம் 16.70 இலட்சம் ரூபாய் தவிர இந்த தேவஸ்தானத்தின் ஆண்டு வருமானம் சுமார் 44.08 இலட்சம் ரூபாய் ஆகும். கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியத்தில் கட்டுப்பாட்டிலுள்ள ஆலயங்களின் பராமரிப்புச் செலவு கணிசமாக உயர்ந்துள்ளதையும் கடந்த 34



வழங்கப்படும்
ஆண்டுகாலமாக இந்த வாரியத்திற்கு செய்யப்படாத காரணத்
மானியத்தில் எந்த உயர்வும் ஆண்டொன்றிற்கு
தாலும் 1992-ஆம் ஆண்டிலிருந்து உத்தேசிக்கப்
கூடுதலாக ரூபாய் 10 இலட்சம் வழங்கப்பட திருக்கோயில்
பட்டுள்ளது. இத்தொகை முதலமைச்சரின் வைக்கப்
திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து பெறப்படும்
பட்டுள்ள ஒரு கோடி வைப்பு நிதியிலிருந்து 1992–93 ஆம்
வட்டியிலிருந்து கொடுக்கப்படும். எனவே வாரியத்திற்கு
ஆண்டிலிருந்து கன்னியாகுமரி தேவஸ்வம் இலட்சமாக இருக்
அரசு வழங்கும் மானியம் ரூ. 23.70 செயல்
கும். துணை ஆணையர் பதவித்தரத்திலுள்ள திருக்
அலுவலர் இதன் நிருவாகத்தைக் கவனிக்கிறார். பிரிவு
கோயில் பணியாளர்களைக் கீழ்க்காணும் மூன்று
களாக வகைப்படுத்தலாம் :—

| | | |
|---|---|---|
| 1. | கண்காணிப்பாளர் உட்பட அரசு கருவூலங்களிலிருந்து ஊதியம்பெற்று வருகின்ற அரசுப் பணியாளர்கள். | 70 |
| 2. | தேவஸ்வங்களிலிருந்து சம்பளம் பெறுகின்ற ஆலயப் பணியாளர்கள். | 15 |
| 3. | சில்லரைச் செலவின தொழிலாளர்கள். | 987 |
| | மொத்தம் .. | 1,072 |

### 12. திருக்கோயில் பணியாளர்கள் :

துறை
இம்மாநிலத்தில் இந்து சமய அறநிலையத் பல்வேறு
யின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பணி
சமய நிறுவனங்களில் 49,713 பணியாளர்கள் பணமாகவும்
புரிந்து வருகின்றனர். அவர்களுக்கு 49,713
பொருளாகவும் ஊதியம் வழங்கப்படுகிறது. வரு
பணியாளர்களில், 4,166 பணியரளர்கள் உயர் ஆணையாளர்
வாய்த் தொகுதியைச் சேர்ந்த உதவி பதவித்
பதவித்தரத்திலும் அதற்கும் உயர் அதிகாரி நிருவகிக்
தரத்திலும் உள்ள செயல் அலுவலர்களால் ஏறத்
கப்படுகின்ற திருக்கோயில்களில் பணிபுரிகின்றனர். இ
தாழ அரசு பணியாளர்களின் ஊதிய வீதங்களில்

பணியாளர்களுக்குச்சம்பளமும் படிகளும் கொடுக்கப்படுகின்றன. ஏனைய பணியாளர்களுக்குச் சமய நிறுவனங்களின் வருமானத்திற்கேற்ப குறைந்த வீதங்களில் அவர்களது சம்பளமும் படிகளும் நிர்ணயிக்கப்படுகின்றன; சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளபடி சம்பந்தப்பட்ட சமய நிறுவனங்களின் ஆண்டு வருமானத்தில் 40 சதவீதத்திற்கு மேற்படாத வகையில் பொதுவாகப் பணியாளர் ஊதியத்திற்காகச் செலவிடப்படும்.

## (i) திருக்கோயில் பணியாளர் நலத்திட்டம் :

பழனியிலுள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலய நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் மூலநிதி உருவாக்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கின்ற வட்டித் தொகையிலிருந்து ஆண்டு வருமானம் 25,000 ரூபாய்க்குக் குறைவாக உள்ள ஆலயங்களில் பணிபுரிபவர்களில் மாதச் சம்பளம் 300 ரூபாய்க்குக் குறைவாக வாங்கும் பணியாளர்களுடைய ஊதிய நிலுவைகளைக் கொடுக்க பயன்படுத்தப்படுகின்றது. இது போன்று, 1991—92-ல் 743 சமய நிறுவனங்களில் பணியாற்றிவந்த 1288 பணியாளர்களுக்கு 19.25 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

## (ii) திருக்கோயில் பணியாளர் குடும்ப நல நிதித் திட்டம் :

பணியின்போது இறக்கும் பணியாளர்களது குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு, ''தொகுதி காப்புறுதித் திட்டம்'' ஒன்று 1980ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே தொடங்கப்பட்டது. பின்னர், இத்திட்டம் மாற்றப்பட்டு, 1991 டிசம்பர் வரையில், பணியின் போது இறந்த ஒவ்வொரு ஆலய பணியாளர்களது குடும்பங்களுக்கு 10,000 ரூபாய் வழங்கப்பட்டது. குடும்ப நலத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த தொகை யானது, 10—1—1992 ஆம் நாலிருந்து 20,000 ரூபாயாக தற்போது உயர்த்தப்பட்டுள்ளது. அண்மையில் கொண்டுவந்த திட்டத்தின்படி, மாதமொன்றுக்கு



நூறு ரூபாய்க்குக் குறைவாக சம்பளம் பெறும் பணியாளர்கள், மாதமொன்றுக்கு ஒரு ரூபாயையும் மாதமொன்றுக்கு நூறு ரூபாயும் அதற்கு மேற்பட்டும் சம்பளம் பெறும் பணியாளர்களுக்கு, மாதமொன்றுக்கு ஐந்து ரூபாயையும் இத்திட்டத்தின் கீழ் தங்களது பங்குத்தொகையாக செலுத்துகின்றனர்.

திருக்கோயில்களில் குறைந்தது 20 ஆண்டுகளாக திருமறைகளை பாடிய 60 வயதுக்கு மேற்பட்ட வயதுடைய ஓதுவார்களுக்கு திங்களொன்றுக்கு 300 ரூபாய் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. தற்போது 98 ஓதுவார்கள் இந்த ஓய்வூதியத்தைப் பெறுகின்றனர். இவ்வாறே, வேதபாராயணம் அல்லது திவ்ய பிரபந்தத்தை ஓதியவர்களுக்கும், அரையர் சேவை செய்தவர்களுக்கும் ஆக 100 நபர்களுக்கு திங்களொன்றுக்கு 300 ரூபாய் ஓய்வூதியம் அளிக்கப்படும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய ஓய்வூதியம் தொடர்பான செலவு, அரசு நிதியிலிருந்து செய்யப்படுகிறது.

ஆலயத்தில் பணி செய்யும் ஒருவர், பணியிலிருக்கும்போது இறந்தால், பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கும் முதல்கட்ட முன்பணமாக 500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இந்த தொகை, குடும்ப நல நிதியிலிருந்து பின்னர் வழங்கப்படும் தொகையில் சரிக்கட்டப்படுகிறது.

நல்ல நிதி வசதி உடைய ஆலயங்களைப் பொறுத்தவரையில், திருவிழா காலங்களில், பணியாளர் மேற்கொண்டு ஆற்றும் கூடுதல் பணிக்காக அவருக்கு ரூபாய் 1000-க்கு மேற்படாத தொகை அல்லது ஒரு மாதச் சம்பளம் இவற்றில் எது குறைவோ அத்தொகை ஊதியமாக அல்லது கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும் அவர்களுக்கு பண்டிகை முன்பணம் (ரூபாய் 500-ம்), திருமண முன் பணம் (ரூபாய் 2000 வரையில்) போன்ற முன்பணங்கள் வழங்கப்படுகின்றன; அவ்வாறு அவர்களுக்கு வழங்கப்படுகின்ற முன்பணம் அவர்களுடைய மாதச் சம்பளத்திலிருந்து தவணை அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது.

ஆலய பணியாளர்களுக்கான அகவிலைப்படி,
முதலாவதாக 1–4–1991 ஆம் நாளிலிருந்தும்,
இரண்டாவதாக 1–10–1991 ஆம் நாளிலிருந்தும் ஆக
1991-ல் இருமுறை உயர்த்தப்பட்டுள்ளது.

**13. ஏனைய அம்சங்கள் :**

இத்துறையின் பல்வேறு பணிகளைக் கண்காணிப்ப
தோடு திருக்கோயில் தொடர்பான முழுவிவரம்கொண்ட
கணிப்பொறி மையம் அமைத்து திருக்கோயில் தகவல்
மையம் ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. 1398-ஆம்
விளைச்சலாண்டு தொடர்பான ஆலயங்களின் புள்ளி
விவரங்கள் வினாப்பட்டியிலிருந்து அனைத்து சமய
நிறுவனங்கள் உள்ளிட்ட தகவல்கள் சேகரிக்கப்பட்டு,
காந்த ஒலி நாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது
வரை சேகரிக்கப்பட்ட தகவல்கள் சரிபார்க்கும் பணி
நடைபெற்று வருகிறது. இத்தகவல் தொகுப்பு ஏற்
பாட்டினைச் சரிபார்த்த பின்னர் நிருவாகத்தினருக்கும்,
பொதுமக்களுக்கும் பெருமளவு பயன் தரத்தக்க வகை
யில் அனைத்து சமய நிறுவனம் தொடர்பான நாளது
வரையிலான நடப்புத்தகவல்களைக் கொண்டிருக்கும்
வகையில் அடுத்து வரும் விளைச்சலாண்டுக்குரிய தக
வல்கள், மேலும் நாளது வரையிலானதாக்கப்படும். இத்
திட்டப்பணி அரசு தகவல் தொகுப்பு மையத்திடம்
ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, "திருக்
கோயில்" என்று அழைக்கப்படும் மாதாந்திர தமிழிதழ்
ஒன்றை 1958-ம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகிறது
சிறந்த அறிஞர் பெருமக்கள், இவ்விதழுக்கான
எழுத்தோவியங்களை எழுதுகிறார்கள்.

**14. முடிவுரை :**

திருக்கோயில்களைப் பராமரித்தல், அவற்றைப்
புதுப்பித்தல் தொடர்பாக, பொதுமக்களிடையே புதிய
விழிப்புணர்ச்சியும், ஆர்வமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
திருக்கோயில் நிருவாக அமைப்பை மாற்றியமைத்து,
முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பரா
மரிப்பு நிதியை ஏற்படுத்தியிருப்பதன் மூலம், நமது



ஆலயம் மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியத்தின்
பெருமைக்குப் புத்துயிரூட்டி, ஊக்குவிப்பதற்கு ஏற்ற
தொரு சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. திருக்கோயில்
கட்டுமானம், தொன்று தொட்டு இருந்து வரும் வழி
பாடும் நமது சிறப்பு மிக்க பண்பாட்டுப் பாரம்பரி
யத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது; வரும்
தலைமுறையினரின் நலனைக் கருதி அவற்றைப்
பேணிக்காப்பது நமது கடமையாகும்.

இந்து சமய-அறநிலைய ஆட்சித்துறையைச் சேர்ந்த
அதிகாரிகளும் பணியாளர்களும், தமிழ்நாட்டிலுள்ள
திருக்கோயில்களின் பெருமையையும், தெய்வீகத்
தன்மையையும், புனிதத் தன்மையையும் பேணிப்
பாதுகாப்பதற்குரிய நற்பணியில் தங்களை தொடர்ந்து
அர்ப்பணித்து கொள்கிறார்கள்.

164942
D
V 21

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelvel Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmor Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore
11 S. M. Jegannatham Book House, 35, Nanthi Koil Street, Tiruchirapalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode-
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore I.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthagbalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director Stationery and Printing Madras.